

மகுடம்



வள்ளி மாணவர் மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்

விருட்சம்

1988



இதழாசிரியர் :

க. மனோகரன்

வணிக மாணவர் மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

திருநெல்வேலி

இலங்கை.

"Virutcham" - 1988

Volume - IV
Published on : 1989, August
Editor : K. Manokaran
Front Cover : Miss Arunthathi



Address ;

COMMERCE STUDENTS' UNION

UNIVERSITY OF JAFFNA

THIRUNELVELY


SRI LANKA

சமர்ப்பணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர்
அமரர் பேராசிரியர், கு. வித்தியானந்தன் அவர்களுக்கு
இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

பாலைப்பாடல்

உத்தரமேரூர் குமாரக்கோ மக்கீக்கமுக்கங்கீகம்ப பாணாபப்பு'ம
குக்குறுக்கமுக மகுத்தாணாமுத்தீ .ஈ' புரீயரிகோபமி ரரமுக
.ம்றுமிக்கீக்கபப்ரமக சுமீராதுர்இ



தோற்றம் :

08

05

1924


மறைவு :

22

01

1989

அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்



துணைவேந்தர் அவர்களின் ஆசியுரை

ஒரு சமுதாயத்தின் அபிவிருத்தி அதன் வணிகச் செயற்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். அந்த வகையிலே வணிகத்தில் ஈடுபட்டோர் மட்டுமன்றி வணிகவியற் பயிற்சியுடையோரும் அத்துறை மாணவர்களும் அபிவிருத்தி நடைமுறைகளிற் கணிசமான அளவு பங்களிப்புச் செய்ய வல்லோர் ஆகின்றனர்.

இப்பல்கலைக்கழகத்திற் பயிலும் வணிகத்துறை மாணவர்கள் தமது துறையிலே கொண்டுள்ள சிறப்பான ஈடுபாட்டை 'விருட்சம்' என்னும் சஞ்சிகை வெளியீடு சுட்டி நிற்கின்றது. 'விருட்சம்' என்பது வளர்ச்சியின் குறியீடு, வாழ்க்கைத் தரமும், மனிதப் பண்புகளும் வளர்ச்சி பெற்று மேம்பட வேண்டும் என்பதே கல்வியின் குறிக்கோளாகும். அக்குறிக்கோளை நோக்கிய பயணத்துக்கு உதவுவனவாக, விருட்சத்தில் இடம் பெறும் கட்டுரைகளும் ஏனைய விடயங்களும் அமையும் என நம்புகின்றேன்.

பல சிரமங்களுக்கிடையிலும், பயன் மிக்கதான நல்லவொரு பணியிலே ஈடுபட்டுள்ள வணிக மாணவர் மன்ற உறுப்பினர்களுக்கு எனது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராசிரியர் அ. துரைராஜா
துணைவேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

With the Best Compliments

from

P. O. S.

PAARTHEEPAN'S OIL STORES

Dealers in all kinds of

OIL AND CATTLE FOODS

GENERAL MERCHANTS AND
COMMISSION AGENTS

88, Wolfendhal Street,
COLOMBO 13.

Phone : **541130**

பதில் பதிவாளரின் நல்லாசிகள்

வணிக மாணவர் மன்றத்தின் வெளியீடாக மலரும் 'விருட்சம்' இதழிற்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும் பல தரமானதும் பயன்தர வல்லதுமான ஆக்கங்களை இம்மலர் தாங்கி வருவதானது, இதன் ஆக்கத்தில் சம்பந்தப்பட்டுள்ளோரின் அதீத ஊக்கத்தையும் தளராத மனப்பாங்கையும் சுட்டி நிற்கின்றது எனக் கருதுகின்றேன்.

பல சர்வதேச, உள்ளூர் சமூகப் பொருளாதார விடயங்கள் ஆராய்வு மனப்பாங்குடன் விவரிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய உபயோகமான வெளியீடானது இதுகாறும் போன்றே தொடர்ந்தும் செம்மையான முறையில் வெளிவருவதற்கு இம்மலரின் ஆக்குநர்கள் இடைவிடாது செயற்படுவார்களென ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றேன்.

நன்றி.

திருமதி. மங்கையற்கரசி பாலகிருஷ்ணர்
பதில் பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

With Best Wishes

Mahawele Forage Agencies

FORAGE &
FERTILIZER SUPPLIERS

35A, Wolfendhal Street,
COLOMBO 13.

Telephone : 20674

With the Best Compliments from

QUADIR STORES

GENERAL MERCHANTS &
COMMISSION AGENTS

Dealers in

CEYLON PRODUCE

21, Old Moor Street,
COLOMBO 12

Phone : 32119 – 25146

கலைப்பீடாதிபதியின் வாழ்த்து

யாழ் பல்கலைக்கழக வணிக மன்றத்தினரின் சஞ்சிகை இவ்வாண்டும் வெளியிடப்படுவது மகிழ்ச்சியினைத் தருகின்றது.

கலைப்பீடத்தில், மாணவர்களினால் வெளியிடப்படும் ஒரு சில சஞ்சிகைகளில் '' விருட்சமும் '' ஒன்றாகின்றது. இன்றைய காலகட்டத்தில், இப்பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் சஞ்சிகைகள் அச்சிடப்படுவதில் அதிக பணச் செலவு ஏற்படுவதுடன், இதுபோன்ற முயற்சிகள் பல சிரமங்களின் மத்தியில் மாணவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பின்னணியில் '' விருட்சம் '' வெளிவருவது போற்றத்தக்கது, பாராட்டப்படவேண்டியது. நிதி நெருக்கடியும் வேறு இடையூறுகளும் எதிர்நோக்கப்படும் சூழ்நிலையில் இதழ் ஆசிரியர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் விடாமுயற்சியின் விளைவாகவே '' விருட்சம் '' அச்சிடப்படுகின்றது.

மாணவர்களுக்கும், மற்றையோர்க்கும் பயன்தரக்கூடிய தரமான கட்டுரைகளை உள்ளடக்கியதாக '' விருட்சம் '' வெளிவரவுள்ளது. இதற்குப் பலரின் ஆதரவு கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கலாம். விருட்சத்தின் பணி தொடர வேண்டும் என்பதற்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர். என். பாலகிருஷ்ணன்
கலைப்பீடாதிபதி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

BEST WISHES

"WELCOME"

IYANAR LODGE

3rd Floor,
82. 2/2, Wolfendhal Street,
COLOMBO — 13

Tel : 549335

With the Best Compliments from

SRI IYANAR & CO.

DEALERS IN

FERTILIZER & AGRO CHEMICALS

31 — 33, Wolfendhal Street,
COLOMBO — 13.

Tel : 549335

Greetings from the Patron

The Commerce Students Union of the University of Jaffna have been bringing out their annual journal "VIRIDCHAM" regularly despite the many problems in the area and financial difficulties due to lack of funds from advertisers and well wishers. The journal has been the medium of communication and dissemination of knowledge in a discipline which has gained popularity as a subject in the University and outside as well.

Over five hundred students read commerce as a subject in the University and the journal has been the guide for the teaching of the subject scientifically and methodically in the schools.

This is a selfless endeavour on the part of our Commerce students of the University to help the community and assist students in their examinations. Everyone interested in knowing about their environment should possess a copy. I wish them good luck.

Prof. S. Rajaratnam
Head/Dept. of Commerce & Management Studies

University of Jaffna,
Thirunelvely.

With the Best Compliments from

SIVA STORES
சிவா ஸ்ரோஸ்

சகல விதமான பலசரக்கு சாமான்களும்
றிச்கேக், பட்டர்கேட் செய்வதற்கு தேவையான சாமான்களும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

209, Hospital Road,
JAFFNA.

209, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

சோபனா ரெக்ஸ்ரைல்ஸ்

தற்கால நாகரிகத்துக்கேற்ற
சகலவிதமான பிடவைத் தினிசுகளுக்கும், இந்தியன், சிங்கப்பூர், மற்றும் வெளிநாட்டுச் சேலைகள், திருமண வைபவங்களுக்கேற்ற பட்டு வேட்டி சால்வை, காஞ்சிபுரம், மணிப்புரி கூறைச் சேலை வகைகளுக்கும் புகழ் பெற்ற தாபனம்.

16, பெரியகடை, யாழ்ப்பாணம்.

பெரும் பொருளாளரின் ஆசியுரை

"விருட்சம்" நான்காவது இதழ் வெளியாகின்றது. இது எமது வணிக மன்ற மாணவர்களின் தொடர்ச்சியான ஆர்வத்தையும் செயற்றிறனையும் எடுத்துக் காட்டுகின்றது.

"விருட்சம்" எமது பல்கலைக் கழக வணிக மன்ற மாணவர்களின் திறமைக்கான சான்றாக இருக்கும் அதே வேளையில், வர்த்தகம், தொழில் நிர்வாகம், கணக்கியல் தொடர்பாகப் பல்கலைக்கழக மட்டத்திலும் தொழில் நுட்பக் கல்லூரிகள் மட்டத்திலும், கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கட்கு இதன் இதழ்கள் ஒவ்வொன்றும் உசாத்துணை நூல்களாக அமைந்துள்ளமை பெரும் திருப்தியை அளிப்பதாக இருக்கின்றது.

தமிழின் வளர்ச்சி பன்முகப்பட்ட அறிவுத்துறைகளை தமிழிலே எடுத்துக் கூறுவதிற்றான் தங்கியுள்ளது.

க. சிவராஜா
உதவி விரிவுரையாளர்

வணிக முகாமையியல் கற்கைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

With the Best Compliments from

APS

A. P. SUPPIAH

Dealers in

ANIMAL, POULTRY FOODS
&
MEDICINES

No. 63, Wolfendhal Street,
COLOMBO 13

Phone : **31151**
24325

With Best Wishes from

SSW

S. S. WILSON & CO.

IMPORTERS AND EXPORTERS

No. 176, 4th Cross Street,
COLOMBO 11

T. grams : **GRATITUDE**
T. phone : **27662**

மன்றத் தலைவரின் செய்தி

கடந்த கல்வியாண்டில் இயங்காதிருந்த வணிக மாணவர் மன்றமானது மீண்டும் இக்கல்வியாண்டில் இயங்கத் தொடங்கி அதன் வெளியீடாகிய "விருட்சத்தை" வெளிக் கொணர்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

தொடர்ந்தேர்ச்சியான செயற்பாடுகள் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் மன்றத்தைப் பொறுப்பேற்ற நாம் முற்றிலும் ஆரம்பத்தில் இருந்தே நமது செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டி இருந்தது. அவ்வாறு இருந்தபோதும் நாம் துரிதமாகச் செயற்பட்டதன் விளைவாக இம்மலரை வெளிக் கொணர முடிந்துள்ளது.

இம்மலரானது வணிக முகாமைத்துவ மாணவர்கட்குக் குறிப்பாகவும், ஏனையோருக்குப் பொதுவாகவும் பயனுடையதாக இருக்குமென உறுதியாக நம்புகின்றேன். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவர் மன்றங் களிடையே இருந்து சஞ்சிகைகள் வெளிவருவதும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இது மாணவர்கள் பரந்துபட்ட அறிவைப் பெறும் வாய்ப் பைக் குறைத்து விடுகின்றது.

எனவே இச்சஞ்சிகை வெளிவருவதற்கான தேவைப்பாடுகள் நிறையவே உள்ளன. அதற்காக எமது மன்றம் தனது பங்களிப்பைச் செய்துள்ளது என் பதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

மன்றத்தின் முயற்சிகள் சிறப்புற அமைய உதவிய கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அவர்களுக்கும், மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர் எஸ். இராஜரட்ணம் அவர்களுக்கும் மன்றப் பெரும் பொருளாளர் விரிவுரையாளர் திரு. கே. சிவராஜா அவர்களுக்கும், எனக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய மன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபாதையில் வணிக மாணவர் ஒன்றியமானது மேலும் பல சாதனைக ளைச் செய்து நிலைபெற வேண்டும் என வாழ்த்தி இதில் பங்களிப்புச் செய்ய எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டுப் பூரண மனத்திருப்தி அடை கின்றேன்.

இறுதியாக, நான்கு வருடகாலப் பல்கலைக் கழகப் பசுமையான வாழ்வில் இருந்தும், உங்களிடமிருந்தும் மகிழ்ச்சி கலந்த துயரங்களோடு விடை பெறுகிறேன்.

நன்றி.

க. கங்காதரன்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

அன்பளிப்பு

" மத்திய கிழக்கு நாட்டில்
தொழில் பெற்றுக்கொடுக்கும் நிறுவனம் "

T. V. Travels & Tourist

Brown Road,
Railway Station (Front),
KOKUVIL.

BEST WISHES

R. B. BOOKING CENTRE

ஆர். பி(B) பஸ் ஆசனப் பதிவகம்

யாழ், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி
பஸ் சேவைகள்

Prop. : **V. RAJARTNAM**
(SELVAM)

2nd Block,
Model Market,
JAFFNA

இதழாசிரியரிடமிருந்து . . . . . .

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம் தனது வெளியீடான விருட்சத்தை இவ்வாண்டு உங்கள்முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது. மன்றத்தின் 4ஆவது வெளியீடான இவ்விதழ் 1986ற்குப்பின் தற்போதுதான் வெளிவருகின்றது.

குறைந்தளவே தாய்மொழிமூல வெளியீடுகளைக் கொண்டிருக்கும் எமது துறை இப்பேற்பட்ட ஆக்கங்களைப் பெருமளவு வேண்டிநிற்கின்றது. அந்தக் குறையைப் போக்க முயற்சிப்பது உயர்கல்வி மட்டம் சார்ந்தவர்களின் தார்மீகக் கடமையும், பொறுப்பும் ஆகும். அத்துடன் விரிவுரையாளர்களதும், மாணவர்களதும் ஆராய்ச்சிகள், திறமைவெளிப்பாடு, அறிவுத் தேட்டங்களின் பிரயோகம், என்பவற்றுக்கு ஓர் களத்தை இவ்வாறான ஆக்கங்கள் ஏற்படுத்தி நிற்கின்றன என்பது உண்மை. அந்தவகையில் இவ்வெளியீடும் எவ்வகையிலும் விலக்கல்ல என்று உணர்வதால் எமது பணிபற்றி நான் ஓரளவு மனநிறைவு அடைகின்றேன்.

சென்ற வருட ஐப்பசிக் கொடுமைகள் எமது மன்றச் சொத்துக்களையும் விட்டுவைக்கவில்லை. எவ்வித பொருளாதார அடித்தளமும் அற்ற நிலையில் இருந்த மன்றத்துக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. தம் கல்வியாண்டை முடிப்பதற்கு நான்கே மாதங்கள் இருந்த வேளையிலும் பல மாணவர்களின் பெரு விருப்பின் அடிப்படையில் எழுந்த வேண்டுதல்களின் பேரில் இந்நூலை வெளியிடுவதென்ற திர்க்கமான முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இன்று நிலவும் அரசியல் ஸ்திரமற்ற, அபாயகரமான சூழ்நிலையினால் எமது நூலின் ஆக்க நடவடிக்கைகள் ஓரளவு பாதிப்புக்குள்ளாயின. அவ்வாறுயினும் தங்களின் பல சிரமங்களுக்கு மத்தியிலும், மாணவர்களும், குறிப்பாக விரிவுரையாளர்களும் உரிய வேளையில் தமது ஆக்கங்களையும், ஆலோசனையும் தந்து தமது காத்திரமான பங்களிப்பைச் செய்தனர்.

இவ்விருட்சத்தின் செழிப்புக்கு நிதி உதவியைப் பெற்றுத்தருவதில் எமது பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களின் பங்கு அளப்பரியது. அவர் உட்பட எமது காப்பாளர் பேராசிரியர் எஸ். இராஜரட்ணம், பெரும் பொருளாளர் திரு. க. சிவராஜா, மற்றும் விரிவுரையாளர்கள், பதிவாளர் யாவரையும் பெரு நன்றி உணர்வுடன் இங்கு நினைவு கூருகின்றேன்.

இவைநிற்க எம்மையடுத்துவரும் செயற்குழுவினர் எமது பணியை மேலும் பல சிறப்பம்சங்களுடன் தொடரவேண்டும் என்பதே என்விருப்பு. அத்துடன் எம் மன்றம் 'வணிக முகாமைத்துவ மன்றம்' என்ற புதுப் பொலிவுடன் இயங்கி வரும் என்ற பெருநம்பிக்கையுடன், எம் 4 வருடப் பல்கலைக் கழக வாழ்வின் பல்வேறு பட்ட நினைவுகளுடன் விடைபெறுகின்றேன்.

க. மனோகரன்
இதழாசிரியர்

Best Wishes From

S.V.S. & COMPANY

DEALERS IN

POULTRY ANIMAL FOODS & FERTILIZERS

65, Wolfendhal Street,
COLOMBO 13

T'phone **32751**
T'gram LEY & FREY

BEST WISHES FROM

PETTAH FORAGE CENTRE

DEALERS IN

FORAGE, AGRO CHEMICALS
POULTRY, ANIMAL FOODS & ALL KINDS OF MEDICINES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Phone : 31986

No. 78, Wolfendhal Street,
COLOMBO — 13.

இளம் பொருளாளரின் இதயத்திலிருந்து . . . . .

எமது செயற்குழு 1987/88 கல்வியாண்டின் 3ம் தவணை ஆரம்பத்திலேயே மன்றத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது அதாவது இக்கல்வியாண்டின் இறுதி 3 மாத செயற்பாடே எங்கள் செயற்குழுவினுடையதாகக் காணப்பட்டது. மன்றம் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது மன்றத்தில் எந்த ஒருசொத்துக்களோ அல்லது ஆவணங்களோ காணப்படவில்லை காரணம் 1986/87 கல்வியாண்டின் போது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இம்மன்றத்தின் சொத்துக்கள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டிருந்தது.

எனவே எமது செயற்குழு, மன்றம் ஒன்றினை ஆரம்பத்திலிருந்தே உருவாக்க வேண்டியதான ஒரு பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருந்தது என்றால் மிகையாகாது.

இக்காலப்பகுதியில் உறுப்பினர் கட்டணங்களை அறவிட்டபோதும் பெருமளவு மாணவர்கள் உறுப்பினர் கட்டணங்களைச் செலுத்துவதில் கூட அக்கறையீனம் காட்டியுள்ளார்கள் என்பது கவலைதரும் விடயமாகும், வேறு நிகழ்ச்சிகளை நடாத்தி நிதியினைப்பெறுவது வழமையான செயற்பாடாக இருந்தபோதும் நாட்டின் நிலைமை காரணமாக சில நிகழ்ச்சிகள் எதனையும் நடாத்தி நிதியினைப் பெற முடியாது போய் விட்டது. கோவைகளை (FILES) அச்சிட்டு விற்பனை செய்தும் நிதியினைச் சேர்த்தோம்.

எனினும் எத்தனையோ இடர்ப்பாடுகள் மத்தியில் ஒரு வருடகால இடைவெளிக்குப்பின்பு எங்கள் மன்றத்தின் 4 வது மலரான 'விருட்சம் – 1988' இனை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த மலருக்குரிய நிதியினைத் தேடவேண்டிய பொறுப்பு என்னுடையதாகக் காணப்பட்டது. செயற்பாட்டுக்காலம் குறுகியதாக இருந்ததினாலும் ஸ்திர மற்ற நாட்டின் சூழ்நிலை காரணமாகவும் நிதியைப் பெறுவதற்கு சொல்ல முடியாத அளவு கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருந்தது. எனினும் நிதியின் ஒரு பகுதியை பல்கலைக்கழக நிர்வாகம் தர முன்வந்தபோதும், மலருக்குரிய பெருமளவு நிதியினை விளம்பரம் மூலமாகவே தேட வேண்டியிருந்தது. விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக பெருமக்களை குறிப்பாக கொழும்பு வர்த்தக பெருமக்களை நன்றியுடன் நினைக்கின்றேன்.

இறுதியாக மன்றத்தின் செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை கூறியும் பல ஒத்துழைப்புகளை வழங்கியும் எம்மை வழிநடத்திய காப்பாளர், பெரும் பொருளாளர், ஏனைய விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும், நிதியுதவியளித்த பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும், மன்ற நிதியீட்டத்திற்கு பலவகையிலும் உழைத்த செயற்குழுவுக்கும் குறிப்பாக மன்றதலைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி அடுத்துவரும் ஆண்டில் மன்றத்தினை பொறுப்பேற்று நடத்த இருக்கும் புதிய வணிக முகாமைத்துவ மாணவ செயற்குழுவினரை வரவேற்பதுடன். இம் மன்றத்தினை மேலும் சிறப்பாக கொண்டு நடாத்த ஆசிகள் பல கூறி உங்களிட மிருந்து விடை பெறுகின்றேன்.

நன்றி

சி. நந்தகுமார்
பொருளாளர்

செயலாளரின் சிந்தையிலிருந்து . . . . .

அரசியல், பொருளாதார, சமூக இடர்ப்பாடுகளுள் சிக்கித் தவிக்கும் இருள் சூழ்ந்த இக்காலகட்டத்தில் வெளிவரும் விருட்சம் இதழின் செயலாளர் என்ற முறையில் ஓரிரு வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் ஒரு மன்றத்தினை அமைப்பதற்கு எத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமோ அதேபோலவே இக்கல்வியாண்டில் நாமும் வணிக மன்றத்தினை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி இருந்தது. இந்தக் கல்வியாண்டு மன்றத்தைப் பொறுத்தவரை மிக சோதனை நிறைந்த ஒன்று கும். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலை, கல்வியாண்டு ஆரம்பத்தில் ஏற்பட்ட தாமதம், மாணவர்களின் அக்கறையின்மை என்பவற்றுல் மன்றம் பல்வேறு சோதனைகளை எதிர்கொண்டது. இறுதிவருட மாணவர்களைத்தவிர வேறுஎவரும் இம் மன்றத்தை இயங்கச் செய்ய முயற்சி எடுக்கவில்லை என்பது வருந்தத்தக்க தாகும். இருந்தும் தாமாகவே முன்வந்து மன்றத்தை இயக்க இறுதிவருட மாண வர்கள் எடுத்த முயற்சிக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஒரு சில கனிஷ்ட மாணவர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

வணிகத்துறை மாணவர்களுடன் முகாமைத்துவ துறையில் கல்வி கற்கும் மாணவர்களும் சரிநிகராகவே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஆனல் மன்றம் ஆரம்பிக்க ஆயத்தம் மேற்கொள்ளும்போது முகாமைத்துவ மாணவர் தாம் புதிதாக மன்றம் அமைக்கப்போவதாகக் கூறியதால் இதனை மீண்டும் வணிக மாணவ மன்றம் ஆகச் செயற்படுத்த வேண்டி ஏற்பட்டது.

அடுத்து எமது மன்றத்தின் செயற்பாடுகளை நோக்கினல் எமது செயற் குழு 1987/88 கல்வியாண்டு ஆரம்பமாகி சுமார் 5 மாதங்களுக்குப் பின்பே தெரிவானது எம்மைப் பொறுத்தவரை வேதனைக்குரியதாகும். இருந்தாலும் பல் வேறு திட்டங்களைத் தீட்டி அதில் ஏறக்குறைய பெரும்பங்கினை சிறப்பாக நிறைவு செய்துள்ளோம்.

சுயநலம் பொதுநலம் பற்றி இங்கு நான் படித்துக் கொண்ட அனுபவம் பல. அனுபவங்களுக்குப் பின்புதான் உண்மை பலருக்குப் புரிகிறது. நான் மட்டும் என்ன விதிவிலக்கா? இன்று மிகுந்த அனுபவத்துடனும் நிறைந்த கவலையுடனும் விடைபெற காத்திருக்கிறேன். எவ்வாருயினும் இத்தகைய ஒரு அனுபவத்தை, இப்பல்கலைக் கழகத்தைவிட வேறெங்கும் பெற்றிருக்க முடியாது.

அடுத்து ஒரு வருட இடையீட்டின் பின் மன்றத்தின் ஆண்டுமலர் விருட்சம் வெளிவருகின்றது. இவற்றை நோக்கும்போது மன்றத்தின் செயற்பாடு குறித்து திருப்தி அடைகிறேன்.

ஈற்றில் இத்தனை செயற்பாடுகளிலும் பங்குகொண்டு எனக்கு ஆலோசனை யும் ஒத்துழைப்பையும் வழங்கிய விரிவுரையாளர்கள், மன்ற அங்கத்தவர்கள், மாணவ நண்பர்களுக்கும் அத்துடன் எமக்குவேண்டிய உதவியை [illegible]வப்போது செய்த உபவேந்தர், மன்றக் காப்பாளர், பெரும் பொருளாளர் ஆகியோருக்கும் நன்றி உடையவள் ஆவேன்.

மேலும் தொடர்ந்துவரும் கல்வியாண்டில் பதவி ஏற்கும் செயற்குழு நாம் முன் எடுத்த செயற்பாடுகளை விட மேலும் நல்ல செயற்பாடுகளோடு வணிக முகாமைத்துவ மன்றமாக அதனை மாற்றி, செயற்பாடுகளை ஊக்குவிக்கு மாறு வேண்டி, பசுமையான நினைவுகளை நெஞ்சில் ஏற்று பல்கலைக்கழக வாழ்வை நிறைவு செய்யும் இவ்வேளை வாழ்க விருட்சம்! வளர்க வணிக மாணவர் மன்றம்!! எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி.

செல்வி மேதினி சந்திரசேகரம்
செயலாளர்

FOR Sparkling

PHOTOGRAPHS !



Grams

PHOTOGRAPHERS, JAFFNA

விருட்சத்தின் நிழலில்....

பக்கம்

★ குடியேற்ற நாட்டு வாதம்: ஒரு விளக்கம்
— கலாநிதி வி. நித்தியானந்தன் 1 - 9

★ சூழல் ஆய்வு
— தே. ஜெயராமன் 11 – 15

★ இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சியும் அதன் பிரதான நிதி அமைப்புக்களும்
— R. இலங்காதுரை 17 – 33

★ சமஸ்டி அரசாங்க முறையும், அதன் நெருக்கடிகளும்.
— கு. ரஞ்சகுமார் 35 – 43

★ திட்டமிடலும் – நிர்வாகமும்
— வி. செ. கவாமிநாதன் 45 47

★ பாதுகாப்புச் செலவும், பொருளாதார அபிவிருத்தியும்; இலங்கை பற்றிய ஒரு நோக்கு
— ந. பேரின்பநாதன் 49 – 58

★ ஆணையுரிமைக் கையளிப்பும், பரவலாக்கமும், மையப்படுத்தலும்
— க. ஜெயரட்ணம் 59 – 65

★ கம்பனிகளின் வரிவிதிப்பு
— கு. தெட்சணமூர்த்தி 67 - 77

★ கவிதைகள்
— பூட்டு — முருகையன்
— மீண்டெழுந்த வரலாறுகள் — சி. திருவாகரன்
— விடைபெறுதல் — க. லோறன்ஸ் 78 – 80

★ காப்புறுதி
— இ. இரட்ணம் 81 – 96

★ வங்கி நடவடிக்கைகளில் கணனிப் பயன்பாடு
— த. குணநேசன் 97 – 100

★ இலங்கையில் பங்காண்மைச் சட்டம்
— கே. பி அரவிந்தன் 101 104

★ பெறுமானத் தேய்விற்கான கணக்கீடு
– கே. கே. அருள்வேல் 105 – 110

★ கணக்காய்வுச் சான்று
– செல்வி மேதினி சந்திரசேகரம் 111 – 115

★ இலங்கையில் தனியார் மயவாக்கம்
– வ. செந்தில்ராஜா 117 – 122

★ தொழிலாளருக்கான ஊதியம்
– க. வரதராஜா 123 – 136

★ Formal Communication in Organisations Some Aspects
– R. N. VARENDREN 137 - 139

★ இராமியப் பொருளாதாரம்
– S. விக்னபாலன் 141 – 151

★ Funds Flow Statement
– S, M, ALALASUNDARAM 153 – 154

☆ பாதிட்டுக் கட்டுப்பாடு
– பா. பாலசந்திரன் 155 – 162

☆ – உலகங்கள் மூன்று
– கி. மௌனகுரு 163 – 166

☆ இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஏற்படுத்திய தாக்கம்
– மா. குன்றக்குமரன். 167 – 177

குடியேற்றநாட்டுவாதம் : ஒரு விளக்கம்

கலாநிதி வி. நித்தியானந்தன்,
தலைவர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இன்று உலக நாடுகளிடையே சில வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுமிடத்துக் குறைவு வளர்ச்சியடைந்த நாடுகள் தோன்றியிருப்பதும் அவற்றின் மிக வறிய நிலையும் உலகப் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன. இத்தகைய நாடுகளின் ஒன்று திரண்ட பலத்தைக் குறிக்கும் வகையில் அவற்றை மூன்றாவது உலக நாடுகள் என அழைப்பதும் வழக்கமாயிருந்து வருகிறது. எனினும் இந்நாடுகளிற் பெரும்பாலானவற்றின் வரலாற்றுப் பின்னணியை எடுத்தாராய்ந்து பார்க்குமிடத்து அவை குறுகியதொரு காலப்பகுதிக்கோ, அல்லது மிக நீண்டதொரு காலப்பகுதிக்கோ பலம் வாய்ந்த வல்லரசொன்றின் நேரடி ஆதிக்கத்துக்குட்பட்டிருந்ததைக் காண முடிகின்றது. அதாவது இந்த வல்லரசின் அல்லது வல்லரசுகளின் குடியேற்ற நாடுகளாக இவை விளங்கியுள்ளன. இத்தகைய குடியேற்ற நாடுகள் அரசியற் சுதந்திரம் பெற்றிராதது மட்டுமன்றி இந்நாடுகளிற் காணப்பட்ட பொருளாதார வளங்கள் கூடத் தாய் நாட்டின் நன்மை கருதியே பயன்படுத்தப்பட்டன. இந்நிலையில் குடியேற்ற நாடுகள் பெருமளவு சுரண்டல் நிலைக்கு உட்பட்டதால், அவை உடனடியாக மாத்திரமன்றி நீண்ட காலத்திலும் பொருளாதார ரீதியிற் பலத்த தாக்கத்துக்குள்ளாயின. அரசியல் ரீதியிற் ஒரு குறித்த காலப்பகுதியில் இந்நாடுகள் பலவும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்த போதும், இதன் மூலம் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம், மற்றும் நாட்டின் சமூக கலாச்சாரங்களில் ஏற்பட்ட பாதிப்பு என்பவை அத்துணை சுலபமாக உடைத்தெறியப்படக் கூடியனவாயிருக்கவில்லை. ஆகவே குடியேற்றநாட்டுவாதத்துக்கு வரைவிலக்கணம் அளிக்கப்படும் போது இவ்விரு நிலைகளையும் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

i) அதனுடைய கடந்தகாலப் பாதிப்பு.

ii) குடியேற்ற நாடுகளாயிருந்ததால் இன்றுவரை நிலைத்திருக்கும் பாதிப் புக்கள்.

சமூக விஞ்ஞான அகராதி (Dictionary of social sciences) குடியேற்றநாட்டுவாதம் என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கொடுக்கிறது. "ஒரு சமூகம், ஒரு நாடு அல்லது ஒரு தேசம் தன்னைவிடக் கூடுதலாக வளர்ச்சியடைந்த இன்னொரு சமூகம் அல்லது தேசத்தினுல் அரசியல் ரீதியிலோ அல்லது பொருளாதார ரீதியிலோ அல்லது கலாச்சார ரீதியிலோ அல்லது இம்மூன்று வகைகளிலுமோ ஆதிக்கம் செலுத்தப்பட்டு அனுபவிக்கும் அடிமைத்தனமான(servitude) அல்லது தரக்குறைவான (Inferiority) நிலையே குடியேற்றநாட்டுவாதமாகும். கைப்பற்றும் நாடு ஐரோப்பிய அல்லது வடஅமெரிக்க வல்லரசாகவும், கைப்பற்றப்பட்ட நாடு அவ்வாறு இல்லாததாகவும் இருக்கும் நிலைகளில் இந்தப் பதம் கூடியளவு பயன்பாட்டுக்குள்ளாகின்றது. ஆகவே இவ்வரைவிலக்கணத்தில் நாம் மேலே குறிப்பிட்ட இரு வேறு நிலைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதற்கேற்பக் குடியேற்ற நாட்டுவாதத்தை, கடந்த காலக்குடி யேற்ற நாட்டுவாதம் (colonialism past) நிகழ்காலக் குடியேற்றநாட்டுவாதம் (colonialism present) என இரண்டாகப் பிரிக்க முடியும். கடந்தகாலக் குடியேற்றநாட்டுவாதம் என்பது ஒரு குடியேற்ற நாட்டின்மீது அரசியல் இறைமைஒழுங்குமுறை ரீதியில் நேரடியான பிரயோகத்துக்குள்ளான ஒரு காலப் பகுதியாகும். அதாவது வல்லரசு ஒன்று வெளிப்படையாகவும் தெளிவாகவும் இன்னொரு நாட்டைக்கைப்பற்றி ஆட்சி செய்வது. இக் கருத்தில் ஆசியாவை எடுத்து நோக்கின் ஜப்பான், சீனு, தாய்லாந்து ஆகிய 3 நாடுகளையும்தவிர, மற்றெல்லா நாடுகளும் குடியேற்றநாட்டுவாதத்தை அனுபவித்தன. எனினும் குடியேற்றநாட்டுவாதத்திலிருந்து முற்றுகவிடுபட்ட ஒரே ஆசிய நாடு ஜப்பான் என்றே கூறலாம். ஏனெனில் சீனு 1949 வரை ஒரு வகை அரைகுறைக் குடியேற்ற நாடாக விளங்கியிருந்தது. முழுச் சீனுவும் குடியேற்ற நாட்டின் அந்தஸ்துக்குத் தரம் குறைக்கப்படாத போதும் அதன் சிற்சில பகுதிகள் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்தன. மறுபுறம் தாய்லாந்தைப் பொறுத்தவரை அது மிக வலிமை குறைந்த ஒரு சுதந்திரத்தைப் பேணிக் கொண்டிருந்தது. இது ஒரு பெயரளவுச் சுதந்திரமாக மாத்திரமே இருந்ததெனலாம். 1909ல் கைச்சாத்திடப்பட்ட ஆங்கில சயாமிய (Anglo-Siamise treaty) ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இது அமைந்திருந்தது. இரு பெரும் வல்லரசுகளாகிய இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றுக்கிடையிலான போட்டியே இந்த வலிமை குறைந்த சுதந்திரத்தைத் தாய்லாந்து பேணிக்கொள்வதை முடியக்கூடிய ஒன்றுக்கி இருந்தது. தவிரவும் இதற்கு ஈடாக இரு கம்போடிய மாகாணங்களைப் பிரான்சுக்கும்; வடக்கு மலாய் அரசுகளைப்(Nothern Malay States) பிரித்தானியாவுக்கும், அது விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆகவே ஜப்பான் தவிர்ந்த எந்த ஒரு ஆசிய நாடும் நேரடியாகக் குடியேற்ற நாட்டுவாதத்திலிருந்து விடுபடவில்லை என்றே கூறலாம். இதே போன்று ஆபிரிக்காவின் பெரும் பகுதியும் குடியேற்றநாட்டுவாதத்துக்குட்பட்டிருந்தது மட்டுமன்றி வளம் நிறைந்த ஆபிரிக்க நாடுகளை வல்லரசுகள் தம்மிடையே பங்குபோட்டுக் கொள்ள முனைந்த போது, பல குடியேற்றநாட்டு யுத்தங்களுக்கும் அது வழிவகுத்தது. இதன் மூலம் ஒரு முழு ஆபிரிக்க நாட்டை ஒன்றுக்கு மேற்பட்ட ஐரோப்பிய வல்லரசுகள் பிரித்து ஆட்சி செய்கின்ற முறையும் காணப்பட்டது. ஆகவே இதிலிருந்து அரசியல் ரீதியிற் குடியேற்றநாட்டுவாதம் உலகின் பெரும்பாலான நாடுகளை அதுவும் குறிப்பாக முழு ஆசிய, ஆபிரிக்க நாடுகளையும் சூறையாடியதை அறிய முடிகின்றது.

நிகழ்காலக் குடியேற்றநாட்டுவாதத்தில் அரசியல் ரீதியில் நாம் மேலே குறிப்பிட்ட குடியேற்றநாட்டுவாதம் இடம் பெறுவதில்லை. இந்நிலையில் பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க நாடுகளும் அரசியல் ரீதியிற் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளன. எனினும் இது குடியேற்றநாட்டுவாதத்தின் முடிவு அல்ல என்பதையே நிகழ்காலக் குடியேற்றநாட்டுவாதம் என்ற பதம் புலப்படுத்துகின்றது. அரசியல் அதிகாரம் முடிவடைந்தாலும், வேறுவகையிலான ஆதிக்கம் குறிப்பாகப் பொருளாதார ஆதிக்கம் தொடர்ந்து நிலவுகின்றதென்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. அதாவது குடியேற்றநாட்டுவாதத்தின் உருவம் (Form) அல்லது போர்வை வேறுபட்டிருக்கின்றது. ஆனால் அதன் ஏனைய அம்சங்கள் அதுவும் குறிப்பாக அதன் ஆதிக்கம் செலுத்தும் தன்மை வேறுபடவில்லை. (இத்தகைய குடியேற்றநாட்டுவாதம் நிலவுகிறதென்பதை முன்னாள் இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்னோ –1955 ஏப்பிரலில் நடைபெற்ற பாண்டுங் (Bandoeng)மகாநாட்டில் தெளிவாக எடுத்து விளக்கினார்) இது பொருளாதாரக் கட்டுப்பாடாகவோ, அறிவின் மீதான கட்டுப்பாடாகவோ,சமூக கலாச்சாரக் கட்டுப்பாடாகவோ அல்லது சமூகத்திலேயே ஒரு தொகை சிறுபான்மையினர் ஏனையோரைக் கட்டுப்படுத்துவதாகவோ இருக்கலாம். அரசியல் ரீதியான சுதந்திரம் குடியேற்றநாட்டுவாதத்தின் தாக்கத்தினை எவ்வகையிலும் இல்லாமற் செய்யவில்லை என்பதே இதனுடைய கருத்தாகும். இந்த நிலைமையைப் புலப்படுத்துவதற்கே நவகுடியேற்றநாட்டுவாதம் (Neo colonialism) என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே குடியேற்றநாட்டுவாதத்தின் விளைவுகளை ஆராயுமிடத்து நவகுடியேற்றநாட்டுவாதத்தின் பாதிப்புகளையும் அறிய வேண்டியது அவசியமாகும்.

குடியேற்றநாட்டுவாதத்தின் மூலம், வல்லரசுகளின் ஆதிக்கத்துக்குட்பட்ட குடியேற்ற நாடுகள் எவ்வகையில் பாதிக்கப்பட்டன என்பதை முதன்முதலாகத் தெளிவாக எடுத்துக் காட்டியவர் மார்க்ஸ் ஆவர். அவரைப் பொறுத்தவரை, குடியேற்ற நாட்டுவாதம் முதலாளித்துவத்தின் முறிவைப் பிற்போடும் ஒரு நிலையாகும். லெனின் கருத்துப்படி குடியேற்ற நாடுகளை ஸ்தாபிக்கும் இந்த ஏகாதிபத்தியவாதமே முதலாளித்துவத்தின் அதி உயர்ந்த நிலையுமாகும். உள் நாட்டில் தொழிலாளரைச் சுரண்டுவதற்குப் படிப்படியாக எதிர்ப்புகள் அதிகரித்த நிலையில், முதலாளிகள் தம் சுரண்டல் வேலைகளுக்குக் குடியேற்ற நாடுகளை நாடுகின்றனர். இதன் மூலம் பல ஏகாதிபத்திய யுத்தங்கள் ஏற்பட்டு, உலக நாடுகள் வல்லரசுகளிடையே பங்கு போடப்பட்டன. மார்க்ஸ் இவ்வாறுக குடியேற்றநாட்டுவாதத்தின் விளைவுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டிய போதும், அடம்சிமித் அவர்களும் குடியேற்றநாட்டுவாதத்தைப் பற்றித் தமது நூலில் குறிப்பிட்டது மட்டுமன்றி, அது விரும்பத்தக்கதொன்றல்ல என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் இவர் காலத்தின் பின்பு குடியேற்றநாட்டுவாதம் மிக மேலோங்கி வளர்ந்து செல்வதாயிருந்தது. மார்க்ஸைப் பொறுத்தவரை குடியேற்ற நாட்டுவாதம் என்பது நாடுகளுடைய செல்வத்தை நேரடியாகச் சூறையாடுவதாகும். இவ்வாறு சூறையாடப்பட்ட செல்வமே ஆரம்பகால மூலதனத் திரட்டலின் அதி முக்கிய மூலகமாக இருந்தது. இதுவே ஐரோப்பிய முதலாளித்துவத்தின் அத்திவாரமாகும். இங்கு உண்மையில் அமெரிக்க நாடுகளில் சூறையாடப்பட்ட விலையுயர்ந்த உலோகங்களையே இவர் கருதினர். இதன் பின்பு ஆசிய, ஆபிரிக்க நாடுகளைப் பங்கு போடுதல், முதலாளித்துவம் பங்கு வளர்ந்து விட்ட நிலையில் ஏற்பட்டதொன்றாகும்.

இவ்வாறுக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் குடியேற்றநாட்டுவாதத்துக்கு உட்பட்டதன் மூலம் ஏற்பட்ட விளைவுகள் பலதரப்பட்டவையாகும். இந்த விளைவுகள் எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில், ஒரே தன்மையில்

இடம்பெற்றவை எனக் கூறமுடியாவிட்டாலும் பெரும்பாலான குடியேற்ற நாடுகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இந்த வீழ்ச்சியை அனுபவிக்கவே செய்தன எனலாம். பல நாடுகளிற் குடியேற்றநாட்டுவாதமானது அந்நாட்டின் மரபுரீதியான பொருளாதாரத்தையும், சமூகத்தையும் அழிக்க வல்லதாயிருந்ததெனலாம். பல குடியேற்ற நாடுகளும் இதற்குச் சிறந்த உதாரணங்களாயிருந்த போதும், இந்தியப் பொருளாதாரத்தில் இது மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுவதாகக் கூறலாம். 1757 அளவில் இந்தியாவின் ஏற்றுமதிகள் வருடமொன்றுக்கு 7மில். பவுணுக்கும் கூடியதாகக் காணப்பட்டது. 1787ல் டாக்காவில் இருந்து மாத்திரம் 3 மில். பெறுமதியான மஸ்லின் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் குடியேற்ற நாட்டுவாதம் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட 1814 - 35 க்குமிடையில் பிரித்தானிய உற்பத்தியாளர் இந்தியாவுக்கான பருத்திப் பொருட்களின் ஏற்றுமதியை £26.000லிருந்து £ 400.000 மாகக் கூட்டியிருந்தனர். 1மில்லியன் யார்லிருந்து ஏற்றுமதி 51 மில். யாராகக் கூடியிருந்தது. இதே போன்று பட்டு, கம்பளிப் பொருட்கள், இரும்பு,மட்பாண்டம், கண்ணாடி, கடதாசி போன்ற பொருட்களின் ஏற்றுமதியும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனால் இந்திய நூல் நூற்போரும், நெய்வோரும், உலோகத் தொழிலாளரும் தமது தொழில்களில் இருந்து கலைக்கப்பட்டனர். 1817ல் டாக்காவிலிருந்து எதுவுமே ஏற்றுமதி செய்யப்படவில்லை. இந்திய பருத்திப் பொருட்களின் ஏற்றுமதி 1814ல் £ 1.3 மில்லியன் பெறுமதியில் இருந்து 1832ல் £ 100,000 பெறுமதியாகக் குறைக்கப்பட்டிருந்தது. டாக்கா, மூர்சிதாபாத் போன்ற கைத்தொழில் உற்பத்தி நிலையங்களின் சனத்தொகை ஒரு தலைமுறைக்குள் 1/10 ஆகக் குறைவடைந்திருந்தது. இவ்வாறாக அதனுடைய பாரம்பரியக்கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்ததனால் இந்தியா மேன்மேலும் விவசாயத்தின்மீது தங்கியிருக்க வேண்டியிருந்தது. இந்த நிலைமை 20ம் நூற்றாண்டிலும் தொடர்ந்து வந்ததைக் காண முடிகின்றது. உதாரணமாக 1891—1931க்கு மிடையில் விவசாயத்தில் தங்கியிருக்கும் சனத்தொகை 61% இலிருந்து 75%மாக உயர்வடைந்தது. இந்நிலைமை பிரித்தானியர் மறைமுகமாகத் தமது பலத்தைத் தாபித்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொண்ட நடவடிக்கைகளினால் மேலும் ஊக்குவிக்கப்பட்டது. அவர்கள் பிரித்தானிய அரசுக்காக வரி சேகரிக்கும் பொறுப்பை பெருநிலச் சொந்தக்காரராகிய ஜமின்தார் வர்க்கத்திடம் ஒப்படைத்திருந்தனர். இவர்கள் நாளடைவில் பெரும் நிலச்சுவான்களாகவே மாறியிருந்தனர். அத்துடன் வட்டிக்குப் பணம் கொடுப்போராகவும் ஆகியிருந்தனர். இதனால் உதாரணமாக 1919இல் 17% பஞ்சாபியக் குடியான்கள் மட்டுமே கடன்சுமை எதுவுமில்லாதிருந்தனர். ஆகவே குடியேற்றநாட்டுவாதம் இந்தியாவைப் பெருமளவு பாதித்து அதன் பொருளாதாரப் போக்கையே திசை திருப்பி விட்டதென்பதைக் காணமுடிகிறது.

இதுபோன்றே டச்சுக்கிழக்கிந்திய தீவுகளிலும் பொருளாதாரமானது அதனது மரபுரீதியான நிலையினின்றும் முறியடிக்கப்பட்டது. டச்சு அதிகாரம் இந்தோனேசியப் பொருளாதாரத்தையும் பெருமளவு சீர்குலைத்தது. உதாரணமாக பண்டாத் தீவில் குடியான்களின் சுதந்திர விவசாயத்துக்குப் பதிலாக அடிமை ஊழியத்தைப் பயன்படுத்த முற்பட்டனர். ஜாவாவில் இருந்து அவர்கள் பெற்று வந்த அரிசி வரத்தைத் தடைப்படுத்தியதால் அவர்களுடைய போஷாக்கு நிலை பாதிக்கப்பட்டுப் பலர் இறக்கவே கூடியளவு அடிமைகளைக் கொண்டு வருவதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை குடியேற்றநாட்டுவாதம் என்பது மிக நீண்ட தொரு காலப்பகுதிக்கு நிலைத்திருந்த தொன்றாகும். 1505ல் போர்த்துக்கேயரின் வருகை முதல் 1948ல் அது சுதந்திரம் அநுபவித்த

காலம்வரை அரசியல்ரீதியில் இலங்கை குடியேற்றநாட்டுவாதத்துக்கு உட்பட்ட ஓர் நாடாகவே இருந்தது. இக்காலப்பகுதியில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவில்லை எனக் கூற முடியாவிட்டாலும், அந்நியராதிக்கத்தால் நாகரீகம் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்ததென்பதை நோக்குமிடத்து நாட்டுடன் இணைந்த தேசியத் தன்மை வாய்ந்த கலாச்சாரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததென்றே கூற வேண்டும். ஒவ்வொரு வல்லரசின் தேவைக்கும் ஏற்றபடியே குடியேற்றநாடு நிர்வகிக்கப்பட்டதால் மரபுரீதியான பல தொழில்கள் குறிப்பாக நெற் பயிர்ச்செய்கை போன்றவையும் மரபுரீதியான கைத்தொழில்களும் முற்றுகப் புறக்கணிக்கப்பட்டன. அதனுடைய மரபுரீதியான கலாச்சாரமும் முற்றுகப் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறுகக் குடியேற்றநாட்டுவாதத்துக்கு உட்பட்ட நாடுகளில் மரபுரீதியான கைத்தொழில்களும், பொருளாதார நடவடிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டதால் விவசாயத்தின் மீது தங்கியிருக்கும் சனத்தொகை அதிகரித்தது. இதனைச் செயற்படுத்துவதற்குரிய முக்கிய சாதனமாக விளங்கியது ஐரோப்பிய வல்லரசுகளின் கட்டற்ற வியாபாரத் தத்துவமாகும் நடைமுறையில் இது குடியேற்ற நாடுகளின் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதொன்றுகவே இருந்தது. இதன் படி ஒவ்வொரு நாடும் எந்தெந்தப் பொருட்களில் கூடியளவு வியாபாரம் செய்வதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கின்றனரோ, அந்தப் பொருட்களுடைய வியாபாரத்திலேயே ஈடுபட வேண்டும். ஆகவே கட்டற்ற வர்த்தகமானது உலகரீதியில் ஒரு தொழிற் பிரிவை ஏற்படுத்த முற்பட்டதெனலாம். கட்டற்ற வர்த்தகக் கொள்கை அமுலுக்கு வந்து கொண்டிருந்த அதே நேரத்தில் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் ஐரோப்பிய நாடுகளில் வர்த்தகப் பயிர்களுக்கும், மற்றும் சில கனிப்பொருட்களுக்கும் பெருமளவு கேள்வி ஏற்பட்டது. இதனைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஐரோப்பிய முதலீடுகள் குடியேற்ற நாடுகளை நோக்கி வரலாயின. குடியேற்ற நாடுகள் இந்தப் பொருட்களை உற்பத்தி செய்வதில் தான் கூடியளவு வாய்ப்புப் பெற்றிருக்கின்றன. ஆகவே இவற்றின் உற்பத்தி தவிர்ந்த வேறு பொருளாதார நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படக் கூடாதென்றதொரு கொள்கை குடியேற்ற நாட்டுவாதத்தின் முக்கிய அம்சமாயிற்று. ஆனால் இக்கொள்கையைக் கூர்ந்து நோக்கின் இது ஒரு கலப்பற்ற சுயநல வாதமென்றே கூறலாம். அபிவிருத்தியடைந்துகொண்டிருந்த மேற்கு நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களை இதன் மூலம் பெறக் கூடியதாக இருந்ததுடன் குடியேற்ற நாடுகளில் கைத்தொழிலபிவிருத்தி ஏற்டாமல் தடுத்துத் தம் கைத்தொழிற் பொருட்களை விற்பதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது. அதுமட்டுமன்றி மித மண்டலத்தில் இருந்த பல வல்லரசுகளில் உற்பத்தி செய்ய முடியாதிருந்த கோப்பி, தேயிலை, கொக்கோ போன்ற நுகர் பொருட்களையும் இதன் மூலம் பெறக் கூடியதாயிருந்தது. ஆகவே இவ்வகையில் தலையிடாக் கொள்கையின் அடிப் டையில் எழுந்த கட்டற்ற வர்த்தகத்துக்கும், குடியேற்றநாட்டுவாதத்துக்கு மிடையே ஒரு நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. இதன் மூலம் ஏற்பட்ட பிரதான விளைவு யாதெனில் பல குடியேற்ற நாடுகளிற் பருத்தி, சணல், கொக்கோ, தேயிலை, றப்பர், கம்பளி, எண்ணெய் என்பவை பெரும் அளவுகளில் உற்பத்தி செய்யப்பட்டு ஐரோப்பிய வல்லரசுகட்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. குறிப்பாக 19ம் நூற்றின் இரண்டாவது அரைப் பகுதியில் இந்த வளர்ச்சி மிகக் கூடிய விரைவுடையதொன்றாயிருந்தது. இவ்வாறான ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியின் கீழ் ஏராளமான நிலப்பரப்பு கொண்டுவரப்பட்டதால் உணவுப் பொருட்களின் கீழான நிலப்பரப்பைத் தகுந்தவகையில் அதிகரிக்க முடியவில்லை. முக்கியமாகக் குடியேற்ற நாடுகளில் சனத்தொகை

அதிகரித்துக் கொண்டிருந்த போது உணவுப் பொருட்களைப் பயிரிட முடியாத நிலையில் அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதற்கு இலங்கையே சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது, பயிர்ச்செய்கை நிலப்பரப்பில் 2/3 பகுதி தேயிலை, றப்பர், தெங்கு என்ற ஏற்றுமதிப் பயிர்களின் கீழேயே காணப்படுகின்றது. ஆரம்பத்தில் நெற் பயிர்ச் செய்கைக்கு ஒவ்வாத நிலங்களே பெருந்தோட்டங்களின் கீழ்க்கொண்டுவரப்பட்டதெனச் சமாதானம் கூறப்பட்டபோதும் சனத்தொகை அதிகரித்தவிடத்து இவை நெல் அல்லது வேறுவகை உணவுப் பயிர்களின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் மட்டுமன்றி ஏனைய பல குடியேற்ற நாடுகளிலும் இதே நிலைமை தான் காணப்பட்டது. மலாயாவில் பயிர்ச் செய்கை நிலத்தின் அரைவாசி றப்பரின் கீழ் இருந்தது; அதே போன்று இந்தோனேசியாவில் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் காற்பகுதி றப்பர், தேயிலை, கரும்பு, புகையிலை போன்றவற்றின் கீழ்க் காணப்பட்டது. இதுமட்டுமன்றி இவ்வாருன இந்த உற்பத்தியின் பெரும் பகுதி பெருந்தோட்டங்களில் நடைபெற்றதுடன் இவற்றின் கணிசமான பகுதி ஐரோப்பியருக்குச் சொந்தமானதாகவும் இருந்தது.

இலங்கையில் 80-90%மான தேயிலையும் றப்பரும் பெருந்தோட்டங்களிலேயே வளர்க்கப்பட்டன. இதில் 75%மான தேயிலையும் அரைவாசி றப்பரும் மிகச் சமீபகாலம்வரை ஐரோப்பியருக்குச் சொந்தமான தோட்டங்களிலேயே வளர்க்கப்பட்டன. சர்வதேச ரீதியில் சந்தைப்படுத்தப்பட்ட கொப்பரு உற்பத்தி ஏறக்குறைய முற்றுகப் பிரித்தானியர் வசம காணப்பட்டது. ஆகவே குடியேற்றநாட்டுவாதத்தின் பிரதிபலிப்பாக இந்தத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி, இவற்றில் உள்நாட்டவர் பங்குபற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இந்தத் தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர் கூடக் குறைந்த கூலியில் அமர்த்தப்பட்ட அந்நியர்களாக, அதாவது இந்தியர்களாகவே காணப்பட்டனர். பெருந் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி இந்தப் பெருந்தோட்டங்களுக்குச் சார்பான வகையிலேயே நாட்டின் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளும் வழி நடாத்தப்பட்டன. உதாரணமாகப் போக்குவரத்து, வங்கிமுறை, வர்த்தகம் போன்ற இவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு நாட்டு மக்களுடன் பெருமளவு தொடர்பற்ற நிலையில் ஒரு தலைப்பட்ட முறையில் பொருளாதாரம் வளர்ந்து சென்றமையால் ஏற்பட்ட முக்கிய விளைவு யாதெனில் இந்த வளர்ச்சிகள் குடியேற்ற நாட்டின் பொதுவான வளர்ச்சியுடன் ஒன்று சேராமல் தனித்திருந்தமையேயாகும். ஆகவே பெருந்தோட்டங்களும், அதனைச் சார்ந்த துறைகளும் சிறப்பாக வளர்ச்சியடைந்த அதே நேரத்தில், ஏனைய துறைகள் பின் தங்கி விட்டமையால் பொருளாதாரமானது இரட்டைத் தன்மையுடையதாகக் காட்சி தருகின்றது. பெருந்தோட்டங்கள் வளர்ச்சியடைந்த குடியேற்ற நாடுகளில் எல்லாம் இது ஒரு பொதுப் பண்பாக விளங்குவதையும் அவ்வகையில் இது குறைவிருத்தி நாடுகளின் அல்லது மூன்றுவது உலக நாடுகளின் ஒரு தனிப் பண்பாக விளங்குவதையும் காண முடிகிறது. வளர்ச்சியடைந்த துறைகள் ஏற்றுமதிகளினூடாக நாட்டின் தேசிய வருமானத்துக்குக் கணிசமான பங்கினை வழங்கிக் கொண்டிருந்தன. உதாரணமாக 1955 அளவில் இலங்கையின் தேசிய வருமானத்தில் 48%மும், பர்மாவில் 41%மும், மலாயாவில் 75%மும், இந்தோனேசியாவில் 75%மும் ஏற்றுமதிகளின் மூலமே வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகவே ஏற்றுமதித்துறை அபிவிருத்தியும் அதன் ஒரு தலைப்பட்ட வளர்ச்சியும் குடியேற்றநாட்டுவாதத்தின் மூலம் ஏற்பட்ட முக்கிய பாதிப்பாக விளங்குகிறது.

இவ்வாருக ஏற்றுமதித் துறை வளர்ச்சியடைந்தமையாற் குடியேற்ற நாட்டுப்பொருளாதரத்தில் காணப்பட்ட

பொருளியல் மிகையை ஐரோப்பிய வல்லரசே சூறையாடிக் கொண்டது. மீண்டும் இந்தியாவை இதற்குரிய ஒரு சிறந்த உதாரணமாகக் காட்ட முடியும். 1757-1815க்கு மிடையில் ஏறக்குறைய 1/2 மில்லியன் பவுண் பெறுமதி வாய்ந்த செல்வங்கள் இந்தியாவிலிருந்து பிரித்தானியாவினுல் எடுத்துச் செல்லப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. இந்தியாவில் பல்வேறு கூட்டுப்பங்குத்தொகுதிக் கம்பனிகளினதும் மூலதனத்துடன் ஒப்பிட்டுப் பார்குமிடத்து இந்தத் தொகை எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டுமென்பதை அநுமானித்துக் கொள்ளலாம். 19ம் நூற்றின் ஆரம்பத்தில் இந்தக் கம்பனிகளின் மூலதனம் 36 மில்லியன் பவுண் வரை இருந்ததாக மதிப்பிடப்படுகின்றது. இந்நூற்றின் ஆரம்பத்தில் இந்திய மொத்த தேசிய வருமானத்தில் 10%க்கும் மேற்பட்ட ஒரு தொகையைச் சுவிகரித்துக் கொண்டதாக மதிப்பிடப்படுகிறது. இலங்கையிலிருந்து எவ்வளவு தொகையான செல்வம் இங்கிலாந்தைச் சென்றடைந்தென்பதற்குச் சரியான தரவுகள் இல்லாத போதும் இது கணிசமான ஓர் அளவு என்பதிற் சந்தேகமில்லை. 1930 களில் மலேசியாவின் தேசிய வருமானத்தில் ஏறக்குறைய 1/10 பகுதி இங்கிலாந்துக்குள் சென்றதாக மதிப்பிடப்படுகிறது. இத்தகைய செல்வங்களுடைய இடமாற்றம் நாம் ஏற்கனவே நோக்கிய பெருந்தோட்டங்களினதும், அவற்றைச் சார்ந்திருந்த வர்த்தக, நிதி நிறுவனங்களினதும், மற்றும் முகையிரதங்கள் போன்றவற்றினதும் இலாபங்களாகவும் இருந்தன. குடியேற்ற நாடுகளில் இருந்த ஐரோப்பியர் தமது வருமானம், ஓய்வுச் சம்பளம் போன்றவற்றை அனுப்பியதாலும் செல்வங்கள் நாட்டை விட்டுச் சென்றன. இலங்கை, மலாயா போன்ற நாடுகளில் தனியே பிரித்தானியர் மாத்திரமன்றி பெருந்தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்த இந்தியர் தமது வருமானங்களைத் தம் தாய் நாடாகிய இந்தியாவுக்கு அனுப்பியதன் மூலமும் செல்வ இழப்பு ஏற்பட்டது. நாட்டின் முக்கிய உற்பத்திக் காரணிகள் அந்நிய உடைமைகளாக இருக்கும்வரை இத்தகைய நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதென்றே கூறலாம். புவியியற் கருத்தில் இவை குடியேற்ற நாடுகளிற் காணப்பட்டனவே தவிர, மற்றெல்லா வகையிலும் இவை குடியேற்ற நாட்டை ஆட்சி செய்த அந்நிய வல்லரசுக்குச் சொந்தமானதாகவே இருந்தன. இவ்வாறு செல்வங்கள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டமையால் உள்நாட்டில் சிறந்த மூலதனச் சந்தை ஒன்று எந்நிலையிலும் வளருவதற்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது. அத்துடன் முதலீடு ஒரே தொழிலில் திரும்பத்திரும்ப ஏற்பட்டுக் கொண்டிருந்ததேயன்றி ஏனைய பயன்பாடுகளுக்கு அவை பரவவில்லை. வணிக இல்லங்கள் (Mercantile houses) கைத்தொழிற் கொடு கடனின் ஊற்றுகளாக ஒருபோதும் மாறவில்லை. வர்த்தக நிலையங்கள் கைத்தொழில் நடவடிக்கை நிலையங்களாக ஒருபோதும் மாறவில்லை, ஆனால் வெறும் சந்தை நிலையங்களாகவே இருந்தன. போக்குவரத்து முறை பொருளாதாரத்தைத் திறந்து விடவில்லை. அதற்குப்பதிலாக மூலப்பொருட்களை வெளித்தள்ளி வெளிநாட்டு முடிவுப் பொருட்களை உள் ஈர்க்கும் ஒரு பாதை போன்றே காணப்பட்டது. சுருக்கமாகக் கூறின் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தியிற் குடியேற்றநாட்டுவாதத்தின் மூலம் ஏற்பட்ட அந்நிய நடவடிக்கை சாதித்த தென்னவெனில் வர்த்தக முதலாளித்துவ வாதத்தைப் பெருமளவு உறுதியாக்கிப் பலப்படுத்தி, அதே நேரத்தில் அது ஒரு கைத்தொழில் முதலாளித்துவமாக உருமாறுவதைத் தடுத்து வைத்ததேயாகும்.

இதுமட்டுமன்றிக் குடியேற்ற நாடுகள் தமக்குரிய மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளக் கூடிய வகையில் நிதி, வர்த்தக விடயங்களில் எத்தகைய சுதந்திரத்தையும் அநுபவிக்கவில்லை. இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பிந்திய தசாப்தத்தில் பிரித்தானிய குடியேற்ற நாடுகள் ஏராளமான ஸ்ரேலிங்

நிறுவனங்களைச் சேர்த்துக் கொண்டிருந்தன. இதற்குக் காரணம் யுத்தத்திற்கு முந்திய காலப்பகுதியில் ஸ்ரேலிங்குடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்த ஸ்ரேலிங் பிரதேசம் (sterling area) பிரித்தானியாவினதும் அதன் பேரரசினதும் ஒரு சிறந்த யுத்தகால ஒழுங்கு முறையாக உருவாகியமையாகும். இது டொலர் செலவீட்டுக்கு லண்டனுக்கு முழுக் கட்டுப்பாட்டை வழங்கி ஏனைய அங்கத்தவருக்கான யுத்த காலக் கடன்களை ஸ்ரேலிங் நிலுவையாக வைத்திருந்தது. இவை பெரும்பாலும் லண்டனிலேயே தடை செய்யப்பட்டிருந்தன. டொலர் நிதியிலிருந்து எடுத்து அதன் ஒதுக்குகளைக் குறைப்பது யாவரும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயமாயிருந்தது குடியேற்ற நாட்டு வங்கிகள் எல்லாம் லண்டன் வங்கிகளின் கிளைகளாகவும், மத்திய வங்கிகள் எங்காவது நிலவினால் அவை இங்கிலாந்து வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த படியால் இதில் எதுவித கஷ்டமும் இருக்கவில்லை. குடியேற்ற நாடுகள் எடுக்கக்கூடிய பண அளவு நாணயச் சபைகளால் கட்டுப்படுத்தப்பட்டது. இவை 100% ஸ்ரேலிங் ஒதுக்கின்றி உள்ளூர் நாணயங்களை வெளியிட அனுமதிக்கப்படவில்லை. இதனால் நவீன அரசாங்கம் ஒன்றைப்போல மத்திமப்படுத்தப்பட்ட கடன் விரிவாக்கத்தின் மூலம் பொருளாதாரத்தை விரிவாக்குவது முடியாததாயிற்று. இவை பிரித்தானிய நாணய முறையின் ஒரு கிளை போன்று மாத்திரமே காணப்பட்டது. பிரித்தானியப் பொருளாதாரம் பூரிப்படைந்து, குடியேற்ற நாடுகளிலிருந்து இறக்குமதிகள் கூடும் போது, குடியேற்ற நாடுகளின் ஏற்றுமதி வருமானம் கூடும். அதாவது அதற்கேற்ப உள்நாட்டு நாணயத்தை அவை அதிகரிக்கலாம். ஆனால் மறுபுறம் பிரித்தானியப் பொருளாதாரம் மந்த நிலையடைந்து குடியேற்ற நாட்டிலிருந்து இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தால், அவற்றின் ஸ்ரேலிங் வரவுகள் குறைவடையவே உள்நாட்டு நாணயங்களும் வீழ்ச்சியடைந்தன. ஆகவே குடியேற்ற நாடுகளைப் பொறுத்தவரை பழைய தங்க நாணய திட்டமுறையே இருந்தது. ஆனால் இங்கு தங்கத்துக்குப் பதிலாக ஸ்ரேலிங் திட்டம் கையாளப்பட்டது. தேசிய வருமானத்தில் ஏற்படும் தளம்பல்களின் மூலம், சென்மதி நிலுவையைச் சமநிலையில் வைத்திருப்பதற்கு, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவை வெளிநாட்டில் ஏற்படும் குழப்பங்களின் மூலமான உள்நாட்டுப் பிரதிபலிப்பைப் பெரிது படுத்திக்காட்டி அவற்றை உள்நாட்டு நாணய முகாமையின் மூலம் தீர்த்து வைப்பதற்குரிய மார்க்கத்தை இல்லாமற் செய்திருந்தது. சுருக்கமாகக் கூறின். குடியேற்ற நாடுகள் தமது கடன் இறைக் கொள்கைகளைத் தாமே கட்டுப்படுத்தும் அதிகாரமற்றவையாக இருந்தன. அவர்களுடைய மொத்த மூலதனப் பணச்சந்தையில் எதுவித அபிவிருத்தியும் ஏற்பட முடியவில்லை. ஏற்றுமதி இறக்குமதிகளைப் பிரித்தானியருக்குச் சொந்தமான வர்த்தக நிதி நிலையங்களே கொண்டு நடத்தியதால் வர்த்தக மார்க்கங்கள் யாவும் கட்டுப்பாட்டுக்குட்பட்டனவாகவே காணப்பட்டன. வல்லரசின் ஏற்றுமதிகளுக்குக் கூடிய வாய்ப்பளிக்கும் வகையிலேயே குடியேற்ற நாடுகளின் இறக்குமதிக் கொள்கை கையாளப்பட்டது. பிரித்தானியாவின் பேரரசு முன்னுரிமை முறை இதற்கொரு சிறந்த உதாரணமாகும். இதன் மூலம் மலிந்த சந்தைகளிற் குடியேற்ற நாடுகள் வாங்குவது தடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக நிதி வர்த்தக விடயங்கள் குடியேற்ற நாட்டுவாதத்தின் மூலமான மிக முக்கியமான பாதிப்பு எனலாம்.

இது தவிரக் குடியேற்றநாட்டு வாதத்தின் மூலம், சமூக அரசியல் விளைவுகள் எனக் கூறக் கூடிய பல தாக்கங்கள் குடியேற்ற நாடுகளில் ஏற்பட்டிருந்தன வல்லரசுகளுடைய அரசியல் அபிலாஷைகட்கேற்ற வகையில் குடியேற்ற நாடுகளுடைய எல்லைகளை வகுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. உதாரணமாகத் தாய்லாந்து, லாவோஸ் என்பவற்றுக்கிடையிலான எல்லை

ஒற்றுமைப்பட்ட ஒரு இனமாகிய லாவோ சிய தாய்ச் சனத்தொகையை ஊடறுத்துச் செல்வதொன்றுயிருந்தது. மலாயா பேசும் பிரதேசங்கள் இந்தோனேசியாவைக் கைப் பற்றிய டச்சுக்காரருக்கும், மலாயக் குடி யேற்ற நாட்டைக் கைப்பற்றிய பிரித்தானி யருக்குமிடையில் பங்குபோடப்பட்டது எனி னும் இலங்கை ஒரு தீவாயிருந்த படியால் அதிஷ்டவசமாக இது விடயத்தில் பெருமளவு பாதிப்புக்குட்படவில்லை. பல இன மக்களைக் கொண்ட சமூகங்கள் உருவாவதற்கும் குடியேற்றநாட்டுவாதமே காரணமாக இருந்துள்ளதெனலாம். உதாரணமாகச் சுதேசிகள், குடியேற்ற நாட்டு வல்லரசு விரும்பிய பொருளாதார நடவடிக்கையிலீடு பட முன்வராதபோது வேறு இனமக்களைக் கொண்டுசென்று குடியேற்றி அதன்மூலம் தாம் விரும்பிய நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அவர்கள் தவறவில்லை. இலங்கை, மலாயா, ஆகிய நாடுகளின் தென்னிந்திய சமூகங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். இதே போன்றே மலாயா விற் சீனச் சமூகம் உருவாகியது. பல இன மக்களைக் (plural society) கொண்ட சமூகம் எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல் லாம் அது உருவாவதற்குக் குடியேற்றநாட்டு வாதமே ஏதோ ஒரு வகையில் காரணமா யிருந்துள்ளதெனப் பிஷர் (A. Fisher) என்ற ஆசிரியர் குறிப்பிடுகின்றார். சமூகத்தில் இதன் மூலம் பிரிவினை ஏற்பட்டது மட்டு மன்றி இந்த நாடுகளுடைய சனத்தொகை யிலும் இது பெரும் அதிகரிப்பைக்கொண்டு வர வல்லதாயிருந்தது. உதாரணமாக இலங் கையில் 1871–1881 க்குமிடையில் ஏற் பட்ட சனத்தொகை அதிகரிப்பின் 66·7% இடப்பெயர்வின் மூலம் அதாவது பெருந் தோட்டங்களில் வேலை செய்வதற்கு வந்த இந்தியர்கள் மூலம் ஏற்பட்டிருந்தது. இந நூற்றாண்டின் ஆரம்பத்திற் கூட, 1891–1901க்கு மிடையில் இதன் பங்கு 59·6% மாக இருந்தது.

குடியேற்றநாட்டுவாதத்தின் மூலம் குடியேற்ற நாடுகளின் கலை, கலாச்சாரம், கல்வி என்பவற்றிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புகள் பல ஏற்பட்டிருந்தன. இவை அரசியல் ரீதியிற் குடியேற்றநாட்டுவாதம் முடிவடைந்த பின்பும் இன்று வரை நீடித் திருக்கின்றன. இவை குடியேற்றநாட்டுவா தத்தின் தொடர்ந்திருக்கும் சின்னங்களாகக் காணப்படுவதால், ஏற்கனவே கூறிய படி இந்நிலைமை நவகுடியேற்ற வாதமென வும் அழைக்கப்படுகின்றது.

சுதந்திரம் என்பது மிகவும் அருமையானபொருள். அதை என்ன விலை கொடுத்து வாங்கினாலும் வாங்கலாம். ஒரு மனிதன் தன் உடம் பைத் தவிர வேறெந்த உடம்பிலும் புகுந்து வசிக்க விரும்பமாட் டான். அதேபோல ஒரு தேசம் மற்றொரு தேசத்தின் கீழ் அடிமைப் பட்டு வாழ மனப்பூர்வமாக விரும்பாது. சுதந்திர உணர்வு என்பது எந்த ஒரு ஜீவராசிக்கும் இயல்பாக எழுகின்ற ஓர் உணர்வாகும். இது கடவுளின் அருளாகும். அடிமை நிலை கடவுளின் கட்டளைக்கு நேர் விரோதமான ஒரு நிலையாகும்.

— மகாத்மா காந்தி

With the Best Compliments from



SIYANAS TAILORS

"சியானஸ்"

நவீனசந்தை
யாழ்ப்பாணம்

176

MODEL MARKET
JAFFNA

Best Wishes to

THE "VIRUTCHAM"

V. KANAGALINGAM

"THANGAMALIKAI"

WARD NO. 8
PUNGUDUTHIVU

சூழல் ஆய்வு
(ENVIRONMENTAL ANALYSIS)

தே. ஜெயராமன்
B. Com (Hons.) MBA
முகாமைத்துவப் பீடம்,
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்

எந்த ஒரு நிறுவனத்தினதும் முகாமைத் தொழிற்பாடுகளுக்கும், நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும், நிறுவனத்தின் தந்திரோபாய நடவடிக்கைகளுக்கும் (strategic) அந்நிறுவனத்தின் சூழலுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. "சூழல்" என்று குறிப்பிடுகையில் நிறுவனத்தின் வெளிக்காரணிகளைக் குறிப்பிடுகின்றது. அதேவேளையில் இக் காரணிகள் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்குச் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ, அதாவது தடையாகக் காணப்படலாம். (factors which can lead to opportunities for or threats)

இச் சூழல் காரணிகள் எவை? எந்த வகையில் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கு இவை சாதகமாக அமையும்? எந்த வகையில் நிறுவனத்தின் தொழிற்பாட்டைப் பாதிப்படையச் செய்யும்? இவ் விஞ்ஞாராயும் முன் சூழற்காரணிகள் எவற்றை உள்ளடக்குகின்றன என ஆராயப்படல் வேண்டும்.

பொதுவாக இச் சூழற்காரணிகளை (Environmental factors) நான்கு பிரிவுகட்குள் உள்ளடக்கலாம்.
அவையாவன,

(a) சமூக, பொருளாதாரக் காரணிகள் (Socio Economic factors)
(b) போட்டியாளர் (Competitor)
(c) விநியோகஸ்தர் (Supplier)
(d) அரசாங்கம் (Government)

மேற்குறிப்பிட்ட நான்கு காரணிகளும் நிறுவனத்திற்கு வெளிக்காரணிகளாகக் (factors outside the firm) காணப்படினும், இவை நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கு ஏதோ ஒரு வகையில் சந்தர்ப்பம் அளிப்பதாகவும் அல்லது ஏதோ ஒரு வகையில் தடையாக

அமைவதனையும் காணலாம். எந்தவகையில் இக் காரணிகள் நிறுவனத்தின் தொழிற் பாட்டைப் பாதிப்படையச் செய்கின்றன?

முதலாவதாக சமூக, பொருளாதாரக் காரணிகளை எடுத்து ஆராயும்போது, இதனுள் பொருளாதாரக் காரணிகளும், சமூகக் காரணிகளும் உள்ளடக்கப்படுகின்றன. பொதுவாகப் பொருளாதாரக் காரணிகளான நாட்டின் பொருளாதாரநிலை அதாவது மந்தம் (Depression) செழிப்பு (Prosperity) பின்னடைதல் (Recession) நாணயக் கொள்கை (Monetary Policy) சென்மதி நிலுவை (Balance of Payment) வரிக்கொள்கை (Tax Policy) என்பன ஒரு நிறுவனத்தின் தொழிற் பாட்டிற்குச் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ அமையலாம்.

உதாரணமாக ஒரு நாட்டின் பொருளாதாரம் பின்னடைதல் (Recession) நிலையில் காணப்படின் அது வேலையின்மைக்கு (Unemployment) வழிவகுக்கும். இதன் மூலம் மக்களின் வருமானம் குறைவடையும், இது நிறுவனத்தின் விற்பனை வீழ்ச்சிக்கு வழிவகுக்கும். இதன் மூலம் எந்தவகையில் நாட்டின் பொருளாதாரக் காரணி நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கு எதிராக அமைகிறது என்பது புலனாகின்றது. மறுபுறத்தில் சில பொருளாதாரக் காரணிகள் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்கும், முகாமைத் தீர்மானங்களுக்கும் சாதகமாக அமையும் என்பதும் மறுப்பதற்கில்லை. உதாரணமாக நாட்டின் வரிக்கொள்கை நிறுவனங்களிற்கு வரிவிடுதலை (Tax Holiday) வரிச்சலுகை (Tax Relief) என்பவற்றை வழங்குவதாகக் காணப்படின், இது முதலீடுகளைக் கவர்வதாகக் (Attractiveness of Investment) காணப்படும். எனவே நிறுவனம்தனது முதலீடுகளை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இங்கு புறக் காரணி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதன் தொழிற்பாட்டிற்கும் சாதகமாக அமைவதனைக் காணலாம்.

அடுத்ததாக நாட்டின் குடித்தொகைக் காரணிகளான (Demographic factors) நாட்டின் மொத்தச்சனத்தொகை, (Population) வருமானப் பங்கீடு, (Income Distribution) பிறப்பு இறப்பு வீதம் (Birth and Death rate) ஆகிய காரணிகளும் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்குச் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ காணப்படலாம்.

உதாரணமாக நாட்டின் சனத் தொகை அதிகமாகக் காணப்படும் வேளையில் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் அல்லது சேவைகளுக்குக் கூடுதலான சந்தை வாய்ப்புக் கிடைக்கின்றது. நாட்டில் குழந்தைகள் பிறப்பு வீதம் கூடுதலாகக் காணப்படின், அது குழந்தைகள் பயன்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தொழிற்பாட்டு வளர்ச்சிக்குச் சாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சமூகக் காரணிகளான மக்களின் நம்பிக்கை (Value) மனோபாவம் (Attitude) என்பன எந்தவகையில் நிறுவனத்தின் தொழிற்பாட்டுடன் தொடர்புடையது என அவதானிப்போம். உதாரணமாக அதிகளவு குழந்தைகளைப் பெறுவது நன்மையானது என மக்கள் எண்ணும்போது அது குழந்தைகள் உணவுப் பொருட்களை (Baby food) உற்பத்தி செய்யும் நிறுவனங்களிற்குச் சாதகமான தாக அமைகின்றது.

முன்பு மக்கள் கூட்டுக் குடும்ப (Joint family) வாழ்க்கையைப் பெரிதும் விரும்பினார்கள். ஆனால் தற்போது பெரும்பாலானோர் தனிக்குடித்தனத்தையே விரும்புகின்றனர். இது வீடுகளுக்குக் கூடிய கேள்வியைத் தோற்றுவித்துள்ளது. கட்டிடக்கா

ரர்களின் (Builders) தொழில் முயற்சிக்கு இது சாதகமாக அமைகின்றது. எனவே மக்களின் மனோபாவம், நம்பிக்கை என்பன ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்குச் சாதக மாக அன்றிப் பாதகமாக அமையலாம்.

போட்டியாளர்களின் நடவடிக்கையும் ஒரு நிறுவனத்திற்குச் சாதகமாகவோ அன் றிப் பாதகமாகவோ அமையக்கூடும். நிறு வனத்தின் போட்டியாளர்கள் தொழிலை விட்டு நீங்குகின்றார்களா? அல்லது தொழி லில் உட்புகுகின்றார்களா? (Whether Competitors leave or join) என்பதனை அடிப் படையாகக்கொண்டு, போட்டியாளர்களின் தாக்கம் அமையும். போட்டியாளர்கள் தொழிலைவிட்டு நீங்கின் அது நிறுவனம் கல பமாகத் தனது நோக்கத்தை அடைவதற் குச் சாதகமாக அமையும். ஒரு நிறுவனம் தொழில் முயற்சியினுள் நுழைவதற்குப் பல் வேறு தடைகள் காரணமாக அமையும்.

அவையாவன,

(a) மூலப்பொருட்களின் அருமை, அதனைப் பெற்றுக்கொள்வதிலுள்ள கடினம் (Scarcity of raw materials)

(b) கிடைக்கக்கூடிய பிரதியீடுகள் (Availability of substitutes)

(c) பிரதான போட்டியாளர்கள் போட்டி நிலையில் மேற்கொள்ளும் தந்திரோ பாயங்கள் (Major competitor's strategies in a competition)

உதாரணமாகப் போட்டியாளர் திடீரென விலையைக் குறைக்கும்போது நிறுவனமும் தனது விலைக்கொள்கையை மாற்றி அமைத் துக்கொள்ள நேரிடும். போட்டி நிறுவ னம் விளம்பரமுறைகளில் மாற்றத்தைக் கையாளும்போது நிறுவனமும் அதற்கேற் பத் தனது விளம்பரமுறை பற்றித் தீர்மா னிக்க வேண்டும்.

விநியோகஸ்தர்களாலும் ஒரு நிறு வனத்தின் தொழிற்பாட்டின் மீது தாக்கத் தை ஏற்படுத்த முடியும். விநியோகஸ்தர் கள் என்றால் யார்? ஒரு நிறுவனத்திற்கு முதல், மூலப்பொருள், உழைப்பு என்ப வற்றை வழங்குவோரை விநியோகஸ்தர்கள் எனலாம். முதலை வழங்கும் தனிப்பட் டோர் அல்லது நிறுவனம் முதலுக்கான வட்டியினைக் கூட்டலாம் அன்றிக் குறைக்க லாம் அல்லது வழங்கும் முதலின் அளவை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம் பொதுவாக வட்டி வீதத்தை அதிகரிக்கும் வேளையில் அது நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக அமையலாம். வட்டி வீதம் குறைவடைந்து, போதியளவு நிதியைப் (capital) பெற்றுக் கொள்ளக்கூடியதான வேளையில் அது நிறுவனத்தின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையலாம். இவ்வாறே மூலப் பொருள்கள், உழைப்பு என்பவற்றின் வழங் குனர்கள் அதற்கான விலையினை அதிகரிப் பதன் மூலமோ அன்றிக் குறைப்பதன் மூல மோ நிறுவனத்தின் முகாமைத் தொழிற் பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

அடுத்ததாக அரசாங்கமும் நிறுவனத் தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது செயற்பாடுகளை விஸ்தரிப்பதற் கான ஊக்கத்தை வழங்கவோ முடியும். அர சாங்கம் காலத்திற்குக்காலம் இயற்றும் பொதுவான சட்டங்களின் மூலம் நிறுவனங் களின் நடவடிக்கைகள், முகாமைத் தீர்மா னங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக இலங்கையில் விலை சம் பந்தமாக விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (Price Control Act) இயற்றப்பட்டுள்ளது. இது சிலவகையான பொருட்களின் விலை யைக் கட்டுப்படுத்துகின்றது. இதன் மூலம் நிறுவனங்கள் இவ் விலைக்கட்டுப்பாட்டுச் சட் டத்திற்கு அமைவானதாகவே தமது விலைக் கொள்கை பற்றிய தீர்மானத்தினை மேற் கொள்ளவேண்டி நேரிடும்.

சிலவகையான பொருட்களின் (உ+ம்: குழந்தைகள் பால்மா (Infant Milk Foods)) விளம்பரங்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி (Consumer Protection Act) கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே நிறுவனங்களின் விளம்பரமுறைகளை வெளிக் காரணியால் கட்டுப்படுத்த முடியும்.

சில நாடுகளில் உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு இறக்குமதிக் கட்டுப்பாடு (Import Restriction) விதிக்கப்பட்டுள்ளது (உ+ம்: இந்தியா) இது அந்நாட்டிலுள்ள உள்ளூர் நிறுவனங்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையும். மறுபுறத்தில் இலங்கையில் அமுல்படுத்தப்படும் தாராள இறக்குமதிக் கொள்கை (Import Liberalization) உள்ளூர் நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தடையாக அமையும்

மேலும் அரசாங்கம், வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் போதிய கடன் வசதிகளைத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கும் போது அது பல புதிய நிறுவனங்கள் உருவாகுவதற்குச் (Increase opportunity for new business firm) சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும். எனவே அரசின் நடவடிக்கைகள் ஒரு நிறுவனத்தின் தொழிற்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது நிறுவனத்திற்குச் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ அமையக்கூடும் என்பதில் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

இறுதியாகப் புறக்காரணிகள் நிறுவனத்தின் தொழிற்பாட்டிற்குச் சாதகமாகவோ அன்றித் தடையாகவோ காணப்படலாம் என்ற உண்மை மிகவும் தெளிவானதாகக் காணப்படுகின்றது. இப் புறக்காரணிகள் சாதகமாக உள்ளவேளையில் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிறுவனம் வளர்ச்சி அடைய முன்வருதல் வேண்டும். மறுபுறத்தில் புறக்காரணிகள் பாதகமாகவோ அன்றித் தடையாகவோ காணப்படும் வேளையில் அதனை முறியடிக்கக்கூடிய வகையில் நிறுவனம் தந்திரோபாய நடவடிக்கைகளை நிர்ணயித்துக்கொள்ளலே புத்திசாலித்தனமானது. ("Exploit the opportunity and Defend the threat."

எவ்வாறு புறக்காரணிகளை வெல்ல முடியும் ?

முதலில் புறக்காரணிகள் பற்றிய சகல தகவல்களையும் நிறுவனம் பெற்று அவற்றை ஆய்வு செய்தல் வேண்டும். தகவல்களைப் பின்வரும் மூலங்களின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

(அ) வாய்மூலமான தகவல்கள் (gathering verbal information)

(ஆ) செய்தித் தொடர்புச் சாதனங்கள் அதாவது வானொலி, தொலைக்காட்சி மூலம் (Media as radio and TV)

(இ) நிறுவனத்திற்கு வெளியே காணப்படுபவர்களான நுகர்வோர், தரகர் மூலம் பெறல் (customers, brokers etc.)

இவ்வாறு பெறப்பட்ட தகவல்களை ஆய்வு செய்து நம்பகமான, முக்கிய தகவல்களைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இதன் மூலம் நிறுவனத்தின் சூழற்காரணிகளை மதிப்பீடு செய்யலாம். இச் சூழற்காரணிகளில் எவை நிறுவனத்திற்குச் சாதகமான வையாக உள்ளன? எவை நிறுவனத்திற்குத் தடையாக உள்ளன? சாதகமாக உள்ள காரணிகளை முழு அளவில் பயன்படுத்த நிறுவனத்திற்கு முடியுமா? தடைகளை வெல்லக்கூடியவகையில் தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய திறன் நிறுவனத்திற்கு உண்டா? இவற்றை எவ்வாறு மதிப்பீடு செய்யலாம்?

இவற்றை மதிப்பீடு செய்வதற்கு நிறுவனம் பற்றிய "SWOT" ஆய்வினை (Strengths, Weaknesses, Opportunities and Threats Analyzes) மேற்கொள்ளல் வேண்டும். SWOT ஆய்வு என்னும் போது நிறுவனத்தில் காணப்படும் பலத்தையும், (strengths) குறைபாடுகளையும் (weaknesses) அதேவேளையில் சூழலில் காணப்படும் புறக்காரணிகளான நிறுவனத்திற்குச் சாத்தியமான காரணிகளையும், தடையாகக் காணப்படும் காரணிகளையும் கண்டுகொள்ளும் ஆய்வு முறையாகும். இவ் ஆய்வு மூலம் நிறுவனம் சூழற் காரணிகளில் சாதகமானதை நிறுவனத்திற்கு ஏற்ப பயன்படுத்தக்கூடியதாகவும் தடையான காரணிகளை முறியடிக்கக்கூடிய வகையில் தந்திரோபாய நடவடிக்கைகளைத் திட்டமிடவும் முடிகிறது.

எனவே எந்த ஒரு நிறுவனமும் நிறுவனத்தின் சூழல் பற்றி ஆய்வினை மேற்கொண்டு, சூழல் காரணிகளைக் கருத்திற் கொண்டு முகாமைத் தொழிற்பாடுகளைத் திட்டமிடுவதன் மூலம் தனது நோக்கத்தை அடையக்கூடியதாக இருக்கும் என்பது தெளிவான உண்மை.

ஆழ்ந்த அன்பு செலுத்துவதைக் காட்டிலும் பெரிய குற்றம் இவ்வுலகில் வேறு இல்லை. நாம் நமது ஸர்வஸ்வத்தையும் கொடுத்துவிட, அதைப் பெற்றவர்கள் அதை ஒரு காசுக்குக்கூட மதிக்காவிட்டால் இதைவிடப் பெரிய துன்பம் உலகில் வேறு என்ன இருக்கிறது ?

— காண்டேகர்

★ ★

ஒரு ஆண் தனக்கு விஷயம் தெரியும் என்று நினைக்கின்றான். ஆனால் ஒரு பெண் அந்த விஷயத்தை நன்றாகத் தெரிந்திருக்கின்றாள்.

— சினு

With the Best Compliments from

M. CITY MEDICALS

SPECIALISTS IN PHARMACEUTICALS

487, Hospital Road,
JAFFNA

Tel.: 24191
24192

With the Best Wishes from

S. S. N. Sudalaimuthu Chetty & Company

No. 45, Wolfendhal Street,
COLOMBO 13

Authorized Dealers for

CEYLON OILS & FATS CORPORATION PRODUCTS IN COLOMBO

T'phone: 34826

இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சியும் அதன் பிரதான நிதி அமைப்புகளும்

R. இலங்காதுரை B. Com.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். தொழில்நுட்பக்கல்லூரி

தொழில்முயற்சியாளர்களின் தேவைகளுக்கேற்றவாறு நீண்டகால நிதி வசதிகளை அளிக்கும் நிறுவனங்கள் மூலதனச் சந்தையாகக் கருதப்படும். மூலதனச் சந்தையாகச் செயற்படும் அமைப்புகள் நாடுகளின் நிதியமைப்பில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவை தொழில்முயற்சியாளர்கள் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும், அவற்றைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் உதவியாக அமைகின்றன. அதாவது அவர்களின் தொழில் முயற்சிகளுக்கு அவசியமான நீண்டகால நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. பொருளாதார ரீதியில் முதிர்ச்சியடைந்த நாடுகளில் மூலதனச் சந்தையின் முக்கியத்துவம் பலவருட காலமாக உணரப்பட்டு அதன் வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலை திட்டமிட்டு அந்நாடுகளில் உருவாக்கப்பட்டது. இதன் பிரதிபலனாக இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற முதிர்ச்சியடைந்த, பொருளாதாரங்களையுடைய நாடுகளில் மூலதனச் சந்தை பெருமளவிற்கு வளர்ச்சியடைந்த நிலைகளில் காணப்படுவதனால் அந்நாடுகளில் நீண்டகால நிதித் தேவைகள் பெருமளவிற்குப் பூர்த்தி செய்யப்படுகின்றன. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் மூலதனச்சந்தையின் வளர்ச்சியில் வெகு அண்மைக்காலம் வரை திட்டவட்டமான அக்கறை செலுத்தப்படாததனால் இதன் வளர்ச்சி பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஆனால் அண்மைக் காலத்தில் வளர்முக நாடுகளிலும் பொருளாதாரத்தின் துரிதமான வளர்ச்சிக்கு மூலதனச்சந்தை ஓர் அத்தியாவசியமான ஆக்கக்காரணியாகவும் முன்னோடியாகவும் கரு

தப்பட்டு இதன் வளர்ச்சியைத் துரிதப்படுத் துவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடுகளின் பொருளாதார வளர்ச்சி யைத் துரிதப்படுத்துவதற்குப் பல சாதக மான தாக்கவிளைவுகளை மூலதனச்சந்தை அமைப்பு ஏற்படுத்துகின்றது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பிறநாட்டு முதலீட் டாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவ தற்கு மூலதனச் சந்தையின் முதிர்ச்சியான வளர்ச்சி அத்தியாவசியமான ஓர் முன்னே டியாக அமைகின்றது. பிறநாட்டு முதலீட் டாளருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதனூ டாகவே ஒரு நாட்டுப் பொருளாதாரத்தில் பிறநாட்டு முதலீடுகளின் வருகையை அதி கரித்து பிறநாட்டு மூலதனத்தின் வருகை யையுமதிகரிக்கலாம். தனியார் துறையின ருக்கு நீண்டகால நிதி வசதிகளை அளிப் பதன் ஊடாக நாட்டில் தனியார் துறை முதலீடுகளின் வளர்ச்சியைப் பெருமளவிற் குத் துரிதப்படுத்தலாம். நாட்டில் நிதி விரயமாக முடங்கியிருப்பதைத் தவிர்ப்பதற் கும் மூலதனச் சந்தை செயற்படுவது தவிர்க்க முடியாததாக அமைகின்றது. மூலதனச் சந்தை பெருமளவிற்கு வளர்ச்சியடைந்து திறமையாகச் செயற்பட்டால் நாட்டு மக் களிடம் இருக்கும் சேமிப்புப் பணம், கம்பனி போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்யப் படுவதனால் சேமிப்பு நிதி விரயமாக நாட்டு மக்களிடம் முடங்கி இருப்பது தவிர்க்கப் படும். நிதி தேவைப்படும் முதலீட்டுக்காரர் களையும், பெருமளவில் நிதியை வைத்திருக் கின்றவர்களையும் இணைப்பதற்கு மூலதனச் சந்தை தகுந்த ஓர் கருவியாகச் செயற் படுகின்றது. பொருளாதார வளர்ச்சி துரிதமாக ஏற்படும் ஓர் நாட்டில் மூல தன உடமையைப் பரவலாக்குவதற்கும், நாட்டில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியின் பலாபலனை நாட்டு மக்கள் பலரும் பரவலாக அனுபவிக்கச் செய்வதற் கும் மூலதனச் சந்தை ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றது. இத்தகைய சூழ்நிலையை மூலதனச் சந்தை உருவாக்குவதனால் சமூதா யத்தில் ஓர் ஸ்திரநிலையை ஏற்படுத்துகிறது. மூலதனச் சந்தை பரவலாக வளர்ச்சியடைவ தனால் நாட்டில் ஓர் முதிர்ச்சியடைந்த நிதி யமைப்பின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மூலதனச் சந்தையில் பலதரப்பட்ட நிறுவனங்களும் செயற்படுகின்றன. ஆவ ணங்களை வழங்கும் நிறுவனங்கள், முதலீட்டு நம்பிக்கை ஸ்தாபங்கள், நம்பிக்கை அலகு கள், நிதிக்கம்பனிகள், தோற்றுவிப்பாளர் கள், உறுதிப்பொறுப்பு அளிப்போர், சரக்கு முதல் கைமாற்று அமைப்புகள் போன்ற பல் தரப்பட்ட நிறுவனங்களும் மூலதனச் சந் தையில் இடம்பெறுகின்றன. ஆவணங்களை வழங்கும் நிறுவனங்கள் கம்பனிகள் தமது பங்குகள், தொகுதிக்கடன் பத்திரங்கள் போன்றவற்றைப் புதிதாக விற்பனை செய்து நிதி சேர்ப்பதற்கு உதவியாக அமைகின்றன. கம்பனிகள் இவ் ஆவணங்களை விற்பனை செய்வதை மேற்பார்வை செய்வதுடன் அவற்றைப் பொதுமக்கள் மத்தியில் பிரபல் யப்படுத்திப் பொதுமக்களுக்கு அவற்றை விற்பனை செய்யக் கூடிய சூழ்நிலையை உரு வாக்குகின்றன. சில சந்தர்ப்பங்களில் இந் நிறுவனங்கள் கம்பனிகள் விற்பனை செய்ய உத்தேசித்திருக்கும் பங்குகளை முழு அளவில் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு அவற்றை இலாபத்துடன் விற்பனை செய்வ திலும் ஈடுபடுகின்றன. முதலீட்டு நம்பிக்கை ஸ்தாபனங்கள் பங்குகளை வழங்கி நிதியைச் சேர்ப்பதில் ஈடுபடுகின்றன. இவ்வாறு சேர்க் கப்படும் நிதிமூலம் பல்வேறு வகையான முதலீடுகளைச் செய்கின்றன. தொழில் முயற் சியினால் ஏற்படும் இலாபம் ஆவணங்களைக் கொள்வனவு செய்து முதலீடு செய்தவர் களுக்குப் பங்கீடு செய்து கொடுக்கப்படும். நம்பிக்கை அலகுகள் என்பன ஒரு முகாமைக்

கம்பனிக்கும், நம்பிக்கைக் கம்பனிக்குமிடையில் ஏற்படும் உடன்படிக்கை ஊடாக உருவாக்கப்படுகின்றது. முகாமையாளர்கள் அலகுகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்து நிதியைச் சேர்த்து, அவ்வாறு பெறப்படும் நிதியை, ஆவணங்களைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்கின்றார். முதலீடு செய்வதனால் ஏற்படும் இலாபம் அலகுகளைக் கொள்வனவு செய்தவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும். நிதிக்கம்பனிகள் தொழில் முயற்சியாளருக்கு நீண்டகாலக் கடன்களை வழங்குவதுடன் கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடு செய்வதுடன் வேறு முதலீடுகளையும் மேற் கொண்டு இலாபத்தை அனுபவிக்கின்றன. பொதுவாகப் பொதுக்கம்பனிகள் தமக்கு வேண்டிய ஆரம்ப மூலதனத்தைக் கம்பனித்தோற்றுவிப்பாளர்களின் ஊடாகவே பெறுகின்றன. தோற்றுவிப்பாளார்கள் புதிதாக ஆரம்பிக்கப்படும் கம்பனிகள் தமது பங்குப்பத்திரங்களையும், தொகுதிக்கடன் பத்திரங்களையும் விற்பனை செய்வதற்கு உதவியாக அமைகின்றன. உறுதிப்பொறுப்பு நிறுவனங்கள் கம்பனிகளின் குறிக்கப்பட்ட அளவு பங்குகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பொறுப்பை ஏற்கின்றன, அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகள் முழு அளவில் பொதுமக்கள் கொள்வனவு செய்யத் தவறினால் அவற்றைத் தாமே கொள்வனவு செய்வதாக உறுதியளிக்கின்றன. இதற்காக இவர்களுக்கு உறுதிப்பொறுப்புத் தரகு வழங்கப்படும். சரக்குமுதல் கைமாற்று அமைப்பில் சரக்குகளையும், பங்குகளையும் கொள்வனவு செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் வசதி அளிக்கப்படுகின்றது.

முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களையுடைய நாடுகளில் மூலதனச் சந்தை யமைப்பு பெருமளவிற்கு வளர்ச்சியடைந்த நிலைமையில் காணப்படுகின்றபோதிலும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இவ்வமைப்பின் வளர்ச்சி பின்தங்கிய நிலைமையிலேயே காணப்படுகின்றது. இலங்கை தொடர்ந்து பல வருட காலமாக அந்நிய ஆட்சியாளரின் கீழ் இருந்ததனால் நாட்டின் நலன் கருதித் திட்டவட்டமான நடவடிக்கைகளை வெகு அண்மைக்காலம் வரை ஏற்படுத்தமுடியவில்லை. சுதேச தனியார் துறை முதலீடுகள் பெருளவில் மேற்கொள்ளப்படாததாலும், கம்பனியமைப்பு பரவலாக வளர்ச்சியடையாததனாலும் திட்டவட்டமான ஒரு மூலதனச் சந்தையை இலங்கையில் உருவாக்குவது அத்தியாவசியமானதாகக் கருதப்படவில்லை. தேயிலை, இறப்பர் தோட்டங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட பிரித்தானிய கம்பனிகள் தமது சொந்த நாட்டவர்களின் மூலதனத்தையே இவற்றில் ஈடுபடுத்தியதனால் இலங்கையில் தமது நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் மூலதனச் சந்தையைத் திட்டமிட்டு உருவாக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. தனியார்துறை மூதலீட்டு வாய்ப்புகள் குறைவாக இருந்ததனாலும் மூலதனச் சந்தையின் வளர்ச்சி பெருமளவில் ஏற்படவில்லை. 1948ம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்த பின்பும் 1977ம் ஆண்டு வரைக்கும் மூலதனச் சந்தையை உருவாக்குவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. 1970ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டு வரைக்கும் பதவியிலிருந்த அரசாங்கத்தினால் தனியார் துறை முதலீட்டுக்காரர்கள் மீது பெருமளவு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. இதன் விளைவாக தனியார்துறை முதலீடுகள் குறைவாகவும், கம்பனி அமைப்பின் வளர்ச்சி குறைவாகவும் காணப்பட்டது. தற்போதைய அரசாங்கம் 1977ம் ஆண்டில் பதவியேற்ற பின்பு பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பொருளாதாரத்திலிருந்த கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டு தாராளக்கொள்கை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. உள்நாட்டுத் தனியார்துறை

முதலீடுகள் சுதந்திரமாக மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. பிறநாட்டு முதலீட்டுக்காரர்களின் வருகைக்கும் உற்சாகங்கள் அளிக்கப்பட்டன. அரசாங்கத்துறையிலும் முதலீடுகள் பெருமளவில் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளின் பிரதிபலனாக முதலீட்டு வளர்ச்சியும், கம்பனி அமைப்பின் வளர்ச்சியும் பரவலாக ஏற்பட்டன. இவற்றின் பிரதிபலனாக நிதித்தேவை பெருமளவிற்கு அதிகரித்ததினால் நிதிநிரம்பலை அதிகரிப்பதற்காக மூலதனச் சந்தையின் வளர்ச்சியில் கூடுதலான அக்கறை செலுத்தப்பட்டது. 1982ம் ஆண்டில் இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய கம்பனிச் சட்டத்தின் ஊடாகவும், மக்கள் கம்பனி அமைப்பின் ஊடாகவும் கம்பனி அமைப்பின்மீது பொதுமக்களின் நம்பிக்கை வலுவடைந்து அவ்வமைப்பின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. இதன் பிரதிபலனாக பங்குகளின் கொள்வனவு விற்பனை நடவடிக்கைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டதனால் மூலதனச் சந்தையின் முக்கியத்துவம் மேலும் வலுவடைந்தது. தற்போதைய அரசாங்கம் பதவியேற்றபின்பு உருவாக்கப்பட்ட பல நீண்டகால நிதிநிறுவனங்களும் மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கின.

இலங்கையில் நிதிச்சந்தையின் ஆரம்பம் பிரித்தானியர் காலத்திலேயே ஏற்பட்டது. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிதி வசதியளிப்பதை அடிப்படையாகக்கொண்டே இலங்கையில் நிதியமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. நிதியமைப்பின் ஆரம்ப காலத்தில் பிரித்தானிய வங்கிகளின் கிளைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து சில இந்திய வங்கிகளின் கிளைகளும் 1840ம் ஆண்டுக்குப் பின்பு உருவாக்கப்பட்டன. இவ் வங்கிகள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளுக்கும், பெருந்தோட்டத்தொழில்முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கும் நிதி வசதிகளை அளிப்பதைப் பிரதான தொழிற்பாடாகக் கொண்டு செயற்பட்டன. ஆனால் உள்நாட்டுத் தொழில்முயற்சிகளுக்கு இவ் வங்கிகள் நிதிவசதிகளை அளிக்கவில்லை இலங்கையிற் செயற்பட்டுவந்த செட்டிமார்களே உள்நாட்டுத் தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். ஆனால் 1939ம் ஆண்டிற்குப் பின்பு செட்டிமார்கள் படிப்படியாகத் தமது செயற்பாட்டை இழந்ததனால் உள்நாட்டவர்களின் நிதித்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு நிதி நிறுவனத்தை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன் பிரதிபலனாக 1939ம் ஆண்டில் இலங்கை வங்கி ஓர் சுதேச வங்கியாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்பு 1961ம் ஆண்டில் மக்கள் வங்கியும், 1969ம் ஆண்டில் இலங்கை வர்த்தக வங்கியும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. 1970ம் ஆண்டில் அற்றன் நஷனல் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக வங்கிகளே இலங்கையின் மூலதனச் சந்தையில் முக்கியமான இடத்தைப்பெற்றிருந்தன.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு ஏற்கெனவே செயற்பட்ட 7 பிறநாட்டு வங்கிகளுடன் மேலும் 14 பிறநாட்டு வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன. எனவே இலங்கையில் வணிக வங்கிகளின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தன. இவ்வாறு வணிக வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டபோதிலும் மூலதனச் சந்தையின் தேவைகளை அவை பெருமளவிற்குப் பூர்த்திசெய்யவில்லை. இவ்விதம் ஆரம்ப காலத்திலிருந்தே வணிக வங்கிகள் நீண்டகால நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்யாததனால் நீண்டகால நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பிரத்தியேகமான நிதியமைப்புகளை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவைகள் ஓரளவுக்குத் தொழில்முயற்சியா

ளர்களின் நீண்டகால நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்தன. தற்போதைய அரசாங்க பதவியேற்ற பின்பு தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மூலதன அபிவிருத்தி, முதலீட்டுக்கம்பனி, வியாபார வங்கிகள், தொழிலாளர் நம்பிக்கை நிதியம், முதலீட்டு அடைமான வங்கி ஆகியவையும் நீண்டகால நிதியை நிரம்பல் செய்யும் நிறுவனங்களாக உருவாக்கப்பட்டன. இந்நோக்குடன் 1943ம் ஆண்டில் கைத்தொழில், கமத்தொழில் கடன் கூட்டுத்தாபனமும், 1955ம்ஆண்டில் அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனமும் உருவாக்கப்பட்டன. எனினும் இவை தொழில்முயர்ச்சியாளர்களின் நீண்டகால நிதித்தேவைகளை ஓரளவுக்கே பூர்த்தி செய்தன. ஆனால் தற்போதைய அரசாங்கம் பதவி பெற்ற பின்பு மேலும் நிதிக்கம்பனிகளின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதனால் அவற்றின் துரிதமான வளர்ச்சியும் மூலதனச்சந்தையின் வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்றது. இவற்றைவிட 1961ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இலங்கையின் மூலதனச் சந்தையிற் செலுத்தப்பட்டு நீண்டகால நிதிவசதிகளை அளிக்கின்றன. தொழிலாளர் நம்பிக்கை நிதியம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை இலங்கையின் மூலதனச் சந்தையில் பெருமளவில் நிதி நிரம்பலை ஏற்படுத்துகின்றன. எனவே தற்பொழுது அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், முதலீட்டு அடைமான வங்கி, தொழிலாளர் நம்பிக்கை நிதியம், தொழிலாளர் சேமலாப நிதியம், மூலதன அபிவிருத்தி முதலீட்டுக்கம்பனி, நிதிக்கம்பனிகள், வியாபார வங்கிகள், தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய காப்புறுதிக் கூட்டுத் தாபனம், வீட்டமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், பங்குச்சந்தை ஆகியவை இலங்கையின் மூலதனச் சந்தையில் நீண்டகால நிதி நிரம்பலை ஏற்படுத்தும் பிரதான நிதியமைப்புகளாக செயற்படுகின்றன. இந் நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் தொழிற்பாடு இலங்கையின் மூலதனச் சந்தையில் நிதி நிரம்பலை அதிகரிப்பதுடன் அதன் வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையையும் உருவாக்குகின்றன. எனவே இவை ஒவ்வொன்றினதும் செயற்பாடுகளை ஆராய்வது இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சியைப் புரிந்துகொள்வதற்கு அத்தியாவசியமானதாக அமைகின்றது.

அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் Development Finance Corporation of Ceylon.

இந் நிறுவனத்தின் ஸ்தாபிப்பு இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்கு ஆரம்ப அத்திவாரமாகக் கருதப்படுகின்றது. இதுவே இலங்கையில் முதன்முதலாக ஸ்தாபிக்கப்பட்ட நீண்டகால நிதியமைப்பாகக் கருதப்படுகின்றது. தனியார் துறையினருக்கு நீண்டகால நிதிவசதிகளை அளிப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு 1955ம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட சட்டத்தினூடாக 1958 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. 1952 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த உலக வங்கியின் குழு தனியார்துறையினருக்கு கடன் வழங்குவதற்கு ஓர் நிதிக்கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற சிபார்சை இலங்கை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. இச் சிபார்சிற்கமையவே இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந் நிறுவனம் ஓர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகச் செயற்படுகின்றது. இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட முன்பு இலங்கையின் பிரதான நிதியமைப்புகளாகச் செயற்பட்ட வணிகவங்கிகள் ஏற்றுமதி, இறக்குமதித் துறைக்குக் கடன் வழங்குவதையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயபட்டன. தனியார் துறையினரின் அபிவிருத்திக்குக் கடன் வழங்குவதற்கு வணிகவங்கிகள் பெருமளவிற்குத்

தயங்கின. எனவே இந்நிறுவனத்தின் ஸ்தாபிப்பு தனியார் துறையினரின் அபிவிருத்திக்குப் பெரும் ஊக்குவிப்பாக அமைந்தது.

இந் நிறுவனத்தின் மூலதனம்

ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 8 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 1977ஆம் ஆண்டில் இதன் மூலதனம் 16 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டில் 24 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டில் இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 300 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது, இந் நிறுவனத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அற்றன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தகவங்கி, கொங்கொங்வங்கி, கிறைண்ட் லேஸ் வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய உள்நாட்டு நிறுவனங்களும், சர்வதேச நீதிக் கூட்டுத்தாபனம், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான நெதர்லாந்து நிதிக் கூட்டுத்தாபனம், பொதுநலவாய நாடுகளின் அபிவிருத்தி நிதிக்கம்பனி, பொருளாதார கூட்டுறவுக்கான மேற்கு ஜேர்மன் அபிவிருத்தி வங்கி ஆகிய சர்வதேச நிறுவனங்களும் மூலதனத்தை ஈடு செய்துள்ளன.

இந் நிறுவனத்தின் அதிகாரங்கள்

1. பொறுப்புக்களை ஏற்று அல்லது ஏற்காமல் நீண்டகால அல்லது நடுத்தரகாலக் கடன்களை வழங்குதல்.
2. பங்குகளையும், தொகுதிக்கடன் பத்திரங்களையும் உறுதிப்பொறுப்புச் செய்தல்.
3. ஏனை நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்களுக்கு உத்தரவாதத்தை அளித்தல்.
4. நிதித்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெறுதல்.
5. விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் ஈடுபடுகின்றவர்களுக்குத் தொழில்நுட்பம், முகாமை தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.
6. நிறுவனத்தின் நிதியை ஆவணங்களைக் கொள்வனவு செய்து முதலீடு செய்தல்
7. அசைவான அல்லது அசைவில்லாத சொத்துக்களை எடுத்தல் அல்லது குத்தகைக்கு விடுதல்.

இந் நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

ஏற்றுமதிக்கைத்தொழில்கள், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கைத்தொழில்கள், மீன்பிடி, உல்லாசப் பிரயாணத்துறை போன்ற தனியார் துறை முதலீடுகளுக்கு நீண்டகாலக் கடன் வசதிகளை ஆளிப்பதைப் பிரதான தொழிற்பாடாகக் கொண்டு இந்நிறுவனம் செயற்படுகின்றது. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இந்நிறுவனத்தின் தொழிற்பாடு படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1956 ஆம் ஆண்டில் நான்கு திட்டங்களுக்கும் 1957 ஆம் ஆண்டில் 14 திட்டங்களுக்கும் கடன் வழங்கிய இந் நிறுவனம் 1970ம் ஆண்டில் 27 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கியது. 1977ம் ஆண்டில் இது 30.5 மில்லியனாகவும், 1978ம் ஆண்டில் 71.4 மில்லியன் ரூபாவாகவும், அதிகரித்தது. 1979ம் 1980ம் ஆண்டில் 84 மில்லியன் ரூபாவையும், 1980ம் 1981ம் ஆண்டில் 160 மில்லியன் ரூபாவையும் கடனாக வழங்கியது. 1985ம் 1986ம் ஆண்டில் 550 மில்லியன் ரூபாவைக் கடனாகவும் மூலதனமாகவும் ஈடுசெய்துள்ளது. 1986ம் 1987ம் ஆண்டில் கடன்களாகவும் பங்கு மூலதனமாகவும் 1545 மில்லியன் ரூபாவை ஈடுசெய்த இந் நிறுவனம், 1987ம் 1988ம் ஆண்டில் 1835 மில்லியன் ரூபாவை இவ்வகைகளில் ஈடு செய்தது, 1986ம், 1987ம்

ஆண்டில் 1935 மில்லியன் ரூபாவாக இருந்த இதன் சொத்துகள் 1987ம் 1988ம் ஆண்டில் 2,190 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. இலங்கையின் ஏற்றுமதித் துறைக்குக் கடன் வழங்குவதில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. 1984ம் 1985ம் ஆண்டில் ஏற்றுமதித்திட்டங்களுக்கு 116 மில்லியன் ரூபாவைக் கடனுக வழங்கிய நிறுவனம் 1987ம் ஆண்டில் 250 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. 1988ம் ஆண்டின் முதல் 10 மாதங்களிலும் 110 மில்லியன் ரூபாவை ஏற்றுமதித் துறைக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் மூலதனச் சந்தையில் நிதி நிரம்பலை அதிகரிப்பதற்காக ஓர் நம்பிக்கைப் பொறுப்பு ஸ்தாபனத்தை ஸ்தாபிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட உள்ளது. இவ்வாறு ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிறுவனத்திற்குப் பொறுப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தையே தேர்ந்தெடுத்துள்ளது. எனவே இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சிக்கு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஓர் முக்கிய ஆக்கக்காரணியாகவும் முன்னோடியாகவும் செயற்படுகின்றது.

மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி
Capital Development and Investment Company

இலங்கையின் மூலதனச் சந்தையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகத் தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்புமேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஓர் நடவடிக்கை 1985ஆம் ஆண்டில் மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டமையாகும். இது ஓர் அரசாங்கக் கம்பனியாக உருவாக்கப்பட்டது. இதன் அனுமதித்த மூலதனம் ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 100 மில்லியன் பங்குகளை உள்ளடக்கியதாகும். இதில் தேசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் ரூபாவையும், இலங்கை அரசு 100 மில்லியன் ரூபாவையும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 25 மில்லியன் ரூபாவையும், இலங்கை வங்கி 10 மில்லியன் ரூபாவையும், மக்கள் வங்கி 10 மில்லியன் ரூபாவையும் ஈடுசெய்துள்ளன. இலங்கையில் தனியார் துறையினர் எதிர் நோக்கும் நீண்டகால மூலதனப்பற்றுக் குறையை நிவர்த்தி செய்வதைப் பிரதான குறிக்கோளாகக்கொண்டே இக்கம்பனி உருவாக்கப்பட்டது. பிரதானமாக ஏற்றுமதித் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆரம்ப மூலதனத்தையும், முயற்சி மூலதனத்தையும் வழங்கி ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதைப் பிரதான தொழிற்பாடாகக் கொண்டே இது செயற்படுகின்றது. இலங்கையின் மூலதனச் சந்தையில் நீண்டகால நிதி நிரம்பலை அதிகரித்தலும், மூலதனச்சந்தையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் இதன் ஏனைய பிரதான குறிக்கோள்களாக அமைகின்றன. அரசாங்கக் கம்பனிகளிலும் தனியார்துறைக் கம்பனிகளிலும் பங்குகளையும், தொகுதிக் கடன் பத்திரங்களையும் கொள்வனவு செய்து அவற்றிற்கு வேண்டிய நீண்டகால மூலதனத்தை வழங்குவதற்குக் கம்பனிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கத் துறையில் தனியார் கம்பனியாகச் செயற்படும் சுவர் ஓடுகள் கம்பனியின் துணைக்கம்பனியான லங்கா ஓடுகள் கம்பனியில் இக் கம்பனி 30 இலட்சம் ரூபாவை மூலதனமாக ஈடுசெய்துள்ளது. தனியார்துறைக் கம்பனியான மேக்கன்டைல் லொயிட்ஸ் குத்தகை கம்பனியில் (Mercantile Lloyds leasing company) 10 மில்லியன் ரூபாபெறுமதிக்குத் தொகுதிக்கடன்களை வாங்கியுள்ளது. எனவே மூலதனச் சந்தையில் நிதி நிரம்பலுக்கு இக் கம்பனி ஆற்றும் பங்கு இவற்றினூடாக நிரூபிக்கப்படுகின்றது. இவ்வாறு

இக் கம்பனி மூலதனச் சந்தையில்நிதி நிரம்பலை அதிகரிப்பதுடன் தனது வருமானத்தையும் படிப்படியாக அதிகரித்துள்ளது. 1986ம் 1987ம் ஆண்டில் 8.16 மில்லியன் ரூபாவை மொத்த வருமானமாக அனுபவித்த இந்தக் கம்பனி 1987ம் 1988ம் ஆண்டில் இதனை 18.17 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 1986ம் 1987ம் ஆண்டில் 5.52 மில்லியன் ரூபாவைச் சுத்த லாபமாக அனுபவித்த இந்தக் கம்பனி 1987ம் 1988ம் ஆண்டில் இதனை 11.2 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. மீள நிதியளிப்புத் திட்டங்களுக்கும் கடன் வழங்குவதற்கு ஏற்றவாறு இதன் அமைப்பு புறவிதியை மாற்றியமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதனால் எதிர்காலத்தில் இதனூடாக ஏற்படுத்தப்படும் நீண்ட கால நிதிநிரம்பல் மூலதனச் சந்தையில் பெரு மளவிற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
Housing Development Finance Corporation

வீடமைக்கின்றவர்களுக்கு நீண்டகால நிதிநிரம்பல் ஏற்படுத்துவதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு உள்நாட்டு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் 1984ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இக் கூட்டுத்தாபனத்தில் சந்தா அடிப்படையில் பங்குகளைக் கொள்வனவு செய்து பங்குதாரர்கள் ஆகுவதனூடாக இதன் அனுகூலங்களை அனுபவிக்கலாம். ஒவ்வொரு பங்கினதும் பெறுமதி 500 ரூபா ஆகும். பங்குகளுக்கான பெறுமதி தவணை அடிப்படையில் 50 ரூபாவாகவும் செலுத்தப்பட்டாம். இவ்வாறு பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடு செய்யப்படும் பணத்திற்கு 9% வட்டி வழங்கப்படும். பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடுகளை மேற்கொள்கின்றவர்களுக்கு நிதி தேவைபடும் சந்தர்ப்பத்தில் இப் பங்குகளை இந் நிறுவனத்திற்கே விற்பனை செய்து ஒரு மாத காலத்திற்குள் முதலீட்டு நிதியைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம். வீடமைப்புக்குத் தேவைப்படும் கடன் தேவைக்கு ஏற்றவாறு பங்குகளைக் கொள்வனவு செய்யலாம். கொள்வனவு செய்யும் பங்குகளின் ஐந்து மடங்கு வீடமைப்பிற்காகக் கடனாக வழங்கப்படும் பங்குகளைக் கொள்வனவு செய்து குறைந்தபட்சம் ஒரு வருட காலத்திற்கேனும் பங்குதாரராக இருந்த பின்பே கடன்வசதி அளிக்கப்படும். ஆகக்கூடுதலாக, 18% வட்டியும், குறைந்த பட்சம் 12% வட்டியும் இந் நோக்கத்திற்காக அறவிடப்படும். ஐம்பதினாயிரம் ரூபாவிற் குட்பட்ட தொகைக்கு 12% வட்டியும் ஐம் பதினாயிரத்திற்கும் 1 லட்சத்திற்கும் உட் பட்ட தொகைக்கு 13% வட்டியும், 1 லட் சத்திற்கும் 2 லட்சத்திற்கும் உட்பட்ட தொகைக்கு 14% வட்டியும், 2 லட்சத்திற்கும் 3 லட்சத்திற்கும் உட்பட்ட தொகைக்கு 17% வட்டியும், 3 லட்சத்திற்கும் 4 லட்சத் திற்கும் உட்பட்ட தொகைக்கு 18% வட்டி யும் அறவிடப்படும். பங்குகளைக் கொள்வனவு செய்து ஒரு வருடத்தின் பின் கடன் எடுக்கப்பட்டால் ½% கழிவும், 2 வருடங்களின் பின் கடன் எடுக்கப்பட்டால் 1% கழிவும், 3 வருடங்களின் பின் கடன் எடுக்கப் பட்டால் 1½% கழிவும் வட்டியிலிருந்து வழங்கப்படும். கடன் வசதியை அளிப்பதுடன் இந் நிறுவனம் வீடமைப்புத் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கிச் சேமிப்பையும் ஊக்குவிக்கின்றது.

நிதிக் கம்பனிகள்
(Finance Companies)

இலங்கையின் மூலதனச் சந்தையின் நியமைப்புகளில் நிதிக்கம்பனிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவை வங்கியல்லாத் துறையின் முக்கியமான நிதி

யமைப்புகளாகக் கருதப்படுகின்றன. வங்கித் துறையினுல் நிதி வழங்கப்படாத துறைகளுக்கு நீண்டகால நிதி நிரம்பலை ஏற்படுத்துவதில் நிதிக்கம்பனிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. 1939ம் ஆண்டிற்கு முன்பே ஓர் மோட்டார்கார் விற்பனை நிறுவனம் வாடகைகொள்வனவு நிதி வழங்கலில் நிதிக்கம்பனிகளின் தொழிற்பாட்டில் ஈடுபட்ட போதிலும் 1950ம் ஆண்டு காலத்திலேயே முதலாவது நிதிக்கம்பனி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் தற்போதைய அரசாங்கம் 1977ம் ஆண்டில் பதவிக்கு வந்தபின்பே நிதிக்கம்பனிகள் துரிதமாக வளர்ச்சி அடைந்தன. அரசாங்கத்தின் தாராளக்கொள்கை நிதிக்கம்பனிகளுக்குக் கூடுதலான முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கிய காரணத்தினுலும், நிதிக்கம்பனிகள் வைப்புகளுக்கு வழங்கிய வட்டி வீதத்தைப் பெருமளவிற்கு அதிகரித்தமையாலும் 1977ம் ஆண்டின் பின் இவை துரிதமாக வளர்ச்சியடைந்தன. 1978ம் ஆண்டில் 27 நிதிக்கம்பனிகள் மட்டுமே இலங்கையிற் செயற்பட்டன. 1987ம் ஆண்டில் இது 72 ஆக அதிகரித்தது. நிதிக்கம்பனிகளின் அதிகரிப்பு இலங்கையின் மூலதனச் சந்தையில் மூலதன நிரம்பலில் பாரியமாற்றங்களை ஏற்படுத்தியதுடன் வைப்புகளையும் பெருமளவிற்கு அதிகரித்தன. 1978ம் ஆண்டில் 177 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்த வைப்புகள் 1987ம் ஆண்டில் 6 பில்லியன் (Billion) ரூபாவாக அதிகரித்தது. வைப்புகளையேற்றல், கடன்களை வழங்குதல், வாடகைக்கொள்வனவு மூலமாகவோ உடனாகச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வோருக்கு நிதி வழங்கலை ஏற்படுத்துதல் பங்குதாரர்களின் இலாபநோக்கத்தை நிறைவேற்றுதல், நிலம் போன்ற சொத்துக்களை உடமையாளர்களின் சார்பில் ஏலத்தில் விற்பனைசெய்து கொடுத்தல் போன்றவற்றை பிரதான தொழிற்பாடாகக்கொண்டு நிதிக் கம்பனிகள் இலங்கையின் மூலதனச் சந்தையில் செயற்படுகின்றன. வாடிக்கையாளர்களின் நலன் கருதி நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 1979ம் ஆண்டில் நிதிக்கம்பனிகளின் கட்டுப்பாட்டுச் சட்டமும் 1982ம் ஆண்டில் நுகர்வோர் கடன் சட்டமும் பிரகடனம் செய்யப்பட்டது. நிதிக்கம்பனிகளின் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஊடாக நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டது. இச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு மத்தியவங்கி ஒரளவு கட்டுப்பாடுகளை நிதிக்கம்பனிகள்மீது எற்படுத்திய காரணத்தினுல் பொதுமக்களுக்கு நிதிக்கம்பனிகள் மீது பெருமளவு நம்பிக்கை ஏற்பட்டுப் பெருமளவு வைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனல் 1987ம் 1988ம் ஆண்டுகளில் சில பெரும்நிதிக்கம்பனிகள் முறிவடைந்தன. இதன் விளைவாக பொதுமக்களுக்குப் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டது மட்டுமன்றி நிதிக்கம்பனிகள் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையும் பெருமளவில் தளர்வடைந்தது. Finance and Guarantee Ltd. Sevana Finance and Investment, Ltd. United Motor Finance Ltd., Castle Finance Ltd., Home Finance Ltd., Union trust and Investment Ltd. ஆகிய நிதிக்கம்பனிகள் முறிவடைந்தன இவற்றின் முறிவினுல் இலங்கையின் மூலதனச் சந்தையின் நிதிநிரம்பலில் பெருமளவு பாதிப்புகள் ஏற்பட்டன. எனவேதான் பொதுமக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் நிதிக்கம்பனிகளின் எதிர்கால நிலையாட்டை உறுதிப்படுத்தி மூலதனச் சந்தையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் 1988ம் ஆண்டில் நிதிக்கம்பனிச்சட்டம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது. இதனூடாக நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்தியவங்கிக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டது.

நிதிக்கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்

இச் சட்டம் 1979ம் ஆண்டு செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் 1 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட மூலதனத்தையும் 5 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வைப்புக்களையுமுடைய சகல நிதிக்கம்பனிகளுக்கும் தொடர்ந்து செயற்படும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இவைகள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக இருத்தல் வேண்டும் என்பதும் இவற்றின் பதிவு மத்திய வங்கியில் கண்டிப்பாக ஏற்படுத்தப்படல் வேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. இச் சட்டத்தினூடாக மத்தியவங்கி நிதிக்கம்பனிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதுடன் வாடகைக்கொள்வனவு முயற்சிக்கு நிதிக்கம்பனிகள் நிதிநிரம்பலை ஏற்படுத்துவதையும் வாடிக்கையாளர்களின் நலன் கருதிக் கட்டுப்படுத்துகின்றது. இச் சட்டத்தினூடாக மத்தியவங்கிக்கு, நிதிக்கம்பனிகள் தொடர்பாகக் கீழ்வரும் நியதிகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது.

1) வைப்புக்கள் ஏற்கப்படக்கூடிய நிபந்தனைகள்

2) வைப்புகளுக்கு வழங்கப்படக் கூடிய உச்ச வட்டிவீதம்.

3) வைப்புக்கள் ஏற்கப்படக்கூடிய ஆகக் கூடிய கால எல்லை.

4) கடன்கள் வழங்கப்படக்கூடிய நிபந்தனைகள்

5) கடன்கள் மீது அறவிடப்படக்கூடிய உச்ச வட்டிவீதம்.

6) ஏற்கப்பட்ட வைப்புகளுக்கும் நிதிக்கம்பனிகளின் மூலதனத்துக்குமிடையே இருக்கவேண்டிய விகிதசமன்.

7) வாடகைக்கொள்வனவு முறையினூடாக சொத்துக்களைக் கொள்வனவு செய்யும்போது ஏற்படுத்தப்படவேண்டிய குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை.

8) கடன்களுக்கான உச்ச கால எல்லை.

1988ம் ஆண்டின் நிதிக்கம்பனிச் சட்டம்

1979ம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் கட்டுப்பாட்டுச் சட்டம் வலுவற்றதாகக் கருதப்பட்டதனால் இச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. ஏழு நிதிக்கம்பனிகளின் முறிவே இச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதற்கு உடனடிக் காரணமாக அமைகின்றது.

இச் சட்டத்தின் சில பிரதான நியதிகளாவன:

1) 1979ம் ஆண்டு நிதிக்கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திலும் பார்க்க இச் சட்டத்தினூடாக நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்துவதற்குக் கூடுதலான அதிகாரம் மத்தியவங்கிக்கு வழங்கப்பட்டது.

2) நிதிக்கம்பனிகள் கண்டிப்பாகப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளாக இருத்தல் வேண்டும்.

3) நிதிக்கம்பனிகளின் மூலதனம் குறைந்தபட்சம் 5 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

4) வாடிக்கையாளர்களின் வைப்புகளுக்கு காப்புறுதிப் பாதுகாப்பு கட்டாயமாக அளிக்கப்படுதல் வேண்டும்.

5) முறிவடைந்த நிதிக்கம்பனிகளினால் பாதிக்கப்பட்ட வைப்பாளர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவதற்கும் இது வழிவகுக்கின்றது.

இழந்த நம்பிக்கையை மறுபடியும் மீளமைப்புச் செய்வது நிதிக்கம்பனிகளினதும், அரசாங்கத்தினதும் பொறுப்பாக அமைகின்றது. நிதிக்கம்பனிகளின் முறிவினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவதை இச்சட்டம் உறுதிப்படுத்துவது ஓரளவு நம்பிக்கையை எற்படுத்தக்கூடியதாக அமைகின்றது. நிதிக்கம்பனிகளின் நேர்மையின்மை, நிதிநிர்வாகச் சீர்கேடு, திறமையற்ற கணக்குப் பரிசோதனை பற்றிய வங்கியின் அக்கறையில்லாத் தன்மை போன்றவற்றினாலேயே நிதிக்கம்பனிகளில் மோசடி எற்பட்டு அவை முறிவடைந்தன. இந் நிலைமை இலங்கையின் நிதிச்சந்தையின் துரிதமான வளர்ச்சிக்குப் பல பாதகமான விளைவுகளை எற்படுத்தியுள்ளது. எனவே செயற்படும் நிதிக்கம்பனிகளும், மத்தியவங்கியும் இணைந்து செயற்பட்டு பொதுமக்களின் நம்பிக்கையை மீளப்பெறுவது இலங்கையின் மூலதனச் சந்தையின் எதிர்கால வளர்ச்சிக்கும், நிதிக்கம்பனிகளின் உறுதிப்பாட்டிற்கும் அத்தியாவசியமான ஆக்கக் காரணியாக அமைகின்றது.

தொழிலாளர் நம்பிக்கை நிதியம்

1980ம் ஆண்டிற் பிரகடனம் செய்யப்பட்ட தொழிலாளர் நம்பிக்கை நிதியச் சட்டத்தினூடாக இது உருவாக்கப்பட்டது. தொழிலாளர்களை ஸ்தாபனங்களில் உடமையாளர்களாக்குதல், தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்தல், தொழிலாளர்களை முகாமையில் பங்குபற்ற வைத்தல் போன்ற நோக்கங்களைக்கொண்டு இது உருவாக்கப்பட்டபோதும் இலங்கையின் மூலதனச் சந்தையில் நீண்டகால நிதிநிரம்பலை எற்படுத்தும் ஒரு பிரதான நிறுவனமாக இது செயற்படுகின்றது. தனியார்துறையிலும், அரசாங்கத்துறையிலும் செயற்படும் நிறுவனங்கள் இச் சட்டத்திற்கமைய தமது தொழிலாளர்களின் மொத்தவருமானத்தில் 3%ஐ தமது வருமானத்தினூடாக இந் நிதியத்திற்குச் செலுத்துகின்றன. தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து இதற்காகப் பணம் கழிக்கப்படமாட்டாது. இவ்வாறு பல நிறுவனங்களும் பணத்தைச் செலுத்துவதனால் பெருந்தொகையான நிதித்திரட்சி இந் நிதியத்தில் ஏற்பட்டுள்ளது. 1987ம் ஆண்டின் முடிவில் ஏறத்தாழ 23,000 முதலாளிமார்1.5மில்லியனுக்கு மேற்பட்ட தொழிலாளர்களின் நலன் கருதி இந் நிதியத்திற்குப் பணத்தைச் செலுத்துகின்றனர். 1982ம் ஆண்டில் 187 மில்லியன் ரூபாவும், 1983ம் ஆண்டில் 219 மில்லியன் ரூபாவும், 1984ம் ஆண்டில் 280 மில்லியன் ரூபாவும், 1985ம் ஆண்டில் 343 மில்லியன் ரூபாவும், 1986ம் ஆண்டில் 382 மில்லியன் ரூபாவும், 1987ம் ஆண்டில் 396 மில்லியன் ரூபாவும் இந் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டது. 1982ம் ஆண்டு முடிவில் 330 மில்லியன் ரூபாவையும் 1983ம் ஆண்டில் 624 மில்லியன் ரூபாவையும், 1984 ஆண்டில் 1014 மில்லியன் ரூபாவையும், 1985ம் ஆண்டில் 1485 மில்லியன் ரூபாவையும், 1986ம் ஆண்டில் 1965 மில்லியன் ரூபாவையும் இதன் மொத்தநிதியாக வைத்திருந்தது. தற்போது இதன் மொத்த நிதி 2500 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இவ்வாறு இந் நிதியத்திற்குச் சேர்க்கப்படும் பணத்தை, ஆதனங்களைக் கொள்வனவு செய்வதிலும், முதலீடுகளை மேற் கொள்வதிலும், வேறு நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதிலும் ஈடுபடுத்துவதற்கு நிதியத்திற்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இதன் பிரதிபலனாக இந் நிதியம் இலங்கையின் மூலதனச் சந்தையில் நீண்டகால நிதிநிரம்பலைப் பெருமளவில் ஏற்படுத்துகின்றது. 1987ம் ஆண்டு முடிவுவரைக்கும் கம்பனிப் பங்குகளில் 386 மில்லியன் ரூபாவையும்,கம்பனிக் கடன்களில்

374 மில்லியன் ரூபாவையும், வீடமைப்புக் கடனாக 157 மில்லியன் ரூபாவையும், அரச சட்டு வங்கியில் வைப்பாக 560 மில்லியன் ரூபாவையும், அரசாங்க ஆவணங்களில் 10 மில்லியன் ரூபாவையும், சொத்துக்களைக் கொள்வனவு செய்வதில் 49 மில்லியன் ரூபாவையும், வர்த்தக வங்கியின் வைப்புக்களாக 795 மில்லியன் ரூபாவையும் ஈடுசெய்திருக்கின்றது. Dry Docks Ltd. Porcelain Ltd., Lanka Milk Foods Ltd., Lanka Cement Ltd., Singer Industries, Lanka Ashok Leyland Ltd. ஆகியவற்றில் இந் நிதியம் பங்குகளைக் கொள்வனவு செய்து முதலீடுகளை மேற் கொண்டிருக்கின்றது. Dry Docks Ltd. Lanka Cement Ltd. ஆகியவற்றிற்குத் தொகுதிக்கடன்களின்ஊடாகவும், நீண்டகால நிதிநிரம்பலை ஏற்படுத்தியிருக்கின்றது. எனவே அரசாங்கத்துறை கம்பனிகளுக்கும், தனியார்துறை கம்பனிகளுக்கும் நீண்டகால நிதி நிரம்பலை ஏற்படுத்துவதில் இலங்கையின் மூலதனச் சந்தையில் தொழிலாளர் நம்பிக்கை நிதியம் பெரும் பங்கு வகிக்கின்றது.

தொழிலாளர் சேமலாப நிதியம்
Employees Provident Fund

தொழிலாளர் சேமலாப நிதியம் 1958ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிலாளர்களின் இளைப்பாற்று நலன்களை உறுதிப்படுத்துவதை பிரதான குறிக்கோளாகக் கொண்டே இந் நிதியம் உருவாக்கப்பட்டது. தொழிலாளர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளத்திலும் 12% முதலாளிமாரிடமும் 8% தொழிலாளர்களிடமும் இந் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல்வேண்டும். தொழில் ஆணையாளரினால் இச் சட்டம் நிர்வகிக்கப்படுகின்றது. இவ்வாறு தொழிலாளர்களிடமும் முதலாளிமார்களிடமும் இப்பணம் மத்தியவங்கியிடம் ஒப்படைக்கப்படும். தனியார்துறை ஸ்தாபனங்களின் தொழிலாளர்கள் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் தொழிலாளர்கள் இளைப்பாறும் சந்தர்ப்பத்தில் உரிய வட்டியுடன் தொகை வழங்கப்படும். இவ்வாறு மத்தியவங்கியிடம் ஒப்படைக்கப்படும் பணம் முதலீடு செய்யப்படுகின்றது. அரசாங்கக் கடன்களாகவும், அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களைக் கொள்வனவு செய்வதிலும் இந் நிதியத்தின் பணம் ஈடுசெய்யப்படுகின்றது. 1964ம் ஆண்டில் மொத்தமாக 60 மில்லியன் ரூபா நீண்டகாலக் கடன்களாக வழங்கப்பட்டது. 1967ம் ஆண்டில் 543.6 மில்லியன் ரூபா முதலீடு சய்யப்பட்டது. 1977ம் ஆண்டில் முதலீடுகளினூடாக 160.2 மில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டது. 1985ம் ஆண்டு முடிவில் இந் நிதியத்தின் மொத்த சொத்துகளின் பெறுமதி 16.000 மில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டது. இந் நிதியம் இவ்வாறு சேர்க்கப்படும் பணத்தைக் கடனாக வழங்குவதனூடாக மூலதனச் சந்தையில் நிதிநிரம்பலைப் பெருமளவில் ஏற்படுத்துகின்றது. 1988ம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களுக்கு வீடமைப்பதற்காக நீண்டகால நிதிவழங்கலை ஏற்படுத்துவதற்கும் நிதியம் தீர்மானித்துள்ளது. இதனூடாக இந் நிதியம் எதிர்காலத்தில் கூடுதலான நிதிநிரம்பலை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய அபிவிருத்தி வங்கி
National Development Bank

தேசிய அபிவிருத்தி, நடவடிக்கைகளுக்கு நிதிவசதியளிப்பதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டு 1979 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் வங்கி 1980ம் ஆண்டிலிருந்து தனது கடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்தது. தற்போது இலங்கையின் மூலதனச்சந்தையில் நிதிநிரம்பலையேற்

படுத்தும் ஒரு முக்கியமான நிறுனமாக இவ் வங்கி செயற்படுகின்றது. இதன் ஆரம்ப அனுமதிக்கப்பட்ட மூலதனம் 2000 மில்லியன் ரூபா ஆகும். வழங்கப்பட்ட மூலதனம் 600 ல்லியன் ரூபா ஆகும். இதில் 400 மில்லியன் ரூபா அரசாங்கத்தினூலும், 100 மில்லியன் ரூபா இலங்கை மத்திய வங்கியினூலும், 50 மில்லியன் ரூபா இலங்கை வங்கியினூலும், 50 மில்லியன் ரூபா மக்கள் வங்கியினூலும் ஈடுடுத்தப்பட்டது. நாட்டின் கைத்தொழில், விவசாய, வர்த்தக நடவடிக்கைகளுக்கு நீண்டகாலக் கடன்களையும் ஏனைய கடன்களையும் வழங்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இதன் உருவாக்கத்தின் பிரதான அம்சமாக அமைகின்றது.

இவ் வங்கியின் அதிகாரங்கள்

1. விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில்முயற்சியாளர்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்.
2. மேற்கூறிய தொழில்முயற்சியாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினூல் வழங்கப்பட்ட கடன்களுக்கு மீள நிதியளிப்புத் திட்டத்தைச் செயற்படுத்தல்
3. தொழில் நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் கடன்களுக்கு உத்தரவாதத்தை அளித்தல்
4. அரச நிறுவனங்களினூலும், தனியார் துறை நிறுவனங்களினூலும் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடு செய்தல்.
5. மத்தியவங்கியில் அல்லது வர்த்தகவங்கியில் அல்லது பிறநாட்டு நிதிநிறுவனங்களில் வைப்புக் கணக்கை ஆரம்பித்தல்.
6. தொழில்நுட்ப ஆலோசனைச் சேவையைச் செயற்படுத்துதல்

வங்கியின் கடன் திட்டங்கள்

இவ் வங்கி சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான விசேட கடன் திட்டங்களைச் செயற்படுத்துகின்றது. இக் கைத்தொழிலாளர்களுக்கான கடன் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உதவியாக 1979 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியது. இதன் பிரதிபலனாக 16 மில்லியன் டொலர் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினூல் வங்கிக்குக் கடனாக வழங்கப்பட்டது. இதில் 12 மில்லியன் டொலர் சிறிய, நடுத்தர கைத்தொழிலுக்கான கடன் திட்டத்துக்கென அங்கீகரிக்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி வங்கி இக் கடன் திட்டத்தை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, அற்றன் நஷனல் வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினூடாகச் செயற்படுத்துகின்றது தற்போது சம்பத் வங்கியும் இதிற் சேர்ந்துள்ளது. சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினூல் வழங்கப்பட்ட 12 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டமிட்டதிலும் பார்க்க ஒரு வருடத்திற்கு முன்பே தொழில்முயற்சியாளர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது. எனவேதான் தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச நிதிக் கூட்டுத் தாபனத்துடன் மீண்டும் ஓர் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன் பிரதிபலனாக 1982 ஆண்டில் 30 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினூல் தேசிய அபிவிருத்தி வங்கிக்குக் கடனாக வழங்கப்பட்டது. இதனூடாக சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான இரண்டாவது கடன்திட்டம் செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இதனூடாக ஏறத்தாழ 165 கைத்தொழில் திட்டங்களுக்கு கடன் வசதிகள் அளிக்கப்பட்

டன. சிறிய, நடுத்தர கைத்தொழிலாளருக்கான மூன்றுவது கடன் திட்டமும் தேசிய அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத்தப் படுகின்றது. இத் திட்டத்திற்கான ஆசிய அபிவிருத்தி வங்கி 3வது கடன் திட்டமும் தேசிய அபிவிருத்தி வங்கியினால் செயற்படுத் தப்படுகின்றது. இத் திட்டத்திற்காக, ஆசிய அபிவிருத்தி வங்கி 35 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு கடனாக வழங்குவதற்கு முன் வந் துள்ளது.

இவ் வங்கி ஸ்தாபிக்கப்பட்ட காலத் தில் இருந்து கடன் வழங்கும் தொழிற்பா டும் மூலதன ஈடுபாடும் படிப்படியாக அதிக ரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1980ம் ஆண்டு முடிவில் 16 திட்டங்களுக்கு 163.9 மில்லியன் ரூபா கட னாக வழங்கப்பட்டது. 1982ம் ஆண்டில் 31 திட்டங்களுக்கு 371.65 மில்லியன் ரூபாவும், 1981ம் ஆண்டில் 19 திட்டங்களுக்கு 242மில் லியன் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது. 1983ம் ஆண்டில் 256 மில்லியன் ரூபாவை திட்டக்கடனாக வழங்கியது. இவ்வாண்டில் மொத்தமாக 307 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டது. 1984-ம் ஆண்டில் 524 மில் லியன் ரூபாவும், 1985-ம் ஆண்டில் 580.7 மில்லியன் ரூபாவும் வங்கியினால் கடனாகவழங் கப்பட்டது. 1986-ம் ஆண்டில் மூலதனமாக வும் கடனாகவும் 654 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. 1987-ம் ஆண்டில் 626 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இவ் வங்கி Lanka Tiles Ltd. இல் 20 இலட்சம் ரூபாவையும் Union Assurance Ltd. நிறுவ னத்தில் 10 மில்லியன் ரூபாவையும் மூலதன மாக ஈடுசெய்துள்ளது. எனவே இவ்வங்கி கடன்களை வழங்கியும் சொந்த மூலத னத்தை ஈடுசெய்தும் இலங்கையின் மூலத னச்சந்தையில் பெருமளவு நிதி நிரம்பலை ஏற்படுத்துகின்றது. எதிர்காலத்தில் இலங் கையில் பல்வேறு துறைகளிலும் அபிவிருத் தியைத் துரிதப்படுத்துவதற்கும் மூலதனச் சந்தையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவ தற்கும் தேசிய அபிவிருத்தி வங்கி ஒரு முக்கியமான ஆக்கக் காரணியாகச் செயற் படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வியாபார வங்கிகள்

தற்காலத்தில் நாடுகளின் நிதியமைப்பு களில் வியாபார வங்கிகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. வியாபார வங்கி கள் நேரடியாக நிதி நிரம்பலை ஏற்படுத் தாத போதும் மூலதனச் சந்தையின் வளர்ச் சிக்கேற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றன. இவ் வங்கிகள் ஆரம்பத்தில் இங்கிலாந்தி லேயே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட் டன. அதன்பின்பே ஏனைய நாடுகளில் வியா பார வங்கிகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. வியாபார வங்கிகளின் தொ ழிற்பாடு ஒவ்வொரு நாட்டினதும் தேவைக் கேற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டிருப்பத னால் இவற்றின் தொழிற்பாடுகளைத் திட்ட வட்டமாக வரையறை செய்ய முடியாது. இங் கிலாந்தில் தொழில்முயற்சியாளர்களுக்கு நீதி வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்கும் வியாபார வங்கிகள் அமெரிக்காவில் நிதி முகாமையிலும், முதலீட்டு முகாமையிலும் ஈடுபடுகின்றன. ஆனால் இவ் வங்கிகளின் தொ ழிற்பாடு மூலதனச் சந்தையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மூலதன நிரம்பலை துரி தப்படுத்துவதற்கும் ஏற்ற சூழ்நிலையை நாடு களில் உருவாக்குகின்றன. தொழில்முயற்சியா ளர்களுக்கு நிதிவசதிகளைப் பெற்றுக்கொடுத் தல், வருமானம் அளிக்கக்கூடிய முதலீடுக ளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தல், முதலீடு கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல் ஆகியவற்றையே பிரதான தொழிற்பாடுக ளாகக்கொண்டு இவ் வங்கிகள் செயற்படு கின்றன. தனியார்துறைத் தொழில்முயற்சி கள் பெருமளவிற்கு வளர்ச்சியடைந்த நாடு

களிலேயே வியாபார வங்கிகளின் சேவை அத்தியாவசியமானதாகக் கருதப்படுகின்றது. 1977-ம் ஆண்டில் பதவியேற்ற அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரதிபலனாக இலங்கையில் தனியார் துறையினரின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. எனவே தான் தனியார் துறையினரின் நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் இலங்கையில் வியாபார வங்கிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. 1982-ம் ஆண்டில் முதன்முதலாக இலங்கை வரையறுக்கப்பட்ட வியாபார வங்கி (Merchant Bank of Ceylon Ltd.) இலங்கைவங்கியினால் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 1983-ம் ஆண்டில் மக்கள்வங்கி வரையறுக்கப்பட்ட மக்கள் வியாபார வங்கியை Peopl's Merchant Bank Ltd.) ஆரம்பித்தது. இவ் வங்கியில் மக்கள்வங்கியும், இங்கிலாந்தைச்சேர்ந்த Guinness Mahon & Company Ltd. என்ற நிறுவனமும் மூலதனத்தை ஈடுசெய்தன. மக்கள்வங்கி இதில்75%மான மூலதனத்தை ஈடு செய்துள்ளது. இவ்விரு வியாபார வங்கிகளும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு முதலீட்டுக்காரர்களுக்கு பெருமளவு சேவையை ஆற்றி வருகின்றன.

முதலீட்டு அடைமான வங்கி

State Mortgage and Investment Bank

வீடமைப்பிற்குக் கடன் வழங்கும் ஓர் பிரதான நிதியமைப்பாக இவ் வங்கி செயற்படுகின்றது. 1979-ம் ஆண்டிற்குமுன் இது 2 அமைப்புகளாகச் செயற்பட்டது. 1931-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரச அடைமான வங்கியும், 1943-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கைத்தொழில், கமத்தொழில் கடன் கூட்டுஸ்தாபனமும் இணைக்கப்பட்டே இவ்வங்கி 1979 ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. விவசாயம், கைத்தொழில், வீடமைப்பு ஆகியவற்றிற்கு நீண்டகாலக் கடன்களை வழங்குவதை பிரதான குறிக்கோளாகக்கொண்டே வங்கி செயற்படுகின்றது. 1984-ம் ஆண்டில் முதலீட்டு அடைமான வங்கிச் சட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் வீடமைப்பிற்குக் கடன் வழங்கும் ஓர் பிரதான நிறுவனமாக இது மாற்றியமைக்கப்பட்டது. மேலும் இத் திருத்தத்தினூடாக இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 200 மில்லியன் ரூபாவிலிருந்து 2000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அத்துடன் ஒப்பந்த வைப்புகள் சேமிப்பு வைப்புகள், கடன் வைப்புகள், தவணை வைப்புகள், ஆகியவற்றில் பணத்தை வைப்பாக ஏற்கும் அதிகாரமும் வங்கிக்கு வழங்கப்பட்டது. நீண்டகால நிதி நிறுவனங்களின் வைப்புக்களை ஏற்கும் அதிகாரம் இந் நிறுவனத்திற்கு மட்டுமே அளிக்கப்பட்டிருக்கின்றது. வங்கி அதன் தொழிற்பாட்டுக் காலத்தில் பல்வேறு துறைகளுக்கும் கடன் வழங்குவதை படிப்படியாக அதிகரித்துள்ளது. வங்கி தனது கடன் திட்டங்களை நாட்டில் பரவலாக அறிமுகப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1977-ம் ஆண்டில் 776 கடன்களுக்கு 22.9 மில்லியன் ரூபாவை வழங்கிய இவ் வங்கி 1987-ம் ஆண்டில் 6320 கடன் திட்டங்களுக்கு 509.6 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்கியது. எனவே வங்கியின் கடன் வழங்கும் தொழிற்பாடு பெருமளவிற்கு வளர்ச்சி அடைந்திருப்பதையும் மூலதனச் சந்தையில் நிதிநிரம்பலை ஏற்படுத்துவதில் இதன் முக்கியத்துவத்தையும், இவற்றிலிருந்து மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கின்றது.

பங்குச் சந்தை (Share Market)

இலங்கையின் மூலதனச் சந்தையில் முக்கியமான ஓர் பிரிவாக பங்குச் சந்தை செயற்படுகின்றது. அரசாங்கச் சரக்குமுதல்

களும், கம்பனிப் பங்குகளும் இவற்றில் விற்பனைக்கு விடப்படுகின்றன. முதலீட்டு வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மூலதனத் திரட்சியை ஏற்படுத்துவதில் பங்குச் சந்தை முக்கியமான பங்கு வகிக்கின்றது. இலங்கையில் பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்திலிருந்தே பங்குகளின் கொள்வனவு விற்பனைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பங்குச் சந்தையின் ஆரம்ப அமைப்பாக 1894-ம் ஆண்டில் பங்குத் தரகர் சங்கம் (Stock Brokers Association) ஆரம்பிக்கப்பட்டது. 1904-ம் ஆண்டில் இது கலைக்கப்பட்டு கொழும்புத் தரகர் சங்கமாக (Colombo Brokers Association) மாற்றி அமைக்கப்பட்டது. வெகு அண்மைக் காலம் வரை கொழும்புத் தரகர் சங்கமே பங்குச் சந்தையின் பிரதான அமைப்பாகச் செயற்பட்டு வந்தது. முதலாந்தரப் பங்குச் சந்தையும்,இரண்டாந்தரப் பங்குச்சந்தையும் வெகு அண்மைக் காலம் வரை கொழும்புத் தரகர் சங்கத்தினுலேயே செயற்படுத்தப்பட்டு வந்தது. முதலாம்தரப் பங்குச் சந்தை என்பது புதிதாக ஆரம்பிக்கப்படும் கம்பனிகள் புதினப் பத்திரிகைகளினூடாக முன் விபரணத்தைப் பிரசுரித்துப் பொதுமக்களுக்குப் பங்குகளை விற்பனை செய்து நிதி சேர்ப்பதைக் கருதும். இரண்டாந்தரப் பங்குச் சந்தை என்பது ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டுள்ள பங்குகளை விற்பனை செய்வதற்கான சந்தையைக் கருதும். 1977-ம் ஆண்டு வரைக்கும் கொழும்பு தரகர் சங்கம் ஓரளவிற்கு பங்குச் சந்தை நடவடிக்கைகளை நிறைவேற்றக்கூடியதாக இருந்தது. ஆனால் கொழும்புத் தரகர் சங்கத்திற்குப் போட்டி அளிப்பதற்கு பிறிதொரு நிறுவனம் இல்லாத காரணத்தினுல் அதன் செயற்பாடு உத்வேகம் குறைந்ததாகவே காணப்பட்டது. எனவேதான் அண்மைக்காலத்துத் துரிதமான மாற்றங்களுக்கமைய கொழும்புத் தரகர் சங்கம் திறமையான சேவையை ஆற்ற முடியாதிருந்தது. தற்போதய அரசாங்கம் 1977ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த பின்ப ஏற்பட்ட மாற்றங்கள் பங்கு சந்தையின் துரிதமான வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கின. தனியார் துறையினருக்கு தொழில் முயற்சிகளில் ஈடுபட அரச அங்கீகாரம் பெருமளவில் வழங்கப்பட்டதினுல் பங்குச் சந்தை நடவடிக்கைகள் பெருமளவிற்கு அதிகரித்தன. மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கு வரி விடுதலைகள் வழங்கப்பட்டதனுல் பங்கு மாற்று நடவடிக்கைகள் பெருமளவிற்கு அதிகரித்தன. கம்பனிகளில் பங்குகளை கொள்வனவு செய்தோருக்கு அவர்கள் கொள்வனவு செய்து ஈடுசெய்யும் மூலதனத்தின் குறிக்கப்பட்ட அளவு வரை வரி விலக்கு வழங்கப்பட்டமையாலும், முதலீட்டு வருமானத்தில் 12,000 ரூபாவரை வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டமையினுலும் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடு செய்வோரின் தொகை அதிகரித்தது.மேலும் கம்பனிகளினுல் செலுத்தப்பட வேண்டிய இலாபவரி குறைக்கப்பட்டதும் பங்குச் சந்தையின் துரிதமான வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கியது. இத்தகைய நிலைமையில் கொழும்புத் தரகர் சங்கம் பூரணமாக பங்கு சந்தைத் தேவைகளை நிறைவேற்ற முடியாதிருந்த காரணத்தினுல் இதற்குப் போட்டி அளிப்பதற்காக வரையறுக்கப்பட்ட பங்குத் தரகர் சங்கம் (Stock Brokers (Gte) Ltd.) 1984-ம் ஆண்டில் அரசாங்கத்தினுல் உருவாக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு முடிவுவரை கொழும்புத் தரகர் சங்கமும், வரையறுக்கப்பட்ட பங்குத் தரகர் சங்கமும் போட்டியிட்டு பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டன. 1985-ம் ஆண்டில் இவ்விரு நிறுவனங்களும் இணைக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆணமாற்று அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் Bartleet and Co. Ltd. Forbes and Walkers Ltd., J.B. Stock Brokers and Financial Services Ltd., Mercantile Stock Brokers Ltd., Somaville and Co. Ltd., Serendib Trust Service Ltd., City Investment Ltd., John Keels Ltd., Colombo Service Exchange (Gte) Ltd.) ஆகிய நிறுவனங்கள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. கொழும்பு ஆணமாற்று

அமைப்பின் பிரதான குறிக்கோள்களாவன:

1. கொழும்பு ஆவணமாற்று அமைப்பு என்ற ஓர் அமைப்பை உருவாக்குதல்.
2. நிதி ஆவணங்களைத் தொடர்ச்சியாகவும் முறையாகவும் விற்பனை செய்யக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்குதல்.
3. ஆவணச் சந்தையில் பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.
4. ஒரு திறமையான நிதிச் சந்தையை உருவாக்குவதுடன் தொழில்முயற்சியாளர்கள் வேண்டிய நிதியைச் சுலபமாகப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்
5. சமத்துவமான, நீதியான வியாபார நடவடிக்கைகள் பங்குச் சந்தை அமைப்பில் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துதல்.

பிணைகள் மன்றம் அல்லது ஆவணச் சபை

வரையறுக்கப்பட்ட கொழும்பு ஆவண மாற்று அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஒரு சரக்குமுதல் கைமாற்று அமைப்பு இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கின்ற போதும் பொதுக் கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்து மூலதனத்தை ஈடு செய்யும் முதலீட்டுக்காரர்களின் நலன்களை பேணிப் பாதுகாப்பதற்கேற்றவாறு பங்குச் சந்தை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வழிநடத்துவதற்கு ஒரு ஆவண சபை உருவாக்கப்படுவது அத்தியாவசியமானதாகக் கருதப்பட்டது. இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜேர்மனி, கொங்கொங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இத்தகைய ஆவண சபைகள் செயற்படுகின்றன. எனவேதான் இலங்கையிலும் இத்தகையதோர் ஆவணச் சபையின் உருவாக்கம் அத்தியாவசியமானதாகக் கருதப்பட்டு 1986-ம் ஆண்டில் இதற்கான சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கமைய ஓர் ஆவணச் சபை உருவாக்கப்பட்டது. இதில் மத்திய வங்கியின் துணை ஆளுநர், திறைசேரியின் துணைக் காரியதரிசி, கம்பனிப் பதிவாளர், பட்டையக் கணக்காளர் சங்கத்தின் தலைவர் ஆகியோருடன் நிதி, சட்டம், தொழில்முயற்சி ஆகியவற்றில் அனுபவம் பெற்ற மேலும் ஆறுபேர் செயற்படுவார்கள். இதில் ஒருவர் தலைவராகச் செயற்படுவார். ஆவண சபையின் பிரதான குறிக்கோள்களாவன:

1. ஆவணங்களை நீதி நியாயத்துடன் விற்பனை, கொள்வனவு செய்யக்கூடிய ஒரு சந்தையை உறுதிப்படுத்துதல்.
2. முதலீட்டுக்காரர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்தல்.
3. பிணைப்பத்திரங்களின் சந்தையைக் கட்டுப்படுத்தி அதன் உயர்தொழில்தரத்தைப் பேணுவது.
4. நிதி நட்டங்களை எதிர்நோக்கும்போது முதலீட்டுக்காரர்களைப் பாதுகாப்பதற்கு ஈடுசெய்நிதியை நடைமுறைப்படுத்துவது

இச் சபைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களாவன:

1. பங்குச் சந்தையில் செயற்படுவதற்கு அனுமதியை வழங்குதல்.
2. பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தல்
3. ஆவணச் சந்தையை வளர்ப்பதில் அரசாங்கத்திற்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்குதல்.
4. முதலீட்டுக்காரர்களின் நலன் கருதி குறிக்கப்பட்ட ஆவணங்கள் விற்பனை செய்யப்படுவதை தற்காலிகமாக நிறுத்துதல் அல்லது தடைசெய்தல்.
5. பொதுக் கம்பனிகள், பங்குதாரகர்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்தல்.
6. ஆவணச் சந்தை தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளைச் செயற்படுத்துதல்
7. நிதி நட்டங்களை எதிர்நோக்கும் முதலீட்டுக்காரர்களுக்கு நஷ்ட ஈட்டு நிதியை வழங்குதல்.

ஆவண சபையின் ஸ்தாபிப்பு இலங்கையின் பங்குச் சந்தை அமைப்பில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக அமைகின்றது. இலங்கை சுதந்திரம் பெற்றபின்பு மூலதனச் சந்தை தொடர்பாக முக்கியமான நடவடிக்கைகள் 1977 ம் ஆண்டுக்கு பின்பே ஏற்படுத்தப்பட்டன. புதிய நீண்டகால நிதி நிறுவனங்களின் ஸ்தாபிப்பு, கொழும்பு ஆவண மாற்று அமைப்பின் உருவாக்கம், ஆவணச் சபையின் ஸ்தாபிப்பு ஆகியவை இலங்கையின் மூலதனச் சந்தையின் முக்கியமான மைற் கற்களாக அமைகின்றன.

With the Best Compliments from

R. G. STORES

DEALERS IN FANCY GOODS
&
PHOTOGRAPHIC MATERIALS

293, Clock Tower Road,
JAFFNA

With Best Wishes from

New CEYLON FOARGE STORES

DEALERS IN

CATTLE, POULTRY FOOD & MEDICINES

81, Wolfendhal Street,
COLOMBO - 13

T'phone: **549673**

சமஸ்டி அரசாங்க முறையும் அதன் நெருக்கடிகளும்

குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை
யாழ்/பல்கலைக்கழகம்

சமஸ்டி ஆட்சி அல்லது கூட்டாட்சி என்பதைக்குறிக்கும்"Federalism" என்ற பதமானது லத்தீன் சொல்லான "Feodus" என்பதிலிருந்து பிறந்ததாகும். "Feodus" என்பது நட்பு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை என்பதனைக் குறிக்கின்றது. ஒரு விபத்து என வர்ணிக்கப்படத்தக்க வகையில் நீண்ட மரபுகளைக் கொண்டதாகக் கிரேக்க நகர அரசுகளிடையே நிலவியிருந்த ஓர் ஆட்சி முறையாக கூட்டாட்சி விளங்குகின்றது. 17-ம் நூற்றாண்டில் டச்சு நாடுகளின் கூட்டத்தின் கீழ் (Dutch Confederacy) நிர்வகிக்கப்பட்டிருந்த இவ் ஆட்சி முறை மீகுந்த உயிர்த்துடிப்புடன் 1787-ம் ஆண்டு அமெரிக்க அரசியல் அமைப்பில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. உண்மையான உணர்வில் கூட்டாட்சி முறையின் ஆரம்பமாக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனால் கூட்டாட்சி முறையின் ஆரம்பமாக 18-ம் நூற்றாண்டும், கூட்டாட்சி முறையின் அறிமுகநாடாக ஐக்கிய அமெரிக்காவும் கருதப்படலாம்.

கூட்டாட்சி என்பது அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்ட ஒரு அரசாங்கமுறை ஆகும். (Decentralized Government) மத்திய அரசு ஒன்றின் தலைமையின்கீழ், அதன் அரசியல் அமைப்புக்கு உட்பட்ட வகையில், பல சிறிய மாநிலங்களோ அல்லது அரசுகளோ தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இழந்துவிடாத வகையில் சில பொது நன்மைகளை நோக்கமாகக் கொண்டு இயங்கும் ஒரு வகை ஆட்சிமுறையாகும். இங்கு கூட்டாட்சியில் இணைந்துள்ள மத்திய, மாநில அரசாங்கங்கள் தமக்கென வரையறுக்கப்பட்டிருக்கும் நிர்வாகப் பரப்புக்குள்

ஆதிக்கமுடையனவாக விளங்குகின்றன. மாறுக மாநில அரசாங்கங்கள் எதுவுமின்றி மத்திய அரசாங்கம் ஒன்றுடன் மட்டும் இயங்கும் அரசாங்கமுறை, ஒற்றையாட்சி முறை என அழைக்கப்படும். இங்கு, மத்திய அரசாங்கம் ஒன்று மட்டுமே நிறுவப்பட்டு, அந்த அரசாங்கத்திற்கே அரசினுடைய அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும். இதனால், எந்த ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு மத்திய அரசாங்கத்தை மட்டும் அங்கீகரித்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பை அவ் அரசாங்கத்திடம் மட்டும் ஒப்படைக்கின்றதோ அது ஒற்றையாட்சி நாடு என அழைக்கப்படலாம். உ+மாக: பிரான்ஸ், ஒற்றையாட்சி அரசியல் அமைப்பு மத்திய அரசாங்கம் ஒன்றை மட்டுமே அங்கீகரிக்கின்றது என்பது உண்மையானலும் அங்கு, மத்திய அரசாங்கமானது அதன் ஆட்சிமுறையின் சிறப்பையும், நிர்வாக மேம்பாட்டையும் கவனத்தில் கொண்டு நாட்டைப் பல தனியான நிர்வாக அலகுகளாகப் பிரித்து, அவற்றுக்கென சில அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குவது ஒரு வழமையான ஏற்பாடாகும். இந்த நிர்வாக அலகுகளின் எல்லை நிர்ணயம், அவற்றுக்கிடையிலான அதிகாரப் பங்கீடு என்பவற்றை தீர்மானிப்பது மத்திய அரசாங்கமே ஆகும். இதனால், இதுபோன்ற நிர்வாக அலகுகளை அமைப்பதிலும் அழிப்பதிலும் அவற்றின் அதிகாரங்களை நிர்ணயிப்பதிலும், மத்திய அரசாங்கத்தின் விருப்பம் மட்டுமே தனிமுதன்மை பெறுகின்றது. உதாரணமாக: ஒற்றையாட்சி நாடான பிரான்சில் இவ்வாறான நிர்வாக அலகுகளாக Department, Arrondisements, Communes என்பன விளங்குகின்றன. சமஸ்டி ஆட்சிமுறை ஒன்றில் எவ்வாறு மத்திய, மாநில அரசாங்கங்கள் நாட்டின் இறைமையைத் தம்மிடையே பகிர்ந்து கொள்கின்றனவோ, அவ்வாறான தன்மை ஒற்றையாட்சி முறையில் மாறுபட்டு மத்திய அரசாங்கம் ஒன்றே இறைமையின் உறைவிடமாகக் கருதப்படுகின்றது.

கூட்டாட்சி அரசானது (Federal State) ஒற்றையாட்சி அரசு (Unitary State) என்பதில் இருந்து நாடுகளின் கூட்டம் (Confederation) என்ற நிலைக்கு துரிதமாக அசைவுற்ற நேரத்தில் தனது வரைவிலக்கணத்தைப் பெற்றுக்கொண்டது. ஒற்றை ஆட்சி முறையில் இருந்து நேரடியான ஒரு விளைவாக கூட்டாட்சிமுறை விளங்கவில்லை. இவற்றுக்கு இடைப்பட்ட நிலையில் 'நாடுகளின் கூட்டம்' (Confederation) என்ற ஒரு நிலையின் விருத்தியாகவே கூட்டாட்சி அமைகின்றது. இங்கு, மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டிய நிலை காணப்பட்டால் அந்த ஆட்சி நாடுகளின் கூட்டமாக அமைகின்றது, 1789ல் உருக்கிய அமெரிக்காவின் கூட்டாட்சி அரசியல் அமைப்பு தோன்றுவதற்கு முன்பாக அமெரிக்காவில் காணப்பட்ட பதின்மூன்று அரசுகளின் நிர்வாகமும், 1874க்கு முற்பட்ட சுவிற்சலாந்தின் ஆட்சியும் நாட்டுக்கூட்ட ஆட்சிக்கு சிறந்த உதாரணங்களாக அமையமுடியும்.

இன்று உலகின் 1/2 பங்கிற்கு மேற்பட்ட நிலப்பகுதி மக்களும், உலக நாடுகளில் 1/3 பங்களவானவையும் கூட்டாட்சி முறை அரசாங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து, கனடா, ஜேர்மனி, பிரேசில், மெக்சிக்கோ, ஆர்ஜன்டைனு, இந்தியா, மலேசியா முதலியனவும் அவுஸ்திரேலியா, ஆபிரிக்கநாடுகள், மத்தியகிழக்குநாடுகள் என்பனவும், சோவியத்யூனியன், யூகோசெலாவியா முதலான கம்யூனிச நாடுகளும் கூட்டாட்சி முறையினைப் பின்பற்றுகின்றன. இருப்பினும் இவையாவும் சமஸ்டிநாடுகளாகுமா? என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாகின்றது. மத்திய - மாநில அரசாங்க அமைப்புக்களுடன் இயங்கும் ஆட்சிமுறையானது

உலகின் பல பாகங்களிலும் நடைமுறையில் இருக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ''சமஸ்டி நாடுகள்'' என்று கருதமுடியாது. இன்று உலகில் உண்மையான கூட்டாட்சி நாடுகளின் எண்ணிக்கையை விடக் கூட்டாட்சி அரசின் சாயல்களைப் பிரதிபலிக்கும் நாடுகளின் எண்ணிக்கையே அதிகமானதாகும். ஒரு நாட்டில் சமஸ்டி நிர்வாக அமைப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் மட்டும் அதனை ஒரு சமஸ்டி நாடு என அழைக்கமுடியாது. அதாவது ஒரு நாட்டில் மத்திய அரசாங்கம் ஒன்றின்கீழ் பல மாநில அரசாங்கங்கள் தொழிற்படுவதனை அவதானித்து அதனை ஒரு சமஸ்டி நாடு என அழைத்துவிட முடியாது. இந்த வகையில் ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு கூட்டாட்சி அரசாங்கம் ஒன்றுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதா என்பதனை அவதானிப்பதைவிட அந்த அரசாங்கத்தின் நடைமுறைகள் கூட்டாட்சித் தன்மைகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை நோக்குவது அவசியமானதாகும். கூட்டாட்சி என்னும்போது, மத்திய அரசாங்கத்தையும், மாநில அரசாங்கங்களையும் சம உரிமைகொண்ட அரசாங்களாகக் கருதி, பரஸ்பர நோக்கிலன்றி ஒன்றினுடைய கட்டளைக்கு மற்றொன்று அடங்கி நடக்கும் நிலையைத் தவிர்த்து சுதந்திரமான முறையில் இரு அரசாங்கங்களும் தமது நிர்வாக எல்லைக்குள் ஆட்சி செலுத்தும் ஒரு முறை எனச் சுருக்கமாக வரையறுக்கலாம். ஆனால் இந்நிலைக்கு மாறான இரு வேறுபட்ட நிலைகளில் கூட்டாட்சி முறை இயங்குவதையும் அவதானிக்கலாம். கூட்டிணைப்பில் இணைந்துள்ள அரசாங்கங்களின் சமத்துவம் என்பதற்கு முரணாக, மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் முதன்மை பெற்ற கூட்டாட்சிகளையும் மாநில அரசாங்கங்களின் ஆதிக்கம் எழுச்சிபெற்ற கூட்டாட்சிகளையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக: தென்னாபிரிக்க நாடுகளில் பல மாநில அரசாங்கங்கள், ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் இணைந்து இயங்குவதனால் அவ் ஆட்சி முறை ''சமஸ்டி முறை'' என அடையாளம் காணப்பட்டபோதிலும் அங்கு மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் நிறைந்த கூட்டாட்சிப் பண்பே காணப்படுகின்றது. 1909-ம் ஆண்டில் Cape Colony, Natal, Transvall, Orange-River Colony ஆகிய நான்கு மாநிலங்களும் இணைந்து தென்னாபிரிக்கக் கூட்டரசு ஏற்படுத்தப்பட்டது. அரசியல் அமைப்பு இரண்டுவகையான அரசாங்கங்களை ஒழுங்கமைத்த போதிலும் மாநில அரசாங்கங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவில்லை. மாறாக, மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டே இயங்குகின்றன. இதேபோன்றே இந்திய கூட்டாட்சியிலும் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் மாநில அரசுகளின் நிர்வாக விடயங்களில் பரந்து காணப்படுகின்றது. இந்திய அரசியல் அமைப்பின் சரத்து 352, அவசரகால நிலைகளில் அக்கூட்டாட்சி முறை, மத்திய அரசாங்கத்தின் விருப்பப்படி கலைக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களை வழக்குவது சிறப்பாக சுட்டிக்காட்டப்படலாம். இவற்றுக்கு மாறாக, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களுக்கு கீழ்ப்பட்டு நடப்பதுமான நிலையும் சமஸ்டிமுறையில் அவதானிக்கக்கூடிய ஒரு பண்பாகின்றது. 1871-ம் ஆண்டின் அரசியல் அமைப்பின் கீழ் ஜேர்மனியில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு கட்டுப்பட்டு நடந்தது. ஜேர்மனியக் கூட்டமைப்பின் மாநிலமான பிரஷ்யா, மக்கள் தொகையாலும், நிலப்பரப்பினாலும், பொருளாதார பலத்தினாலும் வலிதாகயிருந்தமையைப் பயன்படுத்தி, அக்கூட்டாட்சி முறையினையே கட்டுப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது இவ்வாறு சமஸ்டிப் பண்புகளின் சாயல்களை பெருமளவு பிரதிபலிக்கும் இரு வேறுபட்ட கூட்டாட்சி நிர்வாக முறைகளும் அவதானிக்கப்படலாம். இந்த கையில், கூட்டாட்சி அரசாங்க முறைகளை அணுகுகின்றபோது, ஐக்கிய அமெரிக்கா,

அவுஸ்திரேலியா, கனடா, சுவிற்சலாந்து ஆகிய நான்கு நாடுகளுமட்டுமே கூட்டாட்சி முறைக்கு ஓரளவாயினும் சிறப்பான உதாரணங்களாக விளங்கிக்கொள்ள முடியும். இதனால் முடிவாக எந்த ஒரு அரசில் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நாட்டின் இறைமையை தமக்குள் பகிர்ந்துகொள்வதன் மூலம் ஒன்றை மற்றையது கட்டுப்படுத்தாதல் அவற்றுக்கென அரசியல் அமைப்பால் வரையறுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் நின்று சுதந்திரமாக இயங்குகின்றனவோ, அதுவே சமஸ்டி ஆட்சிமுறை எனக்கூறலாம்.

சமஸ்டிமுறை அரசாங்கத்தின் நெருக்கடிகள்

சமஸ்டி அரசாங்க முறையானது, ஒற்றையாட்சி அரசாங்க முறைபோன்று இல்லாமல் சிக்கல்மிக்க ஒருவகை ஆட்சிமுறையாக இருப்பதனால் பல பிரச்சனைகளை அது எதிர்கொநோக்கவேண்டியதாக இருக்கின்றது. அவற்றுள் பின்சொல்லப்படுபவை மிகவும் அடிப்படையானவையாகும்.

திருப்திகரமான அதிகாரப்பங்கீடு (A Satisfactory Division of Powers) என்பது சமஸ்டியில் எதிர்நோக்கப்படும் மிகவும் அடிப்படையான ஒரு பிரச்சனையாகும். சமஸ்டியில் இணைகின்ற மாநில அரசுகளின் சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பேணும் அதேவேளையில் உறுதியும், திறமையும் வாய்ந்த ஒரு மத்திய அரசாங்கத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது பிரச்சனைக்குரிய ஒன்றுகவே இருக்கின்றது. இதனால் தெளிவான அதிகாரப்பங்கீடு என்பது இங்கு அவசியமாகின்றது. பிறைஸ் (Bryce) என்னும் அரசியலாளர் அதிகாரப்பங்கீடு பற்றிக் குறிப்பிடுகின்றபோது, சமஸ்டி முறையில் மத்திய மாநில சக்திகளை சமநிலையில் வைத்திருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இதனை அவர் வர்ணிக்கின்றபோது, மத்திய அரசாகிய சூரியனை வலம் வருகின்ற மாநில அரசுகளாகிய நட்சத்திரங்கள் அதன் ஈர்ப்பு வட்டத்தில் இருந்து விலகிவிடாதும் அதே வேளை அதன் வெப்பப் பருதிக்குச் சென்று விடாதும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று விளக்குகின்றார். இங்கு அதிகாரப் பங்கீடு அவசியம் என்பதை உணர்த்திய பிறைஸ், அவ்வாறான அதிகாரப்பங்கீடு எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் தெளிவாக்குகின்றார். தேசிய நலன் சம்பந்தமான எந்த விடயமும் அது தேசிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும் தேசிய நலனுக்குப் பாதகம் இல்லாத விடயங்கள் மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்படலாம் எனவும் கூறுகின்றார். இதனடிப்படையில் வெளிநாட்டு அலுவல்கள், பாதுகாப்பு, வெளிநாட்டு வர்த்தகம், ஆயுதப்படைகளின் கட்டுப்பாடு, கடல்வழிக்கப்பல் சேவை, நாணய வெளியீடு என்பன எந்த நாட்டிலும் கூட்டாட்சி முறையின் பொதுவான நலன்களாகக் கருதப்படும். மாநகரசபை நிறுவனங்கள், வைத்தியசாலைகள், உள்ளூர் பொதுவேலைகள், சொத்துக்கள், குடியியல் உரிமைகள், நீதிநிர்வாகம் என்பன எங்கும் மாநில அரசுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும்; எவ்வாறாயினும் இவ் அதிகார ஒப்படைப்பு வேறுபட்ட கூட்டாட்சி அரசியல் அமைப்புக்களைப் பொறுத்து வேறுபட்டுக் காணப்படும். இவ் அதிகாரப் பங்கீடானது பொதுவாகப் பின்சொல்லப்படும் மூன்று வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

★ மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மட்டும் வரையறுத்துக் கூறி Enumerated Powers) மிகுதியான அதிகாரங்களை (Residuary Powers) மாநில அரசுகளுக் ஒப்படைத்தல். உ+மாக, அமெரிக்கா, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, சோவியத்யூனியன் அமெரிக்காவில் ஒரு கூட்டாட்சிப்பட்டியலில் (Federal List) மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் விசேடமாகக் குறிப்பிடப்பட்டு ஏனைய

அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கென விடப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, என்பன ஒரு கூட்டாட்சிப் பட்டியலையும், பொதுவான அதிகாரப்பட்டியல் (Concurrent List) ஒன்றையும் கொண்டுள்ளது. சோவியத்யூனியனில் ஒரு கூட்டாட்சிப்பட்டியல் மட்டும் காணப்படும்.

★ மாநிலங்களுக்கென அதிகாரங்கள் வரையறுத்துக்கூறப்பட்டு மிகுதியான அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கென ஒப்படைக்கப்படுதல் உ+மாக கனடா.

★ மத்திய – மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரமானது பின்வரும் மூன்று முறைப்படி ஒப்படைக்கப்படலாம்.

i) கூட்டாட்சிப்பட்டியல் (Federal List)

ii) மாநிலங்கள் பட்டியல் (State List)

iii) மீதியான அதிகாரப்பட்டியல் (Residuary Powers List)

இவ்வாறான அதிகாரப் பங்கீட்டுமுறை காணப்படுகின்ற போதும் நடைமுறையில், நவீன சமூகபொருளாதார நிலைமைகளின் காரணமாக, பொதுநலன் கருதிப் பல பிரச்சினைகளும் ஒரு அதிகாரத்தின் கீழ் தீர்க்கப்படவேண்டியநிலை ஏற்பட்டுவிட்டதனால் மாநில அரசுகளின் அதிகாரங்கள் மத்திய அரசை நோக்கிச் சென்றுவிட்டமை நோக்கத்தக்கது. இவ்வாறாக, மத்திய - மாநில அரசாங்கங்களிடையே அரச அதிகாரமானது பங்கீடு செய்யப்பட்டால் மட்டும் அது திருப்திகரமான அதிகாரப் பங்கீடாக அமையமுடியாது. மாறாக, அவை ஒன்றை ஒன்று ஆக்கிரமிப்பதைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான பாதுகாப்பு காவல்கள்ளல் (Safe guards) இக் கூட்டாட்சிமுறை துயானமேலும் மேன்மையடைய முடியும். பொதுவாக, சமஸ்டி ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் சுதந்திரமான நீதித்துறை அமைக்கப்படுவது அவசியமானதாகும். சுதந்திரமான முறையில் அரசியல் அமைப்புக்கு விளக்கமளிக்கக் கூடியவகையில் நீதிப்புனராய்வு (Judicial review) அதிகாரத்தைக் கொண்டவையாகவும், மத்திய – மாநில அரசாங்கங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படும்போது அவற்றைத் தீர்க்கக்கூடிய அதிகாரம்மிக்கனவாகவும் நீதிமன்றங்கள் விளங்கவேண்டும். உ+மாக அமெரிக்கா, அவுஸ்திரேலியா நீதித்துறைகள். மாறாக, சுவிற்சலாந்து, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் உள்ள நீதிமன்றங்களுக்கு இவ்வாறான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனைவிட, பொதுமக்களிடம் நேரடியாக அதிகாரம் ஒப்படைக்கப்படுவது மற்றோர்வகையான பாதுகாப்பு ஏற்பாடாகும். உ+மாக, சுவிற்சலாந்து. இங்கு மக்கள் தீர்ப்பு, (Referendum), தொடக்கவுரிமை (Initiative) என்ற முறைகள் பின்பற்றப்பட்டு மக்களின் விருப்பமே அங்கு இறுதி முடிவாகின்றது. மேலும் அரசியல் அமைப்பு நெகிழாததாகக் (Rigid Constitution) காணப்படுவதும் கூட்டாட்சிக்கான ஒரு பாதுகாப்பாகவே கருதமுடியும். சாதாரண பெரும்பான்மையுடன் அரசியல் அமைப்பினை, தனது விருப்பப்படி மத்திய அரசாங்கமானது. மாற்றிக்கொள்ள முடியாதநிலை கூட்டாட்சிக்கு அவசியமான ஒரு ஏற்பாடாகும்.

சிறிய மாநிலங்களைப் பெரிய மாநிலங்களின் எழுச்சியில் இருந்து பாதுகாத்தல் (Protection of the Smaller Units against dominance by the larger) என்பது சமஸ்டியில் எதிர்நோக்கப்படும் ஒரு பிரச்சினையாகும். சமஸ்டியில் இணையும் அலகுகளானவை நிலப்பரப்பின் அடிப்படையிலோ, சனத்தொகை ரீதியாகவோ எழுச்சியடைந்து

காணப்படக்கூடாது. இவ்வாறு எழுச்சியடையும் ஒரு மாநிலம் சட்டவாக்கல் செய்முறையின் அதிகளவான தனது பிரதிநிதித்துவத்தினூல், மத்திய சட்டசபையின் கீழ்சபையான (Lower House) மக்கள் பிரதிநிதிகள் சபையில் செல்வாக்கு செலுத்தமுடியும். ஏனெனில், சட்டமன்றப் பிரதிநிதித்துவம் என்பது பெரும்பாலான நாடுகளில் சனத்தொகை அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சில மாநிலங்கள் எழுச்சியடைவதை சில ஏற்பாடுகளின் மூலம் தடை செய்யலாம். மத்திய சட்டசபையில் இரண்டாவது மன்றமுறையினை (2nd Chamber System) ஏற்படுத்தி, அச்சபையில் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் அல்லது நிர்வாக அலகுகளுக்கும் சமமான பிரதிநிதித்துவத்தினைக் கொடுப்பதன்மூலம் மேற்சொன்ன நோக்கம் அடையப்படலாம். மேலும் அச் செனற் சபைக்கு (House of Senate) விசேடமாக சில அதிகாரங்களை வழங்குவதன்மூலமும், கீழ்சபையின் ஆதிக்கத்தினைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். உ+மாக, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளில் இரண்டாம் மன்றமான, செனற் சபையானது கீழ்ச்சபையான பிரதிநிதிகள் சபையுடன் ஒப்பிடும் போது சமமான அதிகாரங்களைக் கொண்டுள்ளது அமெரிக்க அரசியல் அமைப்பில் செனற்சபையானது இரண்டு விசேட அதிகாரங்களைக் கொண்டுள்ளது. (i) பிரதிநிதிகள் சபையின் முடிவுகளை நிராகரிப்பதற்கும், (ii) ஜனாதிபதியினால் செய்யப்படும் ஒப்பந்தங்களுக்கும் நியமனங்களுக்கும் அனுமதி மறுப்பதற்கும் அதிகாரம் கொண்டுள்ளது. இவ்வாறான நிலை அமெரிக்காவின் சமஸ்டிக்கு சிறப்பினைக் கொடுக்கின்றது.

சமஸ்டியில் இணைந்த மத்திய-மாநில அரசாங்க அமைப்புகளுக்கிடையிலான உறவுகள் சிறப்பான முறையில் பேணப்படுதல் அவசியமானதாகும். சமஸ்டி அரசில் இணைந்துள்ள மத்திய - மாநில அரசுகள் பரஸ்பர சுதந்திரம் உள்ளனவாக, அரசியல் அமைப்பால் ஒதுக்கப்பட்ட அதன் அதிகார எல்லைக்குள் நின்று செயற்படுபவையாகக் காணப்படல் வேண்டும். சட்டவாக்கம், நிர்வாகம், நிதி அலுவல்களில் பரஸ்பர தொடர்பு காணப்படல் வேண்டும். சிறப்பான கூட்டாட்சியின் இயக்கத்துக்கு இப்பரஸ்பர உறவுகள் பேணப்படுவது அவசியமானதாகும். ஆனால் இக்குறைபாடே இன்று பெருமளவிலான நாடுகளின் சமஸ்டி முறைகளைப் பாதிக்கும் ஒரு காரணியாகின்றது. மாநிலங்களின்மீதான மத்திய அரசின் கட்டுப்பாடுகள் அரசியல் அமைப்புரீதியாகச் பல வழிகளில் ஏற்படுத்தப்படுகின்றது. சமஸ்டிமுறை சிறப்பாக இயங்குவதாகக் கூறப்படும் அமெரிக்காவின் மாநில ஆளுனர்களை நியமிப்பதில் ஜனாதிபதி செலுத்தும் அதிகாரம் இந்நிலையை விளக்குவதற்கான ஒரு உதாரணமாகக் கொள்ளப்படலாம். ஆனால் மாநிலங்களின் மீது மத்திய அரசின் கட்டுப்பாடுகள் அண்மைக்காலங்களில் அமெரிக்காவில் அதிகரித்துவந்துள்ளமை கவனிக்கத்தக்கது. விவசாய அபிவிருத்தி, கல்விச்சீர்திருத்தங்கள், பெருந்தெருக்கள் நிர்மானம் என்பவற்றின் காரணமாக இத்தலையீடுகள் பெருகி வருகின்றமை நோக்கப்படலாம்.

மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் மட்டுமன்றி சமஸ்டியில் இணையும் மாநில அரசுகளுக்கிடையிலும் உறவுகள் சிறப்பாகப் பேணப்படல்வேண்டும் சமஸ்டியில் இணைந்த மாநில அரசுகளுக்கிடையில் சுதந்திரமான உணர்வு மதிக்கப்படுதல் அவசியம். எல்லைகள் தொடர்பாக, கலாச்சாரப் பரிவர்த்தனை தொடர்பாக, பொருளாதாரவளங்களைப் பங்கீடு செய்தல் தொடர்பாக மாநிலங்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். ஏனைய மாநிலங்களின் நலன்களிற்கு எதிராகச் செயற்படுவது தவிர்க்கப்

படல் வேண்டும். சமஸ்டிமுறை ஒன்றில் மத்திய–மாநில அரசுகளின் உறவு எவ்வாறு சுதந்திரமானதாக இருக்கவேண்டும். என எதிர்பார்க்கப்படுகின்றதோ, அதே அளவிற்கு மாநிலங்களுக்கிடையிலான உறவுகளும் சுதந்திரமான முறையில் பேணப்படுதல் அவசிய மாகும்.

திருப்திகரமான அரசியல் அமைப்புத் திருத்தமுறை (A Satisfactory method of Amendment) யினை கடைப்பிடிப்பது சமஸ்டியில் அவசியமான ஒரு நடவடிக்கையாகின்றது. இதனால் அரசியல் அமைப்பினைத் திருத்துவது என்பது சமஸ்டியில் எதிர்நோக்கப்படும் ஒரு பிரச்சனையும் ஆகின்றது. சமஸ்டியின் மத்திய அரசு மட்டுமன்றி மாநில அரசாங்கங்களும் அரசியல் அமைப்புத் திருத்தங்களில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறிய அரசுகளின் நலன்களும் பாதுகாக்கப்பட முடியும். அரசியல் அமைப்புக்களைத் திருத்துவதில் கனிற்சலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மத்திய அரசிலும்பார்க்க மாநில அரசுகளுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உ+மாக அமெரிக்க அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு சமஸ்டியில் இணைந்துள்ள 3/4பங்கு மாநிலங்களின் விருப்பம் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளது. சோவியத்யூனியன் இதற்கு மாறுபட்டதாகும்.

பிரிந்து செல்லும் உரிமை (Right of secession) சமஸ்டியின் ஒரு பிரச்சனையாகின்றது. சமஸ்டிமுறையில் இருந்து மாநில அரசு ஒன்று தானாக விலக முடியாத நிலை இருப்பது சமஸ்டி முறைக்கு ஒரு பலமாகக் கருதப்படுகின்றது. அதேவேளை மத்திய அரசானது சமஸ்டியில் இணைந்துள்ள மாநில அரசு ஒன்றை சமஸ்டியில் இருந்தும் விலக்கவும் முடியாது. சமஸ்டியிலிருந்து மாநில அரசுகள் விலகமுடியுமென்றால் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அஞ்சி நடக்கவேண்டிய தேவையும் அதனால் சமஸ்டியின் இணைப்பு உடையவும் சந்தர்ப்பம் உண்டு. மாறாக மத்திய அரசு மாநில அரசுகளை விலக்க முடியுமென்றால் மாநில அரசுகள் மத்திய அரசுக்குப் பணிந்து செயற்பட வேண்டிய தேவையும் அதனால் மாநில அரசுகளின் இறைமை பாதிக்கப்படவும் சந்தர்ப்பம் உண்டு. அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் இவ் உரிமைக்கு இடமில்லை. அமெரிக்காவில் மாநிலங்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமை இல்லை என்பது 1861ம் ஆண்டுடன் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. பிரிவினைகோரிய அமெரிக்க தென்பகுதி மாநிலங்கள் 1861–65 காலப்பகுதியில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் தோல்வியடைந்ததன் விளைவாக பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்படமாட்டாது என்பது தெளிவாக்கப்பட்டுவிட்டது. ஆனால் சோவியத் சமஸ்டியில் இணைந்துள்ள குடியரசுகளுக்கு அரசியல் அமைப்பின் 35வது விதிப்படி பிரிந்துசெல்லும் உரிமை வழங்கப்பட்டபோதும் இன்றுவரை எந்த மாநிலமும் அந்த உரிமையைப் பயன்படுத்தியது கிடையாது. இவ்வாறாக, ஒரு சமஸ்டி நாடானது பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியதாக இருக்கின்றது. இவ்வாறான அடிப்படையான நெருக்கடிகளைத் தீர்க்கக்கூடிய முறையில் அமைந்தாலன்றி அந்த நாடுகளில் சமஸ்டி முறை வெற்றியடைய முடியாது.

நடைமுறையில் உள்ள சமஸ்டி நாடுகளில் மத்திய அரசு பலம் பெற்றுவருவதும், மாநில அரசுகள் பலம் இழந்து நிற்பதும் வெளிப்படையான ஓர் அம்சமாகின்றது. அதாவது, நடைமுறையில் தோன்றியுள்ள சில நெருக்கடிகள் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ மாநில அரசுகளைப் பலவீனப்படுத்தி மத்திய அரசைப் பலப்படுத்தி வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இரண்டு உலக மகாயுத்தங்கள் ஏற்படுத்திய பல்வேறு பிரச்சனைகளும், மூன்றாவது உலக யுத்தம் ஒன்றை நோக்கிய வேறுபட்ட போட்டிகளும், தற்போது நடைமுறையில் இருந்துவரும் உள்நாட்டு யுத்த நெருக்கடிகளும், நாட்டின் நலன், நாட்டின்பாதுகாப்பு என்பன காரணமாக மத்திய அரசு, மாநிலங்களின் நிர்வாக வீடயங்களில் தலையீடு செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. வளர்ந்துவரும் பொருளாதார பிரச்சனைகளை எதிர்நோக்கி, அவற்றைத் தீர்க்கக்கூடிய சக்தி மத்திய அரசிற்கே இருப்பதனாலும் பொருளாதாரவறுமை, வேலையின்மை முதலான மிகமுக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் தற்கால அரசுகள் பொதுநல அரசுகளாக (Welfare states) மாற்றமடைந்தமையாலும், மத்திய அரசின் அதிகாரங்கள் வலுவடைவது அல்லது மாநில அரசுகள் மத்திய அரசில் தங்கியிருக்கவேண்டிய நிலை உருவாகியது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. மேலும் இந்த நாடுகளில் காணப்படும் அரசியல் கட்சிகளின் வளர்ச்சியானது குறிப்பாக, தேசியக் கட்சிகளின் வளர்ச்சியானது மத்திய அரசின் இயந்திரத்தைப்பலமடையச் செய்துவிட்டது. உ+மாக, அமெரிக்காவில் குடியரசுக்கட்சி, ஜனநாயகக் கட்சி, என்பவற்றினது செல்வாக்கும், இந்தியாவில், இந்திய காங்கிரஸ் கட்சியினது எழுச்சியும், சோவியத்யூனியனில் கம்யூனிசக் கட்சியின் ஆதிக்கமும் இங்கு சிறப்பாக குறிப்பிடப்படலாம். இவற்றுக்குப் புறம்பாக, முடுக்கிவிடப்பட்டுள்ள நவீன விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்திகளும் மத்திய அரசின் தலையீட்டை மாநில அரசு நிர்வாகங்களில் ஏற்படுத்தக் காரணமாக அமைந்தது.

இவ்வாறாக ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும்நிலை சமீபகாலமாக சமஸ்டிமுறையைப் பின்பற்றும் அரசுகளில் அதிகரித்து வருகின்றமை பெரிதும் அவதானிக்கப்படலாம். தொடர்ந்தும் இத்தங்கியிருக்கும் நிலைபேணப்படுகின்றபோது அந்த நாடுகள் கூட்டுறவு சமஸ்டிவாதத்தை (Cooperative Federalism) அடிப்படையாகக் கொண்டவை எனவும் அந்த நாடுகள் கூட்டுறவு சமஸ்டிநாடுகள் (Cooperative federal states) எனவும் குறிப்பிடப்படுகின்றன.

சஸ்டிமுறையில் வேற்றுமையில் ஒற்றுமை காணக்கூடியதாக இருந்தபோதிலும் சிறிய பல அரசுகள் ஒன்றாக இணைந்து பாதுகாப்பையும், பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதிலும், சமஸ்டிமுறையானது பலவீனமான ஒரு அரசாங்கமுறையாக அமைவதும் குறிப்பிடத்தக்கது. சமஸ்டியின் குறைபாடுகள் தற்செயலானவை அல்ல என்றும் இவை அதனுடன் ஒன்று சேர்ந்தவை எனவும் குறிப்பிடும் டைசி (Diecy) அளவுக்கு அதிகமான கூடியளவிலான சட்டங்களுடன் தொடர்பு கொண்ட ஓர் ஆட்சிமுறை என்றும், பொருளாதார விருத்தி குன்றிய நாடுகளுக்குப் பொருத்தமற்ற ஓர் ஆட்சிமுறை என்றும் கூடியளவுக்குப் பழமைபேண் வாதத்தை (Conservatism) பிரதிபலிப்பதாக அமைகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு குறைபாடுடைய ஒரு ஆட்சி முறையாக சமஸ்டிமுறை அமைந்த போதிலும் இன்றும் கூட சமஸ்டி ஆட்சிமுறை பொருத்தமான தாகவும் விரும்பத்தக்கதாகவும் காணப்படுகின்றது. சில நாடுகளில் இனப்பிரச்சனைக்கான தீர்வாக சமஸ்டிமுறை முன்வைக்கப்படுகின்றது. இருப்பினும் இனப்பிரச்சனைக்கு சமஸ்டிமுறை ஒரு தீர்வாக அமையமுடியுமா? எனின் சாதகமான விடை காணுதல் கடினமாகவே உள்ளது. மலேசியாவின் சமஸ்டியிலும் நைஜீரியாவின் சமஸ்டியிலும் 'இனவாதம்' என்பது முக்கிய பிரச்சனையாகவே உள்ளது. மேலும் இந்தியாவில் பஞ்சாப் (Punjab) மாநிலமும் கனடாவில் குயூபெக் (Qubec) மாநிலமும், யூகோசெலவாக்கியா

வில் ஓரோட்ஸ் (Orots) மாநிலமும், சோவியத்யூனியனில் அஸர்பைஜான்—ஆர்மேனிய மாநிலங்களுக்கிடையிலான நகர்ஞே சரபாக் பிரதேசம் தொடர்பான பிரிவினைக்கோரிக்கைகளும் தக்க அனுபவங்களாகின்றன.

நீண்டகால அனுபவமாக சமஸ்டிமுறை அமைந்ததுடன் பல நாடுகளிலும் பல்வேறு தேவைகளுக்காக சமஸ்டிமுறை ஏற்படுத்தப்பட்ட போதிலும் தூயசமஸ்டி (Pure Federalism) என்பது நடைமுறையியல் எங்குமே பின்பற்றப்படுவதில்லை. ஒற்றையாட்சிப் பண்புகள் வலுவடைந்து வருகின்ற தன்மையையே தற்போதைய சமஸ்டி நாடுகளில் அவதானிக்க முடிகின்றது. மறுபுறமாகக் கூறின் சமஸ்டியின் சாயல்களே பெருமளவு பிரதிபலிக்கும் ஒற்றையாட்சி அரசுகளையே காணக்கூடியதாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் நவீன நிலைமைகளினாலும் எதிர் நோக்கப்படும் பிரச்சனைகளினாலும் சமஸ்டி முறை ஒற்றையாட்சி அரசாங்க முறையை நோக்கி துரிதமாக அசைவது தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இதனால், நவீன அரசியலில் சமஸ்டி ஆட்சி முறைக்கான ஓர் இலட்சிய அரசாக (Ideal State) எந்த நாடுகளையுமே எடுத்துக்கூற முடியாத நிலை இன்று காணப்படுகின்றது. இவ்வேளையில், கரோல்ட் வஸ்கி (Harrold Lasky) ''சமஸ்டியுகம் என்பது முடிவடைந்துவிட்டயுகம்'' எனக் கூறும் கருத்துக்கள் மிகப் பொருத்தானதாகவே தென்படுகின்றது.

வியாபாரம் முற்றிலும் உலகவிவகாரம் என்றும், சத்தியமோ மதத்தைப் பற்றியது என்றும், வியாபார விஷயத்தில் சத்தியத்தை அனுஷ்டிக்க முடியாது என்றும் வியாபர நண்பர்கள் கூறுகிறார்கள். இதே கருத்தை நமது வீட்டில் கொள்ளையிட வரும் ஒரு கொள்ளைக்காரன் சொன்னால் ஏற்றுக்கொள்ளுவோமா ?

— மகாத்மாகாந்தி

அன்பளிப்பு



சிறந்த சிற்றுண்டி வகைகளுக்கு

நாடுங்கள்

“ அபிராமி விலாஸ் ”

(யாழ் பல்கலைக்கழகம் முன்பாக)

திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

BEST WISHES FROM

ABTHEEN

FASHIONABLE GENTS TAILORS

“ஆப்தீன்”

தையல் உலகில் நவீன முன்னோடிகள்

05, JUMMAH MOSQUE LANE
JAFFNA

திட்டமிடலும் - நிருவாகமும்

வி. செ. சுவாமிநாதன்
இலங்கைத்திட்டமிடற் சேவை
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி

திட்டமிடல், நிருவாகம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பும், தங்கியிருக்கும் தன்மையும் வாய்ந்தவை. இத் தொடர்புகளை விளங்கிக்கொள்வதற்கு முன்னர் 'திட்டமிடல்' என்றால் என்ன என்பதற்குரிய சரியான விளக்கத்தை அறிதல் வேண்டும். தேசியதிட்டமிடல், பொது நிருவாகம், அபிவிருத்தி நிருவாகம் ஆகியவை தொடர்பான ஆவணங்களில் 'திட்டமிடல்', 'திட்டம்' என்பவைபற்றிப் பல விடயங்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. விரிவாகச் சொல்லப்போனால் திட்டமென்பது ஒரு செயற்திட்டத்தினை, செயற்திட்டங்களின் தொடர் நிகழ்ச்சிகளை, இவை தொடர்பான ஆவணமொன்றினைக் குறிக்கலாம். செயல் நிகழ்வுகளை முன்கூட்டியே உருவமைத்தல், அவற்றினைச் செயல்படுத்தற்கேற்ற வழிமுறைகளை வகுத்துரைத்தல் ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களையும் ஒருதிட்டமானது கொண்டிருக்கும். பொதுவான கருத்தில் திட்டமிடலானது நிருவாகத்தின் முக்கியமான பகுதி. நிருவாகமானது திட்டச்செயற்பாட்டினை வெகுவாகப் பாதிக்குமொரு அம்சமாகும். நல்ல திட்டமானது நிருவாகத்தினைக் கருத்திலே கொண்டதாயமையவேண்டும். சாதாரணமாகத் திட்டமென்பது நிச்சயமான இலக்கொன்றினை அடைதற்குரிய செயற்றிட்டங்களின் தொகுப்பாகும். இதன் அடிப்படையில் திட்டமென்பது கொள்கைக்கூற்று; திட்டமிடுதலென்பது கொள்கை வகுத்தலாகும். பொதுவாகத் திட்ட ஆவணங்களில் இலக்குகள் குறிப்பாகச் சொல்லப்படாமல் பொதுவாகச் சொல்லப்பட்டிருப்பதனையே காணலாம். அபிவிருத்தி நிருவாகக் கண்ணோட்டத்தில் — முக்கியமானதிட்டம் தேசிய பொருளாதாரத்திட்டமாகும். முன்னேற்றகரமான ஒரு தேசியதிட்டம் சமூக நீதி, உச்சமான பொருளாதார அபிவிருத்தி

ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும் முழுமையாக இணைக்கப்பட்டதாகவும், ஒருங்கு சேர்க்கப்பட்டதாகவும், சமநிலையுள்ளதாகவும், துறைகளிடையே முரண்பாடற்றதாகவும் இருக்கும். யதார்த்தநிலையில் அநேகமான அபிவிருத்தித்திட்டங்கள் இலக்குகளின் தொகுப்பாகவோ தனிப்பட்ட செயற்திட்டங்களின் கூட்டுத் தொகையாகவோ காணப்படுகின்றன. இவை உள்ளீட்டு, வெளியீட்டு அம்சங்களில் பிறதிட்டங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டவையாக இல்லை. தரவுகளின் குறைபாட்டினாலும், அளவுக்கதிகமான நிச்சயமற்ற தன்மையினாலும் வளரும் நாடுகள் பலவற்றில் ஆரம்பகாலத்திட்டங்களில் ஒன்றிணைக்கப்பட்ட தன்மை காணப்படவில்லை. இரண்டாம் உலகப் போரின் பின்னர், உதவி, கடன் வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் — உதவி, கடன் பெறும் நாடுகளைத் தேசிய திட்டங்களை வகுக்குமாறு அடிக்கடி கேட்டுக் கொண்டன. இதற்குரிய காரணம் உதவி அல்லது கடன் கேட்கப்படும் ஒரு செயற்திட்டம், தேசிய அபிவிருத்தியில் சார்புரீதியில் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை மதிப்பீடு செய்துகொள்வதற்காகும். ஆயினும் இதற்கெனத் தயாரிக்கப்பட்டதிட்டங்கள் பல செயற்திட்டங்கள் பலவற்றின் கூட்டுத்தொகையாக இருந்தனவே தவிர ஒன்றிணைக்கப்பட்டவையாக அமைக்கப்படவில்லை. தேசிய திட்டத்திற் குறிக்கப்படும் பிரதேசமானது நாட்டினை முழுமையான அலகாகவோ, பிராந்தியங்களாகவோ புவியியல் ரீதியான பிரிவுகளாகவோ, அரசியல் நிருவாகப்பிரிவுகளாகவோ பிரதிபலிப்பதாக அமையலாம். அதன் அளவு தனிப்பட்ட திட்டத்தையோ, ஒரு துறையையோ ஒன்றுக்கு மேற்பட்டதுறைகளையோ, முழுப் பொருளாதாரத்தையோ, பொருளாதார சமூக அபிவிருத்தியையோ கொண்டமையலாம். இவைதிட்டமிடுதலை அனுமதிக்கின்ற அதிகாரமுள்ளவர்களின் தீர்மானத்தைப் பொறுத்தவிடயமாகும்.

அபிவிருத்தித்திட்டமிடலில் வழமையாக இருந்துவரும் ஒரு குறையாக நிர்வாக அம்சத்தையிட்டு அதிகம் பொருட்படுத்தாது விடுதலாகும். அதிகமான அபிவிருத்தித்திட்டங்களில் நிருவாக அபிவிருத்திபற்றி மிகவும் குறைவாகவே குறிக்கப்படுகின்றது: சிலவற்றில் அதுவுமில்லை. அத்திட்டங்கள் பொருளாதார சமூக இலக்குகளைப் பற்றி மேலெழுந்தவாரியாக வரையறை செய்கின்றனவே தவிர அவ்விலக்குகளை அடைவதற்கேதுவான திட்டச் செயற்பாடுபற்றியும், அதற்காதாரமான நிருவாக இயந்திரத்தின் தன்மைபற்றியும் போதியளவு வழிகாட்டுதல்களைக் கொண்டிருக்கவில்லை. இச் சமநிலையின்மையை 'நிருவாக இடைவெளி' அல்லது 'செயற்படுத்தல் இடைவெளி' எனச் சுட்டுவர். தேசிய அபிவிருத்தியைப் பாதிக்கின்ற முக்கியமான அம்சங்களுள் இவ்விடைவெளியுமொன்றாகும். தேசிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயலாக்குவதில் நிருவாகச் சீர்திருத்தம் தவிர்க்கமுடியாததொரு பணியாகும். திட்டங்தள் தோல்வியில் முடியும் பொழுது பொது நிருவாகத்தைக் குறை கூறுதல், அல்லது திட்டம் நல்லது பிழையெல்லாம் செயற்படுத்திய விதத்திலேதான் என அடிக்கடி குற்றம்சாட்டுதல் ஆகியவை ஒருவரைத் தவருக வழிநடத்துவதாகும். செயற்படுத்துவதற்குத் தகைமை பெறுத எந்த ஒரு திட்டமும் நல்லதிட்டமாகாது. திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் தகுதிபோல, திட்டத்தைத் தயாரிப்பதற்கும் தகுதியான நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படுகின்றது. செயற்படுத்துபவர்களது ஆலோசனையையும் திட்டத்தயாரிப்பின்பொழுது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பொருளாதாரத்திட்டமென்பது அதன் தன்மையில் முற்றுமுழுதாகப் பொருளாதார குணம்சமுள்ளது; பொருளியலாளர் மாத்திரமே அதுதொடர்பாக நிபுணத்துவ ஆலோசனை வழங்கக்கூடும் என்ற பிழையான கருத்து பரவலாக நிலவுகின்றது. பொருளியலாளர்களின் பங்கு பொருளாதாரத் திட்டமிடுதலில் மிகமுக்கியமானது; ஆனால் அத்தகையோர் பொதுவான விடயங்களிலும் அனுபவ அறிவுள்ளவர்களாயிருத்தல் வேண்டும், இல்லாவிட்டால் ஒரு திட்டமானது கற்

பணிக்கோட்பாடுகளது புகலிடமாகி, நூல் நிலையங்களுக்குப் பாரமாகிவிடும். திட்டமிடலாளர்களும், நிருவாகிகளும் இணைந்து அறிவையும் அனுபவங்களையும் பரிமாறி அமைக்கின்ற திட்டங்கள் முழுமையானவையாக அமைதல் சாத்தியம்.

திட்டமிடுதலில் நிருவாகத்தின் பங்கு பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது. நிருவாகத்தில் திட்டமிடுதலின் பங்குபற்றியும் தெரிந்து கொள்ளுதல் அவசியம். பொதுநிருவாகத்தில் பழம் நிருவாகக்கழகத்தைச்சார்ந்த முன்னோடிகளுள் ஒருவரான ஹென்றி பேயொல் (Henri Fayol) நிருவாகத்தில் ஐந்து முக்கிய விடயங்களுள் முதல் விடயமாகத் திட்டமிடலை எடுத்துக்காட்டினார் (மற்றவை நான்கு: ஒழுங்கமைப்பு, கட்டளை, இணைப்பு, கட்டுப்பாடு) அமைப்புகளூடாக இலக்குகளைச் செயற்படுத்துதலை நிருவாகம் அர்த்தப்படுத்துவதால் திட்டத்தினையும், விதிகளையும் வைத்திருத்தல் நிருவாகத்திற்கு அவசியமாகிறது. முதலாம் உலகயுத்தத்தின்பின்னர் சோவியத் யூனியன் பொருளாதார அபிவிருத்தித்திட்டமிடலைத் துரித அபிவிருத்திக்குரிய கருவியாக உபயோகித்தது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரத்துறையில், பொருளாதாரத் திட்டங்கள் மிகமுக்கியமான கொள்கை ஆவணமாக இருந்துவருகின்றன. தேசிய பொருளாதாரத் திட்டங்கள் முக்கியத்துவம் நிரம்பியவை. அவை உருப்படியான செயற்திட்டங்களைப் பற்றியும், நிகழ்ச்சித்திட்டங்கள்பற்றியும் தரவுகளை கொண்டிருக்கும். அவை அநேகமாக நடுத்தர அளவுகால எல்லையைக் கொண்டவை. அநேகமாக ஐந்தாண்டுகளைக் கொண்டவை. இராணுவதிட்டமிடலுக்கு வெளியில் அதிகமான தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படும் துறை அபிவிருத்தித்திட்டமிடல்துறையாகும். (இலங்கையில் 1977ன் பின்னர் முழுப் பொருளாதாரங்களையும் தழுவிய) நடுத்தரகாலதிட்டத்திற்குப் பதிலாக வருடாந்தம் முன்னுரிமைகளையும், மதிப்பீடுகளையும் சரிசெய்கின்ற பொது முயற்சித் துறைப் பகுதிக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள தொடர்ச்சியான திட்டமிடல் படிமுறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதனைச் சுழற்சித் திட்டமென்பர்.

உசாத்துணை நூல்கள்

1. Chi-Yuen W. U. Development Administration — Current approaches and Trends in public administration for national development New York, United Nations 1975.
2. Albert Waterston — Recommendation on Eeononic Planning in Ceylon Sept. 1966. Published by The Ministry of Planning and Elononic affairs.
3. The Five Year Plan of the Ministry of Planning and Employment Govt. of Ceylon. (Plan 1972 - 1976)
4. Rural Development and Local Govt. Training Series (1) 1977 Ministry of Commerce and Local Govt. Islamabad.
5. Report of the Training Course on Planning and Implimentation at Sub-national level. Ministry of Plan Implimentation 1981.
6. Eastern Elononist Vol. 2, No. 3 Oct - Dec. 1984.
7. Report No. 4 of the Administrative Reforms Committee Social page no. VI 1987, Sri Lanka.
8. Dr. Lioyd Fernando, Director National Planning. Ministry of Finance and Planning— **Planning in Sri Lanka.** Elononic Review of People's Bank of Sri Lanka. June 1985.

WITH BEST WISHES FROM

MASCONS LIMITED

- ASBESTOS SHEETS
- WIRE NAILS
- BARBED WIRE
- STEEL CUP-BOARDS

FOR ALL YOUR REQUIREMENTS

PLEASE CONTACT

MASCONS LIMITED

35. STANLEY ROAD
JAFFNA

Best Wishes from

Mohamedally Abdulally

MERCHANTS & TRANSPORTERS
5–7, Grand Bazaar,
JAFFNA.

Telephone : **22515**
Telegram : "SAIFEE"

Branch :
81, OLD MOOR STREET
COLOMBO 12

Telephone : **33569, 549810**

Telegram : **"BARWA"**

பாதுகாப்புச் செலவும் பொருளாதார அபிவிருத்தியும்: இலங்கை பற்றிய ஒரு நோக்கு.

ந. பேரின்பநாதன்
B. A. (Hons); M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

பாதுகாப்புச் செலவுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையேயான தொடர்புபற்றி இருவித கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஒரு சாரார் பாதுகாப்புச் செலவு பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் தூண்டுதலை அளிப்பதில்லை எனக் கூறுகின்றனர். இன்னொரு சாரார் அதாவது பாதுகாப்புச் செலவுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள், பாதுகாப்புச் செலவு நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கு அவசியமானதென்ற காரணத்தினைவிட வேறு சில பொருளாதார ரீதியான காரணங்களாலும் நாட்டிற்கு நன்மை பயப்பதாக உள்ளது என வாதிக்கின்றனர். அத்தகைய நன்மைகள் பின்வருமாறு:

1) வேலை வாய்ப்பினை அதிகரித்தல்
2) தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருத்தல்
3) சமூகப் பொது முதலீடுகளில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தல்
4) பொருளாதார வளர்ச்சியினை உயர்த்துதல்

இலங்கையில் பாதுகாப்புச் செலவானது பணரீதியாக ஏறக்குறைய இருபது மடங்காக 1977இல் 500 மில்லியன் ரூபாய்களிலிருந்து 1987ல் 10000 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது.[1] இத்தகைய செலவுகள் மேற்கூறிய நன்மைகளை இலங்கையில் ஏற்படுத்தியுள்ளனவா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அண்மைக்காலங்களில் குறிப்பாக 1983ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் பாதுகாப்புச் செலவு என்றுமில்லாத அள

வுக்கு அதிகரித்து வந்துள்ளது. இதற்கான முக்கிய காரணமாக அமைவது இந்நாட்டின் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் தோன்றிய தீவிரவாதமும் அதனை அடக்குவதற்கு அரசாங்கம் இராணுவ பலத்தினை அதிகரித்துக்கொண்டு வந்தமையுமாகும். அண்மைக் காலத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளில் தோன்றுகின்ற தீவிரவாத நடவடிக்கைகளும் இச்செலவினை மேலும் அதிகரிப்பதற்கு வழி வகுக்கும் போக்கு காணப்படுகின்றது. 1982ம் ஆண்டுவரையும் இலங்கையின் பாதுகாப்புச் செலவானது அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தின் நடைமுறைச் செலவில் ஏறக்குறைய 3 சதவீதமாகவே (1971ம் ஆண்டைத்தவிர) இருந்து வந்துள்ளது என்பதையே இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் மூலம் பெறும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்று பாதுகாப்பும் அதனுடன் தொடர்பான செலவுகளும் வரவு - செலவுத் திட்டத்தில் 35 சதவீதப் பங்கினைப் பெற்றுள்ளன. சதவீதத்தில் மட்டுமல்லாது பாதுகாப்புச் செலவு மொத்த ரீதியிலும் பலமடங்காக அதிகரித்துள்ளது.

1978ம் ஆண்டில் 56 கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு 1985இல் 619.5 கோடியாக இலங்கையில் உயர்ந்துள்ளது. இது இந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1984இல் 1.5 சதவீதத்திலிருந்து 1985இல் 3.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.[2] 1987ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கும் அதனுடன் தொடர்பான செலவுகளுக்கும் 1500 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டது. இதனிவிடத் தற்போது பாதுகாப்பு அமைச்சு மேலும் 200 கோடி ரூபா ஒதுக்கும்படி கேட்கின்றது. இப்புள்ளி விபரங்கள் அண்மைக்காலத்தில் எவ்வாறு பாதுகாப்புச் செலவு மிகத் துரிதமாக அதிகரித்து வந்துள்ளன என்பதை விளக்குகின்றன.

இலங்கையில் பாதுகாப்புக் குறித்த நடைமுறைச் செலவு எவ்வாறு அதிகரித்து வந்துள்ளது என்பதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை

பாதுகாப்புக்கான நடைமுறைச் செலவு (1968/69 – 1985)
(மில்லியன் ரூபாய்களில்)

ஆண்டு	தொகை	ஆண்டு	தொகை
1968/69	82.7	1978	308.7
1969/70	92.0	1979	393.4
1970/71	175.6	1980	457.8
*1971/72	203.1	1981	479.2
1973	144.9	1982	486.0
1974	169.9	1983	979.1
1975	192.1	1984	1274.6
1976	178.6	1985	4613.9
1977	223.9		

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள் (*15 மாதங்களை உள்ளடக்கியது.)

1983ம் ஆண்டு வரையும் (1970/71 ஆண்டுகளைத் தவிர) பாதுகாப்புக் குறித்த நடைமுறைச் செலவு மெதுவான முறையில் அதிகரித்துக்கொண்டு வந்தது. ஆனால் 1983ம் ஆண்டுக்குப் பின்னர் பாரிய அளவில் அதிகரித்துச் செல்வதைக் காணலாம். 1970/71ம் ஆண்டு காலத்தில் திடீரென்று ஏற்பட்ட அதிகரிப்புக்கு 1971ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் ஏற்பட்ட ஜே. வி. பி இயக்கத்தினரின் கிளர்ச்சியே காரணம். படையினரின் எண்ணிக்கை அதிகரித்தமை, அவர்களின் சம்பளங்கள் அதிகரித்தமை, படையினரின் பாவிப்புக்குத் தேவையான ஆயுதங்கள், வாகனங்கள் ஆகியவற்றின் பராமரிப்புச் செலவு அதிகரித்தமை போன்றவையே பாதுகாப்புக் குறித்த நடைமுறைச் செலவு அதிகரித்துள்ளமைக்குக் காரணமாகும். நடைமுறைச் செலவைவிட மூலதனச் செலவே பாதுகாப்புச் செலவில் பெரும்பங்கைப் பெறுகின்றன. ஆனால் அதுபற்றிய சரியான புள்ளிவிபரங்களை பெறமுடியாமல் உள்ளமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். இவ்வாறு பாதுகாப்புச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது, ஏற்படுத்துகின்றது, ஏற்படுத்தும் என்பதை நோக்குவோம். இவ்வாறு ஒரு சரியான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நாம் எடுத்துக் கொள்ளும் காலப்பகுதி (1983க்குப் பின்) மிகக் குறுகியதாக இருப்பினும் ஒரு சில அவதானிப்புக்களை இங்கு எடுத்துக் கூறலாம். இவ்விடத்தில் 1986ம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட உரையில் நிதியமைச்சர் கூறிய ஒரு கூற்றை குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். ''வளர்ச்சி, அபிவிருத்தி வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் பெரிய இழப்புக்களைத் தாங்காது இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு இத்தகைய போர் முயற்சியை ஆற்றமுடியாது''[3] என்பதே அக் கூற்றாகும்.

இலங்கையின் பாதுகாப்புச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, வேலைவாய்ப்பில் அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை மறுக்கமுடியாது. முழுமையாக நோக்குகின்றபோது எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் கடந்த 15 மாதத்திற்குள் (1986 நவம்பருக்கு முன்) படையினர் தொகை இருமடங்காக அதிகரித்துள்ளது.[4] பாதுகாப்பு அமைச்சு இது பற்றிய தரவுகளை வெளியிடாமல் இருப்பினும் சில ஆய்வாளர்களின் மதிப்பீட்டுப்படி படையினரின் எண்ணிக்கை – 4000 விசேட அதிரடிப்படையினரை உள்ளடக்கிய – 30000க்கும் 40000க்கும் இடையில் இருக்கலாம். இவர்களைவிட ஊர்காவல் படையினர் முறையும் வேலைவாய்ப்பினை அதிகரித்துள்ளது. இவர்களின் தொகையும் ஏறக்குறைய 15, 000 ஆக இருக்கலாம்.[5] மொத்ததொழிற் படையில் 14 சத வீதத்தினர் (1985இல்) வேலையின்மையினை அனுபவிக்கின்ற இலங்கையில் வேலைவாய்ப்பு அதிகரிப்பது வரவேற்கத்தக்கதொன்றே. எனினும் இராணுவத்துறை மூலமாகக் கிடைக்கும் வேலைவாய்ப்பு பொருளாதாரத்திற்கு எவ்வகையில் முன்னேற்றத்தினைத் தரும் என்பதனை நோக்குதல் வேண்டும்.

குடிமகன் ஒருவன் இராணுவ வீரனாக மாறுகின்றபோது அவனால் செய்யப்படும் சேவையே தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பாக அமைகின்றது. அவனுக்கு வழங்கப்படும் சம்பளம் மூலம் அது மதிப்பிடப்படுகின்றது. குடிமகன் ஒருவன் இராணுவ வீரனாகக் கடமையாற்றும்போது, அவனால் வேறு துறைகளில் ஈடுபடுவதன் மூலம் பெறக்கூடிய உற்பத்தியைப் பெறமுடியாமல் போவது அவனைப் பொறுத்த சந்தர்ப்பச் செலவாக அமைகின்றது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

பெரும்பாலான மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூரணமாக நிவர்த்தி செய்ய முடியாத இலங்கையில் இராணுவத் துறை மூலமாக வேலைவாய்ப்பினை அதிகரித்தல் என்பது ஏற்கக்கூடிய விடயமல்ல, மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய துறைகளில் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதே பொருத்தமானதாக இருக்கும். மேலும் ஒரு இராணுவ வீரனுக்கு வேலை வழங்குவதற்காகச் செய்யப்பட்ட முதலீட்டை வேறு துறைகளில் முதலிட்டிருப்பின் வேலைவாய்ப்புகள் கூடுதலாக அதிகரித்திருக்கும். எனவே 1986ம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருப்பது போல பாதுகாப்புச் செலவதிகரிப்பு உண்மையாக ஏற்பட்டிருக்கக்கூடிய வேலைவாய்ப்பினைக் குறைத்துள்ளதென்றே கூறவேண்டும்.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் பாதுகாப்புச் செலவு தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றத்தினை நாட்டின் கிராமியத் துறையிலோ அல்லது நகரத்துறையிலோ ஏற்படுத்துமென்று கூறுவதற்கில்லை. ஏனெனில் இராணுவ ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியில் பெருமளவில் செலவு செய்யும் நாடுகளில் கூட இராணுவ சம்பந்தமான கண்டுபிடிப்புகள் அவற்றின் கிராமியத்துறை, அல்லது நகரத்துறையில் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு அதிகம் உதவவில்லை என்ற கருத்து தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இராணுவ ஆராய்ச்சிக்காக செலவு ஒதுக்கப்படாத இலங்கையில் இத் துறை மூலம் புதிய தொழில்நுட்பங்களைக் காணக்கூடிய வாய்ப்போ அல்லது அத்தகைய கண்டுபிடிப்புக்கள் இலங்கையில் கிராமிய, நகரத்துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகளோ இல்லை. இலங்கை தனக்குத்தேவையான இராணுவ உபகரணங்களை (ஏன் இராணுவ உடைகளையும் கூட) வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கின்றது. இதனால் அத்தகைய இறக்குமதிகளின் மீது இலங்கையில் செய்யப்படும் செலவு உள்நாட்டில் பெருக்கி விளைவுகளை ஏற்படுத்துவதுமில்லை. அது ஆயுதங்களையும் ஏனைய உபகரணங்களையும் உற்பத்தி செய்யும் நாட்டுக்கே வேலைவாய்ப்பையும் உற்பத்தி அதிகரிப்பையும் ஏற்படுத்தத் துணை புரிகின்றது. மேலும் நவீன ஆயுதங்கள், போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் போன்றவற்றின் இறக்குமதி, இறக்குமதிக் கொடுப்பனவை அதிகரித்து ஏற்கனவே பாதகமடைந்துவரும் சென்மதி நிலுவையை மேலும் மோசமடையச் செய்ய வழிவகுக்கும். அண்மைக்காலத்தில் இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தரும் பயிர்களான தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் உலக சந்தையில் பாரதூரமான வீழ்ச்சியைக் கண்டுள்ளன. 1984க்கும் 1986க்கும் இடையில் தேயிலை, றப்பர் தேங்காயெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் உலக சந்தையில் முறையே 45 சதவீதத்திலும், 17 சதவீதத்திலும், 77 சதவீதத்திலும் வீழ்ச்சியடைந்துள்ளன.[6] இந்நிலையில் அதிக விலையுடைய நவீன ஆயுத மற்றும் இராணுவ தளபாடங்களின் இறக்குமதி அதிகரிப்பு சென்மதி நிலுவைப் பிரச்சனையை மேலும் மோசமடையச் செய்யவே வழிவகுக்கும். பாதுகாப்புச் செலவுக்கென வெளிநாட்டு உதவி கிடைப்பதில்லை.[7] எனவே இலங்கையின் ஏற்றுமதி மூலம் அருமையாகக் கிடைக்கின்ற அந்நியச் செலாவணியையே ஆயுத தளபாடங்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்துதல் வேண்டும். இந்த வகையில் நோக்குகின்றபோது ஆயுத, தளபாட இறக்குமதிகளுக்குப் பயன்படுத்துகின்ற அந்நிய செலாவாணிக்கான சந்தர்ப்பச்செலவு இலங்கையைப் பொறுத்து மிகவும் அதிகமென்றே கூறவேண்டும்.

இலங்கையில் பாதுகாப்புச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு சில சமூகப் பொது முதலீட்டு வசதிகளிலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்தி உள்ளது. இராணுவத்தினர் உபயோகிப்பதற்கான விமானத்தளம் தொலைத் தொடர்பு வசதிகள், இராணுவ வைத்திய சாலைகள், பாதைகள் போன்றன அமைக்கப்பட்டு வருகின்றன எனினும் இவற்றின் உபயோகம் ஒரு சிலருக்கு மட்டுமென்றே வரையறுக்கப்பட்டுள்ளது. மொத்த மக்கள் தொகையில் மிகச்சிறிய வீதத்தினருக்கே பயன்படக்கூடிய மேற்கூறிய விடயங்களுக்கு இலங்கை போன்ற குறைவிருத்தி நாடொன்று அதிகளவில் செலவு செய்வது அதனது பொருளாதார சக்திக்கு மேற்பட்ட தொன்றாகும். அதேவேளையில் இத்தகைய செயற்பாடு அத்தியாவசியமாகத் தேவைப்படும், எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியை கூடியளவில் தரக்கூடிய துறைகளில் ஈடுபடுத்தக்கூடிய முதலீட்டை வேறு வழியில் திசை திருப்புவதாகவும் அமையும்.

அடுத்து பாதுகாப்புச் செலவின் அதிகரிப்புப் போக்கு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை நோக்குவோம். பின்வரும் அட்டவணை 1977க்கும் 1985க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினைக் காட்டி நிற்கின்றது.

அட்டவணை

தேசிய வருமான வளர்ச்சி 1977 – 1985
(சதவீதத்தில்)

ஆண்டு	வளர்ச்சி வீதம்	ஆண்டு	வளர்ச்சி வீதம்
1977	4.4	1982	4.8
1978	8.2	1983	5.1
1979	6.2	1984	5.1
1980	5.5	1985	5.3
1981	5.8		

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள்

1972க்கும் 1981க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் தேசிய வருமானத்தில் மெய்ரீதியான வளர்ச்சி வீதம் சராசரி 4.5ஆக இருந்தது. 1978க்கும் 1981க்கும் இடையே சராசரி வளர்ச்சி வீதம் கூடுதலாக இருந்தபோதும், 1972க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வளர்ச்சி வீதம் மிகக் குறைவேயாகும். இதனால்தான் 1972க்கும் 1981க்கும் இடையேயான சராசரி வளர்ச்சி வீதம் குறைவாக உள்ளது. இக்காலப்பகுதியில் பாதுகாப்புச் செலவு வரவு – செலவுத் திட்டத்தில் 3 சத வீதத்திற்கு மேல் செல்லவில்லை என்பது கவனிக்கத் தக்கது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் பாதுகாப்புச் செலவில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டபோதும் வளர்ச்சி வீதம் குறையவில்லை. மாறாக சிறிதளவு அதிகரித்துள்ளது. இது பெனேயிற் என்பவரின் முடிவை ஆதரிக்கின்றதா என நோக்குதல் வேண்டும். அதாவது பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் என்பதே பெனேயிற் பெற்ற மெய்ச்சான்று ரீதியான முடிவாகும்.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் நிலவிய பல்வேறு சூழ்நிலைகள் பொருளாதார வளர்ச்சியில் குறைவை ஏற்படுத்தக் கூடியனவாகவே இருந்தன. இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் நிலவிய குழப்ப நிலைமைகள் அப்பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளை மிகக் கடுமையாகப் பாதித்திருந்தன. குறிப்பாக அப்பகுதியின் நெல் உற்பத்தியில் 30 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 1983ம் ஆண்டு யூலையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் கைத்தொழிற்சாலைகள், கடைகள் அழிவுற்றிருந்தன. இதனால் பலர் வேலையிழந்திருந்தனர். மத்திய வங்கியினது மதிப்பீட்டின்படி கொழும்பைச் சுற்றிய 30 மைல்கள் விட்டத்திற்குள் 152 கைத்தொழிற்சாலைகள், 1,100 கடைகள் பாதிக்கப்பட்டிருந்தன. 50,000 பேர் வேலையிழந்தார்கள் என்றும் கணிப்பிடப்பட்டிருந்தது. சுற்றுலாத்தொழிலிலும் அதன் வருமானத்திலும் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் மீன் உற்பத்தியில் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டமை, வெளிநாட்டு முதலீட்டில் வீழ்ச்சி போன்ற இன்னோரன்ன காரணிகள் தேசிய வருமான வளர்ச்சியில் வீழ்ச்சியை ஏற்படுத்தவே துணைபுரிந்திருக்கும். எனினும் வளர்ச்சி வீதத்தில் வீழ்ச்சி ஏற்படவில்லை. ஆனால் இக்குழப்ப நிலைமைகள் வளர்ச்சி வீதத்தைப் பாதிக்கவில்லை என்றும் கூற முடியாது. சமாதான நிலைமைகள் நிலவி இருந்தால் 6 சதவீதத்திற்கும் 8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வகையில் அதிக வளர்ச்சியினைப் பெற்றிருக்கலாம்[8] சில அவதானிப்பாளர்களின் மதிப்பீட்டின்படி பேரினரீதியாக நோக்குகின்றபோது 1984லும் 1985லும் காணப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது ஏறக்குறைய முழுமையாக ஒரு சதவீதத்தால் குறைந்துள்ளது.[9] அதாவது பிரச்சனைகள் இல்லாதிருந்திருப்பின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சியானது வருடாந்தம் 5 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதத்திற்கு சென்றதற்குப் பதிலாக 6 சதவீதமாக வளர்ச்சியடைந்திருக்கும். எனவே நாட்டில் காணப்பட்ட குழப்ப நிலைமைகள் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய நிலையிலேயே இருந்துள்ளன. அதனைவிட உலக சந்தை நிலைமைகளும் 1984, 1985ம் ஆண்டுகளில் இலங்கைக்குச் சாதகமாக இருக்கவில்லை. இந்நிலையிற்கூட 1983ம் ஆண்டுக்குப் பிந்திய வளர்ச்சி வீதம் குறையாமல் இருந்தமைக்கு அதிகரித்துச் சென்ற பாதுகாப்புச் செலவுதான் காரணம் என நாம் கூறலாமா? அவ்வாறு கூறமுடியாது. ஏனெனில் பெஞ்ஜமின் என்பவருக்குப் பின்னர் செய்யப்பட்ட அண்மைக்கால ஆய்வுகள் பல முன்னர் கருதி இருந்ததைப்போன்று பொருளாதார வளர்ச்சியின் போக்குக்கும் பாதுகாப்புச் செலவின் போக்குக்குமிடையே எதிரான தொடர்புகளே காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தி உள்ளன. இலங்கையில் அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவு எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் என அடிக்கடி எமது நாட்டு நிதிமந்திரி, நிதித்திட்டமிடல் அமைச்சு அதிகாரிகள் கூறிவந்தமையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

இலங்கையின் பாதுகாப்புச் செலவில் அண்மைக்காலங்களில் நடைமுறைச் செலவினைவிட மூலதனச் செலவே பெரும் பங்கு பெறுகின்றது இம்மூலதனச் செலவில் பெரும்பகுதி வெளிநாடுகளிலிருந்து இராணுவ சம்பந்தமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கே பயன்படுகின்றது. இத்தகைய செலவமைப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதாக இருக்காது. இந்நிலையில் இலங்கையின் பாதுகாப்புச் செலவு அதிகரித்தபோதும் வளர்ச்சி வீதம் குறையாமல் அல்லது சிறிது முன்னேற்றமாக இருந்தமைக்கு பெஞ்ஜமின் என்

பவரது முடிவை விமர்சித்தவர்கள் கூறிய கருத்தினையே இங்கும் பொருத்திப் பார்க்க வேண்டி உள்ளது.

இக்காலப்பகுதியிலும் அதற்கு சிறிது முன்னரும் இலங்கைக்கு கிடைத்துவந்த அந்நிய உதவியொன்றே 1983ம் ஆண்டுக்குப் பின்பும் சாதகமான நிலையில் இருந்துள்ளது. பாதுகாப்புச் செலவினுல் ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்பை இவ்வாறு பெறப்பட்ட வெளிநாட்டு உதவி ஓரளவு நிவர்த்தி செய்திருக்கலாம். பின்வரும் அட்டவணை 1977ம் ஆண்டின் பின்னர் இலங்கைக்குக் கிடைத்த உதவிகள் நன்கொடைகள் ஆகியனவற்றைக் காட்டுகின்றது.

அட்டவணை

வெளிநாட்டு உதவிகளும் நன்கொடைகளும் 1977 – 1985
(மில்லியன் ரூபாய்களில்)

ஆண்டு	தொகை	ஆண்டு	தொகை
1977	1381.2	1982	8403.8
1978	3876 0	1983	9672.2
1979	3769.8	1984	10665.7
1980	6135.5	1985	10550.0
1981	7601.5		

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள்

இன்றைய நிலையில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவி இன்றியமையாததாக உள்ளது. வெளிநாட்டு உதவியினை வழங்குவதிலும் பெற்றுக்கொடுப்பதிலும் உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் என்பன முக்கியம் பெறுகின்றன. இவ்விரு நிறுவனங்களின் உதவிகள் குறைக்கப்படுமானுல் இலங்கை தனது தாராள பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டியிருக்குமெனவும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்படுவரென்றும், இலங்கையில் நிதித்திட்டமிடல் அதிகாரிகள் கருதுகின்றனர்.[10] இவற்றை வைத்து நோக்குகின்றபோது உள்நாட்டு நிலமைகள், உலக சந்தை நிலமைகள் போன்றன இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்குப் பாதகமான நிலையில் காணப்பட்டிருப்பினும் வரலாற்றில் என்றுமில்லாதளவுக்கு இக்காலத்தில் கிடைத்த பெருமளவு வெளிநாட்டு உதவி மட்டுமே சாதகமான நிலையில் இருந்திருப்பதால், 1983ம் ஆண்டுக்குப் பின்னர் வளர்ச்சி வீதத்தில் பாதிப்பு ஏற்படாமல் இருந்தமைக்கு வெளிநாட்டு உதவி முக்கிய பங்கினை ஆற்றியிருக்கின்றது என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

இனப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் பாதுகாப்புச் செலவு எதிர்காலத்திலும் அதிகரித்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை. இனப்பிரச்சனை தீர்க்கப்பட்டாலும் கூட ஏற்கனவே எண்ணிக்கையில் அதிகரிக்கப்பட்டிருக்கும் படையினருக்கு தொடர்ந்து சம்பளம் வழங்கவும், கொள்வனவு செய்யப்பட்ட இராணுவத் தடபாடங்களை தகுந்த முறையில் பராமரிக்கவும் அதிக செலவு செய்யவேண்டியிருக்கும். இதனுல் எதிர்வரும் காலங்களில் உயர்ந்த பாதுகாப்புச் செலவு என்பது இலங்கையின் பொருளாதாரத்தில் நிரந்தரமானதொன்றாக இருக்

கும்.[11] உயர்ந்த பாதுகாப்புச் செலவு வரவு – செலவுத் திட்டத்தில் பாரிய பற்றுக் குறையினை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்றது. அண்மைக்காலங்களில் இது அனுபவபூர்வமாக அறிந்த உண்மையாகும். அதிகரித்துவரும் பாதுகாப்பு செலவினால் துண்டு விழும் தொகையை கட்டுப்பாட்டுக்குள் இலங்கை அரசினால் வைத்துக்கொள்ள முடியுமா என்று சர்வதேச நிறுவனங்கள் கவலை கொண்டுள்ளன.[12] உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் உதவிகள் கிடைக்காவிட்டால் மீண்டும் இறக்குமதிக் கட்டுப்பாடு, பங்கீட்டு முறை முதலியவற்றை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இத்தகைய நடவடிக்கைகள் மக்களுக்குத் துன்பங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவு பாரிய வரவு – செலவுத் திட்டப் பற்றுக்குறைக்குக் காரணமாக அமைவதுடன் எதிர்காலத்தில் பெறக்கூடிய வெளிநாட்டு உதவியையும் குறைப்பதற்கு வழிவகுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறைப்பதற்கு காரணமாகவும் அமையும்.

மேலும் பாதுகாப்புச் செலவு இலங்கையில் தனியே பாதுகாப்பு அமைச்சினால் மட்டும் செய்யப்படுவதில்லை. ஏனைய சில அமைச்சுக்களும் இச் செலவின் சுமையை ஏற்க வேண்டி உள்ளன. உதாரணமாக மாவட்ட அபிவிருத்தி வரவு – செலவுத் திட்டத்தில் இருந்து ஊர்காவல் படையைப் பயிற்றுவிப்பதற்கான நிதி வழங்கப்படுகின்றது. பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு ஏனைய துறைகளில் செய்யக்கூடிய முதலீட்டைக் குறைக்கின்றது. அதனால் ஏற்படக்கூடிய வேலை வாய்ப்பையும், உற்பத்தியையும் பாதிக்கின்றது. இது வளர்ச்சியடைந்துவரும் ஒரு மூன்றாம் உலக நாட்டுக்குப் பெரும் சுமையான காரியமாகும்.

பாதுகாப்புச் செலவு பணவீக்கத்தினை ஏற்படுத்துவதற்கான ஏதுவாக அமைகின்றது என்று கூறப்படும் ஒரு கருத்தை இங்கு ஆராய்வோம். பொதுவாக பாதுகாப்புச் செலவு நேரடியாக மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை அதிகரிப்பதற்கு உதவுவதில்லை என்றும், இதனால் அத்தகைய செலவுகள் அதிகரிக்கும்போது மொத்தக் கேள்வி அதிகரித்து நாட்டில் விலை மட்டம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக இருக்குமென்றும் கூறுவர். இலங்கையில் பாதுகாப்புச் செலவில் ஏற்படும் அதிகரிப்பினால் விலைமட்டம் எவ்வாறு பாதிப்படைந்துள்ளது என்பதை நோக்குவோம். இலங்கை மக்களின் வாழ்க்கைச்செலவுப் போக்கினை அறிவதற்குப் பயன்படுத்தப்படும்–இது பல குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதும்–கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை எடுத்துக்கொண்டால் அதனளவு 1980இல் 318.2 ஆகவும் 1981இல் 375.4 ஆகவும் 1982இல் 416.1 ஆகவும் 1983இல் 474.2 ஆகவும் 1984இல் 553.1 ஆகவும் 1985இல் 561.2 ஆகவும் இருந்துள்ளது. 1983க்கும் 1984க்குமிடையில் 16.6 சதவீதத்தால் விலைமட்டத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. இக்காலத்தில் பாதுகாப்புச் செலவும் பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியமை கவனிக்கத்தக்கது. இதனைக் கொண்டு நாம் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு இலங்கையில் விலைமட்ட அதிகரிப்புக்குப் பெருமளவு பொறுப்பாக உள்ளது. என்ற முடிவுக்கு வரமுடியுமா? இதற்கான விடை முடியாதென்பதே. காரணம் விலை மட்ட அதிகரிப்புக்கும் இலங்கையின் பாதுகாப்புச் செலவுக்கும் இடையே நேரான தொடர்பினை நாம் காணமுடியாமல் இருப்பதே. இதனை இலங்கையில் பாதுகாப்புச் செலவு குறைவாகவிருந்த காலங்களில் விலை மட்ட அதிகரிப்பு வீதம் கூடுதலாக இருந்ததைக்கொண்டும் பாதுகாப்புச் செலவு கூடுதலாக இருந்த காலத்தில் விலைமட்ட அதி

கரிப்பு வீதம் குறைவாக இருந்ததைக் கொண்டும் நிரூபிக்கலாம். 1983ம் ஆண்டுக்கு முன்னர் பாதுகாப்புச் செலவு குறைவாக இருந்தபோதும் விலைமட்ட அதிகரிப்பு கூடுதலாக இருந்துள்ளதை முன்னர் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்களில் இருந்து அறியலாம். 1984க்கும் 1985க்கும் இடையில் பாதுகாப்புச் செலவில் முன்னரைப் போதுமில்லாதளவுக்கு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தபோதும் விலைமட்டம் இக்காலத்தில் 1.5 சதவீதத்திலுலேயே அதிகரித்திருந்தது. இக்காலத்தில் சாதகமான காலநிலையால் விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்திருந்தமையால் பல பொருட்களின் விலைகள் வீழ்ச்சியைக் கண்டிருந்தன. இதுவே விலைச்சுட்டெண்ணின் மிகக் குறைந்தளவு அதிகரிப்புக்குமுக்கிய காரணமாகும். எனவே விலைமட்டத்தின் போக்கைத் தீர்மானிப்பதில் பாதுகாப்புச் செலவு முக்கிய பங்கினைப் பெறுகின்றதெனக் கூறமுடியாது.

அண்மைக்காலத்தில் இலங்கையில் அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவு வரவு – செலவுத் திட்டப் பற்றுக்குறையின் அளவினை அதிகரிப்பதில் பெரும்பங்கு பெறுகின்றது பற்றுக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு ஒரு வழியாக அரசாங்கம் உள்நாட்டு மூலகங்களில் இருந்தும் கடன் பெறுகின்றது. அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடன்களின் அளவு 1981இல் 29,172 மில்லியன் ரூபாய்களாகவும் 1985இல் 67,673 மில்லியன் ரூபாய்களாவும் அமைந்திருந்தது. வெளிநாட்டுக் கடன்களின் அதிகரிப்பு எதிர்காலத்தில் படுகடன் சேவை விகிதத்தினை அதிகரிக்க வழிவகுக்கும். 1985இல் இலங்கையின் படுகடன் சேவை விகிதம் 22.5 ஆக இருந்தது. மேலும் இத்தகைய கடன் எதிர்காலச் சந்ததியினர் மீது ஒரு சுமையையும் ஏற்படுத்தும். எனவே பாதுகாப்புச் செலவு இன்றைய சந்ததியினர் மீது மாத்திரமல்லாமல் எதிர்காலச் சந்ததியினர் மீதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதால் அதனைக் குறைக்கவேண்டியது அவசியமாகும்.

பாதுகாப்புச் செலவினைக் குறைப்பதற்கான முக்கியமான வழி இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வை விரைவில் காண்பதாகும். தீர்வு காணப்பட்டால் குறைந்த பட்சம் பாதுகாப்புச் செலவின் அதிகரித்துச் செல்லும் போக்கினையாவது கட்டுப்படுத்த முடியும். தீர்வு காணப்படுவது மாத்திரமல்லாமல் தொடர்ந்து அமைதியைப் பேணத்தக்க நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். நாட்டில் அமைதிநிலை நிலவும்போது தற்போது படைகளிலுள்ளோரை விட குறைந்த எண்ணிக்கை உடையோரே பாதுகாப்புப் படைகளுக்குத் தேவைப்படுவர். எனவே மிகையாகக் காணப்படும் படையினருக்கு அவரவர் கல்விநிலமைக்கேற்ப அரசாங்கத்தின் ஏனைய துறைகளுள் வேலைவாய்ப்பினை வழங்கலாம். இவ்வகையில் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் பாதுகாப்புச் செலவினைக் குறைக்கலாம். அமைதி நிலவுகின்றபோது குழப்ப காலத்தில் படையினருக்கு வழங்கி வந்த விசேட வசதிகள், சலுகைகளை குறைப்பதன் மூலமும் இராணுவத் துறையில் பயன்படுத்தப்பட்டு வந்த சில வாகனங்களை ஏனைய துறைகளுக்கு வழங்குவதன் மூலமும் பாதுகாப்புச் செலவில் குறைப்பினை ஏற்படுத்தலாம். எனவே நாட்டில் அமைதியைக் கொண்டு வருவது மிகமிக அவசியமானதாகும். இது பாதுகாப்புச் செலவினைக் குறைப்பது மாத்திரமல்லாமல் நாட்டுமக்களுக்கு மனநிம்மதியையும் எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

(இந்திய — இலங்கை உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னர் எழுதப்பட்ட கட்டுரை.)

அடிக்குறிப்புகளாக வரவேண்டியவை

1. Ram. N, "Effects of Ethnic Conflict" Intevirew with Ronnie de Mel, **Lanka Guardian**, Vol. 9; No. 21 March 1987.p.13.
2. Government of Sri - Lanka, Parliamentary debates (Hansard) Vol. 37, No. 1 13th Nov 1985. p.128.
3. Ibid. p. 128.
4. Vyuyan Tenorio, "Sri Lanka doubt military can end war" **Lanka Guardian**, Vol. 9, No 15 Dec 1986 p. 11.
5. Ibid. p. 11.
6. Commodities Division of the IMF's Research Deaprtment "The sharp fall in Commodity Prices 1984 - 1986", **Finance and Development** Vol 23,No 4, December 1986 p. 45.
7. Ram. N, "Effects of ethnic conflict" Interview with Ronie de mel, **Lanka Guardian**, Vol. 9, No 21 March 1987 p. 13.
8. Government of Sri Lanka, Parliamentary debates (Hansard) Vol 37, No 1 13th Nov 1985 p. 130.
9. Lee Ann Ross and Tilak Samaranayake, "Ethnic disturbances and The Budget" **Economic Review** Vol. 12 No 5, p. 20
10. சமநாடு 11. 5. 87, p. 6.
11. Lee Ann Ross and Tilak Samaranayake, "Ethnic disturbances and The Budget" **Economic Review** Vol. 12 No 5, p. 21
12. உதயன் 11. 5. 87. P. 4

அருவச்சொத்தும் கற்பனைச்சொத்தும்

அருவச் சொத்துக்களை பார்க்கவோ அல்லது தொட்டுணரவோ முடியாது. அதாவது உருவமற்றது. ஆனால் அவற்றிற்குப் பெறுமதி உண்டு. உதாரணம்: நன்மதிப்பு, ஆக்கவுரிமை, பதிப்புரிமை.

கற்பனைச் சொத்துக்கு உருவமும் இல்லை என்பதுடன் பெறுமதியும் இல்லை. ஆகவே இச் சொத்துகளுக்கு எக்காலத்திலும் பெறுமதி இருந்ததில்லை. உ+ம் : இலாப நட்டக்கணக்கு வரவு மீதி
பங்குக் கழிவு
ஆரம்பச் செலவு

ஆணையுரிமைக் கையளிப்பும், பரவலாக்கலும் மையப்படுத்தலும்

க. ஜெயரட்ணம்
M. Com., MAAT, Dip. in BFA.
உபஅதிபர், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி
பகுதிநேர விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்

முகாமையியலில் ஒழுங்கமைப்பில் கையளிப்பு என்பது முக்கிய பங்கினை வகிக்கின்றது. கையளிப்பின் மூலம் முகாமையாளர்கள் தங்களது வேலையின் ஒரு பகுதியினையும் பொறுப்பினையும் (Operating respons) கீழ் பணியாளர்கட்கு மாற்றிக் கொடுக்கின்றனர். இக்கையளிப்பின் மூலம் நிறுவனத்தின் வேலை, (Duties) ஆணையுரிமை, (Authority) பொறுப்பு, (Response) ஆகியன பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

ஒரு நிறுவனத்தில் மேலாளர் செய்ய வேண்டிய வேலையின் அளவு அதிகமாக இருக்கும்போதும், ஒருவரின் திறமையின் அளவினை விட வேலை அதிகமாக இருக்கும் போதும், (கீழ்ப் பணியாளர்கட்கு நிறுவனத்தின் வேலையினைக்கொண்டு நடத்துவதற்கு அதிகாரத்தினைப் பகிர்ந்து கையளிக்க வேண்டி உள்ளது.) அத்தோடு அவர்களிடமிருந்து பொறுப்பினையும் (Obligation) எதிர்பார்க்கப்படல் வேண்டும். தனியாள் உரிமை நிறுவனத்தில் (அவனே மட்டும் உள்ளதால் எல்லா வேலைகளும் உரிமையாளனால் செய்யப்படுகின்றது.) ஆனால் வேறு பலரையும் அவன் சேர்த்துக் கொள்ளும்போது கையளித்தல் அவசியமாகின்றது. "தனிமனிதனால் செய்யப்படும் பணிப்பளுவை விட அதிகமான அளவிற்குப் பணிப்பளு ஒரு நிறுவனத்தில் இருக்குமேயானால் உரிமை ஒப்படைப்பு (ஆணையுரிமைக் கையளிப்பு) இன்றி எப்பணியையும் செய்யஇயலாது என்ற நிலை ஏற்படுகின்றது." ஒரு செயலாட்சித் தலைவர் தாம் செய்ய வேண்டிய பணியை தம் கீழ் பணியாற்றும் பணியாளர்களிடம் செய்யுமாறு பணித்தலே உரிமை ஒப்படைப்பு ஆகும்.

உரிமை ஒப்படைப்பின் கூறுகள்:-

1) மேற்பார்வையாளர்கட்குப் பணிகளை ஒதுக்கிக் கொடுத்தல். (Allocation of duties)
2) ஆணையுரிமையை வழங்குதல். (Delegation of authority)
3) பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துதல். (Creation of responsibility)

1. பணிகளை ஒதுக்கிக் கொடுத்தல்

ஒரு முகாமையாளரின் திறமைக்கு மேற்பட உள்ள வேலையே கீழ் பணியாளர்கட்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் வேலைகளின் முக்கியமான பகுதிகளைத் தானே வைத்துக்கொண்டு முக்கியம் இல்லை எனத் தான் கருதுபவற்றைக் கீழ்ப் பணியாளர்களிடம் பொறுப்பித்தலாகும்.

2. ஆணையுரிமையைக் கையளித்தல் (Delegation of authority)

உரிமை ஒப்படைக்கப் பெற்ற கீழ்ப் பணியாளர் தமது பணியினைச் சரிவரச் செய்ய வேண்டுமானால், தமக்குக் கீழ் பணி புரியும் பணியாளர்களைக் கட்டுப்படுத்தும் உரிமையினை அவர்கள் பெற்றிருத்தல் அவசியமாகும். உதாரணமாக ஒரு பொதுமுகாமையாளர் தனது அலுவலக முகாமையாளருக்கு வேலையைப் பகிர்ந்து கொடுக்கும் போது வசதிகளைப் பெற்றுக் கொள்ளவும், கருவிகளைப் பெற்றுக் கொள்ளவும், பணியாளரை நியமனம் செய்யவும் பயிற்றுவிக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான அதிகாரத்தினை அவர் அலுவலக முகாமையாளருக்குக் கொடுக்கின்றார். அதிகாரத்தினைக் கையளிக்கின்றார் என்றால் முழு அதிகாரத்தினையும் கொடுத்து விடுகின்றார் என்பதில்லை. இறுதி அதிகாரம் அவரிடமே உள்ளது.

3) பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்

உரிமை ஒப்படைப்பு ஒருவழிப்பாதையன்று. உரிமை ஒப்படைப்பும், பொறுப்புணர்ச்சியும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. பொறுப்புணர்ச்சி என்பது அதிகாரம் பெற்ற கீழ்ப்பணியாளர் தனது கடமைகளைச் சரியானபடி செய்யும் பொறுப்பாகும். (Responsibility)

உரிமை ஒப்படைப்பின் நன்மைகள்

1) கீழ்ப்பணியாளர்களின் திறமைகளை முழு அளவில் முகாமையாளர் பயன்படுத்திக் கொள்வதற்கு உதவுகிறது.
2) முகாமையாளர்களின் பளுவினைக் குறைக்கின்றது.
3) பணியாளை ஊக்குவித்து அதிக உற்பத்திக்கு இது தூண்டுகோலாக அமைந்துள்ளது.
4) கீழ்ப்பணியாளர்களின் திறமையினை ஊக்குவித்து மேல்நிலைப்பொறுப்புகளை ஏற்க உதவுகின்றது.
5) நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுகின்றது.
6) பரவலாக்கலுக்கு உதவுகின்றது.

ஆணையுரிமை (Authority)

இந்த ஆணை உரிமை பண்டைக் காலம் தொட்டே இருந்து வருகின்றது. மனிதவர்க்க நடைமுறையிலிருந்து இதனை இல்லாமல் செய்வதென்பது மிகவும் கடினமான, முடியாத செயலாகும். ஆணைஉரிமை சமூகத்தில் கட்டுப்பாட்டினை (ஒழுங்கினை) பராமரித்து சமூகத்தினைக் குழப்பத்திலிருந்தும், பாழடைதலில் இருந்தும் பாதுகாக்கின்றது. இதுதான் சமூக ஒழுங்கமைப்பு. பொருளாதார அரசியல் வாழ்வின் இணைக்கும் சக்தியாகக், தொண்டு செல்லும் சக்தியாகச் செயற்படுகின்றது. இது ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் ஆட்களின் பணிகளை ஒருங்கிணைத்து அவர்களின் செயல்களுக்கு ஒருமித்த நோக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

முகாமை அதிகாரம் என்பது ஒரு முகாமையாளர் தன் கீழ் பணிபுரிபவர்களின் நடத்தைகளைத் தீர்மானிக்கும் உரிமையாகும். கென்றி பெயோலின் கருத்துப்படி அதிகாரம் என்பது ''கட்டளைகள் கொடுக்கும் உரிமையினையும் கீழ்ப்படிவினைப் பெறும் சக்தியினையும் குறிக்கின்றது.''

அதிகாரம் (Authority) என்னும் பதம் பின் வருவனற்றைக் குறிக்கும்.

1) தீர்மானங்களை எடுக்கும் உரிமை.
2) கட்டளைகளை வழங்கும் உரிமை.
3) கீழ்ப்பணியாளர்கள் கட்டளைகளுக்கு அமைவாக நடக்கவைக்கும் உரிமை.
4) வளங்களைப் பயன்படுத்தும் உரிமை.

ஒருவர் முகாமை அதிகாரத்தினை ஒரு நிறுவனத்தில் தான் வகிக்கும் பதவியின் அடிப்படையிலேயே பெறுகின்றார். முகாமை அதிகாரம் ஒப்படைந்த அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகும். நிறுவனம் சில இலக்குகளை அல்லது குறிக்கோள்களை அடையும் படி முகாமையாளரை எதிர்பார்க்கின்றது. அவ்வாறு அவற்றை நிறைவேற்றும் பொருட்டு அவருக்கு வளங்களைப் பயன்படுத்தும் உரிமையினையும், முடிவுகளை எடுக்கும் உரிமையினையும், முடிவுகளை நிறைவேற்றும் பொருட்டு கீழ்ப்பணியாளர்களை வழிநடத்தி மேற்பார்வை செய்யும் உரிமையினையும் கொடுக்கின்றது.

நிறுவனத்தின் ஒவ்வொரு முகாமையாளருக்கும் அதிகாரம் தேவைப்படுகின்றது. அவ்வாறு அந்த ஆணை உரிமை இல்லையாயின் கீழ்ப்பணியாளர்களைக் கட்டளைகட்டுப்பணியவைக்க முடியாது. அவர்களிடம் வேலை வாங்குவது கடினமாகும். ஆணை உரிமை இல்லையாகில் நிறுவனத்தில் குழப்பம் ஏற்படும். முகாமை ஆணையுரிமையை எல்லாச்சந்தர்ப்பத்திலும் முற்றுகப் பாவிக்க வேண்டியதில்லை. முடிந்தமட்டில் அதிகாரத்தினை அல்லது ஆணையுரிமையைப் பயன்படுத்தாமலே வேலைகளை கீழ்ப்பணியாளர்களிடமிருந்து பெறுவது சிறந்ததாகும். ஆனால் சந்தர்ப்பம் ஏற்படும்போது அதிகாரத்தினைப் பயன்படுத்தி வேலை வாங்கத் தவறக்கூடாது. ஆனால் தவறானமுறையில் அதிகாரம் பயன்படுத்தப்படுமாகில் பணியாளர்களின் எதிர்ப்பு ஏற்பட வாய்ப்பாகும்.

கீழ்ப்பணியாளர் ஒருவர் பின்வரும் காரணங்களால் அதிகாரத்தினை ஏற்றுக்கொள்கிறார்.

1) நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கத்தினையும் அடையும் பொருட்டு.
2) பலாபலன்களைப் பெறும்பொருட்டு (சம்பளம், பதவி உயர்வு, மதிப்பு, நிலைப்பாடு முதலியன).
3) தனது முதுமை அனுபவம், திறமை ஆகியவற்றால்,
4) பொறுப்பினைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு,
5) பதவியை இழந்துவிடுவோம், அல்லது ஊதியத்தை இழந்துவிடுவோம் என்ற காரணத்தால்,

பொறுப்பு (Responsibility)

பொறுப்பு என்பது கீழ்ப்பணியாளர் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையினைச் சரிவரச் செய்து முடிப்பதாகும். பொறுப்பில் உள்ள முக்கிய அம்சங்கள்.

1) இது மேல்நிலை, கீழ்நிலை பணியாளர்களின் தொடர்பின் விளைவாகும்.
2) இப் பொறுப்புத் தொடர்ந்து இருக்கக் கூடியது. அல்லது ஒரு குறிப்பிட்ட பணி முடிந்தவுடன் முடிவடைகின்றது.
3) இது குறிப்பிடப்பட்டதாகும். அல்லது பொதுவானதாகும்.
4) அதிகாரத்திற்கும் பொறுப்பிற்குமிடையில் சமத்துவம் இருத்தல் வேண்டும்.

கணக்கீட்டுப் பொறுப்பு (Accountability)

கணக்கீட்டுப் பொறுப்பு என்பது கீழ்ப் பணியாளர் மேல் உள்ளவருக்குக் கையளிக்கப்பட்ட அதிகாரம் சம்பந்தமாகவும் அவ

ருக்குக் கொடுக்கப்பட்ட வேலை சம்பந்தமாகவும் அறிக்கை சமர்ப்பித்துக் கவனத்திற்குக் கொண்டு வரும் பொறுப்பாகும். யாருக்கு அதிகாரமும் பொறுப்பும் கொடுக்கப்பட்டதோ அவரின் வேலையையும், அதன் முன்னேற்றத்தையும் மேலதிகாரி பரிசீலனை செய்து சரிபிழை கண்டு கொள்வார் என்பதனைக் கீழ்ப்பணியாளர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கணக்கீட்டுப் பொறுப்பில் பின்வரும் விடயங்கள் அடங்கி உள்ளன.

1) மேல்பணியாளர் கீழ்ப்பணியாளர் தொடர்பே கணக்கீட்டுப் பொறுப்பின் அடிப்படையாகும்.
2) அதிகாரப் பயன்படுத்தலுக்கும், செயற்பாட்டிற்கும் கீழ்ப்பணியாளர்களைக் கணக்கிட்டுப் பொறுப்பாக்குவதன்மூலம் நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாட்டை ஏற்படுத்தலாம்.
3) கணக்கீட்டுப் பொறுப்பு நிறுவனத்தில் ஒழுங்கினை ஏற்படுத்திப் பிளவு படுவதைத் தடுக்கின்றது.
4) கணக்கீட்டுப் பொறுப்பு சொந்தமானது அதனை வேறு ஒருவருக்குக் கையளிக்க முடியாது.
5) கணக்கீட்டுப் பொறுப்பு எப்போதும் கீழ் இருந்து மேலே உள்ளதாகும்.
6) வெற்றிகரமாக செயற்படக் கொடுக்கப்பட்ட கடமை ஓர் மேல் பணியாளருக்கு மட்டுமே பொறுப்பாக்கப்படல் வேண்டும்.

மையப்படுத்தலும் பரவலாக்கலும்.

ஒரு நிறுவனத்தின் தலைவரிடமே நிறுவனத்துக்கு உரிய ஆணை உரிமை மற்றவர்களுக்கு பகிர்ந்து கையளிக்காமல் இருக்குமேயானால் அந்த நிறுவனம் மையப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தலைவர் தனது அதிகாரத்தினைத் (ஆணையுரிமையினை) தனது கீழ்ப்பணியாளருக்குப் பகிர்ந்து கொடுத்திருப்பின் அந் நிறுவனத்தில் பரவலாக்கல் கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது என்பதாகும். தலைவர் தனது வேலையைப் பகிர்ந்து கொடுத்து விட்டு ஆணையத் தானே வைத்துக்கொள்வாரேயாகிலும் அந்நிறுவனம் மையப்படுத்தப்பட்டுள்ளது என்பதே பொருள். ஆகவே ஒரு நிறுவனத்தின் தலைவர் அல்லது மேல் நிலையில் உள்ளவரிடமே அதிகாரங்கள் அல்லது உரிமைகள் குவிந்து கிடக்கும் நிலைக்கு மையப்படுத்துதல் என்றும் அவ்வாறு இல்லாமல் அதிகாரங்கள் பல்வேறு பணியாளர் கட்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்குமாயின் அது பரவலாக்கல் எனவும் கூறப்படும்.

மையப்படுத்தல்

ஒரு நிறுவனத்தின் உயர் நிலையிலுள்ள ஒரு சிலருக்கே நிறுவனம் சம்பந்தமான தீர்மானம் எடுக்கும் உரிமை இருக்குமானாலும், அதிகாரங்களும் அவர்களிடமேயிருக்குமானாலும் அந்நிறுவனம் மையப்படுத்துதல் கொள்கையினைப் பின்பற்றுகின்றது என்பதாகும். மையப்படுத்துதல் என்பதில் ஒருவரிடமே தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளது என்பதல்ல. அவ்வாறான நிலை தனிமனிதனின் வியாபாரத்தில்தான் அமைந்துள்ளது. ஆனால் ஒரு நிறுவனம் வளர்ந்து வரும்போது அதனை வேறு சிலருக்கும் கண்டிப்பாகக் கையளித்தல் வேண்டும். ஆகவே மையப்படுத்துதலில் அநேகமான தீர்மானம் எடுக்கும் அதிகாரங்கள் உயர்நிலையில் உள்ள முகாமையாளர்களிடமே உள்ளது.

மையப்படுத்துதலின் நன்மைகள்

1) இதில் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதில் ஒற்றுமை உள்ளது,
2) தீர்மானம் எடுத்தலிலும் செயற்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஒற்றுமைக்கு இடமுண்டு.

3) நிறுவனத்தின் முயற்சிகளிலும் வளங்களைப்பயன்படுத்துவதிலும் ஒருங்கிணைப்பு உள்ளது.

4) வளங்கள், கருவிகள், ஆட்கள் இரட்டிப்பால் ஏற்படும் செலவுகளைத் தவிர்த்துச் சிக்கனப்படுத்த முடியும். ஆகவே இதனால் ஒரு நிறுவனத்தின் நிர்வாகச்செலவு குறைவடைகின்றது.

5) நிறுவனம் திறமைவாய்ந்த ஆற்றலுடைய ஆட்களின் சேவையைப் பயன்படுத்த முடியும்.

6) முகாமையின் மேல்நிலையிலுள்ளவர்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளில் நேரடிக் கட்டுப்பாட்டினைச் செலுத்தமுடியும்

7) கொள்வனவுப் பகுதி, நிதி, ஆட்கள் போன்றவைக்கும் பரவலாக்கல் செய்வதனால் பயன் ஏதும் இல்லை. இவ்வாறான கருமங்களுக்கு அதிகாரத்தை மையப்படுத்துவதனால் திறமையும் உற்பத்தியும் அதிகரிக்கும்.

மையப்படுத்தலின் குறைபாடுகள்

1) சிறியவகையிலான நிறுவனங்களில்தான் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினை மையப்படுத்தல் சாத்தியமாகும். வளர்ந்து வரும் பெரிய அமைப்புகளில் ஒரு சிலரிடமே தீர்மானம் எடுக்கும் உரிமை இருப்பது அந்நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். உயர் நிலையில் உள்ளவர்களின் வேலைகள் சாதாரண வழமையான விடயங்களால் தடைப்படும். முக்கியமான யுக்தியான விடயங்களில் அவர்கள் ஈடுபடுவது கடினமாகும்.

2) மையப்படுத்தப்பட்ட அமைப்புக்களில் கீழ் நிலையில் உள்ள பணியாளர்கள் தங்கள் உயர் தேவைகளைத் திருப்தி செய்ய முடியாது. ஆகவே அவர்கள் நிறுவன இலக்குகளை அடைவதில் ஆர்வத்தோடு செயற் படமாட்டார்கள்.

3) மையப்படுத்தலால் தீர்மானங்கள் எடுப்பதில் காலதாமதம் ஏற்படும். மேலும் தொடர்பு முறையிலும் (Communication) செயற்பாடுகளிலும் தாமதத்தினை ஏற்படுத்தும்.

4) மையப்படுத்துதல் பின்னைய முகாமையாளர்களின் வளர்ச்சியினைத் தடைப்படுத்தும்.

5) மேல் நிலையில் உள்ள முகாமையாளர்கள் வேலை, உண்மையில் நடைபெறும் இடத்தில் பெரும்பாலமையான சந்தர்ப்பங்களில் நேரடியாகச் சமூகம் கொடுப்பதில்லை. ஆகவே நாளாந்தம் நடைபெறுபவைகளில் அவர்களின் தொடர்பு குறைவானதாகும். ஆகவே அவர்களால் அவ்வேலைகள் சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கமுடியாது போகும்.

6) மேல் நிலையில் உள்ள முகாமையாளர்கள் நாளாந்தம் மீண்டும் மீண்டும் நடைபெறும் வேலைகளால் அதிகமான பளுவினைக் கொண்டுள்ளனர்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிறுவனம் மையப்படுத்தப்படுகின்றது.

1) வியாபார நிறுவனத்தின் அளவு சிறிதாக இருக்கும்போது.

2) வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் ஒரே இடத்தில் அமைந்திருக்கும்போது.

3) மேல் நிலையில் உள்ள முகாமையாளர்கள் நான் என்ற உணர்வு அதிகம் உள்ளவர்களாகவும், அதிகாரவிருப்பம் அதிகம் உள்ளவர்களாகவும் இருக்கும் போதும், நிறுவனத்தில் சகல நடவடிக்கைகளிலும் நேரடியான கட்டுப்பாட்டை விரும்பும்போதும்.

4) மனித நடத்தையைப் பொறுத்த மட்டில் 'மக்ரேகர்' என்பவர் குறிப்பிட்ட × தற்புனைவுகளைக் கொண்டவர்கள் எனப் பணியாளர்களைக் கருத்திற் கொண்டு மேலிருந்து வழி நடத்தலை

யும் கட்டுப்பாட்டினையும் வலியுறுத்தும் போதும்.

5) நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் கீழ் நிலையில் உள்ள தேவைகளைத் திருப்தி செய்வதிலேயே ஈடுபாடு கொண்டுள்ளார்கள். அவர்கள் நிறுவனத்தைப் பரவலாக்கல் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தாவிடின்.

6) சூழலும் – தொழில்நுட்பமும் மாற்றமில்லாது நிலையாக இருப்பின்.

7) அவசரகால நிலைமைகளை முகாமையாளர்கள் கையாள வேண்டியிருப்பின்.

8) நிறுவனம் தகவல்களை விரைவாகப் பெறும் வழிகள் இருப்பின்.

பரவலாக்கல்

பரவலாக்கல் என்பது சிலர் கருதுவது போல வேலையைக் கையளிப்பதல்ல. எந்த முகாமையாளரும் வேலையைக் கையளித்துப் பகிர்ந்துதான் செய்ய வேண்டும். பரவலாக்கத்துக்கு இட்டுச் செல்வது வேலைச் செயற்பாடு அல்ல. பௌதிக ரீதியில் செயற்பாடுகள் பரவலாக்கப்படுவது உண்மையில் பரவலாக்கம் ஆகாது. பரந்த அளவில் பணியாளர்களும், வசதிகளும் ஆங்காங்கு பரந்திருந்தாலும் சில சமயங்களில் அமைப்பு உயர்ந்த அளவு மையப்படுத்தப்பட்டு இருக்கும். எனினும் பணியாளர்களும் வசதிகளும் ஒரே இடத்தில் அமைந்திருந்து செயற்பட்ட போதும் இந்நிறுவனம் மிகவும் பரவலாக்கம் உடைய அமைப்பாக இருக்கும். அங்கு பணியாளர்களும் பௌதிக ரீதியிலான வசதிகளும் ஒரே கட்டிடத்தினுள் அமைந்திருக்கும். ஆகவே பல இடங்களில் நிறுவனத்தில் செயற்பாடுகள் இருந்தால் அங்கு பரவலாக்கல் உண்டு என்றும் ஒரே இடத்தில் நிறுவனம் செயற்பட்டால் அங்கு மையப்படுத்தப்பட்ட அமைப்பு முறை என்றும் தவறுதலாக் கருதக் கூடாது. ஆகவே மையப்படுத்தப்பட்ட அமைப்பு முறையா? அல்லது பரவலாக்கப்பட்ட அமைப்பு முறையா? என்பதனை முடிவு செய்வது தீர்மானம் எடுக்கும் உரிமையாளரிடம் உள்ளது என்ற காரணியாகும். தீர்மானம் எடுக்கும் உரிமை பரந்து பலரிடம் பல இடங்களில் இருக்குமானால் அங்கு பரவலாக்கல் அமைப்பு முறை உள்ளது என்பதாகும். அவ்வாறில்லாமல் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உயர்நிலையில் உள்ள ஒரு சிலரிடம் மட்டும் இருக்குமானால் அங்கு மையப்படுத்தப்பட்ட அமைப்பு முறை செயற்படுகின்றது என்பதாகும்.

பின்வரும் நடைமுறையுள்ள நிறுவனங்களில் பரவலாக்கல் அமைப்பு முறை செயற்படுகின்றது.

1) நிறுவனத்தின் கீழ் நிலைகளிலும் தீர்மானங்கள் எடுக்கப்படுதல்.

2) இயந்திரங்கள், பொறிகள் முதலியவற்றைக் கொள்வனவு செய்தல், கட்டிடங்களை அமைத்தல். ஆகியவை போன்ற தீர்மானங்கள் கீழ் நிலையில் எடுக்கப்படுமாகில்.

3) முக்கிய தீர்மானங்கள் சகல கருமங்களிலும் கீழ் நிலையில் எடுக்கப்படுமாகில்.

பரவலாக்கலின் நன்மைகள்

1) உயர் நிலையில் உள்ள முகாமையாளர்களின் வேலைப்பளு குறைவடைவதால் அவர்கள் வியாபாரத்தின் முக்கிய பிரச்சனைகளில் கவனம் செலுத்த முடியும்.

2) கருமரீதியில், உற்பத்திப் பொருள் ரீதியில், அல்லது எல்லை ரீதியில் செயற்படும் நிறுவனங்களின் முகாமையாளர்களுக்கு அதிக அதிகாரங்களும், சுதந்திரமும் இருப்பதால் அவர்கள் தங்களுடைய நிறுவனங்கள் போல் கருதித் திறமையாகச் செயற்படுவார்கள்.

3) பரவலாக்கல் அமைப்பு முறையில் அவ்வவ் இடத்தின் சூழலிற்கு ஏற்ற முறையில் தீர்மானங்களை எடுக்க முடியும்.

4) தகவல்கள் பரிமாற்றலில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்கும்.

5) முகாமையாளர் (அதிகாரம்) ஆணையுறுமை உள்ளவராகையால் கீழ்பணியாளர்களின் வேலைகளைச் சிறந்த முறையில் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்த முடியும்.

6) பரவாக்கல் முறை முகாமையாளர்களைப் பயிற்றுவிப்பதற்குச் சிறந்த காரணியாகும். பரவலாக்கலில் பலருக்குத் தீர்மானம் எடுத்தலில் பங்கு பற்ற முடிகின்றது. அதனால் நிறுவனப் பொறுப்புகளில் பங்கேற்கின்றனர்.

7) இது மனித தேவைகளான அதிகாரம் மதிப்பு, நிறுவனத்தின் நிலைப்பாடு (Status) ஆகியவற்றைத்திருப்தி செய்கின்றது. ஆதலால் இது முகாமையாளர்களின் மனவுறுதியை உயர்த்துவதோடு திறமையினை அதிகரிக்கச்செய்து அதிக உற்பத்திக்கு வழி வகுக்கிறது.

8) நிறுவனம் முழுவதையும் தொடர்புள்ள சிறு வேலைக் குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களுக்கு ஆணையுரிமையும், வேலைச் செயற்பாட்டில் சுதந்திரமும் கொடுக்கப்படுவதால் பரவலாக்கல் மனித ஒத்துழைப்பிற்கு உதவுகின்றது.

பரவலாக்கலின் குறைபாடுகள்

1) பரவலாக்கல் ஒருங்கிணைப்பு பிரச்சனையை ஏற்படுத்துகின்றது.

2) அதிக திறமை பெற்றவர்களின் சேவைகளைப் பயன்படுத்துவதால் தடையை ஏற்படுத்துகின்றது. அவ்வாறான திறமையுள்ளவர்களைச் சகல பிரிவுகளுக்கும் பெறுவது கடினமாகும். அவ்வாறானவர்கள் கிடைப்பது குறைவாகும்.

3) இது அமைப்பு முறையை விரிவுபடுத்துகின்றது. இதனால் அதிக சம்பளம் பெறும் பலரை நியமிக்க வேண்டி உள்ளது. இவர்களின் சேவைகளை முற்றுகப் பயன்படுத்த முடியாமல் போகும்.

4) பரவலாக்கலில் வளங்கள் கருவிகள் முயற்சிகள் ஆகியன வீணாக இரட்டிப்புச் செய்யப்படுகின்றன.

மூலதனச் செலவும் வருமானச் செலவும்

நிலையானசொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்படும் செலவுகள் அனைத்தும் மூலதனச் செலவுகளாகும். மூலதனச் செலவால் ஒன்றுக்கு மேற்பட்ட வருடத்திற்கு பயன்பெறக்கூடியதாக இருக்கும்.

உ+ம்: நிலம், கட்டிடம், தளபாடம் ஆகியவற்றை கொள்வனவுசெய்தல்

வருமானச் செலவு என்பது வருமானத்தை உச்சப்படுத்துவதற்காகச் செலவிடப்படும் செலவுகளாகும். இது ஒருவருட பயன்பாட்டை மாத்திரமே கொண்டது.

உ+ம்: சம்பளம், மின்சாரம், விற்பனை விநியோகம், நிர்வாகம் ஆகிய செலவுகளை உள்ளடக்கியது.

With the Best Wishes from

EVERVISION

21A, Clock Tower Road,
JAFFNA

VIDEO FILIMING OUT DOOR STILL PHOTOGRAPHY
REPAIRS & SALES OF ALL ELECTRONIC EQUIPMENTS

எவர்விஷன்

வீடியோ படப்பிடிப்பு, வெளிப்புற கலர் நிழற்படப்பிடிப்பு மற்றும்
எலக்ரோனிக் சாதனங்கள் பழுதுபார்த்தலும் விற்பனையும்

With Best Wishes from

HAVURY FORAGE STORES

5, MODERN MARKET
HOSPITAL ROAD,
JAFFNA

WITH BEST COMPLIMENTS FROM

Thirusenthuran Trading Company

163, (315) K. K. S. ROAD,
JAFFNA.

கம்பனிகளின் வரிவிதிப்பு

TAXATION OF COMPANIES

சு. தெட்சணமூர்த்தி B. A. (Ecnn.)
இளைப்பாறிய வரிமதிப்பாளர்
(உள்நாட்டு இறைவரித்திணைக்களம்)
பதிவுபெற்ற கணக்காய்வாளர், அங்கீகரிக்கப்பட்ட
கணக்காளர் (உள்நாட்டு இறைவரி)
அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி
(உள்நாட்டு இறைவரி)
பகுதிநேர விரிவுரையாளர், வரிமதிப்பு
யாழ் பல்கலைக்கழகம்
பகுதி விரிவுரையாளர், வரிமதிப்பு
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

வதிவுள்ள கம்பனி
Resident Company

கம்பனியொன்று அதன் பதிவு செய்யப் பட்ட அல்லது பிரதான அலுவலகத்தை இலங்கையில் வைத்திருக்குமிடத்து அல்லது அதன் தொழிலினது கட்டுப்பாடும் முகாமை யும் இலங்கையிலிருந்து புரியப்படுமிடத்து அத்தகைய கம்பனி இலங்கையில் வதிவுள்ள கம்பனியாகக் கருதப்படும்.

மொத்த நியதிச் சட்ட வருமானம்
Total Statutory Income

கம்பனியொன்றின் வியாபார வருமா னத்தை நிச்சயிக்கும்போது வருமானத்தை உற்பத்தி செய்வதில் ஏற்படும் செலவுகளும், இறைவரிச் சட்டத்தில் விசேடமாக அனு மதிக்கப்பட்டிருக்கும் வேறு கழிவுகளும் கழிக் கப்பட வேண்டும். அத்துடன் இறைவரிச் சட்டத்தில் கழிப்பதற்கு அனுமதி மறுக்கப் பட்டிருக்கும் செலவுகளும் கருத்தில் எடுத் துக் கொள்ளப்படவேண்டும்.

கம்பனி விடயத்தில் கம்பனிகளின் உரு வாக்கத்தை ஊக்குவித்தற்பொருட்டு கம் பனியொன்றின் உருவாக்கச் செலவு முழு வதும் முதல் வருடத்திலேயே செலவாகக் கழிப்பதற்கு இறைவரிச் சட்டம் வகை செய் கின்றது.

இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்க மைய ஒவ்வொரு வருமான மூலத்திலிருந் தும் பெறப்படும் வருமானத்தை கணிக்க வருவது அவ் வருமான மூலத்தின் நியதிச் சட்ட வருமானமாகும். சகல வருமான மூலத்திலிருந்தும் பெறும் நியதிச்சட்ட வரு மானத்தை ஒன்றாகக் கூட்ட வருவது மொத்த நியதிச்சட்ட வருமானமாகும்.

வரி மதி வருமானம்
Assessable Income

கம்பனியின் மொத்த நியதிச் சட்டத்திலிருந்து அனுமதிக்கக் கூடிய நட்டங்களையும் கொடுப்பனவுகளையும் கழிக்க வருவது வரி மதி வருமானமாகும். கம்பனியொன்றின் வரி மதி வருமானத்தில் அக் கம்பனி பிற கம்பனிகளிடமிருந்து பெறும் பங்கு இலாபங்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

வரி விதி வருமானம்
Taxable Income

கம்பனியொன்றின் குறிப்பிட்ட வரி மதிப்பாண்டுக்குரிய வரிமதி வருமானத்திலிருந்து தகமை பெறும் கொடுப்பனவுகளைக் கழிக்க வருவது அவ்வரி மதிப்பாண்டுக்குரிய வரி விதி வருமானமாகும்.

தகைமை பெறும் கொடுப்பனவுகள்
Qualifying Payments

உச்ச வரம்புக்கு உட்பட்டவை, உச்ச வரம்பு இல்லாதவை என தகைமைக் கொடுப்பனவுகளை இரு வகையாகப் பிரிக்கலாம்.

உச்ச வரம்புக்கு உட்படும் தகைமைக் கொடுப்பனவுகள்.

(1) அங்கீகரிக்கப்பட்ட தருமங்களுக்கு பணமாக கொடுக்கப்பட்ட நன்கொடைகள்.

(2) அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளில் ஏற்கனவே இல்லாத பங்குகளைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்பட்ட தொகை.

(3) இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம், இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம், இவைபோன்ற வேறு குறிப்பிட்ட நிறுவனங்கள் முதலியவற்றிற்கு பணமாகக் கொடுக்கப்பட்ட நன்கொடை.

(4) கம்பனியொன்றின் வருமானத்தை நிச்சயிக்கும்போது விடுதொகைகள் கழிக்கப்படக்கூடியதாக இல்லாதனவும், ஊழியர் வதிவிடமாகப் பாவிப்பதற்குமான இரண்டாயிரம் சதுர அடிதளப் பரப்புக்கு மேற்படாததுமான வீடு அல்லது தொடர்மாடி அல்லது கூறு ஒன்றை நிர்மாணிப்பதில் அல்லது கூட்டாட்சி ஆதனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்வதில் செலவுசெய்த தொகை.

உச்ச வரம்புக்கு உட்படும் தகைமை பெறும் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை குறிப்பிட்ட வரிமதிப்பாண்டின் வரிமதி வருமானத்தின் மூன்றில் ஒரு பகுதி தொகைக்கு மேற்படாதவிடத்து தகைமைக் கொடுப்பனவுகள் முழுவதும் வரிமதி வருமானத்திலிருந்து கழிக்கப்படும். அப்படியல்லாது தகைமைக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை வரிமதி வருமானத்தின் மூன்றிலொரு பகுதிக்கு மேற்படின், தகைமைக் கொடுப்பனவுகள் தொடர்பில் கழிக்கக்கூடிய தொகை வரி மதி வருமானத்தின் மூன்றிலொரு பகுதி தொகை அளவிற்கு மட்டுப்படுத்தப்படும்.

உச்ச வரம்பு இல்லாத தகைமைபெறும் கொடுப்பனவுகள்.

(1) அரசாங்கம், உள்ளூர் அதிகாரசபை, பல்கலைக் கழகங்கள் அல்லது அரசாங்கம் அல்லது உள்ளூர் அதிகாரசபையால் ஏற்படுத்தப்பட்ட நிதிமுதலியவற்றிற்கு பணமாகவோ அல்லது வேறுவிதத்திலோ செய்யப்பட்ட நன்கொடை.

(2) அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடங்கிய செயற்திட்டமொன்று தொடர்பில் அங்கீகாரம் பெற்ற செலவு செய்த தொகை.

(3) சுற்றுலாப் பயணிகளுக்கு உல்லாச விடுதியகங்களை நடாத்துதல்; தேயிலை, இறப்பர், தெங்கு அல்லது நெல் தவிர்ந்த வேறு எவ்வகையான பயிர்களை முற்றுமுழுதாகப் பயிரிடுதல் ஆதன அபிவிருத்தியில் ஈடுபடுதல் ஆகியவற்றை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ள ரூபா ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மூலதனத்தையுடைய அங்கீகரிக்கப்பட்ட விலை கூறிய பொதுக் கம்பனிகளில் ஏற்கனவே இல்லாத பங்குகளைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்பட்ட தொகை.

(4) றெப்பியா (Repia) விடமிருந்து அல்லது அரசாங்க நிதியிலிருந்து உதவி பெறுது அல்லது கரப்புறுதிப் பத்திரம் தொடர்பாக பணம் பெறுது 1983-ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது பழுதடைந்த அல்லது சேதமடைந்த அசையாச் சொத்துக்களை புனரமைப்பதற்கு செலவுசெய்த தொகை.

உச்ச வரம்பு இல்லாதனவான தகைமைக் கொடுப்பனவுகள் முழுவதும் குறிப்பிட்ட வரிமதிப்பாண்டில் கம்பனியின் வரி மதி வருமானத்திலிருந்து கழிக்கப்படல் வேண்டும். இத்தகைய தகைமைக் கொடுப்பனவுகள் முழுவதையும் கழிக்கக்கூடிய போதிய வரிமதி வருமானம் அவ்வரிமதிப்பாண்டில் இல்லாதுபோனால் அவ்வருடத்தில் கழிக்கமுடியாதுபோன எஞ்சிய தகைமைக்கொடுப்பனவுகளை அடுத்துவரும் வரிமதிப்பாண்டுகளின் வரிமதிவருமானத்திலிருந்து கழிப்பதற்காகக் கீழ்க்கொண்டு செல்லுதல் வேண்டும்.

வதிவுள்ள கம்பனிகள் செலுத்தவேண்டிய வரி Tax payable by a Resident Companies

ஒவ்வொரு வதிவுள்ள கம்பனியும் ஏதேனும் வரிமதிப்பாண்டுக்கு செலுத்துவதற்குப் பொறுப்பாயுள்ள வரியானது

(1) அத்தகைய வரிமதிப்பாண்டில் சிறிய கம்பனி, மக்கள் கம்பனி, விலைகூறப்பட்ட பொதுக்கம்பனி, இவை தவிர்ந்த ஏனைய கம்பனிகள் ஆகியவைகளின் வரிவிதிவருமானத்தில் மேலே காட்டப்பட்ட அத்தகைய கம்பனிகளுக்குரிய வரிவீதங்களில் (வரிவிதி வருமானம் மூலதன இலாபத்தை உள்ளடக்கியிருந்தால் மூலதன இலாபத்திற்கான வரி உரிய முறையில் கணிக்கப்படவேண்டும்) கணிக்கப்பட்ட தொகையாக இருப்பதுடன்

(2) அத்தகைய வரிமதிப்பாண்டு அல்லது வேறு ஏதேனும் வரிமதிப்பாண்டு ஆகியவற்றின் வரிவிதிவருமானத்திலிருந்து அத்தகைய வரிமதிப்பாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு லாபங்களின் கூட்டுத் தொகையில் இருபது சத வீதத்திற்கு சமமான தொகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறிய கம்பனி - Small Company

சிறிய கம்பனி என்பது

i. இலங்கையில் வதிவுள்ளதும்

ii. அதன் வரிவிதித்தற்குரிய வருமானம் எந்த வரிமதிப்பாண்டுக்கு கணிக்கப்படுகின்றதோ அந்த வரிமதிப்பாண்டு முழுவதும் அல்லது கம்பனி குறிப்பிட்ட வரிமதிப்பாண்டிலே தான் கூட்டிணைக்கப்பட்டதாக இருப்பின் ஒருங்கிணைக்கப்பட்ட திகதியிலிருந்து அத்தகைய வரிமதிப்பாண்டின் இறுதிவரையும் வழங்கப்பட்ட மூலதனம் ரூபா ஐந்து இலட்சத்திற்கு மேற்படாததும்

iii. அதன் வழங்கப்பட்ட மூலதனத்தை 1978, நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் குறைக்காததும்; அத்துடன்

iv. ஏற்கனவே உள்ள கம்பனியொன்றை மீளஅமைப்பதன் மூலம் அல்லது ஏற்கனவே உள்ள கம்பனியொன்றின் ஏதேனும் பொறித்தொகுதியை எந்திரத் தொகுதியை, பொருத்திகளை அல்லது கட்டிடத்தைக் கொள்ளுவதன் மூலம் 1978, நவம்பர் 15ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் அமைக்கப்படாததும்,

ஆன ஒரு கம்பனி எனப்பொருளாகும்

மக்கள் கம்பனி – Peoples Company

மக்கள் கம்பனி என்பது இலங்கையில் வதிவுள்ளதும், அதன் தொடர்பாக வரி மதிப்பீட்டாளர் –

(i) அது கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட தனியார் கம்பனி ஒன்றல்ல எனவும்;

(ii) கம்பனியில் பங்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கையானது நூறுக்கு மேற்பட்டதெனவும் பங்கு ஒவ்வொன்றினதும் பெயரளவிலான பெறுமதி பத்து ரூபாவுக்கு மேற்படாததெனவும்;

(iii) கம்பனியால் அல்லது திறந்த சந்தையில் பங்குகள் ஒதுக்கப்படும் போது, எவரேனும் ஆள் கம்பனியின் ஒரு பங்கில் அல்லது ஒன்றுக்கும் அதிகமான பங்குகளில் முதலீடு செய்யலாம் எனவும்

(iv) ஆள் எவரும் தனியாக அல்லது மனைவியுடன் அல்லது பராயமடையாத பிள்ளைகளுடன் சேர்ந்து நேரடியாக அல்லது நியமித்தர்கள் மூலமாக, வழங்கப்பட்ட பங்கு மூலதனங்களில் ஐந்து சதவீதத்திற்கு அதிகமாக வைத்திருக்கவில்லை எனவும்,

(v) ஒவ்வொருவரும் ஒரு பங்கை அல்லது ஒன்றிற்கும் அதிகமான பங்குகளைச் சொந்தமாக வைத்திருக்கும் மூன்று பணிப்பாளர்கள் அல்லது மூன்றிற்கும் அதிகமான பணிப்பாளர்கள் உளர் எனவும்,

(vi) கம்பனிப் பணிப்பாளர்கள் எவரும் வேறு ஏதேனும் மக்கள் கம்பனியின் பணிப்பாளராகப் பதவிவகிக்கவில்லை எனவும்;

(vii) வேறு கம்பனி எதுவும் நேரடியாக அல்லது நியமித்தர்கள் மூலமாக பங்கு எதுவும் வைத்திருக்கவில்லை எனவும்,

திருப்திப்படுகின்றதுமான கம்பனி ஒன்று எனப் பொருளாகும்.

விலை கூறப்பட்ட பொதுக்கம்பனி
Quoted Public Company

விலை கூறப்பட்ட பொதுக் கம்பனி என்பது இலங்கையில் வதிவுள்ளதும் –

(i) கொழும்பு தரகர் கழகத்தின் விதிகளுக்கிணங்க அக் கழகத்தினால்; அல்லது

(ii) கொழும்பு தரகர் கழகத்தில் பதியப்படும் பணிகளை ஒத்த பணிகளை ஏதேனும் குழு புரிகின்றது என்ற நிகழ்வைக் கருத்திற் கொண்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப் படக்கூடியவாறான வேறு குழுவினால்

வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக நிரலில் அதன் பங்குகள் குறிப்பிட்ட வரி மதிப்பாண்டொன்று முழுவதும் அல்லது கம்பனி கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த வரி மதிப்பாண்டு இறுதி வரையும் விலைகோரிப் பெறப்பட்டனவாக இருக்கும் ஒரு கம்பனியென வரிமதிப்பாளர் அது தொடர்பில் திருப்தியுறுவதுமான ஒரு கம்பனி என்று பொருளாகும்.

கம்பனிகளின் வருமானவரி வீதங்கள்
Rates of Incometax Companies

சிறிய கம்பனி
Small Company

(1) வரிவிதி வருமானம் ரூபா 250,000 ஐ மேற்படாதவிடத்து
வரிவிதி வருமானத்தின் முதல் ரூபா 50,000 க்கு 20 சதவீதம்
வரிவிதி வருமானத்தின் அடுத்த ரூபா 100,000 க்கு 30 சதவீதம்
வரிவிதி வருமானத்தின் மிகுதிக்கு ..... 40 சதவீதம்

சிறிய கம்பனியாக உள்ள விலை கூறப்பட்ட பொதுக் கம்பனி தொடர்பில் வரிவிதிவருமானம் ரூபா 250,000 திற்கு மேற்பட்டாலும் மேற்காட்டப்பட்ட வரிவீதங்களிலே வரி கணிக்கப்படும்.

(2) விலைகூறப்பட்ட பொதுக்கம்பனியல்லாத சிறு கம்பனிதொடர்பில் வரிவிதி வருமானம் ரூபா 250,000 திற்கு மேற்படின் -
வரிவிதி வருமானத்தின் முதல் ரூபா 50,000 க்கு 20 சதவீதம்
வரிவிதி வருமானத்தின் அடுத்த ரூபா 100,000 க்கு 30 சதவீதம்
வரிவிதி வருமானத்தின் அடுத்த ரூபா 100,000 க்கு 40 சதவீதம்
வரிவிதி வருமானத்தின் மிகுதிக்கு .... 50 சதவீதம்

(3) விலை கூறப்பட்ட பொதுக் கம்பனி
கம்பனியின் வரிவிதிவருமானம் முழுவதும் 40 சதவீதம்

(4) மக்கள் கம்பனி
கம்பனியின் வரிவிதிவருமானம் முழுவதும் 40 சதவீதம்

(5) ஏனைய கம்பனி
கம்பனியின் வரிவிதிவருமானம் முழுவதும் 50 சதவீதம்

செல்வ வரி
Wealth Tax

வதிவுள்ள கம்பனிகளுக்கு செல்வ வரி இல்லை.

வரி விடுதலை - Tax Holiday

ஐந்து வருட வரி விடுதலை பெறும் கம்பனிகள்

உல்லாசப் பிரயாணிகள் விடுதியகங்களை நடாத்துதல், இவற்றிற்கான கட்டிடங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் முதலியவற்றில் ஈடுபடும் பொறுப்பு முயற்சிகள்; விலங்கு, வேளாண்மை, கரும்பு பயிர்ச் செய்கை, கடல் அல்லது உள்நாட்டு மீன்பிடித் தொழில் மற்றும் இவை தொடர்பான பதனிடுதல் முதலியவற்றில் ஈடுபடும் பொறுப்பு முயற்சிகள்; ஏற்றுமதி உற்பத்திக் கிராமிய கம்பனி; ஏற்றுமதிக்கான மலர்கள், பழங்கள், காய்கறிகள், அலங்காரச் செடிகள் முதலியவற்றை வளர்த்தல் மற்றும் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்தல் முதலியவற்றில் ஈடுபடும் பொறுப்பு முயற்சிகள்; கப்பல் திருத்துதல், கப்பல் தகர்த்தல், கடல் வழிக் கொள்கலன் புதுக்குதல், பழுதுபார்த்தல் மற்றும் இவைபோன்ற சேவைகளுக்கு வெளிநாட்டு நாணயங்களில் கொடுப்பனவுகள் பெறும் பொறுப்பு முயற்சிகள்; மகாவலி அதிகாரசபையின் நீர்ப்பாசனத் திட்டத்தை செயற்படுத்துவதில் முற்றுமுழுதாக ஈடுபடுவதற்காக உருவாக்கப்பட்ட விலை கூறப்பட்ட பொதுக்கம்பனி; அங்கீகரிக்கப் பட்ட சில முயற்சிகளில் ஈடுபடும் விலைகூறப்பட்ட பொதுக்கம்பனி ஆகியவற்றிற்கு ஐந்து வருட வரிவிடுதலை உண்டு.

பத்துவருட வரி விடுதலை பெறும் கம்பனிகள்

உல்லாசப் பிரயாணிகள் விடுதியகங்களை நடாத்தும் நூறு மில்லியனுக்குக் குறையாத வழங்கப்பட்ட மூலதனத்தையுடைய விலை கூறப்பட்ட பொதுக்கம்பனி: தேயிலை, தெங்கு

இறப்பர், நெல் தவிர்ந்த பயிற்செய்கைகளில் முற்று முழுதாக ஈடுபடுவதற்கென உருவாக்கப்பட்ட நூறு மில்லியனுக்குக் குறையாத செலுத்திய ஒப்புரவு மூலதனத்தையுடைய விலைகூறப்பட்ட பொதுக்கம்பனி; நகர அபிவிருத்திச் செயற் திட்டங்களில் முற்று முழுதாக ஈடுபடுவதற்காக உருவாக்கப்பட்ட விலைகூறிய பொதுக்கம்பனி; ஆகியவற்றிற்குப் பத்துவருட வரிவிடுதலை உண்டு.

ஏனைய வரிவிடுதலைகள்

ஏற்றுமதி தொடர்பாக வரி விடுதலை பெறும் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முயற்சிகளுக்கு உற்பத்திப் பொருட்களை வழங்கும் பொறுப்பு முயற்சிகளினது ஏற்றுமதித்தொடர்பான வருமானம் வரிவிலக்குப்பெறும்.

வீடுகளை அல்லது மாடிகளை நிர்மாணித்து விற்பனை செய்வதில் ஈடுபடும் பொறுப்பு முயற்சிகளுக்கு 1989 மார்ச் 31-ம் தேதிவரையும் தளப்பரப்பு அடிப்படையில் வருமானத்தில் 50 சத வீத, 75 சத வீத நூறு சத வீத வரிவிலக்கு உண்டு. 1989 ஏப்பிரல் தொடக்கம் இது மாற்றப்பட்டு 2000 சதுர அடிக்கு மேற்படாத வீடுகள் தொடர்பில் வருமானத்தில் 75 சத வீதத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

பொதுக் கம்பனிகளின் பங்குகளைக் கொள்வனவு செய்தல் விற்றல் ஆகியவற்றையே முக்கியநோக்கமாகவும் அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுக்களினால் தொண்ணூற்றைந்து சத வீதத்திற்கு குறைவில்லாத மூலதனத்தை வழங்கியதாகவும் 1984 மார்ச் 31ம் தேதியிலன்று உள்ள வழங்கிய மூலதனத்தின் தொகைபோன்று இரண்டு மடங்கு தொகை வருமானமாகக் கிடைக்கும்வரை வரிவிலக்கு உண்டு.

வரிவிடுதலை முடிந்தபின் வரிச் சலுகை
Tax concession following the tax holiday

உல்லாசப் பிரயாணத் துறையுடன் ஈடுபட்டிருக்கும் பொறுப்பு முயற்சிகள் ஐந்து வருட வரி விடுதலை முடிந்தபின் உடனடுத்து வரும் பதினைந்து ஆண்டுகளுக்கு வரிச்சலுகை பெறுகின்றன. அத்தகைய பொறுப்பு முயற்சிகள் பதினைந்து ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டுக்கும் செலுத்தவேண்டிய மொத்த வருமான வரியில் அரைவாசித் தொகையே வருமான வரியாகச் செலுத்த வேண்டும்.

ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளுக்கு வரிவிடுதலை முடிவடைந்தபின் பத்து ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டிய மொத்த வருமான வரியில் ஐம்பது சதவீத வரிச் சலுகையுண்டு.

வதிவற்ற கம்பனிகள் செலுத்த வேண்டிய வரிகள்
Taxes payable by non resident companie

வருமான வரி – Income Tax

வதிவற்ற கம்பனியொன்று வரிமதிப்பாண்டென்றில் செலுத்தவேண்டிய வருமானவரியானது

1. அவ்வரிமதிப்பாண்டின் வரிவிதி வருமானத்தில் 50 சத வீதத்துக்குச் சமமான தொகையும்; அத்துடன்
2. அவ்வரி மதிப்பாண்டில் அக் கம்பனியின்* பண அனுப்புகைகளின் கூட்டுத்தொகை கம்பனியின் வரிவிதி வருமானத்தின் மூன்றிலொரு பகுதிக்குக் குறைவாக இருப்பின் அத்தகைய கூட்டுத் தொகையின் 33 1/3 சத வீதமான தொகைக்குச் சமமான தொகையும்; பண அனுப்புகையின் கூட்டுத் தொகை கம்பனியின் வரிவிதி வருமானத்தின் மூன்றிலொரு பகுதிக்கு

மேற்படின் 11 1/9 சத வீதத்துக்கு சம மான தொகையாயுமிருத்தல் வேண்டும்.

* பண அனுப்புகைகள் (Remittances) என்பது

(i) அவ்வரி மதிப்பாண்டில் அத்தகை கம் பனியின் இலாபங்களிலிருந்து வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்ட அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட பணத்தொகை;

(ii) அக்கம்பனியால் ஏற்றுமதி செய்யப் பட்ட பொருள்களை வெளிநாட்டில் விற்பனை செய்வதன்மூலம் பெறப்படும் வரும்படியில் வெளிநாட்டில் வைத்தி ருக்கப்படுவதான அத்தகைய பாகம்;

(iii) அக் கம்பனியால் ஏற்றுமதி செய்யப் பட்டு ஒரு மொத்த விற்பனைச் சந்தை யில் விற்கப்படாத அல்லது முற்றுக விற்கப்படாத எவையேனும் பொருள் கள் தொடர்பாக இலங்கையில் ஈட் டப் பட்டதாகக் கருதப்படும் இலாபங் களின் வெளிநாட்டில் வைத்திருக்கப் படுவதான அத்தகைய பாகம்.

செல்வ வரி

Wealth Tax

வதிவற்ற கம்பனிக்கு வரிமதிப்பாண் டொன்றில் இலங்கையில் அசைவற்ற ஆத னம் எதேனும் இருந்தால் அவ்வரிமதிப் பாண்டின் வரிவிதி வருமானத்தில் அத்த கைய அசைவற்ற ஆதனத்திலிருந்து பெறப் படும் வரிவிதி வருமானத்தின் பகுதியை ஐந்தால் பெருக்க வரும் தொகையே அக் கம்பனியின் அத்தகைய வரிமதிப் பாண்டுக் குரிய வரிவிதி செல்வமாகக் கருதப்படும். இப்படிக் கணிக்கப் பெற்ற வரிவிதி செல் வம் முழுவதிலும் ஒரு சத வீதத்திற்குச் சமமான தொகை அவ்வரி மதிப்பாண்டுக் குரிய செல்வ வரியாகச் செலுத்தப்பட வேண்டும்.

வரிமதிப்பாண்டு 1988 / 89 தொடக்கம் கம்பனிகள் தொடர்பான வரிவிதிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.

Changes in the Taxation of Companies effective from the year of assessment 1988 / 89

வரி வீதத்தில் மாற்றம் – சிறு கம்பனி
Change in Tax Rates - Small Company

சிறு கம்பனிகளின் வரிவிதிவருமானம் ரூபா 250,000 க்கு மேற்படாதவிடத்து வரிவிதிவருமானத்தின் 33 1/3 சதவீதத் திற்கு சமமான தொகை வருமானவரி யாகச் செலுத்த வேண்டும். வரிவிதிவரு மானம் ரூபா 250,000 க்கு மேற்பட்டால் அந்தந்த வகுப்புகளுக்குரிய கம்பனி வரி வீதங்களான 50%, 40% ஆகிய வரிவீதங் களில் வரிசெலுத்த வேண்டும்.

இந்த விதத்தில் வரிவிதிப்பு செய்யும் போது இந்த உச்ச எல்லையான ரூபா 250,000ஐ ஒரு ரூபாவினால் தன்னும் விஞ் சினால் முழுத்தொகையும் சாதாரண வரி வீதங்களான 50%, 40% களில் வரி செலுத்த வேண்டி நேரிடும். இந்தநிலை ஏற் படாது தவிர்ப்பதற்காக ஓர் எல்லைச் சலுகை (Marginal Relief) யாக அமையும் பொருட்டு வரிவிதிவருமான ரூபா 250,000க்கு மேற்படின் பின்வருமாறு வரி விதிக்கப்படும்.

(i) வரிவிதிவருமானத்தின் ரூபா 250,000க்கு 33 1/3 %; அத்துடன்

(ii) வரிவிதிவருமானம் ரூபா 250,000 க்கு மேற்பட்டு ரூபா 333,333 க்கு மேற் படாதவிடத்து வரிவிதி வருமானம் ரூபா 250,000 ஐ எத்தொகையால் விஞ்சுகின்றதோ அத்தொகை-

சிறுகம்பனி வரிவீதம் ஒரு சலுகை அடிப் படையான வரி வீதமே.

மேற்காட்டிய விபரத்தின் படி

விலை கூறப்படாத கம்பனியின் சாதா ரணவரி வீதம் 50% ஆக இருப்பதால் அதன் மொத்தவரிவிதி வருமானம் 333,333 ரூபா மேற்படாதவரைக்கும் சிறு கம்பனி வரி வீதம் சாதகமாக அமையும்.

விலை கூறப்பட்ட அல்லது மக்கள் கம் பனி ஆகியவற்றின் வரிவீதம் 40% ஆக இருப்பதால் அவற்றின் மொத்த வரிவிதி வருமானம் ரூபா 277,777 க்கு மேற்படாத வரைக்கும் சிறுகம்பனி வரிவீதம் சாதக மாக அமையும்.

வரிமதிப்பாண்டு 1987 / 88 வரையும் நடை முறைப் படுத்தப்பட்ட வரி விதிப்பின் அடிப் படை

The System of Taxation that was in force upto the year of Assessment 1987 / 88

வரிமதிப்பாண்டு 1987 / 88 வரையும் கம்பனி அமைப்புகள் பெறும் இலாபங்கள் பொருளாதார ரீதியில் இரட்டை வரிவிதிப் புக்கு உட்படுத்தப் பட்டதாகும். கம்பனி யின் வரிவிதி வருமானத்திலிருந்து செலுத்த வேண்டிய வரியைக் கழித்து எஞ்சிய தொகையிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் பங்கு இலாபத்திற்கு பங்குதாரர்களும் வரி செலுத்த வேண்டி இருந்தது. கம்பனி அமைப்பு அல்லாதவை பெறும் வருமானம் இப்படியான இரட்டை வரி விதிப்புக்கு உள் ளாகவில்லை. கம்பனி வருமானத்தின் இரட்டை வரிவிதிப்பானது வரிவிதிப்பின் ஒப்புரவு (Equity) கோட்பாட்டுக்கு முரண் பட்டதாகும். என வாதிடப்பட்டு வந்துள் ளது.

உதாரணம் :

	விலைகூறப்படாத கம்பனிகள்	விலைகூறப்பட்ட கம்பனிகள்	சிறு கம்பனிகள்	தனி வியாபாரம் / பங்குடமை வியாபாரம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வரிவிதி வருமானம்	100,000	100,000	100,000	100,000
வரி 50%	50,000 (a)	40% 40,000 (a)	$33\frac{1}{3}$% 33,333 (a)	40% 40.000 (a)
மிகுதி	50,000	60,000	66,667	
பங்குதாரர் செலுத்த வேண்டிய வரி 40%	20,000 (b)	24,000 (b)	26,667 (b)	— (b)
செலுத்த வேண்டிய மொத்தவரி (a) + (b)	70,000	64,000	60,000	40,000

குறிப்பு :-

மேற்காட்டிய உதாரணத்தில் பங்குதாரர் / தனியாள் வரிமதிப்பாண்டிற்குரிய ஆகக் கூடிய வரிவீதமான 40% வரிசெலுத்தப் படுவதாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வரிவிதிப் பாண்டு 1988 / 89 தொடக்கம் செயல்படும் வரிவிதிப்பு முறை
The System of Taxation in force from the year of Assessment 1988 / 89

வரிமதிப்பாண்டு 1988 / 89 தொடக்கம் (Imputaion System) என்ற முறை கம்பனி வரிவிதிப்பில் புகுத்தப்பட்டுள்ளது. இந்தமுறையின் கீழ் கம்பனிகள் அவற்றின் வரிவிதிவருமானத்தில் செலுத்தும் வரிபங்கு தாரருக்கு சாட்டுதல் செய்யப்படும். பங்கு தாரர் பங்கு இலாபத்தினை தனது வருமானமாகக் காட்டி வரிசெலுத்தும் போது பங்கு இலாபத்தொகையின் அளவிற்குரிய கம்பனியால் செலுத்திய வரி பங்குதாரர் செலுத்திய வரிபோன்று கருதப்படும். ஆகவே இதை ''சாட்டுதல் முறை'' என அழைப்போம். பங்கு இலாபம் தொடர்பாக கம்பனி செலுத்திய முழுவரியையும் பங்கு தாரருக்கு சாட்டுதல் செய்வதை ''முழுச் சாட்டுதல் முறை'' (Full Imputation) எனப்படும்.

இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பது ''முழுச் சாட்டுதல் முறை'' (Full Imputation) அல்ல. இலங்கையில் கம்பனி செலுத்தியவரியில் அரை வாசித் தொகையே பங்குதாரருக்கு சாட்டுதல் செய்யப்படும். இது ''அரைச்சாட்டுதல் முறை (Half Imputation எனப்படும். முழுச்சாட்டுதல் முறை (Full Imputation) யும் அரைச் சாட்டுதல் (Half Imputation) முறையும் எவ்வாறு அமையும் என்பதை பின்வரும் உதாரணங்கள் விளக்குகின்றன.

உதாரணம் I முழுச் சாட்டுதல் முறை – Full Imputation

	விலை கூறப்படாத கம்பனிகள்		விலை கூறப்பட்ட கம்பனிகள்		சிறிய கம்பனிகள்		தனிவியாபாரம் / பங்குடமை வியாபாரம்
வரிவிதி	ரூபா		ரூபா		ரூபா		ரூபா
வருமானம்	100,000		100,000		100,000		100,000
வரி 50%	50,000	40%	40,000	33⅓%	33,383	40%	40,000
மிகுதி	50,000		60,000		66,667		
பங்குதாரரின் வருமானம்							
மேற்காட்டிய மிகுதி	50,000		60,000		66.667		—
கம்பனி செலுத்திய வரி	50,000		40,000		33,333		—
மொத்த வருமானம்	100,000		100,000		100,000		—
பங்குதாரர் செலுத்த வேண்டிய வரி 40%	40,000		40,000		40,000		
கம்பனி செலுத்திய வரி	50,000		40,000		33,333		
	10,000 மீளளிப்பு.		—		6,667 செலுத்தவேண்டியது		
ஆகவே ரூபா 100,000 வரி விதி வருமானத்தில் செலுத்த வேண்டிய வரி	40,000		40,000		40,000		40,000

இந்த முழுச் சாட்டுதல் முறையில் எல்லாவிதமான அமைப்புகளிலிருந்து பெறும் வருமானத்திற்கும் ஒரே அளவிலான வரியே செலுத்த வேண்டும்,

உதாரணம் II இலங்கையில் செயற்படுத்தப்படும் சாட்டுதல் முறை – 'அரைச்சாட்டுதல் முறை'
Imputation System Implemented in Sri Lanka – Half Imputation

	விலகூறப்படாத கம்பனி	விலகூறப்பட்ட கம்பனி	சிறு கம்பனி	தனிவியாபாரம் / பங்குரிமை வியாபாரம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வரிவிதி வருமானம்	100,000	100,000	100,000	100,000
வரி	50% 50,000(a)	40% 40,000(a)	$33\frac{1}{3}$% 33,333(a)	40% 40,000
மிகுதி	50 000	60,000	66,667	
பங்குதாரரின் வருமானம் மேற்காட்டிய மிகுதி	50,000	60,000	66,667	—
கம்பனி செலுத்திய வரியில் அரைவாசித் தொகை	25,000	20,000	16,666	—
மொத்த வருமானம்	75,000	80,000	83,333	—
பங்குதாரர் செலுத்த வேண்டிய வரி 40%	30,000	32,000	33,333	—
கழி - கம்பனி செலுத்திய அரைவாசி வரி	25,000	20,000	16,666	—
செலுத்த வேண்டிய மிகுதி வரி	5,000 (b)	12,000 (b)	16,667 (b)	—
ஆகவே வரிவிதி வருமானம் ரூபா 100,000 க்கு செலுத்த வேண்டிய வரி (a) + (b)	55,000	52,000	50,000	40,000

அரைச்சாட்டுதல் முறையை நடைமுறைப் படுத்துவது தொடர்பான விதிகள்

Provisions regarding the implimentation of Half Imputation System

முன் செலுத்தவேண்டிய கம்பனி வரி
Advance Company Tax

இலங்கையில் வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும், 1988ஆம் ஆண்டு எப்பிரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம், ஏதேனும் வரிமதிப்பாண்டுக்குரிய கம்பனி வரி விதிப்புக்குரிய வருமானத்திலிருந்து, பங்குதாரருக்கு அந்த வரிமதிப்பாண்டில் பகிர்ந்தளிக்கப்படும் மொத்த பங்கு இலாபத்தின் தொகைக்கு சமமான தொகையில், பகிர்ந்தளிப்பு நடைபெறும்போது, கீழே காட்டப்பட்டுள்ள சத வீதத்தில் ஒரு வரி செலுத்த வேண்டும். இப்படியாகச் செலுத்த வேண்டிய வரி "முன் செலுத்த வேண்டிய கம்பனி வரி"(Advance Company Tax) எனப்படும். இப்படியாக வரிக்குட்படுத்தப்படும் வருமானத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் மொத்த பங்குலாபம் "தகைமை பெறும் பகிர்ந்தளிப்பு" (Qualifying Distribution) எனப்படும் கம்பனியின் 1988ஆம் ஆண்டு ஏப்பிரல் முதலாம் திகதிக்கு முற்பட்ட வருமானம் தகைமை பெறும் பகிர்ந்தளிப்புக்குள் சேர்க்கப்படமாட்டாது.

முன் செலுத்த வேண்டிய கம்பனி வரி வீதங்கள்
Rates of Advance Company Tax

(i) சிறு கம்பனிகள்

தகைமைப் பகிர்ந்தளிப்புத் தொகையின்அளவுக்கு சமமான தொகையில் 25%

(ii) விலைகூறப்பட்ட கம்பனி அல்லது மக்கள் கம்பனி.

தகைமைப் பகிர்ந்தளிப்புத் தொகையின் அளவுக்கு சமமான தொகையில் 33 1/3%

(iii) ஏனைய கம்பனிகள்.

தகைமைப் பகிர்ந்தளிப்புத் தொகையின் அளவுக்குச் சமமான தொகையில் 50%

கம்பனி செலுத்த வேண்டிய கம்பனிவரியிலிருந்து முன்செலுத்த வேண்டிய கம்பனி வரியைக் கழித்தல்
Deduction of the "Advance Company Tax" from the Company Tax Payable by a Company

ஏதேனும் வரிமதிப்பாண்டுக்கு கம்பனியொன்று அதன் வரிவிதி வருமானத்துக்கு வருமானவரி செலுத்தும்போது தகைமை பெறும் பகிர்ந்தளிப்பு தொடர்பில் செலுத்திய "முன்செலுத்த வேண்டிய கம்பனிவரி" யைக் கழித்தல் வேண்டும். ஆயினும் அத்தகைய வரிமதிப்பாண்டில் கம்பனி செலுத்த வேண்டிய மொத்த வரியின் 50 சத வீத தொகைக்கு மேற்படாத அளவு வரை மட்டுமே முன் செலுத்தவேண்டிய கம்பனி வரியைக் கழிக்கலாம். இப்படிக் கழிக்க முடியாது எஞ்சி நிற்கும் மிகுதி இருப்பின் அதனை அடுத்து வரும் வரிமதிப்பாண்டுகளில் இதே அடிப்படையில் கழிக்கலாம்.

பங்குதாரர் கையில் பங்கு இலாபம்
Dividends in the hands of the shareholder.

பங்குதாரர் பெறும் தகைமை பெறும் பகிர்ந்தளிப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொத்தப் பங்கு லாபத்துடன் அது தொடர்பிலான முன் செலுத்தவேண்டிய கம்பனி வரியையும் கூட்டுமொத்தமாக்க வருவதே பங்குதாரரின் பங்கு இலாபத்தின் நியதிச் சட்ட வருமானமாகும்.

பூட்டு

— முருகையன்

நேற்றெல்லாம்...
உங்கள் நினைவிடையே நான்
புரண்டு தோற்றேன்.
துளியுமே தூக்கம் வரவில்லை.
மூட்டை, நுளம்பு முதலான தொல்லை இல்லா
நாட்கள் இவை.
எனினும்
நாழிகைகள் எத்தனையோ
கண்மூடல் இன்றிக் கழித்தேன், தனிமையிலே!

உங்களுக்கென்ன ?
உடனே விசுக்கென்று
பையொன்று தோளிலே மாட்டி, பறந்து
விமானத் துறையடைந்து, வேற்றூர் போய்ச் சேர்ந்து
சமானமொன்றும் இல்லாத் தனி அறையில்
ஏதேதோ
புத்தகங்களோடு பொழுதைக் கழிப்பீர்கள்.
பத்திரிகையோடு பல மணிகள் போய் ஒழியும்.
நான் அல்லவோ இந்த நள்ளிரவிற் கண் விழித்து,
போன பழைய இரவுகளின் பொய் நினைவில்
தேகத்தைத் தேய்த்துச் சிரமப் படவேண்டும்.

மேற்படிப்புக்கென்று விரைந்தீர்கள்.
அப்படிப்பால்
ஏற்படும் நன்மை.
இதை நான் உணருகிறேன்.
எங்கள் வரும்படியில் ஏற்றங்கள் காணலாம்.
முன்னறையிற் பூச்சாடி, மூடுதிரை, ஓவியங்கள்,
பின்னிவைத்த நாற்காலி,
பீங்கான்.
பளிச்சென்ற
கண்ணுடிக் கூட்டிற் கலன்கள்,
தொலைக்காட்சி
எல்லாம் கிடைக்கும்
இவைகள் பொருள் அல்ல.

உங்கள் படிப்பால் உலகம் சிறப்படையும்,
எங்கள் சனங்கள் எழுச்சி அடைவார்கள்.
பண்பாடு
மேலும் பல படிகள் முன்னேறும்,
என்பதொன்றே எண்ணி,
இதயத்தைப் பூட்டி வைத்து
நம்பி இருக்கின்றேன், நான்.

மீண்டெழுந்த வரலாறுகள்

— சி.திருவாகரன்

வரலாறுகள்
திரும்பத்திரும்ப
எழுகின்றன என்றூல்
இது
மீண்டெழுந்த இராமாயணம்.
இங்கு
இராமனும் இராவணனும்
இராமதூதர் காவலோடு
சீதை தொடர்ந்தும்
சிறையிலேயே இருக்கட்டும்
என்று
இணக்கம் செய்வார்கள்

வரலாறுகள்
திரும்பத்திரும்ப
எழுகின்றன என்றூல்
இது
மீண்டெழுந்த மகாபாரதம்.
இங்கு
பாண்டவர்கள் கையைக் கட்டி
துச்சாதனனுக்குத் துணையாக
பரந்தாமனும்
பாஞ்சாலியைத் துகில் உரிவான்

1890-ம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் 24-ம் பிரிவு

பங்காளருக்கிடையில் ஒப்பந்தம் இல்லாதவிடத்து பங்குடமை சம்பந்தமான இப்பிரிவு பின்வரும் ஏற்பாடுகளால் தீர்மானிக்கப் படுகிறது.

1) பங்காளர் அனைவரும் இலாபநட்டத்தை சமனுகப் பகிரவேண்டும்
2) பங்காளர் மூலதனத்திற்கு வட்டி பெற முடியாது.
3) பங்காளர் பற்றுகளுக்கு வட்டி இல்லை.
4) பங்காளர் எவரும் சம்பளம் பெற முடியாது.
5) பங்காளர் மேலதிக கடன் ஏதாவது கொடுத்திருப்பின் அதற்கு ஆண்டிற்கு 5% வட்டி பெறமுடியும்.

விடை பெறுதல்

— கே. லோறன்ஸ்
3ஆம் வருடம்
வர்த்தகப்பிரிவு

வெறும் மணல் வெளி.....
முகத்தில் அறையும் வேலையற்ற காற்று.....
வெறும் பொழுது.....

அத்தனை கோடிக் கனவுகளையும்
வெட்டிப் புதைத்து விட்டு
பெருமூச்சு விட்டாயிற்று
கண்ணீர் வடித்தாயிற்று

நினைவுகளில் அவிந்து அவிந்து
அழியும் மனம்
வாழ்வின் வசீகரத்தில்
துளிர்க்கும் உயிர்

யாரும் எதுவுமற்ற
ஓர் அனுதை வெளியில்
நானும் எனது காதலும்

ஏதோ ஒரு திசையில்
எங்கோ வெகு தொலைவில்
இருப்பதாய்ப் படுகிறதே
அதுவா என் வாழ்க்கை ?

தொடரும் நடை.....

வெறும் மணல் வெளி.....
முகத்தில் அறையும் வேலையற்ற காற்று.....
வெறும் பெழுது.....

அவள் விடைபெற்று விட்டாள் !

கண்ணீர் அஞ்சலி



1986/87, 1987/88 ஆகிய கல்வியாண்டுகளில்

இழந்த எமது மன்ற அங்கத்தினர்களாகிய

இவர்களுக்கு எமது இதயபூர்வமான

அஞ்சலியினை செலுத்துகின்றோம்.

நெஞ்சில் வாழும் நிலவு




தோன்றியது :
14-1-1965

தொலைந்தது :
4-11-1986

அ. விஜிதரன்

நெஞ்சில் சுமை தந்தாய்
விடைகாண முடியாத வினுவானுய்
நீ பேச நினைத்தது எவைஎவையோ ?
நீ செய்யத் துடித்தது எதுஎதுவோ ?
சடுதியில் உன் கையை மீறின அனைத்தும்
நீ வாழ்வை நொந்தாயோ நண்பா !
இவற்றின் பொருள் என்ன என்று
புரியாமல் நின்றுயோ !
நீ கேட்டு முடிப்பதற்குள்
நீ சொல்லி முடிப்பதற்குள்
சடுதியில் உன் கையை மீறின அனைத்தும்
நெஞ்சில் சுமை தந்தாய்
விடைகாண முடியாத வினுவானுய் !

இறப்பில் வாழச் சென்ற இதயம்




தோற்றம் :
24-02-1963

மறைவு :
12-05-1987

கு. ஞானசேகரன்

வாழ்வின் துயரில் உன்னையே எரித்தாய் !
உன் மரணத்தை நீயே எழுதும்படி
உன்னைக் குழப்பிய இந்த உலகத்தின்
புதிர்களுக்குள் நீ மூச்சிரைத்துப் போனாயா
பதில்காண முடியாத கேள்விகளை எல்லாம்
மரணத்தால் அழித்து விட்டு
நிம்மதியாய் நெடு மூச்சு விட்டாயா ?
வாழ்வைக் கைவிட்டாய் –
(மரணம் உனக்கானது)
உன் நினைவு எமக்கானது

...ந்து போன அறிவு மின்னல்!



தோற்றம் : **15-9-1962** மறைவு ; **12-10-1987**

நா. ஜீவரத்தினம்

(செயற்குழு உறுப்பினர் 1987 / 88)

வழமை போலவே எல்லாம் இருந்தன
வழமை போலவே எல்லாம் அசைந்தன
வழமை போலவே மரணங்கள் நிகழ்ந்தன...
கூட வந்தவன் பேச்சை நிறுத்தி விட்டு
மௌனமாய் அருகில் நடப்பதைப் போல
உன் வாழ்வு என்பது
சற்று முன்வரை வாழ்க்கையிலும்
தற்போது மரணத்திலும் என்றுனது...
நீ எம்முடன் பேசிக்கொண்டிருக்கின்றாய்
பேசிக்கொண்டே.

மௌனமாய் மரித்த மலர்

தோற்றம்
(11-2-1962)



மறைவு
(15-1-1989)

செல்வி ஐ. சத்தியபாமா

வாழ்வின் துயரம்
வலி விரித்ததுவோ ?
பாழ்தான் உலகென
பயம் துறந்தாயோ ?
மீழ்தல் இனியிலை
என்றே உலகில்
வாழ்தல் வெறுத்து
உயிர் துறந்தாயோ ?
பசும்புல் வெளிகள்
பறவை கடல் மலை
பலவித மனிதர்
பலவித உலகம்
இருந்தும் அனைத்தையும்
எப்படி வெறுத்தாய்,
மற்றவை எல்லாம்
மாறுதல் காட்டின,
கற்றவை எல்லாம்,
கையை விரித்தன
தனக்குத் தானே
சுமை என்றுணர்
சுணக்கமின்றியே
உயிர்சுட் டாய் நீ
வாழ்வை எதிர் கொள
வாழ்வது ஒன்றே
வழியென்றறிவோம்.....
உந்தன் பயணம்
எம்மை உலுத்தும்,
உந்தன் நினைவுகளை
நெஞ்சிலே நிறுத்தி
வாழ்வை வெல்ல
வாழ்வோம் நாமே !!

காப்புறுதி

INSURANCE

1. உடமைக்கு அல்லது உறுப்புகளுக்கு அல்லது உயிருக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்பீடுகளில் இருந்து பண அடிப்படையில் பாதுகாப்புப் பெறும் நோக்கோடு காப்புறுதி செய்வோனுக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற ஒப்பந்தத்தினையே காப்புறுதி என வரையறுக்கலாம். காப்புறுதி நிறுவனத்தால் காப்புறுதி செய்வோனுக்கு காப்புறுதிப் பத்திரம் வழங்கப்படும்.

காப்புறுதி ஒப்பந்தத்துடன் கீழ்வருவோர் தொடர்புள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

(அ) காப்புறுதி செய்வோன்

(ஆ) காப்புறுதி நிறுவனம்

(இ) மூன்றாம்நபர் - காப்புறுதி ஒப்பந்தத்துடன் தொடர்பல்லாதவர்கள் நட்டஈட்டினைப் பெறத்தகுதியுடையவர்களாக காணப்படுபவர்களே குறிக்கின்றது. உ+ம் 3-ம் நபர் காப்புறுதி

(ஈ) காப்புறுதி முகவர் → காப்புறுதிநிறுவனத்திற்கும் காப்புறுதி செய்வோனுக்கும் இடையில் காப்புறுதி ஒப்பந்தம் உருவாக்குவதற்கு வேண்டிய ஆலோசனை, தகவல்கள், விண்ணப்பப்படிவம், மருத்துவச் சான்றிதழ் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்பவர். இவரது செயற்பாட்டிற்கு சன்மானமாக ஒப்பந்தத் தொகைக்கு ஏற்பதரகு வழங்கப்படும். காப்புறுதி ஒப்பந்தத்தில் கீழ்வரும் சட்ட அம்சங்களை அவதானிக்கலாம்.

(அ) கொடைமுன்வு – காப்புறுதி செய்வோன்.

(ஆ) ஏற்பு → காப்புறுதி நிறுவனம்.

இ. இரட்ணம்
B Com. (Hons) H. N. Dip. ACC, A.A.T.

(இ) பிரதிபயன் → காப்புறுதி நிறுவனத்திற்கு கட்டணத்தொகை காப்புறுதி செய்வோனுக்கு நட்டஈட்டுத் தொகை கிடைக்கும்.

காப்புறுதி பலரிடம் இருந்து பெறப்படுகின்ற சிறு தொகைகளைக் கொண்டு ஒரு சிலருக்கு ஏற்படும் பாரிய நட்டங்களை ஈடு செய்ய உதவுவதால் கூட்டுறவுத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு செயல் படுகிறது எனலாம்.

2. இலங்கையில் காப்புறுதியின் தோற்றமும் வளர்ச்சியும்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே 1939 ல் இலங்கையில் காப்புறுதித் தொழிலில் உள்நாட்டு வெளிநாட்டு கம்பனிகள் ஈடுபட்டிருந்தது. 1939 ல் முதலில் Ceylon Insurance (Ltd.) என்ற பெயரில் உள்நாட்டு கம்பனி காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டது. தனியார் துறையினர் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டபோது கீழ்வரும் குறைபாடுகள் காணப்பட்டமையால் இதனை நீக்கும் முகமாக 1961 ம் ஆண்டின் 2 ம் இலக்க இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் காப்புறுதித்தொழில் நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது.

(i) இலாபம் பங்கு இலாபம் என உள்நாட்டுநிதி வெளிநாடுகளுக்கு வெளியேறியமை.

(ii) உண்மையான நட்டங்கள் ஈடுசெய்யப்படாமல் பொதுமக்கள் ஏமாற்றப்பட்டமை.

(iii) தனியார் துறையினர் மோசடிகளில் ஈடுபட்டதுடன் இலாப நோக்கத்துடன் செயற்பட்டமை.

(iv) சாதாரண மக்கள் காப்புறுதியின் நன்மையினை அனுபவிக்க முடியாமை.

(v) உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கான முதலீடுகளை வழங்காமை.

1964 — 1979-ம் ஆண்டுவரை காப்புறுதித் தொழிலில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஏகபோக உரிமை வகித்தது. 1979 ல் 22 ம் இலக்க தேசியகாப்புறுதிக் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் போட்டியாக தொழிலை மேற்கொள்ள என இலங்கை தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது. 1986 டிசம்பரில் 42 ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டு (திருத்த) சட்டத்தின் பிரகாரம் தனியார் துறையினரும் காப்புறுதித் தொழிலில் ஈடுபடக் கூடியதாக இருந்தது. இதன்பிரகாரம் முதலில் யூனியன் அசூரன்ஸ் லிமிட் (Union Assurance Ltd.) 8.1.87 உருவாக்கப்பட்டு 1-1-88 ல் இருந்து செயல்பட ஆரம்பித்துள்ளது. சி. ரி. சி ஈகிள் இன்சூரன்ஸ் லிமிட் (C.T.C Eagle Insurance Company Ltd.) சிலிங்கோ இன்சூரன்ஸ் Co (Ltd.) (Ceylinco Insurance Company Ltd.) போன்ற தனியார் கம்பனிகள் காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

(அ) யூனியன் அசூரன்ஸ் லிமிட்டெட் (Union Assurance (Ltd.))

இங்கிலாந்தைச் சேர்ந்த Commercial Union Assurance Company (Ltd.) என்னும் நிறுவனத்தின் தொழில்நுட்பச் சேவையைப் பெற்று வருகின்றது. 1988 ஜனவரியில் தொழிலை ஆரம்பித்தது இந் நிறுவனத்தை உருவாக்குவதற்கு கீழ்வரும் நிறுவனங்கள் பங்களிப்பினைச் செய்து இருக்கின்றது.

(i) ஏய்க்கன் ஸ்பென்ஸ் அன்கம்பனி லிமிட்டெட் Aitken Spence and Company (Ltd.)

(ii) காசன் கம்பபச் அன் கம்பனி லிமிட் Carson Cumberbatch and Company (Ltd.)

(iii) மேக்கண்டைல் கிறெடிற் லிமிட்டெட் Mercantile Credit (Ltd.)

(iv) விற்கோல் பௌஸ்ரன்ட் லிமிட்டெட் Whihal Boustend (Ltd.)

(ஆ) ஈ. ரி. சி. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்

இது இங்கிலாந்தைச் சேர்ந்த Eagle Star Insurance (Ltd.) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுகின்றது. இது கீழ்வரும் நிறுவனங்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டது.

(i) Ceylon Tobacco Company (Ltd.)

(ii) Commercial Bank of Ceylon (Ltd.)

(iii) Capital Development and Investment Company (Ltd.)

(இ) சிலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்

இதன் உருவாக்கத்திற்கு கீழ்வரும் நிறுவனங்கள் பங்களிப்பு செய்து இருக்கிறது.

(i) Ceylinco (Ltd.)

(ii) The Finance co (Ltd)

(iii) Blue Diamonds and Ceylinco Travels (Ltd.)

தனியார் துறையினர் கீழ்வரும் காரணங்களினால் மீண்டும் காப்புறுதித் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

1. காப்புறுதித் தொழிலை வளர்க்க காப்புறுதி நிறுவனங்களுக்கு இடையில் போட்டியை உருவாக்கி காப்புறுதித் தொழிலை வளர்த்தல்.

2. அரசின் தனியார் மயமாக்கும் கொள்கை.

3. வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.

4. முதலீடுகளை அதிகளவில் இலகுவாகப் பெறுதல்.

தனியார் துறையினர் காப்புறுதித் தொழிலில் ஈடுபட கீழ்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்.

(i) காப்புறுதிக்கட்டுப்பாட்டு திருத்தச்சட்டத்துக்கு அமைவாக இருத்தல்.

(ii) சொந்தக்கம்பனியாக இருத்தலாகாது.

(iii) கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.

(iv) காப்புறுதித் தொழிலையே நோக்கமாக கொண்டிருத்தல் வேண்டும்.

(v) ஆயுள் காப்புறுதியில் ஈடுபடும் நிறுவனம் சிறுத்தமூலதனம் குறைந்தது 25 மில்லியனுக்கு குறையாமலும், பொதுத் தொழிலில் ஈடுபடும் நிறுவனம் குறைந்தது 50 மில்லியன் ரூபாவும் பொதுத்தொழில் ஆயுள்காப்புறுதியில் ஈடுபடும் நிறுவனம் குறைந்தது 75 மில்லியன் ரூபாவை சிறுத்த மூலதனமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரிடம் இருந்து காப்புறுதித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்று இருத்தல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறுவதற்கு கீழ்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) அமைப்பு அகவிதி அமைப்பு புறவிதி ஆகியவற்றின் பிரதிகள்

(ii) உருவாக்கப்பத்திரப்பிரதி

(iii) தொழில் தொடக்கல் சான்றிதழ்பிரதி

(iv) பங்குதாரர், பணிப்பாளர், உத்தியோகத்தர் விபரம்.

(v) காப்புறுதித் தொழிலின் வகை.

(vi) சிறுத்த மூலதனம்,

(vii) அனுமதிப்பத்திரம் வருடாந்தம் 5000/= செலுத்தி புதுப்பிக்க வேண்டும்.

காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர்

தனியார்துறை காப்புறுதி நிறுவனங்களை நிர்வகிப்பதற்கு என சகல நிறைவேற்று அதிகாரமும் கொண்டவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கீழ்வரும் அதிகாரமுடையவராகக் காணப்படுகிறார்.

(1) தனியார் காப்புறுதி நிறுவனங்களை பதிவு செய்தல்.
(2) மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெறுதல்.
(3) காப்புறுதிக் கட்டண உச்ச இழிவு எல்லைகளை நிர்ணயித்தல்.
(4) காப்புறுதித் தரகு தொழிலில் ஈடுபடுவோரை பதிவு செய்தல்
(5) பதிவை ரத்து செய்தல்.

3. காப்புறுதியின் முக்கியத்துவம் :-

விஞ்ஞான வளர்ச்சியால் இன்று உடமைக்கு அல்லது உயிருக்கு அல்லது உறுப்புகளுக்கு எதிர்பாராமல் இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுவதால் சொத்துடமையாளரையும் தங்கி இருப்போரையும் பாதிக்கப்படாமல் பாதுகாப்பு அளிப்பதனால் காப்புறுதியின் முக்கியத்துவமும் கீழ்வரும் வழிகளில் அதிகரித்துச் செல்கிறது.

(i) ஒருவர் பொருளாதார கஷ்டங்கள் இன்றி வாழ்வதற்கு அல்லது தங்கி இருப்போரைப் பாதுகாக்க ஆயுள் காப்புறுதி முக்கியமானதாகக் காணப்படுகிறது
(ii) சொத்துகளுக்கு இழப்புகள் ஏற்படும் போது பழையநிலையில் சொத்து உடமையாளரை பாதுகாக்க உதவுகிறது
(iii) வர்த்தகர்கள் தமது சொத்துக்கள், நிதி, இறைமை ஆகியவற்றை ஈடுபடுத்திதொழிலில் ஈடுபடத்தூண்டுகிறது
(iv) பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்பீடுகளையும் ஈடுசெய்ய உதவுகிறது

(v) நாட்டின் தேசிய பொருளாதார வளர்சிக்கு தேவையான முதலீடுகளை மேற் கொள்வதற்கான நிதியைப்பெறுவதற்கும், ஆயுள்காப்புறுதி மூலம் சேமிப்பு தூண்டப்படுவதுடன், கடன்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

4. காப்புறுதி செய்யமுடியாத அபாயம்:

காப்புறுதித்துவத்துக்கு இணங்கவேனும் கீழ்வரும் நட்டங்களை காப்புறுதி செய்ய முடியாது.

(i) இயற்கை நட்டம் – பூமிநடுக்கம், ஆவியாதல்.
(ii) செயற்கை நட்டம் – இனக்கலவரம், அரசியல் குழப்பங்களால் விளையும் நட்டம்
(iii) வியாபார நட்டம்–தேறிய நட்டம்
(iv) வியாபாரத்தில் எழும் சிறுநட்டங்கள்.
(v) சட்ட முரணான முயற்சியினால் எழும் நட்டம்.
(vi) அளக்கமுடியாத நட்டம்–பாசங்களால் பிரிவால் ஏற்படும் இழப்பு

5. காப்புறுதி தொடர்பான தத்துவங்களும் முக்கியமான பதங்களும்

காப்புறுதி ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்போதும் காப்புறுதிப்பத்திரத்தினை வைத்திருக்கும்போதும் அதற்குரிய நட்டஈட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்ளும்போதும், காப்புறுதி ஒப்பந்தத்தினை செல்லுபடியாக்கும் போதும் கடைப்பிடிக்கின்ற கொள்கைகளையே காப்புறுதித் தத்துவங்கள் என்பர்.

(i) காப்புறுதி செய்வதற்கான உரிமை நலன்

காப்புறுதி செய்வோனுக்கு உரிமை இருத்தல் வேண்டும். உரிமை என்னும்போது சொத்து அல்லது உறுப்பு அல்லது ஆயுள் நல்ல நிலையில் இருக்கும்போது அதனால்

நன்மையும் இவற்றுக்கு இழப்பு ஏற்படும் போது அதனால் பணநட்டம் அனுபவிப்ப வரே உண்மையான உரிமைதாரர் ஆவார். ஆயுள்காப்புறுதிக்கு கீழ்வரும் உரிமை இருத் தல் வேண்டும்.

(அ) சொந்த ஆயுளைக் காப்புறுதி செய்ய லாம்.

(ஆ) கணவன் மனைவியின் ஆயுளையும் மனைவி கணவனின் ஆயுளையும் காப்புறுதி செய் யலாம்.

(இ) பிள்ளையின் பெயரில் பெற்றோரின் ஆயுள் காப்புறுதி செய்யலாம்.

(ஈ) நிதி அடிப்படையில் தங்கி இருப்போ ரின் ஆயுளைக் காப்புறுதி செய்யலாம்.

சொத்துக்கள் தொடர்பாக உரிமையா ளரும் குத்தகைக்கு எடுத்தோரும் காப் புறுதி செய்யும் உரிமை உடையவர்கள். ஆனால் வாடகைக்கு பெற்றோர் காப்புறுதி செய்யும் உரிமையில்லை.

(ii) உயர்ந்த நன்நம்பிக்கை/உச்ச நம்பிக்கை

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற் கொள்ளும்போது காப்புறுதி செய்வோன் காப்புறுதி ஒப்பந்தம் தொடர்பான சகல உண்மைகளையும் காப்புறுதி நிறுவனத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்பதனை காட்டுகின்ற தத்துவமே இதுவாகும். இதேபோல காப் புறுதி நிறுவனமும் தெரிவிக்க வேண்டும். காப்புறுதி செய்வோன் இவ்வாறு செய்யத் தவறின் ஒப்பந்தம் செல்லுபடி யற்றதாக அமைவதுடன் நட்டம் ஏற்படும்போதும், நட் டத்தொகை வழங்குகின்ற பொறுப்பில் இருந்தும் காப்புறுதி நிறுவனம் விலகிக் கொள்ளும்.

(iii) நட்டஈட்டுத் தத்துவம் / இழப்பீட்டுறுதி / ஈட்டுறுதித் தத்துவம்

காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்பட்ட நட்டத்தினைமட்டுமே காப்புறுதி நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ள லாம் என விளக்குகின்ற தத்துவமே இது வாகும். இதன்பிரகாரப் இலாபம் உழைக்க முடியாது. ஆயுள் காப்புறுதிக்கு ஈட்டுறு தித் தத்துவம் பொருந்தாது. ஏனெனில் ஆயுளுக்கு பெறுமதி வரையறுக்கப்பட வில்லை.

(iv) பதிலாள்வைப்புத் தத்துவம்

காப்புறுதி செய்யப்பட்ட சொத்துத் தொடர்பான உரிமையினை சொத்துடமை யாளன் பதிலாள்வைப்பப்பத்திரத்தின் மூலம் காப்புறுதி நிறுவனத்திற்கு வழங்குவதனையே குறிக்கின்றது. இதன் பிரகாரம் காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மூன்றாம் நபரி னால் நட்டம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பத் தில் காப்புறுதி நிறுவனம் நட்டஈட்டுத்தொ கையை வழங்கும். பின் நட்டம் ஏற்படித் திய மூன்றாம் நபர்மீது வழக்குத் தொடர்ந்து அறவிடுவதற்கான உரிமை இதன்பிரகாரம் உண்டு.

(v) அண்மைக்காரணங்கள் :

எந்த நிகழ்வினால் ஏற்படுகின்ற நட்டத் திற்கு எதிராகக் காப்புறுதி செய்யப்பட்ட தோ அதே நிகழ்வினால் ஏற்படுகின்ற நட்டத் திற்கு மட்டுமே நட்டஈட்டுத் தொகைவழங் கப்படும் என்பதனை விளக்குகின்ற தத்துவமே இதுவாகும். உ+ம் கப்பல் கடலில் மூழ்குவ தனால் ஏற்படும் நட்டத்திற்கு காப்புறுதி செய்யப்பட்டால் கொள்ளை அடிப்பதனால் ஏற்படும் நட்டம் வழங்கப்படமாட்டாது.

(vi) இரட்டைக் காப்புறுதி :

சொத்து ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களால் காப்புறுதி செய் யப்படுவதனையே இரட்டைக் காப்புறுதி என் பர். உ+ம் 100,000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம் A காப்புறுதி நிறுவ னம், B காப்புறுதி நிறுவனத்தில் காப்பு றுதி செய்யப்படுவதனைக் குறிப்பிடலாம்.

vii) பகிர்ந்தளித்தல் தத்துவம்

இரட்டைக்காப்புறுதி மேற்கொள்ளப் படும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட நட்டம் காப்புறுதி செய்வோனுக்கு காப்புறுதி நிறு வனங்களால் ஒப்பந்தத்தொகைக்கு ஏற்பப் பகிர்ந்தளிக்கப்படும் என்பதனை விளக்கு வதே பகிர்ந்தளித்தல் தத்துவமாகும்.

உ+ம். காத் என்பவர் 100 000 ரூபா பெறு மதியான மோட்டார் வாகனத்தை A,B, காப்புறுதி கம்பனிகளில் தலா 100,000 ரூபாவுக்கு காப்புறுதி செய்தார். முழு அளவில் நட்டம் ஏற்படும்போது கீழ் வருமாறு வழங்கப்படும். பகிர்ந்தளித் தல் தத்துவத்தின் பிரகாரம்

A காப்புறுதி நிறுவனம்

$$= \frac{100000 \times 100000}{200000} = 50000/-$$

B காப்புறுதி நிறுவனம்

$$= \frac{100000 \times 100000}{200000} = 50000/-$$

காத் $= 50000 + 50000 = 100000/-$

பெற்றுக்கொள்வார்.

ஆயுளுக்கு பெறுமதி வரையறுக்காமையால் பகிர்ந்தளித்தல் தத்துவம் பொருந்தாது.

(viii) மறுக ப்புறுதி :

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து ஒன் றினை காப்புறுதி நிறுவனம் மீண்டும் காப்பு றுதி நிறுவனங்களில் காப்பறுதி செய் வதனையே மறுகாப்புறுதி என்பர். அதிக பெறுமதியுள்ள சொத்துக்களுக்குக் காப்பு றுதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் காப்பு றுதி நிறுவனம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஏனைய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்கிறது. இவ்வாறு செய்வத னால் காப்புறுதி செய்வோனும் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தாக இருப்பதுடன் காப்புறுதி நிறுவனங்க ளுக்கிடையில் நட்டம் பரவலாக்கப்படுவத னால் காப்புறுதி நிறுவனங்கள் முறிவடை யாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

உ+ம் ஜீவன் என்பவர் 10m ரூபா கப்பலை A காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்தார். A நிறுவனம் B காப்புறுதி நிறுவனத்தில் மறுகாப்புறுதி செய்தது

(ix) குறைக்காப்புறுதி:

சொத்தின் பெறுமதியை விடக் குறைந்த தொகைக்கு காப்புறுதி செய்யப் படுவதனையே குறைக் காப்புறுதி என்பர். உ+ம் 100,000 ரூபா பெறுமதியான மோட்டார் வாகனம் 50000 ரூபாவுக்குக் காப்புறுதி செய்வதனைக் குறிப்பிடலாம். ஏற்பட்ட நட்டத்தினை ஈடுசெய்ய முடியா மல் இருப்பதனால் வர்த்தக உலகில் இது விரும்பப்படுவதில்லை.

(x) சராசரிச் சரத்து:

குறைக்காப்புறுதி செய்யப்பட்டுள்ள சொத்துக்கு நட்டம் ஏற்படின் ஏற்பட்ட நட்டம் காப்புறுதி ஒப்பந்த தொகைக்கும், சொத்தின் பெறுமதிக்கும் ஏற்ப வழங்கப்ப டுவதனையே சராசரிச் சரத்து என்பர். இது கீழ்வருமாறு கணித்து வழங்கப்படுகிறது

$$\frac{\text{காப்புறுதி ஒப்பந்ததொகை} \times \text{ஏற்பட்டநட்டம்}}{\text{சொத்தின்பெறுமதி}}$$

(xi) காப்புறுதியின் அந்தரங்கத்தன்மை:

எந்த நிகழ்வினால் எற்படுகின்ற நட்டத் திற்கு எதிராகக் காப்புறுதி செய்யப்பட் டதோ அதே நிகழ்வுக்கு காரணமாக இருப் பவர்களுக்கு இவ் ஒப்பந்தம் தொடர்பான தகவல்களை காப்புறுதி செய்வோன் அறிவிக் காதிருத்தல் வேண்டும் என விளக்குவதே இதுவாகும்.

(xii) மிகைக் காப்புறுதி.

சொத்தின் பெறுமதியினை விடக் கூடு தலான தொகைக்கு காப்புறுதி செய்யப் படுவதனையே மிகைக்காப்புறுதி என்பர். உ+ம் சொத்தின் பெறுமதி 1000000 ரூபா காப்புறுதி ஒந்பந்த தொகை 150,000. கட்

ணம் கூடுதலாகச் செலுத்தியும் ஏற்பட்ட நட்டமே ஈடுசெய்யக் கூடியதாக இருப்பதனால் வர்த்தக உலகில் இது விரும்பப்படுவதில்லை.

6. காப்புறுதி ஒப்பந்தத்திற்கும் பணய ஒப்பந்தத்திற்கும் இடையிலான வேறுபாடு:

இரு கட்சிக்காரருக்கு இடையில் ஏற்படுகின்ற உறவாகக் காப்புறுதி ஒப்பந்தமும், பணயஒப்பந்தமும் காணப்பட்டாலும் கீழ்வரும் சில வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

(i) காப்புறுதி ஒப்பந்தம் சட்டரீதியானது. ஆனால் பணய ஒப்பந்தம் சட்டரீதியற்றது.

(ii) காப்புறுதி ஒப்பந்தம் எழுத்தில் அமைந்து இருக்கும் ஆனால் பணய ஒப்பந்தம் வாய்ப்பேச்சினாலும் அமைந்து இருக்கும்.

(iii) காப்புறுதி ஒப்பந்தத்தில் இலாபம் உழைக்க முடியாது. பணய ஒப்பந்தத்தில் இலாபம் உழைக்க முடியும்.

(iv) ஒப்பந்ததொகை சொத்தின் பெறுமதியால் வரையறுக்கப்படுகிறது. பணய ஒப்பந்தத்தில் ஒப்பந்த தொகை பணவலிமையினால் தீர்மானிக்கப்படுகிறது.

7. காப்புறுதியின் வகைகள்

காப்புறுதியினை பொதுவாக கீழ்வருமாறு வகுத்து நோக்கலாம்.

(1) ஆயுளுறுதி

(2) அபாயக் காப்புறுதி.

(அ) கடலபாயக் காப்புறுதி

(ஆ) தீ அபாயக் காப்புறுதி.

(இ) விபத்துக் காப்புறுதி.

(3) ஏனையவை.

I. ஆயுளுறுதி :-

உயிருக்கு எதிர்பாராமல் இழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தங்கி இருப்போர் பாதிக்கப்படாமல் பணஅடிப்படையில் பாதுகாப்பு பெறும் நோக்கோடு அல்லது குறிக்கப்பட்ட நபர் பொருளாதார மீட்சிபெறும் நோக்கோடு காப்புறுதி செய்வோனுக்கும் காப்புறுதிநிறுவனத்திற்கும் இடையில் ஏற்படும் ஒப்பந்தமே ஆயுளுறுதியாகும்.

காப்புறுதிக்கும் ஆயுளுறுதிக்கும் இடையில் வேறுபாடுண்டு காப்புறுதி அபாயக் காப்புறுதியையே குறிப்பிடுகின்றது. நட்டம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதியில் காப்புறுதி செய்தோனுக்கு நட்டஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. நட்டம் ஏற்படாத சந்தர்ப்பத்தில் குறிக்கப்பட்ட நபருக்கு செலுத்திய சுட்டணம் காப்புறுதிநிறுவனத்தால் மீளளிக்கப்படமாட்டாது.

ஆனால் ஆயுள் காப்புறுதியில் குறிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தில் வரையறுத்துள்ள காலத்தில் இறந்தால் முழுத்தொகையும் வழங்கப்படும். ஒப்பந்தகாலம் முடிவடைந்தும் உயிருடன் இருந்தால் குறிப்பிட்ட நபரே ஒப்பந்தத் தொகையினையும், உபகாரக்கொடுப்பனவையும் பெற்றுக் கொள்ளலாம். இதனால் ஒப்பந்தத் தொகை நிச்சயம் பெற்றுக்கொள்ளலாம் என்பதனால் ஆயுள்காப்புறுதி ஒரு "உறுதி" (Assurance) ஒப்பந்தமாகக் காணப்படுகிறது. அத்துடன் இது ஒரு சேமிப்பு நடவடிக்கையாகவும் காணப்படுகிறது.

II ஆயுளுறுதியைப் பெற்றுக் கொள்ளல்

(i) 21 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

(ii) காப்புறுதி முன்மொழிவு படிவத்தை பூர்த்திசெய்து பிரதேச காரியாலத்தில் அல்லது முகவரிடம் ஒப்படைத்தல்.

(iii) உயர்ந்த நன்னம்பிக்கைத்துவத்துக்கு இணங்க இது பூர்த்தி செய்து இருத்தல் வேண்டும்.

(iv) காப்புறுதிநிறுவனம் முன்மொழிவுப் படிவத்தை ஏற்றுக்கொண்டால் காப் புறுதி செய்பவர் வைத்தியபரிசோத னைக்கு உட்படுத்தப்படுவர். ஆனால் ஒப்பந்ததொகைக்குஏற்ப நிரந்தரஊழி யர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்கள் 150,000 ரூபா வரையும், ஏனையதுறைப் பணியாளர் கள் 100,000ரூபாவரையும் ஆயுள்காப் புறுதி ஒப்பந்த தொகைக்கு வைத்திய பரிசோதனை வலியுறுத்தப்படவில்லை.

(v) ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டால் ஆயுளுறுதிப் பத்திரம் வழங்கப்படும்.

(vi) ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்தப்பணம் செலுத்தப்பட வேண் டும்.

ஆயுளுறுதியில் கட்டணம் தீர்மானிக் கும் போது கீழ்வரும் அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

(i) ஒப்பந்ததொகை → ஒப்பந்த தொகை கூட கட்டணம் கூடும்.

(ii) ஒப்பந்தகாலம் → காலம் கூட கட்ட ணம் குறையும்.

(iii) வயது → வயது கூட நட்ட அச்சம் கூட இருப்பதால் கட்டணம் கூடுதலாக இருக்கும்.

(iv) இழப்பின்தன்மை → இழப்பு ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பின் கட்டணமும் கூடும்.

ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத் தொகை யினை முழுஅளவில் கீழ்வரும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(i) ஒப்பந்தகாலம் முடிவடைவதற்குள் இறந்தால்.

(ii) ஒப்பந்தகாலம் முடிந்தால் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் ஒப்பந்த தொகையின் ஒரு பகுதியை மேற்கூறிய நிகழ்வுகள் நடை பெறுமலே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. (உ+ம்) மூன்று கட்ட ஆயுள் காப்புறுதி

ஆயுள்காப்புறுதி ஒப்பந்த நிபந்தனை களுக்கு இணங்க காப்புறுதி செய்தோன் செயற்படாத சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் செயலற்றதாகி விடும் (உ+ம்)
6 மாதம் கட்டணம் செலுத்தாத சந்தர்ப் பத்தில் இக்கட்டணத் தொகையுடன் வட் டியையும் செலுத்தி புதுப்பிக்கலாம். தற் போது நிலையற்ற வருமானம் உள்ளவர்க ளின் நன்மை கருதி 24 மாத நிலுவையும் வட்டியையும் செலுத்தி ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை புதுப்பிக்கலாம். (உ+ம்) பொதுஜன றக்சன காப்புறுதி)

ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற் கொண்ட ஒருவர் கட்டணத்தை தொடர்ந்து செலுத்த முடியாத நிலைமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கீழ்வரும் மாற்று நடவடிக்கைகளை கடைப்பிடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

I ஒப்படைப்பு பெறுமானம்

மூன்று வருடங்களுக்கு குறையாமல் தவணைக்கட்டணம் ஒழுங்காக செலுத்தி வரின் செலுத்திய தொகையில் இருந்து ஏற்பட்ட செலவினைக் கழித்துக் கொண்டு காப்புறுதி நிறுவனத்திடம் மீதித்தொகை யினைப் பெற்றுக் கொள்ளலாம். இதனையே ஒப்படைப்பு பெறுமானம் என்பர்.

II செலுத்திய அல்லது இறுத்த ஆயுளுறுதி யாக மாற்றுதல்

மூன்று வருடங்களுக்கு குறையாமல் தவணைக்கட்டணத்தைச் செலுத்திவரின் இய லாமை ஏற்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிறுவனத்திற்கு உரிய காரணத்தைக் கூறி செலுத்திய கடனைத் தொகைக்கு ஏற்ப

ஒப்பந்தத் தொகையினைக் குறைத்துக் கொள்வதனையே செலுத்திய காப்புறுதி என்பர். இத்தொகை இடைக்காலத்தில் இறப்பு ஏற்படாத சந்தர்ப்பத்தில் ஒப்பந்த காலம் முடிந்த பின்னரே வழங்கப்படும்.

III கடன் பெறுமானம்

ஆயுளுறுதியை மேற்கொண்டவர் 3 வருடங்களுக்கு குறையாமல் கட்டணம் செலுத்திவரின் ஆயுளுறுதிப் பத்திரத்தை சமர்ப்பித்து காப்புறுதி நிறுவனத்திடம் கடன் பெற்றுக்கொள்ளலாம். செலுத்திய தொகையில் 90% இவ்வாறு கடனுகப்பெற்றுக் கொள்ளலாம். கடனையும் வட்டியையும் உரியகாலத்தில் செலுத்தாத சந்தர்ப்பத்தில் செலுத்திய தொகையில் கடனும் வட்டியும் கழித்து மிகுதித்தொகை வழங்குவதுடன் ஒப்பந்தமும் செல்லுபடியற்றதாக அமையும்.

VI ஆயுள் காப்புறுதிக்கு பங்கு இலாபம்

ஆயுளுறுதி ஒப்பந்தத்துக்கு மட்டுமே பங்கு இலாபம் வழங்கப்படுகிறது. இப்பங்கு இலாபம் வருடாவருடம் பத்திரங்களாக அனுப்பப்பட்டு ஒப்பந்தத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகின்றது. ஆயுளுறுதிக்கு மட்டும் பங்கு இலாபம் வழங்கப்படுவதற்கு கீழ்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

(i) ஆயுளுறுதி நீண்டகால ஒப்பந்தமாக காணப்படுவதால் இதனை மேற்கொள்வோருக்கு ஊக்கம் அளித்தல்.

(ii) அதிக இலாபம் ஆயுளுறுதியால் உழைப்பதால் ஒருபகுதியை இவர்களுக்குப் பகிர்ந்தளித்தல்.

(iii) ஆயுளுறுதி ஒப்பந்ததொகை கட்டாயம் வழங்கப்படுவதால் சேர்த்து வழங்கக் கூடியதாக இருக்கிறது.

(iv) சேமிப்பு நடவடிக்கையாக காணப்படுவதால் தூண்டுவதற்கு இவ்வாறு வழங்குகின்றது.

III ஆயுள் காப்புறுதியின் முக்கியமான வகைகள்:-

(அ) காலம் குறித்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம்

காலம் வரையறுக்கப்படு மேற்கொள்ளப்படுகின்ற ஆயுள்காப்புறுதி ஒப்பந்தமே குறிக்கப்படுகின்றது. ஒப்பந்தகாலம் 55 வயதினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

(ஆ) முழு அல்லது மொத்த ஆயுள்காப்புறுதி

ஒப்பந்தகாலம் வரையறுக்கப்படாமல் குறிக்கப்பட்ட நபர் உயிருடன் இருக்கும் வரை கட்டணம் செலுத்துவதாக உறுதி கூறி மேற்கொள்ளப்படுகின்ற ஆயுளுறுதியினையே குறிக்கின்றது.

(இ) பிள்ளைகள் ஆயுள்காப்புறுதி

பெற்றோரின் ஆயுள் பிள்ளையின் பெயரில் காப்புறுதி செய்யப்படுகின்றது. இதனால் பெற்றோரின் ஆயுளுக்கு இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் பண அடிப்படையில் பாதுகாப்பு பெறலாம். 18 வயதுக்கு குறைந்த திருமணமாகாதவர் பிள்ளை என வரையறுக்கப்படுகிறார். பிள்ளை இறந்தால் இன்னொரு பிள்ளைக்கு ஒப்பந்தத்தினை மாற்றலாம். அல்லது செலுத்திய கட்டணத்தை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

(ஈ) கூட்டு ஆயுள்காப்புறுதி

ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்கள் ஒன்றுசேர்த்து காப்புறுதி செய்வதனையே இது குறிக்கின்றது. ஒரு உயிர் இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஏனையோர் ஒப்பந்த தொகையினை பெற்றுக் கொள்ளலாம். (உ+ம்) கணவன் மனைவி, பங்குடமையில் பங்காளர், மேற்கொள்ளலாம்.

(உ) மூன்று நன்மைகளைக் கொண்ட ஆயுள் காப்புறுதி

இக்காப்புறுதி 18 — 55 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மேற்கொள்ளலாம். குறைந்தது 10000 ரூபாவும் கூடியது

100,000 ரூபாவும் ஒப்பந்தத்தொகையாகக் காணப்படுகின்றது. மூன்று அடிப்படைகளில் இதன் பணம் வழங்கப்படுகிறது.

(1) ஒப்பந்த காலம் முடியும்வரை உயிருடன் இருப்பின் ஒப்பந்த தோகையும் பங்கு இலாபமும் வழங்கப்படும்.

(2) இடைக்காலத்தில் நோயினால் இறப்பின் ஒப்பந்ததொகையின் இருமடங்குடன் பங்குஇலாபமும் வழங்கப்படும்.

(3) விபத்தினால் இறப்பு ஏற்படின் ஒப்பந்த தொகையின் மூன்று மடங்கும் பங்கு இலாபமும் வழங்கப்படும்.

(ஊ) மூன்றுகட்ட காப்புறுதி

இவ்ஆயுள் காப்புறுதியின் ஒப்பந்த தொகை ஒப்பந்த காலம் முடிதல், அல்லது இடைக்காலத்தில் இழப்பு ஏற்படாமலே ஒப்பந்ததொகையின் ஒரு பகுதியை இடைக்காலத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவ் ஒப்பந்த தொகை கீழ்வரும் அடிப்படைகளில் பெற்றுக் கொள்ளபபடுகின்றது.

(i) ஒப்பந்தம் மேற்கொண்டு 5 வருடங்களின் பின்பு ஒப்பந்ததொகையில் 20%த்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

(ii) மேலும் 5 வருடங்களின் பின்பு ஒப்பந்த தொகையில் 20% த்தினை பெற்றுக் கொள்ளலாம்.

(iii) மிகுதி ஒப்பந்தகாலம் முடிந்தால் அல்லது இடைக்காலத்தில் இழப்பு (இறப்பு) ஏற்பட்டால் பெற்றுக் கொள்ளலாம்.

(எ) ஜனதா அல்லது மக்கள் காப்புறுதி

வருமானம் குறைந்த சாதாரண மக்களும் காப்புறுதியின் நன்மைகளை அனுபவிக்கும் முகமாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதே இதுவாகும். வருடாந்தம் 45ரூபாவினை கட்டணமாக செலுத்துவதன் மூலம் இக்காப்புறுதியின் அனுகூலங்களை அனுபவிக்கலாம். முழு அளவில் இழப்பு (இறப்பு) ஏற்படும்போது 15000 ரூபாவும் நோயினால் பாதிக்கப்படும்போது 7500 ரூபாவும் வழங்கப்படுகிறது. மரணச் சடங்கு செலவுக்கு 2500/- வழங்கப்படுகிறது.

(ஏ) பொதுஜன (றக்சன) காப்புறுதி

நிலையில்லாத வருமானங்கள் உள்ள வரும் காப்புறுதியின் நன்மைகளை அனுபவிக்குமுகமாக இது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இதன் பிரகாரம் 2 வருடங்கள் கட்டுப்பண நிலுவையை செலுத்துவதன் மூலம் ஒப்பந்தத்தினை செல்லுபடியானதாக்க முடியும்.

(ஐ) ஆதார நிதிக் காப்புறுதி

பெற்றோர் தம்பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி மேற்கொள்ளப்படுகின்ற ஆயுள் காப்புறுதியே இதுவாகும். இது கீழ்வரும் வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

(i) கல்வி ஆதார நிதிக் காப்புறுதி

(ii) திருமண ஆதார நிதிக் காப்புறுதி

கல்வி ஆதார நிதிக் காப்புறுதியில் பிள்ளைகள் உயர்கல்விக்கு தெரிவு செய்யப்படும்போது ஒப்பந்ததொகை 5 வருடங்களில் வகுத்து வழங்கப்படுகிறது.

பிள்ளைகளின் திருமணத்திற்காக ஒப்பந்தகாலம் ஒப்பந்த தொகை ஆகியன குறிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதே திருமண ஆதார நிதிக் காப்புறுதியாகும். இங்கு ஒப்பந்தகாலம் முடிவடைந்த பின்னரே ஒப்பந்ததொகை வழங்கப்படுகிறது.

(ஒ) ஜன சந்தா காப்புறுதி (Jena Sentha)

இது அண்மைக் காலத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட ஆயுள் காப்புறுதியாகும். 18 — 60 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இக்காப்புறுதியினை மேற்கொள்ளலாம். குறைந்தது 25000

ரூபா ஒப்பந்த தொகையாகும். மேல் எல்லை வரையறுக்கப்படவில்லை. இங்கு காணும் சிறப்பம்சம் யாதெனில் ஒப்பந்த தொகையுடன் வருடாவருட 5% கூட்டப்படும். ஒப்பந்ததொகையினை கீழ்வரும் இரு அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

(i) ஒப்பந்தகாலம் முடியும்வரை குறிக்கப்பட்ட நபர் உயிருடன் இருப்பின் ஒப்பந்த தொகையும் வருடா வருடம் 5% கூட்டிய தொகையினையும் சேர்த்து பெற்றுக் கொள்ளலாம்.

(ii) இடைக்காலத்தில் விபத்து மரணமாயின் ஒப்பந்ததொகையின் இருமடங்கு தொகையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

(2) அபாயக் காப்புறுதி

எதிர்பாராமல் உடமைக்கு, அல்லது உறுப்புகளுக்கு விபத்தினால் ஏற்படும் நட்டம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்யும் நோக்கோடு மேற்கொள்ளப்படுவது அபாயக்காப்புறுதியாகும். உடமைக்கு நட்டம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட நட்டம் மதிப்பிடப்பட்டு நட்டஈடு வழங்கப்படுகிறது. இவ்வாறு நட்டஈடு வழங்கும் போது ஒப்பந்ததொகையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. இவ்அபாயக் காப்புறுதியினை கீழ்வருமாறு வகுத்து நோக்கலாம்.

(i) கடலபாயக் காப்புறுதி

(ii) தீ அபாயக் காப்புறுதி

(iii) விபத்துக் காப்புறுதி

I கடலபாயக் காப்புறுதி

(அ) கப்பலுக்கோ அல்லது அதில் உள்ள பொருட்களுக்கோ பயணிகளுக்கோ எதிர்பாராமல் இழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் பாதுகாப்பு பெறும் நோக்கோடு குறிக்கப்பட்ட நபருக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற ஒப்பந்தமே இதுவாகும். சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியினால் இதன் முக்கியம் இன்று அதிகரித்து காணப்படுகிறது.

கடலபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் போது கீழ்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(i) காப்புறுதி முகவருடன் தொடர்பு கொள்ளல்.

(ii) காப்புறுதி முகவர் ஆரம்ப பத்திரத்தினை தயாரித்தல். இதில் கப்பல் பொருட்களின் பெறுமதி கடல்வழிப் பயணகாலம் காப்புறுதியின் தன்மை, பெயர் போன்ற விபரம் சமர்ப்பிக்கப்படல்

(iii) முகவர் மறுகாப்புறுதி செய்வோரை தெரிவு செய்தல்.

(iv) காப்புறுதி நிறுவனம் காப்புறுதி செய்வதற்கான முன்வருதலை ஏற்றுக் கொள்ளல்.

(v) இறுதிப்பத்திரம் தயார் செய்து வழங்கப்படும்.

(ஆ) கடலபாயக் காப்புறுதி தொடர்பான பதங்கள்:-

(1) பூரண மொத்த நட்டம் / உண்மையான மொத்த நட்டம்

கப்பலுக்கோ பொருட்களுக்கோ முழு அளவில் கடலாபத்தினால் நட்டம் ஏற்படுவதனையே இது குறிக்கின்றது. இங்கு ஒப்பந்த தொகையே ஆகக்கூடுதலாக வழங்கப்படும்.

(2) திருத்தினாலும் மொத்த நட்டம்/ஆக்கப் பங்கான மொத்த நட்டம்

கப்பலுக்கோ, பொருட்களுக்கோ முழு அளவில் நட்டம் ஏற்படாமையைக் குறிக்கின்றது. ஆனாலும் இவற்றைக்கொண்டு வரு

வதற்கு அல்லது திருத்துவதற்கு ஒப்பந்த தொகையினைவிட கூடுதலாக செலவு ஏற் படும் என காப்புறுதி நிறுவனம் எதிர் பார்ப்பின் ஆகக்கூடுதலாக ஒப்பந்ததொகை யினையையே வழங்கும்.

(3) கப்பல்கள் சகர்பான வெளிஎறிதல் :-

கப்பல் கடல் விபத்தினுல் மூழ்கிவிடும் ஆபத்தினை அடையும்போது கப்பலில் உள்ள ஒரு பகுதி பொருட்களை கடலில் வீசுவதன் மூலம் கப்பலையும் ஒருபகுதிப் பொருட்களை யும் பாதுகாக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு வீசப்படுவதனையே கப்பல் சார் பான வெளிஎறிதல் என்பர்.

(3) பொதுச் சராசரி

கப்பல் சார்பான வெளிஎறிதல் மூலம் ஏற்பட்ட நட்டத்தினை கப்பல் கம்பனியும் பொருட்களை அனுப்பியோர் யாவரும் அதன் பெறுமதி அடிப்படையில் பொறுப்பு ஏற்க வேண்டும். என்பதனை விளக்குவதே பொதுச்சராசரி ஆகும். இது காப்புறுதி செய்யப்பட்டிருப்பின் இவ்வாறு பொறுப்பு ஏற்க வேண்டியதில்லை.

(4) வஞ்சச் செயல் :-

கப்பல் கடலில் மூழ்கிவிடும் ஆபத் தினை அடையாதபோதும் கப்பலில் உள்ள பொருட்கள் கடலில் வீசப்படின் அதனையே வஞ்சச் செயல் என்பர். இந்நட்டத்தினை மாலுமியே பொறுப்பு ஏற்க வேண்டும்.

(5) விசேட சராசரி:-

கடலபாயக் காப்புறுதி தனித்தனி நட் டங்கள் குறிப்பிடப்பட்டு காப்புறுதி செய் வதனையே இது குறிக்கிறது. நீரில்மூழ்குதல். கொள்ளையடித்தல் போன்ற நிகழ்வு நட்டம் குறிப்பிடப்பட்டு மேற்கொள்ளப்படலாம்.

(இ) முக்கியமான கடலாபயக் காப்புறுதிப் பத்திரம்

(i) பெறுமானம் குறித்த கடலபாயக் காப்பு றுதிப் பத்திரம்

பெறுமதி வரையறுக்கப்பட்டு மேற் கொள்ளப்படுகின்றது. நட்டம் எற்படின் ஆகக்கூடுதலாக நட்டத் தொகையே வழங் கப்படும்.

(ii) பெறுமானம் குறியாத கடலபாயக் கா : புறுதிப் பத்திரம்:

பெறுமானம் வரையறுக்கப்படாமல் மேற்கொள்ளப்படுகின்ற இக்காப்புறுதிப்பத் திரத்தில் நட்டம் ஏற்பட்ட பின்னரே நட் டம் மதிப்பிடப்பட்டு வழங்கப்படுகின்றது.

(iii) மிதக்கும் கடலபாயக்காப்புறுதிப் பத்தி ரம்:

தொடர்ச்சியாக ஏற்றுமதி வியாபா ரத்தில் ஈடுபடுபவர்கள் குறிக்கப்பட்ட காலத் தில் கடலபாயத்தினுல் நட்டம் ஏற்படும் போது பினை அடிப்படையில்லாத காப்புப் பெற உதவுகிறது. இதனுல் நேர விரயம் பணவிரயம், சிரமங்கள் தவிர்க்கப்படுகின் றது

(iv) பிரயாணம் குறித்த காப்புறுதிப் பத் திரம்

இரண்டு துறைமுகங்கள் குறிக்கப்பட்டு அவற்றுக்கிடையிலான பிரயாணத்தில் கட லபாயத்தினுல் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்யும் நோக்கோடு இக்காப்புறுதி மேற் கொள்ளப்படுகின்றது. பாதைமாறி நட் டம் ஏற்படின் காப்புறுதி நிறுவனம் நட்ட ஈட்டுத் தொகையினை வழங்கமாட்டாது.

(v) காலம் குறித்த கடலபாயக் காப்புறுதிப் பத்திரம் :

இரண்டு திகதிகள் குறிக்கப்பட்டு அவற் றுக்கு இடையிலான காலத்தில் கப்பலுக் கோ, பயணிகளுக்கோ, கடலபாயத்தினுல் நட்டம் ஏற்படின் பண அடிப்படையில் பாதுகாப்புப் பெறும் நோக்கோடு இக் காப்புறுதி மேற்கொள்ளப்படுகிறது. காலம் கடந்து நட்டம் ஏற்படின் காப்புறுதி நிறு

வனம் நட்டஈட்டுத் தொகையினை வழங்க மாட்டாது.

(vi) கலப்புக் காப்புறுதிப் பத்திரம்

பிரயாணம் குறித்தும், காலம் குறித்தும் மேற்கொள்ளப்படுகின்ற காப்புறுதிப் பத்திரத்தினைக் குறிக்கின்றது. இங்கு பிரயாணம் மாறினால் காலம் கடக்காமல் இருக்கலாம். காலம் கடந்து நட்டம் ஏற்பட்டால் பிரயாணம் மாறுமல் இருக்கலாம். இதனால் நட்ட ஈட்டுத்தொகை பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுகிறது.

(vii) துறைமுக அபாயக் காப்புறுதி :

பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்குத் துறைமுகத்தில் கப்பல் தரித்து நிற்கும்போது கடல் விபத்தினால் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்ய இது உதவுகின்றது.

(viii) கப்பல் நிர்மானக் காப்புறுதி:

கப்பல் கட்டும்போது அல்லது திருத்தும்போது கடல் விபத்தினால் ஏற்படும் நட்டத்தினை ஈடுசெய்ய உதவுகின்றது.

III. தீ அபாயக் காப்புறுதி :

தீயினால் உடமைக்கு இழப்புகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் பாதுகாப்பும் பெறும் நோக்கோடு குறிக்கப்பட்ட நபருக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற ஒப்பந்தமே தீ அபாயக் காப்புறுதியாகும். தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது நட்டம் ஏற்படும்போதும் சொத்துரிமை இருத்தல் வேண்டும். சொத்துக்கள் கை மாற்றம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிப்பத்திரத்திற்கு பெயரும் மாற்றப்பட வேண்டும்.

தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்தத்தில் கலவரங்கள், சூறாவளி, துவேசநடவடிக்கை, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றினால் ஏற்படும் நட்டங்களையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனாலும் இவற்றுக்கு மேலதிகக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். தீயினால் நட்டம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படின் அவற்றுக்கான காப்புறுதிக் கட்டணமும் உயர்வானதாக இருக்கும். உ+ம். ஓலையால் வேயப்பட்ட வீடு, வெடி மருந்துத் தொழிற்சாலை.

தீ அபாயக் காப்புறுதி கீழ்வருவன தொடர்பாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

(i) சொந்த வீட்டுத் தீ அபாய ஒழுங்குப் பத்திரம்

(ii) வியாபாரநிலை தீ அபாய ஒழுங்குப் பத்திரம்.

(iii) தொழிற்சாலை தீ அபாய ஒழுங்குப் பத்திரம்.

(iv) சரக்கு இருப்பு தீ அபாய ஒழுங்குப் பத்திரம்.

(v) கட்டிட நிர்மான தீ அபாய ஒழுங்குப் பத்திரம்.

தீ அபாயக் காப்புறுதி ஒப்பந்த வகைகள்:

(i) பெறுமானம் குறித்த தீ அபாயக் காப்புறுதி

(ii) பெறுமானம் குறியாத தீ அபாயக் காப்புறுதி

(iii) மிதக்கும் தீ அபாயக் காப்புறுதி – பல சொத்துக்களுக்கு பொதுவாக மேற்கொள்ளப்படுகின்ற தீ அபாயக் காப்புறுதியைக் குறிக்கின்றது.

III. விபத்து நட்டஈடு:

உடமைக்கு அல்லது உயிருக்கு அல்லது உறுப்புகளுக்கு விபத்தினால் ஏற்படும் நட்டத்தினை ஈடுசெய்யும் நோக்கோடு மேற்கொள்ளப்படுகின்ற காப்புறுதியே விபத்துக் காப்புறுதியாகும்.இவ்வாறான விபத்து நட்ட

ஈடு கீழ்வருமாறு பல்வேறு வழிகளில் மேற் கொள்ளப்படுகின்றது.

அ) மோட்டார் வாகனக் காப்புறுதி :

விபத்தினால் மோட்டார் வாகனத்திற் கும், அதில் பயணம் செய்பவர்களுக்கும் கொணடு செல்லப்படும் பொருட்களுக்கும், மூன்றும் நபருக்கும் அல்லது மூன்றும் நபர் களின் உடமைகளுக்கும் இழப்பீடுகள் ஏற்ப டும் சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் பாதுகாப்புப் பெறும் நோக்கோடு மேற் கொள்ளப்படுகின்ற காப்புறுதியே மோட் டார் வாகனக் காப்புறுதியாகும். இவ்வா று மேற்கொள்ளப்படும் காப்புறுதி கீழ்வருமாறு மேற்கொள்ளப்படலாம்.

I படர்க்கை அல்லது மூன்றும் நபர் காப்பு றுதி :

1951 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கட்டாயமாக இக்காப்புறுதி எல்லா வாகனங்களும் மேற்கொண்டே வீதி யில் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள் ளது. வாகன விபத்தினால் மூன்றும் நப ருக்கு அல்லது அவர்களது உடமைகளுக்கு இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பண அடிப்படையில் பாதுகாப்பு வழங்க இக்காப் புறுதி உதவுகிறது.

II. பல்துறைக் காப்புறுதிப்பத்திரம்

ஒன்றுக்குமேற்பட்ட நட்டங்களை இணைத் துக் காப்புறுதி செய்யப்படுவதனையே இது குறிக்கிறது. உ+ம்: வாகனம், சாரதி, பய ணிகள், கொண்டு செல்லப்பட்ட பொருட் கள் ஆகியவற்றுக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடுசெய்யும் நோக்கோடு மேற்கொள்ளப் படுகிறது.

III. அகல்விரிவுப்பத்திரம் (முழுப்பொறுப்பு டனான காப்புறுதி):

குறிக்கப்பட்ட வாகனத்திற்கும் அதில் உள்ள பயணிகள், பொருட்களுக்கு மட்டு மன்றி வாகன விபத்தினால் எதிர்வாகனத் திற்கும் அதில் உள்ள பொருட்கள் பயணி களுக்கும் ஏற்படும் நட்டத்தினையும் ஈடு செய்யும் நோக்கோடு மேற்கொள்ளப்படு வதே இதுவாகும்.

IV ஈடுகோராதமிகை ஊதியம்:

காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனம் விபத்தில் சிக்காத சந்தர்ப்பத்தில் கட்டுப்பணம் படிப்படியாக குறைக்கின்ற நடவடிக்கையினையே இது குறிக்கின்றது.

ஆ) தொழிலாளர் நட்ட ஈடு:

தொழிலாளருக்கு வேலைநேரத்தில்உறுப் புக்களுக்கோ, அல்லது ஆயுளுக்கோ எதிர் பாராமல் விபத்தினால் இழப்பு ஏற்படின் இதனைப் பண அடிப்படையில் ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு தொழில் கொள்வோ னுடையது ஆகும். தொழிலாளனின் நட்ட ஈட்டுப் பத்திரதைப் பெறுவதன் மூலம் இந் நட்டங்களை ஈடு செய்யும் பொறுப்பு காப் புறுதி நிறுவனத்தினுடையதாகும்.

தொகுப்பு நட்டஈடு:

ஒரு நிறுவனத்தில் பல ஊழியர்கள் சேர்ந்து ஒரு பெரிய தொகைக்கு காப்புறுதி நிறுவனத்துடன் ஒப்பந்தத்தை மேற் கொண்டு இதற்கான கட்டணத்தினை சம்ப ளப்பட்டியலூடாக திரட்டி செலுத்திவரு கின்ற ஒரு காப்புறுதியையே இது குறிக்கின் றது. இது கைத்தொழில் ஊழியருக்குக் கீழ்வரும் வழிகளில் அனுகூலமுடையது.

(i) கூடிய தொகையாக அமைந்தாலும் ஊழியருக்கு தனிக் கட்டணம் குறை வாக அமைந்திருக்கும்.

(ii) கட்டணம் உத்தியோக பூர்வமாகச் செலுத்தப்படுகின்றது.

(iii) கட்டணம் கிரமமாகக் கொடுக்கப்படும்

(iv) எதிர்காலத்தில் இது ஒரு சமூக நலன் திட்டமாக அமையும்.

(இ) நம்பிக்கை காப்புறுதி (விசுவாசக்காப்புறுதி)

தொழிலாளரின் விசுவாசத்தை தொழில் கொள்வோன் இழக்கும் சந்தர்ப்பத்தில் இதனால் தொழில் கொள்வோனுக்கு ஏற்படும் நட்டத்தினை பண அடிப்படையில் பாதுகாக்கும் நோக்கோடு குறிக்கப்பட்ட நபருக்கும் காப்புறுதிநிறுவனத்திற்கும் இடையில் ஏற்படுகின்ற ஒப்பந்தமே இதுவாகும். (உ+ம்) காவலாளர் பதவி, களஞ்சியப் பொறுப்பாளர் பதவி ஆகியவற்றிற்கு இக்காப்புறுதி மேற்கொள்ளப்படுவதனை குறிப்பிடலாம். இப்பதவிகளை வகிப்போரின் நேர்மையீனங்களால் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்ய உதவுகின்றது.

(ஈ) களவு அல்லது கொள்ளை அபாயக் காப்புறுதி

களவு காரணமாக உடமைகளுக்கு ஏற்படும் நட்டத்தினை பண அடிப்படையில் ஈடுசெய்ய இது உதவுகின்றது. அத்துமீறி நுழைந்து உடமைக்கு ஏற்படுத்தும் நட்டத்தினை ஈடுசெய்ய உதவுகிறது.

உ நிதிக் காப்புறுதி:-

நிறுவனத்தில் அல்லது வங்கிக்கு எடுத்து செல்லுகையில் வழியில் பணம் கொள்ளை அடிக்கப்படலாம். இவ்வாறான இழப்பினை ஈடுசெய்யும் நோக்கோடு தொழில் முயற்சியாளனால் இக்காப்புறுதி மேற்கொள்ளப் படலாம். வழமையாக எடுத்துச் செல்லக் கூடிய பணத்தொகை, வழி, தடவைமுறை இவைகள் முயற்சியாளனால் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) இயந்திரக் காப்புறுதி

கைத்தொழில் நிறுவனங்களில் உள்ள இயந்திரங்கள் பழுதடையும்போது ஏற்படும் திருத்தச் செலவினை அல்லது புதுப்பித்தல் செலவினை பெறும் நோக்கோடு குறிக்கப் பட்ட முயற்சியாளனுக்கும் காப்புறுதிநிறுவனத்திற்கும் இடையில் ஏற்படும் ஒப்பந்தமே இதுவாகும். இதனால் முயற்சியாளனுக்கு ஏற்படும் பெரும் தொகையான செலவு ஈடு செய்யப்படுகின்றது.

(எ) வெளிநாட்டு முதலீட்டுக் காப்புறுதி

வெளிநாட்டில் முதலீட்டை மேற்கொள்பவருக்கு அந்நாட்டில் ஏற்படும் யுத்தம், அரசின் தேசியமயமாக்கல் கொள்கை இலாபம் பங்கு இலாபங்களை தடுத்து வைத்தல் போன்ற வழிகளில் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்யும் நோக்கோடு முதலீட்டாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற காப்புறுதியினையே குறிக்கின்றது.

(ஏ) சேவைகள் காப்புறுதி :-

அந்நியருக்கு கடன் அடிப்படையில் சேவை வழங்குபவர்கள் இக்கடனைப் பெறுமையினால் ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்வதற்காக மேற் காள்ளப்படுவதே இக் காப்புறுதியாகும். இவ்வாறான சேவைக்கு உதாரணமாக கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குதல் ஹோட்டல் உடமையாளர், பிரயாண முகவர் நிலையம், வெளிநாட்டு வேலைகளுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

(ஐ) நோயினால் ஏற்படும் இயலாமைக்கெதிரான காப்புறுதி :-

தாளாந்தம் தொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடாத்தும் தொழிலாளி நோயினால் பாதிப்பு ஏற்பட்டு உழைக்க முடியாத சந்தர்ப்பத்தில் நட்ட ஈட்டுத் தொகையினை பெறும் நோக்கோடு இக்காப்புறுதி மேற் கொள்ளப் படுகின்றது.

ஒ) வெளிநாட்டில் தொழில் புரிபவருக்கு காப்புறுதி

வெளிநாடுகளில் தொழிலுக்குச் செல்லும் இலங்கையரின் நலன் கருதி இக்காப்

புறுதி தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இதன் முதல்வருடக் கட்டணம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமே செலுத்தும் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்பவர்கள் வருடத்திற்கு 50000/- ரூபாவிற்கு காப்புறுதி செய்யப்படுபவர் மரணம், விபத்து போன்றவற்றினால் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இந்நட்டஈட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ளலாம். தொழிலாளர் தரத்தில் ஒருவர் 50000 ரூபாவிற்கு 315 ரூபாவினையும் பெண்கள் 270 ரூபாவினை தவணைக்கட்டணமாக செலுத்த வேண்டும்.

8. ஆயுளுறுதிக்கும் ஏனைய காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள்

ஆயுளுறுதி

1. உறுதி ஒப்பந்தமாக காணப்படுகிறது. இதனால் ஒப்பந்ததொகை வழங்கப்படும்.
2. ஈட்டுறுதித்தத்துவம் பகிர்ந்தளித்தல் தத்துவம் பொருந்தாது.
3. பங்கு இலாபம் வழங்கப்படும்.
4. சேமிப்பாக காணப்படுகிறது.
5. காப்புறுதி பத்திரத்தை சமர்ப்பித்து கடன் பெறலாம்.

ஏனைய அபாயக் காப்புறுதி

1. நட்டம் ஏற்பட்டால் மட்டுமே நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும். நட்டம் ஏற்படாத சந்தர்ப்பத்தில் கட்டுப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2. ஆள்சார் விபத்துக்காப்புறுதி தவிர்ந்த ஏனையவற்றுக்கு இத்தத்துவங்கள் பொருந்தும்.
3. பங்கு இலாபம் வழங்கப்படுவதில்லை.
4. நட்டத்தை ஈடுசெய்து பழைய நிலையில் பாதுகாக்கிறது.
5. கடன் பெற முடியாது.

1890 ம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் 24-ம் பிரிவு

பங்காளருக்கிடையில் ஒப்பந்தம் இல்லாத விடத்து பங்குடமை சம்பந்தமாக இப் பிரிவு பின்வரும் ஏற்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது.

1. பங்காளர் அனைவரும் இலாபநட்டத்தை சமனாக பகிர வேண்டும்.
2. பங்காளர் மூலதனத்திற்கு வட்டி பெற முடியாது.
3. பங்காளர் பற்றுகளுக்கு வட்டி இல்லை.
4. பங்காளர் எவரும் சம்பளம் பெற முடியாது.
5. பங்காளர் மேலதிக கடன் ஏதாவது கொடுத்திருப்பின் அதற்கு ஆண்டிற்கு 5% வட்டி பெற முடியும்.

வங்கி நடவடிக்கைகளில் கணனிப் பயன்பாடு

த. குணநேசன் B. Com (Hons)
உதவி விரிவுரையாளர்
வணிக முகாமையியல் துறை
யாழ். பல்கலைக் கழகம்

கணனிப் பிரயோகம் எல்லா வகையான துறைகளிலும் பன்முகப்படுத்தப்பட்டு வருவதுடன் ஒவ்வொரு துறைரீதியான அபிவிருத்தியும், மாற்றங்களும் கணனியில் பெருமளவு தங்கியிருப்பதை அவதானிக்கலாம். இலங்கைபோன்ற 3-ம் உலக நாடுகளில் அபிவிருத்திப் படிமுறை வளர்ச்சி வளர்ச்சியடைந்த நாடுகளின் அபிவிருத்திப் படிமுறைகளின் வளர்ச்சியில் இருந்து மாறுபட்ட வடிவமாகக் காணப்படுகிறது. நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்த மாற்றங்கள் உடனுக்குடன் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் புகுத்தப்படாமல் இருப்பதே அவற்றின் பின்தங்கிய தன்மைக்கு ஒரு முக்கிய காரணமாக முன்வைக்கப்படுகின்றது. நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்த வளர்ச்சிகள் பல்வேறு வடிவங்களில் இனங் காணப்படுகின்ற போதிலும் இந்தியா, இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெருமளவிற்கு எல்லாத் துறைகளையும் இன்று ஆக்கிரமித்துவரும் ஒரு கருவியாகக் கணனியும், அவற்றுடன் இணைந்த நடவடிக்கைகளும் அமைகின்றது. கணனிப்பிரயோகம் பல்வேறு துறைகளிலும் பரந்து செல்கின்ற போதிலும் இக்கட்டுரை வங்கித்தொழில் நடவடிக்கைகளில் கணனிப் பயன்பாடு என்பது பற்றி அதிக அக்கறை காட்டியுள்ளது.

வங்கித் தொழில் துறை இன்று பெருமளவிற்கு கணனிமயப்படுத்தப்பட்ட ஒரு துறையாக விளங்குகின்றது. வங்கி நடவடிக்கைகள் கணனி இல்லாமல் இயங்க முடியாத நிலையை, இன்றைய வங்கி நடவடிக்கைகளின் அதிகரிப்பு ஏற்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர் கணக்குகள் யாவும் மின்னியக்கக் கருவிகளால் கையாளப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன, தன்னியக்கக் கருமபீடங்கள் அதிநவீனமட்டத்தை அடைந்துள்ளதுடன் அவை ஒவ்வொரு

வகையிலும் தவறு செய்யக் கூடிய மனிதனை விட மிகவும் சிறப்பாக செயற்படுகின்றன. கணனித் தொழில்நுட்பம் மூலம் வைப்புக்களை ஏற்றல், பணத்தை பிழையின்றி மாற்றிக் கொடுத்தல், வாடிக்கையாளரின் கணக்குப் புத்தகங்களைப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு கருமங்கள் ஆற்றப்படுகின்றன. இலங்கையில் வங்கிகள் யாவும் கணனிமயமாகுவதில் அதிக அக்கறை காட்டுவதுடன் கணனித் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகின்றது. தலைநகரைச் சுற்றியுள்ள பல்வேறு வங்கிகளும், அவற்றின் கிளைகளும் தமது பல்வேறு நடவடிக்கைகளையும் கணனி மூலமாகவே ஆற்றி வருகின்றன. இதன் மூலம் உடனுக்குடன் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவதுடன் வாடிக்கையாளர் தமது நேரத்தை வீணாகச் செலவழிக்க வேண்டி இருப்பதில்லை. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை உரியவர்களின் கணக்கில் வைத்து உள்நாட்டில் பணமாகவோ அல்லது காசோலையாகவோ, உடன் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கைகளை கணனி மேற்கொண்டு மாற்றிக் கொடுக்கின்றது.

ஒரு வங்கியானது பின்வரும் செயற்பாடுகளைச் செய்கின்றது.

(1) வாடிக்கையாளர் வைப்புகளை ஏற்றுக் கொள்ளல் வைப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.
   (அ) நடைமுறைக் கணக்கு
   (ஆ) நிலையான வைப்புக் கணக்கு
   (இ) சேமிப்புக் கணக்கு

(2) மேலதிகப் பற்றுக்களை வழங்குதல்.

(3) கடன்களை வழங்குதல்
   (அ) குறுங்காலக் கடன்
   (ஆ) நீண்டகாலக் கடன்

(4) உண்டியல்களையும், காசோலைகளையும் கழிவுடன் மாற்றுதல்.

இச்செயற்பாடுகளில் முக்கியமான ஒன்றாகவும், கூடிய அலுவல் கொண்ட ஒன்றாகவும் நடைமுறைக் கணக்குத் தொடர்பான நடவடிக்கைகள் காணப்படுகின்றன. ஒரு வியாபார நிறுவனத்தை உதாரணமாக எடுப்பின் நிறுவனம் ஒரு வங்கியில் கணக்கு வைத்திருக்கலாம். வாடிக்கையாளர்கள் இன்னொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் ஒருவர் பொருட்கொள்வனவுக்காக காசோலை ஒன்றை அனுப்பியிருப்பார். வழமையில் இம்முறையில் காசோலைக்குரிய பணத்தினைப் பெறுவதற்குக் குறித்த வாடிக்கையாளரின் கணக்குக் காணப்படும் வங்கியில் இருந்து குறித்த தொகையைக் கழித்து நிறுவன வங்கிக் கணக்கில் சேர்க்க வேண்டும். இந்நடவடிக்கைகளை மனித முறையில் ஊழியர்களைக் கொண்டு செய்யும்போழுது அதிகநேரம் எடுப்பதுடன், செலவும் அதிகமாக இருப்பதுடன் பிழைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. தற்போது வங்கி நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதுடன் வாடிக்கையாளர் தொகையும் அதிகமாகக் காணப்படுவதால் இத்தகைய சந்தர்ப்பங்கள் கூடுதலாக உள்ளது. கணனி அறிமுகத்துக்கு வந்த காரணத்தால் வங்கி நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப்பட்டு விரைவாகவும், இலகுவாகவும் பிழைகள் இன்றியும் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன. ஒருவாடிக்கையாளரின் காசோலையைக் கணனிக்குள் செலுத்தியதும் கணனியானது துரிதமாகச் செயற்பட்டு அவ்வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் இருந்து குறித்த தொகையினைக் கழித்து குறித்த நிறுவனத்தின் வங்கிக் கணக்குடன் கூட்டி விடுகின்றது.

எனினும் இத்தகைய முறையை அமுல் படுத்துவதற்கு முன் சில கருமங்கள் பூர்த் தியாக்க வேண்டும். அவையாவன

(1) கணனிமயமாக்குவதற்கு முன் எல்லாக் காசோலைகளும் Standardize பண்ணு தல் வேண்டும்.

(2) தேவையான தகவல்கள் எல்லாம் காசோலையில் பொறித்தல் வேண்டும்.

(3) கணனி காசோலையை வாசிக்கக்கூடிய மொழியில் தரவுகள் எழுதப்படுவது டன், பொறிக்கப்படவும் வேண்டும்.

இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய் வதற்காகக் காந்தத்தன்மையுடைய மையால் (Magnetic Ink) தகவல்கள், எழுத்துக்கள் என்பன குறியீடுகள் வடிவில் காசோலையில் பொறிக்கப்பட வேண்டும். இத்தகவல்கள் பொதுவாக வங்கி இலக்கம், வாடிக்கையா ளர் இலக்கம். அவைபோல் வேறு இரகசி யமான தரவுகள் என்பனவாகக் காணப் படும். இத்தகைய காசோலை M. I. C. R (Magnetic Ink Corrector Recognition) என்ற இயந்திரமூலம் வாசிக்கப்பட்டுக் கண னிக்கு வேண்டிய தகவல்களைக் கொடுக்கும். அதாவது காசோலையைக் கணனிக்குள் செலுத்தும் போது கணனிக்குள் உள்ள மின்சாரம் சூறிப்பிட்ட காசோலையில் உள்ள தகவல்களை ஒன்றுசேர்த்துத் தனக்கு வேண் டிய கணிப்புக்களைச் செய்கின்றது. இதன் மூலம் காசோலையை வாசிக்கவும், Sort பண்ணவும், அவை தொடர்பான கணக்கு களை வைப்பதற்கும் உதவுகின்றது.

A Steps Towards A Cashless Society

அண்மைக் காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட புதிய வலைப்பின்னல் கணனிமுறையானது (Computer Net Work) மனித வலுப் பிரயோகத்தினிருந்து கணனி முறைப் பயன்பாட்டுக்கு இட்டுச்செல்கின் றது. இது குறிப்பாகக் காசோலை மாற்றம் (Clearing of Cheques) சம்பந்தமாகவே காணப்படுகின்றது. இதற்கென ஒரு தன்னி யக்க மாற்றுப் பகுதியொன்று உருவாக்கப் பட்டுள்ளது. (Automatic Clearing House) இத்தன்னியக்க முறையானது ஓர் புதிய அணுகுமுறையானது. M. I. C. R என்ற முறையினைப் பாவனைக்கு அறிமுகப்படுத்தி யுள்ளது. இம்முறையானது மனிதனாலும் அதே நேரத்தில் இயந்திரத்தினாலும் வாசித்து விளங்கக் கூடியவாறான ஓர் ஊட கமாகக் காணப்படுகின்றது. வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருப்பவர்களுக் கும் ஏற்கனவே இந்தவகையான காசோலை கள் வழங்கப்பட்டுள்ளன. M. I. C. R முறையானது 30 வருட வரலாற்றை உடையதாகக் காணப்படுகின்றது. முதன் முதலாக தன்னியக்க மாற்றுப்பகுதியானது ''கலிபோர்னியா'' என்னும் இடத்தில் 1972 ல் ஆரம்பிக்கப்பட்டதாகும். தற் போது பெரும்பாலான மேற்கு நாடுகளில் இம்முறை நடைமுறையில் உள்ளது. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, கொங் கொங், இலங்கை என்பவற்றில் தற்போது புழக்கத்தில் இம்முறை வந்துள்ளது.

மத்திய வங்கியானது காசோலை மாற்று முறையைத் துரிதப்படுத்தும் நோக்குடன் மனிதவலுப் பயன்பாட்டிலிருந்து மாறிக் கணனிப் பயன்பாட்டிற்கு அதிக முக்கியத் துவம் கொடுத்து வருகின்றது. M. I. C. R காசோலைக்கும் சாதாரண காசோலைக்கும் இடையிலுள்ள முக்கிய வேறுபாடு பின்வரு மாறு காணப்படுகின்றது. அதாவது M. I. C. R காசோலையின் எல்லாப் பகுதி களிலும் காந்தத்திலான மூலாம் பூசப்பட் டுள்ளது. தற்போது எல்லா வர்த்தக வங் கிகளும் தம்பெயரில் எழுதப்பட்ட காசோ லையினை மாற்றீடு செய்யும் பொருட்டு மத் திய வங்கியின் ''தீர்க்கும் வீட்டில்'' (Clea-ring House) ஒருநாளைக்கு இரண்டு தட டவைகள் ஒன்று கூடுகின்றன. ஒவ்வொரு வங்கிகளும் தம்மிடம் உள்ள ஏனைய வங்கி களின் பெயரிலான காசோலைகளைத் தீர்க் கும் வீட்டின் உதவியுடன் பரிமாற்றிக் கொண்டு தமக்குச் சேரவேண்டிய, ஆனால் ஏனைய வங்கிகளிடம் உள்ள காசோலைகளை ஏற்றுக் கொள்கின்றன. இதுவே காசோலை மாற்ற நடவடிக்கை என அழைக்கப்படுகின்

றது. வங்கிகளின் உயர் உத்தியோகத்தர்களினால் கையாளப்பட்ட காசோலை மாற்ற நடவடிக்கைகளின் பின் இக் காசோலைகள் கணனிக்குள் செலுத்தப்படுகின்றன. கணனியானது இக்காசோலைகளை அதன் தன்மைக்கு ஏற்ப அது வரையறுக்கப்பட்ட வங்கிகளின் பெயரின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றது. இப்பகுதியே Reader or Sorter என அழைக்கப்படுகின்றது.

காந்தமூலாம் பூசப்பட்ட (Magnetic Ink) குறிப்பிட்ட சில வகையான காசோலைகளை கணனியானது வகைப்படுத்துகின்றது. சிறப்பாகக் குறிப்பிடுவதானால் M. I. C. R காசோலையில் அச்சிடப்பட்டிருக்கின்ற இலக்கங்களானது. இலகுவில் அழிக்கப்படவோ, அல்லது உருமாற்றப்படவோ முடியாதன. மாறுகக் காசோலையில் காணப்பட்ட அச்சு எழுத்துக்கள் அழிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கணனியானது காசோலையை ஏற்க மறுக்கின்றது. மடிக்கப்பட்ட அல்லது கிழிக்கப்பட்ட காசோலைகளைக் கணனியானது எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்கமாட்டாது. ஒரு நிமிடத்திற்கு 1400 காசோலைகளைக் கணனியின் Reader / Sorter பகுதியானது செயற்பாட்டுக்கு உள்ளாகின்றது.

கணனி அமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட காலத்தில் இருந்து தன்னியக்க காசோலை மாற்று முறையானது அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது இலங்கை வங்கியின் 290 கிளைகள் தற்பொழுது M. I. C. R காசோலைகளைப் பாவனையில் ஈடுபடுத்துகின்றன. அண்மையில் இலங்கை வங்கியின் இரு கிளைகளான கொள்ளுப்பிட்டி, யூனியன்பிளேஸ் ஆகிய கிளைகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக நடைமுறைக் கணக்குச் சேவைகளும் அடுத்து சேமிப்பு வைப்புப்பகுதி, நிலையான வைப்புப்பகுதி, கடன் பகுதி என்பனவும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை வங்கியின் தலைமையகம் ஏற்கனவே கணனி மயப்படுத்தப்பட்டு விட்டது. ஏனைய கிளை வங்கிகள் யாவும் நுண்பாகக் கணனி முறையினைப் (Micro Computer) பயன்படுத்துகின்றன. இலங்கை வங்கிக் கொழும்புப் பிராந்தியப் பொது முகாமையாளரின் கூற்றுப்படி கணனிமயப்படுத்தலின் மூலம் ஏற்கனவே நுகரப்பட்ட மனித மணித்தியாலத்தில் அரைப்பகுதியே தற்போழுது நுகரப்படுகிறது எனவும் வங்கியின் குறிப்பிட்ட சில பகுதிகள் சிறப்பாக இயங்க முடியுமெனவும் கூறுகின்றார்.

25 M. I. C. R காசோலைகளைக் கொண்ட ஒரு காசோலைப் புத்தகமானது இலங்கை வங்கியினால் 12 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படுகின்றது. தன்னியக்க காசோலை மாற்றுமுறையானது M. I. C. R காசோலை அமைப்பு முறையினூடாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் நடைமுறையில் காணப்படுகின்ற மக்கள் வங்கி, ஏனைய வர்த்தக வங்கிகள் ஆகியன M. I. C. R முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. 1987 ம் ஆண்டு முற்பகுதியில் இருந்து இலங்கையில் கணனி மாற்றுமுறை அமைப்பானது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தவகையில் கணனி அமைப்பானது தன்னியக்கக் காசோலை மாற்றுமுறையின் ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது. தன்னியக்க அமைப்புமுறையின் கீழ் மனித வலுவைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயந்திர முறைகளே கூடுதலாகப் பாவிக்கப்படுகின்றன. இத்தகைய தன்னியக்க இயந்திர முறையும் அதனோடு இணைந்த தன்னியக்கக் காசோலை முறையும் வர்த்தக நடவடிக்கைகளைச் சுலபமாக்குகின்றன. இலங்கையில் மத்திய வங்கியினூடாக உத்தியோகத்தர்கள் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டுத் தன்னியக்கக் காசோலை மாற்று முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றார்கள்.

இன்றைய காலத்தில் கணனியின் செயற்பாட்டுவேகம் பல்வேறுவகையான அனுகூலங்களைக் கொடுப்பதுடன் சிக்கனத் தன்மையையும் அளிக்கின்றது. கணனி மயப்படுத்தல் ஆரம்பத்தில் பெருமளவு மூலதனச் செலவைக் கொடுப்பினும் அதன் பின்னர் உள்ள செயற்பாடுகள் பெருமளவு செலவுகளை மீதப்படுத்தி மூலதனச் செலவை ஈடாக்கி செலவுச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க உதவுகின்றது.

இலங்கையில் பங்காண்மைச் சட்டம்

இங்கிலாந்தின் 1890ஆம் ஆண்டின் பங்காண்மைச் சட்டம் பங்காண்மை என்பதற்கு வரைவிலக்கணத்தைக் கூறுகிறது. அதன்படி பங்காண்மை என்பது "இலாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு ஆட்கள் சிலரால் பொதுப்படத் தொழில் ஒன்று கொண்டு நடாத்தப்படும் போது அத்தகைய ஆட்களுக்கிடையில் நிலவும் உறவுமுறையாகும். இவ்வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "தொழில்" என்ற பதம் ஒரு வியாபாரத்தையும், முயற்சியையும், உயர் தொழிலையும் (Profession) குறிக்கும்.

கூட்டுச்சொந்தம் (Co-ownership) பங்காண்மை ஆகாது. கூட்டுச்சொந்தம் ஒரு உடன்படிக்கையின் மூலம் ஏற்படவேண்டுமென்பதில்லை. மாறாக பங்காண்மையோ உடன்படிக்கையின் விளைவாக ஏற்படுகின்றது இருவருக்கு ஒரு காணியில் கூட்டாக வழியுரிமை இருப்பின் அவர்கள் அக்காணியின் பங்காளர்கள் அல்லர். எவராவது ஒருவர் மற்றவரின் சம்மதமின்றி தனது பங்கினை இன்னொரு மூன்றும் நபருக்கு விற்கமுடியும். ஆனால் பங்காண்மையில் மற்றைய பங்காளரின் சம்மதமின்றி ஒரு பங்காளர் தனது பங்கினை மூன்றும் நபருக்கு விற்கமுடியாது. மேலும் பங்காண்மையில் ஒரு பங்காளர் மற்றைய பங்காளரின் முகவராகக் கருதப்படுகின்றார். ஆனால் கூட்டுச் சொந்தத்தில் அந்நிலை இல்லை. பங்காண்மைக்கும், கூட்டுச் சொந்தத்திற்கும் இடையிலான வேறுபாடு Rajasekaram Vs. Rajaratnam (61 NLR 337) என்ற வழக்கில் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இதுபோலவே ஒரு கொம்பனிக்கும், பங்காண்மைக்கும் இடையிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பங்கண்மையைக் கொம்பனியில் இருந்து வேறு பிரித்துக்காட்

கே. பி. அரவிந்தன் L. L. B.
ATTORNEY - AT - LAW

டுகின்ற முக்கிய அம்சம் கூட்டிணைத்தல் (Incorporation) ஆகும். கொம்பனியானது, கொம்பனியாக அமைகின்ற உறுப்பினர்களி னின்றும் வேறான ஒரு சட்ட உரு அல்லது சட்ட ஆள் (Legal Person) ஆகும். ஆனால் பங்காண்மையாகிய குழுமத்திற்கு, குழு உறுப்பினர்களினதும் பிறிதான ஓர் தனி அந்தஸ்து கிடையாது.

மேலும் பங்காண்மையில், எல்லாப்பங் காளர்களும் பங்காண்மையை முகாமைசெய் வதில் பங்குகொள்வதற்கு உரித்துக்கொண் டவர்களாக இருப்பார்கள். கொம்பனி ஒன் றின் உறுப்பினர்களுக்கு இத்தகைய உரிமை கிடையாது அந்த உரிமையை கொம்பனி உறுப்பினர்கள் பணிப்பினர்களுக்கு கொடுத் துவிட்டார்கள்.

இதைவிட சாதாரண வியாபார நடப் பின்போது, குழுமத்தின்சார்பின் ஒப்பந்தம் செய்வதற்கான தகைமை பங்காளருக்கு உண்டெனச் சட்டம் ஊகிக்கும். ஆனால் கொம்பனி உறுப்பினர்களுக்கு அத்தகைய உரிமை கிடையாது.

இலங்கையில் பங்காண்மைச் சட்டமா னது ஆங்கிலச்சட்டத்தை அடிப்படையா சக்கொண்டது. இங்கு ஆங்கிலச் சட்டமே பிரயோகிக்கப்படுகின்றது. இலங்கையின் பொதுச்சட்டம் ரோமன் – டச்சுச் சட்ட மாக இருந்தபோதிலும் பங்காண்மை விட யத்தில் ஆங்கிலச்சட்டமே ஏற்புடையதா கும் எனக் கூறப்பட்டுள்ளது. 79ஆம் அத் தியாயமான "குடியியல் சட்டக் கட்டளைச் சட்டம்" என அறியப்படும் "இங்கிலாந் தின் குடியியல் சட்டத்தை இலங்கையில் புகுத்தல் கட்டளைச் சட்டம்" பின்வருமாறு கூறுகின்றது:

"பங்காண்மை தொடர்பில், இலங்கை யில் எழுகின்ற எல்லாப் பிரச்சினைகளிலும் பிரயோகிக்கப்படவேண்டிய சட்டமானது, சம்பந்தப்பட்ட காலகட்டத்தில், இங்கிலாந் தில் நடைமுறையிலிருக்கும் அதே சட்டமா தல் வேண்டும்".

இதன்படி பங்காண்மை விடயத்தில் ஆங்கி லச் சட்டமே ஏற்புடையதாகும் என்பதை கூறலாம். Soosaipillai Vs. Vaithilingam (37 NLR 381) என்ற வழக்கில் பங்காண்மை தொடர்பின் ஆங்கிலச்சட்டமே பிரயோகிக் கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

பங்காண்மையொன்று எழுத்துருவில் இருக்கவேண்டுமா என்பது ஒரு முக்கியமான விடயமாகும். இலங்கையில் 1000/- ரூபா வுக்கு மேற்பட்ட தொகையை தொடக்க முதலாகக் கொண்ட பங்காண்மைக்கான உடன்படிக்கை எழுத்துருவில் இருக்கவேண் டும் என்பதுடன், சம்பந்தப்பட்டவர்களால் ஒப்பிடப்படவும் வேண்டும் என்பதும் முறை யாகும். இவ்விடயத்தில் மோசடித் தடுப் புக்கட்டளைச் சட்டத்தின் 18ஆம் பிரிவை அவதானித்தல் மிக அவசியமாகும். பிரிவு 18 எழுத்தில் இல்லாத பங்காண்மை உடன் படிக்கை வெற்றும் வெறிதும் ஆகும் என்றே சட்டவலுவும் பயனும் அற்றதென்றே கூற வில்லை. "பங்காண்மை ஒன்று உண்டென் பதை நிரூபித்தல்" தொடர்பில், அத்தகைய உடன்படிக்கை (அதாவது எழுத்துருவில் இல் லாத உடன்படிக்கை முதலியன) வலுவோ பயனோ அற்றதாகும் என்பது மட்டுமே 18ஆம் பிரிவு கூறுகின்றது. இப்பிரிவு சான்று பற்றிய ஒரு விதியை (A rule of Evidence) எடுத்துக் கூறுகின்றது. இவ்விதியின்படி, பங் காண்மை உண்டென்பதைப் பொறுத்த வரைக்கும் எழுத்திலில்லா உடன்படிக்கைக்கு சட்டப்பான் எதுவும் கிடையாது என்று Pate Vs. Pate (18 NLR 289) என்ற வழக் கில் தீர்மானிக்கப்பட்டது. இதே தீர்ப்பு Rajaratnam Vs. Commissioner of Stemps (39 NLR 481), Abeyagoone Sekera Vs. Mendis (18 NLR 449) என்ற வழக்குகளி லும் பிரயோகிக்கப்பட்டது.

ஆங்கிலப் பொதுச் சட்டத்தின்படி குறிப்பிட்ட தொகை பங்காளர்கள் தான்

இருக்கலாம் என்ற நியதி இல்லை. ஆனால் வரையறுக்கப்பட்ட பங்காண்மைச் சட்டப் படி (Limited Partnership Act) பங்காண்மையில் இருபதிற்கு மேற்பட்ட பங்காளர்கள் இருக்கமுடியாது. வங்கித் தொழில் செய்யும் பங்காண்மையில் பத்துக்கு மேற் பட்ட பங்காளர்கள் இருக்கக் கூடாது இங்கிலாந்தின் 1948 ம் ஆண்டின் கொம்பனி சட்டத்தின் 434 ம் பிரிவின்படி இது ஆறுக்கு மேற்பட்டதாக இருத்தல் கூடாது. ஆயினும் கட்டுப்பாடுகள் வழக்கறிஞர் குழுமங்கள் (Firm of Soliators) கணக்கறிஞர் குழுமங்கள் போன்றவற்றிற்கு ஏற்புடைய தாகாது.

சட்டவிரோதமான பங்காண்மை எதையும் உருவாக்க முடியாது. சட்டவிரோதமான வியாபாரமொன்றை கொண்டு நடத்துவதற்காக பங்காண்மை ஒன்று உருவாக்கப் பட்டால் அது வெற்றும் வெறிதும் (Nill and Void) ஆகும். என Foster .Vs. Driscoll (1929) I K B 470 என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் பங்காண்மை என்ற அளவு இல்லாதிருப்பின் அக்குற்றமற்ற பங்காளர் அத்தகைய பங்காண்மைக்கெனச் செலுத்திய தமது பங்கு கவிப்புத் தொகையை திரும்பப் பெற்றுக் கொள்ளும் உரித்துடையவராகின்றார். ஆயினும் சட்டவிரோதமான நோக்கம் நிறைவேற்றப்பட்டால் அவ்வுரிமையை அக்குற்றமற்ற கட்சிக்காரர் இழந்து விடுகின்றார். சட்டபூர்வமான ஒரு வியாபாரத்தைக் கூட சட்டவிரோதமான முறையில் கொண்டு நடாத்துவதற்காக பங்காண்மையொன்று உருவாக்கப்பட்டால் அதுவும் செல்லுபடியற்றதாகும்.

ஒவ்வொரு பங்காளரும் மற்றைய பங்காளர்களினதும், குழுமத்தினதும் முகவர்களாகக் கருதப்படுவர். ஆகவே பங்காளர் ஒருவரினது செயல் மற்றைய பங்காளர்களையும், குழுமத்தையும் (Firm) கட்டுப்படுத்துகின்றது. ஆயினும் பங்காளர் ஒருவருக்கு அதிகாரம் வெளிப்படையாகவே இல்லாத சந்தர்ப்பங்களில் அவருடைய சொல் ஏனைய பங்காளர்களையோ அல்லது குழுமத்தையோ கட்டுப்படுத்தாது. மேலும் பங்காளர் ஒருவருடன் தொடர்பு கொள்ளும் மூன்றாம் நபர் ஒருவருக்கு தாம் தொடர்பு கொள்ளும் பங்காளருக்கு அதிகாரம் இல்லை என்ற அறிவுடன் நடப்பாராயினும், அச்சொல் ஏனைய பங்காளர்களைக் கட்டுப்படுத்தாது, அல்லது அவர் பங்காளர் என்ற அறிவு இன்றியோ, நம்பிக்கை இன்றியோ மூன்றாமவர் நடந்து கொள்வாராயினும் அது மற்றவர்களை (பங்காளர்களை) கட்டுப்படுத்தாது.

ஆயினும் பங்காளர் ஒருவருக்கு சில உட்கிடையான அதிகாரங்கள் (Impolied Authority) இருக்கின்றன. அவையாவன.

1) குழுமத்தின் பொருட்களை விற்பனை செய்வதற்கு

2) சாதாரண வியாபார நடைமுறையில் குழுமத்தின் வியாபாரத்திற்கென பொருட்களை குழுமத்தின் சார்பில் வாங்குவதற்கு

3) குழுமத்தின் வியாபாரத்திற்கென வேலையாட்களை நியமிப்பதற்கு.

4) குழுமத்தின் பெயரில் கைமாற்றத்தகு சாதனம் (Negotiable Instrument) ஒன்றை ஏற்றுக் கொள்ளுவதற்கு, உருவாக்குவதற்கு, வழங்குதற்கு.

5) குழுமத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கொன்றை வாதாடுவதற்கு வழக்கறிஞர் ஒருவரை நியமிப்பதற்கு.

பங்காளர்களுக்கிடையிலான உறவுமுறை பொதுவாக பங்காண்மையின் அகவிதிகளின் படியே (Articles of Partner Ships) தீர்மானிக்கப்படுகின்றது. ஆயினும்

அவர்களுக்கிடையிலான உறவுமுறை அக விதியின் படியோ, கட்டளைச் சட்டத்தின் படியோ தீர்மானிக்கப்பட்டாலும், அது மற்றைய பங்காளர்களின் இசைவுடன் மாற்றப்படலாம். இவ்விதி Ex. P. Barber (1870) L. R 5 C H 687 என்ற வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எந்த ஒரு பங்காளரும் இலாபம் பெறுவதற்கு முன்பு மூலதனத்தின் வட்டியைக் கோருவதற்கு உரித்துடையவர் அல்லர். மேலும் பங்காளர் ஒருவருக்கு பங்காண்மை வியாபாரத்தில் பங்கேற்றுக் கொள்வதற்காக ஊதியம் பெறும் உரிமையும் இல்லை. ஒவ்வொரு பங்காளரும் பங்காண்மையின் முகாமைத்துவத்தில் (Management) பங்குகொள்ள முடியும். ஆனால் ஒரு பங்காளர் மற்றைய பங்காளர்களின் சம்மதமின்றி இன்னொரு மூன்றாம் நபரை பங்காளராக சொண்டுவரமுடியாது. இதைவிட பங்காளர் ஒருவர் ஏதாவது ரகசிய இலாபம் ஒன்றைப் பெற்றுக்கொண்டால் அதை அவர் மற்றைய பங்காளர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இது Bently Vs Craven (1853) 18 Beav. 75 என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது. மேலும் பங்காளர் ஒருவர் பங்காண்மையுடன் போட்டி வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல் ஆகாது.

பங்காண்மையொன்று அதன் கால எல்லை முடிவடைவதனாலோ அல்லது அறிவித்தலின் மூலமாகவோ முடிவுக்குக் கொண்டு வரப்படலாம். அதாவது பங்காண்மையொன்று ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கென உருவாக்கப்பட்டு, அக் குறிப்பிட்ட காலப்பகுதி முடிவடைந்தவுடன் பங்காண்மை கலைக்கப்படலாம். மேலும் ஒரு பங்காண்மை ஒரு குறிப்பிட்ட விடயத்திற்கென உருவாக்கப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டவுடனும் கலைக்கப்படலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கென உருவாக்கப்படாத பங்காண்மை, ஒரு பங்காளர் எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்றை ஏனைய பங்காளர்களுக்குக் கொடுப்பதன் மூலமும் பங்காண்மை என்று முடிவுக்குக் கொண்டுவரப்படலாம். சில சந்தர்ப்பங்களில் வாய்மொழி மூலமான அறிவித்தலும் இதற்குப் போதுமானதாகும். ஆனால் ஒரு பங்காளர் மற்றைய பங்காளர்களின் சம்மதம் இன்றி பங்காண்மையை முடிவுறுத்த முடியாது என Moss. Vs. Elphick (1810) I K B 846 என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

பங்காளர் ஒருவரின் இறப்பின் மூலமாகவோ, அல்லது பங்காளர் ஒருவர் வகையற்றோனாக (Brokrupty) வருவதனாலோ பங்காண்மை முடிவுக்குக் கொண்டு வரப்படலாம். மேலும் பங்காண்மையொன்று ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடைபெற்றதால் சட்ட முரணான தன்மையை அடையும் போதும், மேலும் அவ்வியாபாரத்தை கொண்டு நடாத்த முடியாது இருப்பினும் அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படலாம்.

இவற்றைவிட நீதிமன்றம் ஒன்றிற்கு விண்ணப்பம் செய்வதன் மூலம் பங்காண்மையொன்று முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

1975 ம் ஆண்டு ஜனவரி 1 ம் தேதிக்குப் பின்னர் இலங்கைப் பிரஜைகள் அல்லாத எவரும் பங்காண்மையொன்றை உருவாக்கமுடியாது. ஆகவே பங்காளர் ஒருவர் வெளிநாட்டுப் பிரஜையாக இருப்பின் பதிவாளர் அதைப் பதிய மறுப்புத் தெரிவிக்கலாம்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் — இலக்கம் 8
SRI LANKA ACCOUNTING STANDARD — NO. 8

பெறுமானத் தேய்விற்கான கணக்கீடு

ACCOUNTING FOR DEPRECIATION

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட இந்த (SLAS 8) பெறுமானத் தேய்விற்கான கணக்கீட்டு நியமத்தில் ஒவ்வொரு விடயங்களும் பந்திகளாகப் பிரிக்கப் பட்டு விளக்கப்பட்டுள்ளன, இக்கணக்கீட்டு நியமத்தின் முக்கிய அம்சங்கள் 19—30 வரை விளக்கப்பட்டுள்ளன. இதனை விளங்கிக்கொள்வதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் முதல் 18 பந்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

K. K. அருள்வேல் B. Com (Hons)
விரிவுரையாளர்
வணிக முகாமையியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

அறிமுகம் — Introduction

1. இந்த அறிக்கை பெறுமானத் தேய்வினைக் கையாளுகின்றது. பெறுமானத் தேய்வு என்பது உருவமுள்ள நிலையான சொத்துக்களின் கிரயத்தில் (Cost) அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து (Valuation) அதன் இறுதியில் தேறுகின்ற பெறுமதி (Salvage Value) ஏதாவது இருப்பின், அதனைக் கழித்து வரும் தொகையினை சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரக் கூடிய பொருளியல் ஆயுட்காலம் (Useful Economic Life) முழுவதும் நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதென வரையறுக்கப்படுகின்றது,

2. பெறுமானத்தேய்வு செய்யப்படக் கூடிய சொத்தின் பாவனை விரயம் அல்லது நுகர்வு அல்லது வேறு பெறுமதி இழப்பு என்பவற்றினை அளவிட்டு செம்மையாக்க வேண்டிய அவசியத்தினை பெறுமானத் தேய்வானது கவனத்தில் கொள்கின்றது. இவ்வாறான பெறுமதி இழப்பானது-பாவனை காரணமாக ஏற்பட்டாலும் சரி, தொழில்நுட்ப அல்லது சந்தை மாற்றங் காரணமாக ஏற்பட்ட வழக்கற்றுப் போதலால் (Obsolescence)

ஏற்பட்டாலும் சரி, காலக்கழிவால் (Efflu-xion of Time) வந்தாலும்சரி கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

3. பெறுமானத் தேய்வு செய்யப்படக் கூடிய சொத்துக்களானவை உருவமுள்ள சொத்துக்களாகும். அவை:

(அ) நிறுவனத்தினுல் உற்பத்திக்காக அல்லது பொருட்கள் சேவைகளை விநியோகிப்பதற்காக அல்லது மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாகத் தேவைகளுக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களாகும். மேலும் இவ்வாறுன சொத்துக்களின் பராமரிப்பிற்காகவும், திருத்தத்திற்காகவும் வைத்திருக்கப்படும் சொத்துக்களையும் உள்ளடக்கும்,

(ஆ) ஓர் நிறுவனத்தில் மீள்விற்பனை செய்யப்படுவதற்கோ அல்லது நுகர்விற்கோ அன்றி பெரும்பாலும் நிரந்தர தேவைக்கு வைத்திருக்கப்படும்.

(இ) ஒரு நிதியாண்டுக்கு மேல் பயன்படுத்தும் நோக்கத்துடன் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது கட்டப்பட்டிருக்கும்;

(ஈ) வரையறுக்கப்பட்ட பயன்தரக் கூடிய பொருளியல் ஆயுட்காலத்தைக் கொண்டிருக்கும்.

4. பின்வரும் சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கு இக் கூற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

(அ) காடுகள் அதேபோன்ற மீண்டும் புதுப்பிக்கக்கூடிய இயற்கை வளங்கள்;

(ஆ) கனிப்பொருள் உரிமைக்கான செலவுகள், கனிப்பொருட்கள், இயற்கை வாயு, எண்ணெய் போன்ற மீண்டும் புதுப்பிக்கப்பட முடியாத வளங்களைக் கண்டு பிடிப்பதற்கும், எடுப்பதற்குமான செலவுகள்;

(இ) காணி அபிவிருத்திக்கும், முதலீட்டுச் சொத்துக்களுக்குமான செலவுகள்;

(ஈ) நன்மதிப்பு, ஏனைய அருவச் சொத்துக்கள்;

(உ) ஆராய்ச்சி அபிவிருத்திக்கான செலவு

விளக்கம் - Explanation

5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்களில் பெறுமானத் தேய்வு செய்யப்படக்கூடிய சொத்துக்கள் முக்கியபங்கினை வகிக்கின்றன. இதனுல் பெறுமானத் தேய்வானது ஒரு நிறுவனத்தின் உண்மையானதும் நியாயமானதுமான நிதி நிலைமையினையும், செயற்பாட்டின். பெறுபேறுகளையும் தீர்மானிப்பதிலும் வெளிப்படுத்துவதிலும் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இதனுல் சொத்தின் சந்தைப் பெறுமதியில் அல்லது தேறுகின்ற பெறுமதியில் அதிகரிப்பு இருந்தாலும் கூட பெறுமானத் தேய்வானது ஒவ்வொரு கணக்காண்டிலும் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும்.

6 பெறுமானத் தேய்வு என்பது ஒரு நிலையான சொத்து. இறுதியில் ஓய்வு பெறும் போது மீளப்பெற முடியாமல் போகும் கிரயத்தின் ஒருபகுதியினைக் குறிக்கின்றது. இவ்வாறுன மூலதனநட்டத்திற்கு எதிராகச் செய்யப்படும் ஏற்பாடானது, சொத்தின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்தில் ஒரு நிறுவனத்தை நடாத்துவதற்கான ஒன்றிணைந்த செலவாகும்.

பெறுமானத் தேய்வு முறைகள் - Depreciation Methods

7. சொத்தின் பயன் எதிர்பார்க்கப்படும் காலங்களுக்கு முடிந்தவரை நியாயமான முறையில் பெறுமானத் தேய்வினை பகிர்ந்து ஒதுக்குவது முகாமையின் கடமையாகும். எனவே சொத்து வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் தேவைக்கும், சொத்தின் வகைக்கும் ஏற்ப மிகப்பொருத்தமான பெறுமானத் தேய்வு முறையினை முகாமை தெரிவு செய்தல் வேண்டும். வேறுபட்ட

வகையானநிலையான சொத்துக்களுக்கு வேறு பட்ட பெறுமானத் தேய்வு முறைகள் பின் பற்றப்படலாம். எனினும் ஒரேவகையான சொத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் முறைகள் ஒன்றாகவே இருத்தல் வேண்டும்

8. எந்தவிதமான பெறுமானத்தேய்வு முறை தெரிவு செய்யப்பட்டாலும், காலத் துக்குக் காலம் நிறுவனத்தின் செயற்பாட்டு முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கத்தக்க வகை யில், நிறுவனத்தின் இலாப அளவினையும், வரி நிலைமையினையும் கவனத்தில் கொள் ளாது தொடர்ந்து பின்பற்றப்படல் வேண் டும்.

9. புதிய பெறுமானத் தேய்வு முறையா னது செயற்பாட்டு முடிவுகளையும் நிதிநிலை மையையும் நியாயமான முறையில் சமர்ப் பிக்க உதவும் என்ற காரணத்தினை அடிப் படையாகக் கொண்டே ஒரு முறையிலிருந்து வேறோர் முறைக்கு மாற்றுவது அனுமதிக் கப்படக் கூடியதாகும். இவ்வாறான சந்தர்ப் பத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்ப டாமலிருக்கும் சொத்தின் கிரயமானது, மாற்றம் செய்யப்படும் காலத்திலிருந்து, மிகுதியாகவுள்ள சொத்தின் பயன்தரக் கூடிய ஆயுட்காலத்தில் பதிவழிக்கப்படல் வேண்டும். இவ்வாறான மாற்றம் கணக்கி யல் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதப்படுவதுடன் அவ்வாறே கைக்கொள் ளப்படவும் வேண்டும்.

பயன் தரக்கூடிய பொருளியல் ஆயுள் Useful Economic Life

10. ஒரு சொத்தின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுள் என்பது நிறுவனத் தால் பயன்படுத்தப்பட்ட எதிர்பார்க்கப் படும் காலத்தினைக் குறிக்கின்றது, அல்லது உற்பத்தியின் எண்ணிக்கையினைக் குறிக்கும் அல்லது சொத்திலிருந்து உற்பத்தியில் பெறப்பட எதிர்பார்க்கப்படும் மொத்த அலகுகளைக் குறிக்கும். அத்துடன்;

(அ) ஒரு குத்தகையிலுள்ளதுபோல் சட் டத்தால் முன்கூட்டியே முடிவு செய் யப்பட்ட தடைகள்;

(ஆ) பிரித்தெடுக்கப்படுவதால் அல்லது நுகர் வால் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை;

(இ) காலக்கழிவால் வரும் பௌதீக குறை வடைதலில் தங்கியுள்ளது. பௌதீக குறைவடைதலானது செயற்பாட்டுக் கார ணிகளில் அதாவது சொத்துப் பயன்படுத் தப்படவுள்ள மாற்று வேலைகளின் (Shift) அளவு, நிறுவனத்தின் திருத்த பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றில் தங்கி யுள்ளது. காலக்கழிவின் விளைவானது துருப் பிடித்தல் (Corrosion); அரிக்கப்படுதல் (Erosion); தேய்ந்துபோதல் (Abrasion); என்பவற்றில் தங்கியுள்ளது.

(ஈ) பொருளியல் அல்லது தொழில்நுட்ப ரீதியாக வழக்கொழிந்து போதல் என் பது உற்பத்தி மாற்றங்களால் அல்லது முன்னேற்றங்களினால் (Improvements) ஏற்படலாம். உற்பத்திப் பொருளுக்கு அல் லது சேவைக்கு சந்தைக் கேள்வியில் ஏற் படும் ஒரு மாற்றமும், சொத்தின் வெளி யீடும் கூட சொத்தின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுளில் தாக்கத்தினை ஏற்ப டுத்தலாம்.

11. பெறுமானத் தேய்வு செய்யப்படக் கூடிய சொத்தின் பயன்தரக்கூடிய பொரு ளியல் ஆயுளானது, அச்சொத்தின் பௌதீக ஆயுளைவிட குறைவானதாகும். பெறுமா னத் தேய்வு செய்யப்படக்கூடிய சொத்தின் அல்லது அதேவிதமான பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய சொத்துக்களின் தொகுதியின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட்காலத்தின் மதிப்பீடானது, அதே வகையான சொத்துக்களின் அநுபவங்க ளினை அடிப்படையாகக் கொண்டு தீர்மா னிக்கப்பட வேண்டியதாகும்.

12. ஒரு மீளாய்வானது செயற்பாட்டு முடிவுகளையும் நிதிநிலைமையையும் நியாயமான முறையில் காட்டுமாயின், ஒரு சொத்தின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட் காலமானது மீளாய்வு செய்யப்படலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு சொத்தின் பெறுமானத் தேய்வு செய்யப்படாமலிருக்கும் பகுதியின் கிரயம் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடியதாகவுள்ள தொகையினை விட அதிகமாக இருக்குமாயின் அவ்வித்தியாசம் உடனடியாக வருமானத்தில் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும்.

இறுதிப் பெறுமதி – Residual Value

13. ஒரு சொத்தின் இறுதிப் பெறுமதி என்பது அச்சொத்தின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட் கால முடிவில் தேறுகின்ற பெறுமதியாகும். பொதுவாக இது கழிவுப் பெறுமதியினை (Scrap Value) க் குறிக்கும். சொத்தின் கிரயத்தினைப் பொறுத்தவரை இத்தொகை மிகச்சிறியதாக இருப்பின் இத்தொகை புறக்கணிக்கப்படலாம்.

கணக்கியலில் கையாளுதல் Accounting Treatment

14. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டக்கணக்கில் சார்ட்டுதல் செய்யப்படும் பெறுமானத் தேய்வானது, ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்ட சொத்தின் தொகையின் அது வரலாற்றுக் கிரயத்திலிருந்தாலும் சரி, மீளமதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்தாலும் சரி - அடிப்படையிலேயே செய்யப்படல் வேண்டும். ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு தொகையானது முழுமையாக இலாபநட்டக்கணக்கில் பிரதிபலிக்கப்படல் வேண்டும். பெறுமானத் தேய்வின் எந்தவொரு பகுதியும் நேரடியாக ஒதுக்கங்களில் ஈடு செய்யப்படக்கூடாது, ஆனால் இது பகிரப்படாத இலாபத்தினை - உதாரணமாக நிலையான சொத்துக்களைப் பிரதியிடுவதற்கென விசேடமாகப் பெயரிடப்பட்ட - காப்பொதுக்கமொன்றிற்கு மாற்றுவதனை தடை செய்யாது.

15. சொத்துக்கள் மீள விலைமதிக்கப்பட்டு, அவ்வாறான விலைமதிப்பின் விளைவு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருப்பின், அதன் பின்னர் செய்யப்படும் பெறுமானத் தேய்வு மீளவிலைமதிக்கப்பட்ட தொகையினை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுவதுடன், மீளவிலைமதிப்பினால் ஏற்பட்ட விளைவானது கணிசமான தொகையாயின், அதன் விபரம் மாற்றம் ஏற்பட்ட ஆண்டில் குறிப்பு வடிவில் காட்டப்படல் வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேலதிகமாக விலை மதிக்கப்படுதலானது, அத்தேதியில் சேர்ந்துள்ள பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தினை இலாப நட்டக்கணக்கிற்கு செலவு வைப்பதற்கு ஓர் அடிப்படையாக அமையாது.

16. குறைவடைந்து போகும் - உதாரணமாக கனிப் பொருட்களை அகழ்ந்தெடுத்தல் - தன்மையல்லாத இறையில் காணிக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடு சாதாரணமாக அவசியமானதல்ல; எவ்வாறாயினும் இறையில் காணியின் பெறுமதியானது, சமூகரீதியாகவோ அல்லது மூலப்பொருட்கள், தொழிலாளர் அல்லது விற்பனை போன்ற மூலகங்களின் கிடைப்புத்தன்மை தொடர்பாகவோ அதன் அமைவிடத்தின் விருப்பத்தகு தன்மையில் ஏற்படும் மாற்றம் காரணமாக குறைவடையுமாயின், அக்குறைவானது பதிவழிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக நிறுவனத்தைப் பொறுத்தவரை வரையறுக்கப்பட்ட பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுளைக்கொண்ட காணி பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய சொத்தாகக் கருதப்படல் வேண்டும்.

17. வரையறுக்கப்பட்ட பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுளைக் கொண்டது என்ற வகையில் கட்டிடமானது ஏனைய நிலையான சொத்துக்களிலிருந்து வேறுபட்டதல்ல, ஆனால் ஏனையவகைச் சொத்துக்களைவிட கணிசமான அளவில் நீண்ட ஆயுளைக் கொண்டதாகும். எனவே பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும். தாணி கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி குறைவடையாத காரணத்தினால் சில நிறுவனங்கள் கட்டிடங்களை பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய சொத்தாகக் கருதவில்லை. காணியும் கட்டிடங்களும் வேறுபட்ட சொத்துக்களாகையினால்; கணக்கீட்டுத் தேவைக்காக காணியின் ஏதாவது அதிகரித்த பெறுமதியானது, கட்டிடங்களின் பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய தொகையினைக் கணிக்கும்போது வேறுபட்ட அம்சமாக கருதப்படல் வேண்டும்.

வெளிப்படுத்துதல் - Disclosure

18. ஒரு நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படவேண்டிய தகவல்கள் இவ்வங்கைக் கணக்கீட்டு நியமம் 7 இல் கொடுக்கப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வோடு விசேடமாகச் சம்பந்தப்பட்ட விதிகள் இந்த நியமத்தில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 8

பெறுமானத் தேய்விற்கான கணக்கீடு

19. இக்கூற்றின் மூன்றும் பந்தியில் குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்துக்கமைய தீர்மானிக்கப்படும் எல்லாப் பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய சொத்துக்கள் மீதும் பெறுமானத்தேய்வு சாட்டுதல் செய்யப்படல் வேண்டும்.

20. வரையறுக்கப்பட்ட பயன்தரு பொருளியல் ஆயுளைக் கொண்ட பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு ஏற்பாடானது, சொத்தின் கொள்விலை அல்லது மீளமதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து சொத்தின் மதிப்பிடப்பட்ட இறுதிப் பெறுமதியினைக் கழிக்க வரும் தொகையினை, சொத்து பயன்தருமென எதிர்பார்க்கப்படும் காலங்களுக்கு முடிந்தவரை நியாயமான அளவில் பகிர்ந்தளிப்பதன் மூலம் செய்யப்படல் வேண்டும்.

21. குறிப்பிட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டக்கணக்கில் சாட்டுதல் செய்யப்படும் பெறுமானத் தேய்வானது ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்ட சொத்தின் தொகையின், – அது வரலாற்றுக் கிரயத்திலிருந்தாலும் சரி மீள மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்தாலும் சரி – அடிப்படையிலேயே செய்யப்படல் வேண்டும். ஆண்டுக்கான பெறுமானத்தேய்வுத் தொகையானது முழுமையாக இலாபநட்டக் கணக்கில் பிரதிபலிக்கப்படல் வேண்டும். பெறுமானத் தேய்வின் எந்தவொரு பகுதியும் நேரடியாக ஒதுக்கங்களில் ஈடுசெய்யப்படக் கூடாது.

22. பயன்படுத்தப்படும் பெறுமானத் தேய்வு முறையானது சொத்துக்களின் வகைகளுக்கும், நிறுவனத்தில் அவற்றின் பயன்பாட்டுக்கும் ஏற்றவகையில் மிகவும் பொருத்தமான்தாக அமைதல் வேண்டும். மாறுபட்ட சந்தர்ப்பம் மாற்றத்தினை நியாயப்படுத்தினாலன்றி பயன்படுத்தப்படும் பெறுமானத் தேய்வு முறையானது ஒரு காலத்திலிருந்து மற்றைய காலப்பகுதிக்கு மாறுபடாது நிலையானதாக பிரயோகிக்கப்படல் வேண்டும். புதியமுறை முடிவுகளையும் நிதிநிலைமையினையும் சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு உதவுமாயின் ஒரு முறையிலிருந்து வேறுமுறைக்கான மாற்றம் அனுமதிக்கப்படக் கூடியதாகும். தேறிய தொகை, மாற்றம் ஏற்படுத்தப்பட்ட காலப் பகுதியிலிருந்து, மிகுதியாகவுள்ள பயன்தரக் கூடிய பொருளியல் ஆயுட்காலத்தில் பதிவழிக்கப்படல் வேண்டும்.

23. சொத்துக்களின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட்காலமானது ஒழுங்காக மீளாய்வு செய்யப்படுவதுடன், அவசிய மேற்படும் போது மாற்றம் செய்யப்படல் வேண்டும். அனுபவத்தின் முடிவாக அல்லது மாற்றமடைந்த சந்தர்ப்பங்களின் விளைவாக ஒரு சொத்தின் பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட்காலத்தின் ஆரம்ப மதிப்பீடு மாற்றம் செய்யப்பட வேண்டுமெனக் கருதப்பட்டால், சொத்தின் பெறுமதி, மீளக் குறிப்பிடப்பட்டு மாற்றம் செய்யப்பட்ட பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுளில் பதிவழிக்கப்படல் வேண்டும். இதனால் வரும் வேறுபாடு மீண்டும் இலாபநட்டக் கணக்கில் பதியப்படக்கூடாது.

24 எந்த நேரத்திலாவது சொத்தின் பெறுமதியில் நிரந்தரக்குறைவு காணப்படுமாயின், அத்துடன் புத்தகப்பெறுமதி மீளப்பெற முடியாதெனக் கருதப்படுமாயின் உடனடியாக மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகைக்கு வரக்கூடியவாறு சொத்து குறைத்தெழுதப்படல் வேண்டும். மேலும் அத்தொகை சொத்தின் மிகுதியாகவுள்ள பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட்காலத்தி பதிவழிக்கப்படல் வேண்டும். எந்த நேரத்திலாவது அவ்வாறான ஏற்பாடு செய்வதற்கான காரணம் இல்லாது போகுமாயின், அவ்வாறான ஏற்பாடு எந்தளவுக்கு தேவையற்றதெனக் கருதப்படுகின்றதோ அந்தத்தொகையால் திரும்பப் பதியப்படல் (Written Back) வேண்டும்.

25. நிலையான சொத்துக்களில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மறுமதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலேயே நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டுமென்பது நிறுவனத்தின் கொள்கையாகக் காணப்படுமாயின், அந்தவிதமான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு, தேறிய மறுமதிப்பீடு செய்யப்பட்டவிடை, மிகுதியாகவுள்ள பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட்காலம் என்பவற்றின் அடிப்படையிலமைதல் வேண்டும். நிரந்தரப் பெறுமதிக் குறைவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பின்னர் அதில் தேவையற்றதென கருதப்படும் தொகை தவிர்ந்த, மறுமதிப்பீட்டுக்கு முன்னர் சாட்டுதல் செய்யப்பட்ட ஏதாவது பெறுமானத்தேய்வு இலாப நட்டக்கணக்கில் திரும்பப் பதியப்படல் கூடாது.

26. ஒழிந்து போதலுக்கு (Depletion) அல்லது காணியின் பெறுமதி பாதகமான பாதிப்பிற்கு உட்பட்டிருந்தாலொழிய இறையில் காணிக்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்வது அவசியமானதல்ல. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இது குறைத்தெழுதப்படல் வேண்டும்.

27. பெறுமானத்தேய்வு செய்யப்படக்கூடிய சொத்துக்கள் வகைப்பத்துதப்பட்ட ஒவ்வொரு தலையங்கங்கள் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் பின்வருவன வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(அ) பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வு முறை;

(ஆ) பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுட் காலங்கள் அல்லது பயன்படுத்தப் பட்ட பெறுமானத் தேய்வு விகிதம்;

(இ) அக்காலத்திற்கு சாட்டுதல் செய்யப் பட்ட மொத்தப் பெறுமானத் தேய்வு

(ஈ) திரண்ட பெறுமானத் தேய்விலேற்பட்ட அசைவு;

28. பெறுமானத் தேய்வு முறையில் அல்லது பயன்தரக்கூடிய பொருளியல் ஆயுளில் மாற்றம் ஏற்பட்டிருப்பின், அம்மாற்றத்தின் விளைவு கணிசமானதாக இருப்பின் அது அம்மாற்றம் ஏற்பட்ட ஆண்டில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

29. சொத்துக்கள் மீளமதிப்பீடு செய்யப்பட்டு, சாட்டுதல் செய்யப்படும் பெறுமானத் தேய்வில், மறுமதிப்பீட்டின் விளைவு கணிசமானதாக இருப்பின், அது மறுமதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அமுல் செய்யப்பட வேண்டிய திகதி
Effective Date

30. இந்த இலங்கைக் கணக்கீட்டு நியமம் 1 ஏப்பிரல் 1986 இல் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலங்களுக்கான நிதிக் கூற்றுக்களுக்கு அமுல் செய்யக்கூடியதாக அமையும்.

கணக்காய்வுச் சான்று

(AUDIT EVIDENCE)

சுதந்திரமான கணக்காய்வாளர் ஒருவர் நிதிக்கூற்றுக்கள் மீதான தனது கருத்தினைக் கூறுவதற்கு மேற்கொள்ளும் வேலைகளில் நம்பத்தகு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதும், பரிசோதனை செய்வதும், அடங்கி இருக்கும். இலங்கைக் கணக்காய்வு நியமம், கணக்காய்வுச் சான்று பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது. "நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாகக் கருத்தைப் பெறுவதற்காக நியாயமான அடிப்படையை அடையும் பொருட்டுப் பரீட்சிப்பு (Inspection) அவதானிப்பு (Observation) விசாரணை, உறுதிப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் போதுமானதும், தகுதி வாய்ந்ததுமான சான்றுகள் பெறப்படல் வேண்டும்.

நிதிக் கூற்றுகளின் உண்மையான தன்மையினை நிரூபிப்பதற்கான சான்றுகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

(1) கணக்கியல் தரவுகள் :

இவை ஆரம்பப்புத்தகப் பதிவுகள், உபபதிவுகள், கணக்கியல் கைந்நூல்கள், அட்டவணைகள், செலவுக்கூற்றுக்கள், இணைக்கக்கூற்றுக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கும். கணக்கியல் தரவுகள் நிதிக்கூற்றுகளின் தன்மையினை நிரூபிப்பதற்குப் போதிய தன்மை உடையனவாகக் கருதப்படமாட்டாது. ஆனால் கணக்கியல் தரவுகளின் தகுதியுடைமை. சரியான தன்மை என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாது நிதிக் கூற்றுகளில் கருத்தினைத் தெரிவிக்க முடியாது.

(2) பலப்படுத்தும் சான்றுப் பொருட்கள் ;

இது பின்வருவனவற்றை உள்ளடக்கும்,

(அ) ஆவணங்கள் அல்லது பத்திரங்கள், கூற்றுக்கள், பற்றுச்சீட்டு, ஒப்பந்தங்

செல்வி மேதினி சந்திரசேகரம்
வணிகமாமணி, 4ஆம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

கள், கூட்ட அறிக்கைகள், விலைப்பட்டியல் அல்லது கிரய்ப்பட்டியல்

(ஆ) மூன்றாமவரிடம் இருந்து பெறப்படும் உறுதிச் சான்றிதழ்கள்.

(இ) விசாரணைகள், பரிசோதனைகள், அவதானிப்புகள், உருப்படிப் பரீட்சைகள் ஆகியவற்றின் மூலம் கணக்காய்வாளர் பெறும் தகவல்கள்.

(ஈ) கணக்காய்வாளருக்குக் கிடைக்கக் கூடிய ஏனைய தகவல்கள், இவை சரியான காரணத்துடன் முடிவுகளை அவர் மேற்கொள்வதற்கு உதவக் கூடிய தகவல்களாக இருத்தல் வேண்டும்,

கணக்கியல் செய்முறை, நடைமுறைகளைத் திரும்பவும் பார்வையிடுவதன் மூலமும் அட்டவணைகள், கூற்றுக்கள், இணைக்கக் கூற்றுகளைத் தயாரிப்பதன் மூலமும், கணக்குகள், பதிவேடுகள் முரண்படாது இருப்பதனை அவதானிப்பதன் மூலமும் கணக்கியல் தரவுகளின் சரியான தன்மை பரீட்சிக்கப்படும்.

2.0 சான்றுப் பொருட்களின் தகைமை

சான்றுப் பொருட்களின் தகைமை கணக்காய்வாளரின் முடிவிலேயே தங்கி இருக்கின்றது. இது ஒரு கணக்காய்வாளரில் இருந்து வேறொரு கணக்காய்வாளருக்கு மாறுபடும். பின்வரும் நான்கு விடயங்கள் சான்றுப்பொருட்களின் தகைமையை மதிப்பிடுவதற்கு உதவியாக இருக்கும்.

(அ) நிறுவனத்துக்கு வெளியில் இருந்து பெறப்படும் சுதந்திரமான சான்றுகள் கூடுதலான நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும்.

நிறுவனத்துக்கு வெளியே இருந்து பெறப்படும் தகவல்கள் நிறுவனத்தில் உள்ளவர்களால் வழங்கப்படும் தகவல்களிலும் பார்க்கக் கூடுதலான நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும்.

(ஆ) திருப்திகரமான அகக்கட்டுப்பாடு காணப்படும் நிலையில் கணக்கியல் தரவுகள், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பின் அவை கூடுதலான நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும்.

அகக்கட்டுப்பாடு சிறப்பாகக் காணப்படாதவிடத்துப் பெறப்படும் கணக்கியல் தரவுகள், நிதிக்கூற்றுக்கள், ஆகியவற்றிலும் பார்க்க அகக்கட்டுப்பாடு சிறப்பாக இருக்குமிடத்துப் பெறப்படும் கணக்கியல் தரவுகள் நிதிக்கூற்றுக்கள் கூடுதல் நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும்.

(இ) கணக்காய்வாளரின் நேரடியான சொந்த அறிவின் மூலம் கூடுதலான நம்பத்தகு தன்மையுடைய சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உருப்படிப் பரீட்சை அவதானிப்பு, கணிப்பீடு, பரிசோதனை மூலம் கணக்காய்வாளரால் நேரடியாகப் பெறப்படும் தகவல்கள் நேரடியாக அவரால் பெறமுடியாத தகவல்களிலும் பார்க்கக் கூடுதலான நம்பத்தகு தன்மை உடையதாக இருக்கும்.

(ஈ) எழுத்து மூலமான தகவல்கள் கூடுதலான நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும். வாய்மொழிமூலம் பெறப்படும் தகவல்களிலும் பார்க்க எழுத்து, ஆவணங்கள் மூலம் பெறப்படும் தகவல்கள் கூடுதலான நம்பத்தகு தன்மையைக் கொண்டிருக்கும்.

3.0 சான்றுகளின் போதிய தன்மை.

கணக்காய்வாளர் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகத் தமது திறந்தொழில் அபிப்பிராயத்தைக் கொடுக்கவேண்டியவராவார் எனவே அவர் நிதிக் கூற்றுக்களின் சரியான

தன்மையினைக் கண்டறிவதற்காகக் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களை கவனமாக ஆராய்ந்தபின் பெறப்பட்ட சான்றுகள் போதியனவா அல்லவா என்ற முடிவை எடுப்பார். இம் முடிவு பின்வரும் காரணிகளில் தங்கியிருக்கும்.

(அ) சாத்தியமான பிழைகள். ஒழுங்கீனங்களின் அளவு.

(ஆ) கடந்த கணக்காய்வுகளில் பெறப்பட்ட அனுபவங்கள்,

(இ) சம்பந்தப்பட்டுள்ள ஆபத்தின் தன்மை, அளவு

(ஈ) ஆய்வின் கீழ் உள்ள விடயங்களின் தன்மை.

(உ) கிடைக்கக் கூடிய தகுந்த சான்றுகளின் வகைகள்.

(ஊ) அகக் கட்டுப்பாட்டின் நம்பத்தகு தன்மை.

முக்கியமான ஒரு கொடுக்கல் வாங்கலைப் பற்றிக் கணக்காய்வாளர் சந்தேகிக்கும் பட்சத்தில் போதிய தகமை வாய்ந்த சான்றுகள் கிடைக்கும்வரை அபிப்பிராயம் தெரிவிக்கும் விடயத்தில் இருந்து விலகிக் கொள்ளுதல் வேண்டும். அல்லது முடிவு எடுக்க முடியாமை பற்றி அறிக்கையிடல் வேண்டும்.

கணக்காய்வாளர் செலவாகும் நேரத்தையும், முயற்சியையும் கருத்திற் கொண்டு சான்றுகள் போதிய நேரத்தில் கிடைக்காது என்று கருதினால் முடிவு எடுக்க முடியாமை பற்றி அறிக்கையிடலாம். ஆனால் சான்றுகளினைச் சேகரிப்பதிலுள்ள கஷ்டங்களும், செலவுகளும் சான்றுகளைச் சேகரிக்காமல் பழியற்ற அறிக்கை ஒன்று கொடுப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்படலாகாது.

4.0 சான்றுகளின் வகைகள்

கணக்காய்வாளரினால் சேகரிக்கப்படும் சான்றுகள் பின்வருவனவாக இருக்கும்.

(அ) கம்பனியினைச் சாராதவர்களினால் தயாரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் (உ+ம்) பங்குப்பத்திரம், ஒப்பந்தங்கள், உறுதி.

(ஆ) கம்பனியில் உள்ளவர்களால் தயாரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் (உ+ம்) கூட்ட அறிக்கைகள்.

(இ) சுதந்திரமான 3-ம் நபர்களிடம் இருந்து பெறப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள். (உ+ம்) வங்கிக் கடிதம், கடன்பட்டோரிடம் இருந்து பெறப்படும் நிலுவையை அத்தாட்சிப்படுத்தும் கடிதம்.

(ஈ) கம்பனியின் இயக்குனர்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் இருந்து பெறப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள். (உ+ம்) பிரதிநிதித்துவக் கடிதம்.

(உ) எதிர்பார்ப்புகளுடன் ஒத்திருத்தல். முக்கிய விகிதங்களைக் கணிப்பிட்டு அதனை

i) கடந்த காலம்.

ii) ஏனைய கம்பனிகள்.

iii) பாதிட்டுத்தரவுகள்.

iv) நியமங்கள்.

ஆகியவற்றுடன் ஒப்பீடு செய்யுமிடத்து வேறுபாடுகள் இருப்பின் அதில் கவனம் செலுத்துதல்.

(ஊ) அவதானிப்பு.

i) சொத்துக்களை நேரிடையாகப் பரீட்சித்தல்.

ii) அகக்கட்டுப்பாடு, கணக்குப்பதிவு, நடைமுறைகளை அவதானித்தல்.

iii) கணக்குப் பதிவுகள், அகக்கட்டுப்பாடு நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதனை உரியபதிவேடுகளை அவதானிப்பதன் மூலம் உறுதி செய்தல்.

(எ) தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகள்.

இநேகமாகக் கணக்காய்வு வருடமுடிவுக்குப் பின்னரே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் எழுகின்ற நிகழ்ச்சிகளைக் கொண்டும் அநேக விடயங்கள் தொடர்பாகக் கணக்காய்வாளர் சான்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஏ) தொடர்பான சான்றுகள்.

ஒரு விடயத்தினை உறுதி செய்யப்பயன்படுத்தப்படும் சான்றானது இன்னொரு விடயத்தினை உறுதிசெய்வதற்குப் பயன்படுத்தப்படலாம். (உ+ம்) முதலீட்டு வருமானத்தினை உறுதி செய்யப் பயன் படுத்தப்படும் சான்றானது நிறுவனத்திடம் முதலீடு இருக்கின்றது என்பதனையும் உறுதிசெய்யப் பயன் படுத்தப்படும்.

(ஐ) வெளியக நிகழ்ச்சிகள், வெளியகத்தகவல்கள்.

(ஒ) அகக்கட்டுப்பாடு
திருப்திகரமான அகக்கட்டுப்பாடு நிறுவனத்தில் இருத்தல்.

(ஓ) கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்படும் கணிப்புகள்.

அநேக என் தொகைகள் சரிதானா என்பதனைக் கணக்காய்வாளர் தான் மேற்கொள்ளும் கணிப்புக்கள் (Calculations) மூலம் உறுதி செய்து கொள்ள முடியும்.

5.0 சான்றுகளைப் பெறுவதற்குக் கணக்காய்வாளர் பின்பற்றக்கூடிய நுட்பங்கள்.

1) நேரிடையான பரீட்சிப்பும் எண்ணுதலும்.
2) மூல ஆவணங்களைச் சோதனை செய்தல் —சான்றுரைப்பு செய்தல்.
3) மீளக் கணிப்புக்களை மேற்கொள்ளல்-கூட்டுதல், கணக்கிடுதல், சரிக்கட்டுதல்.
4) விசாரணை செய்தல்.
5) அலசி ஆராய்தல்.
6) கணக்குகள், பதிவேடுகள் ஆகியவற்றிற்கிடையில் இணைவு உள்ளதா என்பதனை அறிதல்.
7) அவதானிப்பு.
8) கணக்குப்பதிவு நடைமுறைகளை மீளப் பார்த்தல்.
9) உறுதிப்படுத்துதல்.

நிதி தகவல் பற்றிய தனது சுதந்திரமான நியாயமான கருத்தினைத் தெரிவிப்பதற்காகக் கணக்காய்வாளர் அமைவு (compliance) நியாயப்படுத்தல் செயல்முறைகளைச் செயல்படுத்துவதன் மூலம் போதுமான உகந்த கணக்காய்வுச் சான்றுகளைப் பெற வேண்டும்.

அமைவுச் செயல்முறைகள் என்பது நிறுவனத்தில் அகக்கட்டுப்பாடுகள் பிரயோகத்தில் உள்ளனவா என்பதற்கும், ஆலோசிக்கப்பட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதற்குமான நியாயமான உறுதிப்பாட்டினைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் சோதனைகளைக் குறிக்கும்.

கணக்கீட்டு முறையினால் பெறப்படும் தரவுகள் முழுமையானதாகவும், சரியானதாகவும், நியாயமானதாகவும் அமைந்துள்ளனவா என்பதனை அறிவதற்குத் தேவையான சான்றுகளைப் பெறும் சோதனைகளை நியாயப்படுத்தல் செய்முறை குறிக்கும். இது இருவகைப்படும்.

i. கொடுக்கல் வாங்கல்கள் (நடவடிக்கைகள்) மீதிகள் மீதான விபரச் சோதனைகள்.
ii. முக்கியமான விகிதங்களினதும் போக்குகளினதும் பகுப்பாய்வு.

அமைவுச் செயல்முறைகளை அல்லது சோதனைகளை மேற்கொள்வதன்மூலம் கணக்காய்வுச் சான்றுகளைப் பெறமுயலும் கணக்காய்வாளர் பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனத்தினைச் செலுத்துவர்,

— கட்டுப்பாடு பிரயோகத்தில் இருக்கின்றதா ?

— கட்டுப்பாடு வினைத்திறனுடன் செயல் படுத்தப்படுகின்றதா?

— கட்டுப்பாடு காலப்பகுதி முழுவதும் மாறாமல் செயல்படுத்தப் படுகின்றதா?

நியாயப்படுத்தல் செயல் முறைகளை மேற் கொள்ளும்போது பின்வரும் முடிவுகள் பற் றிக் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

1. குறிப்பிட்ட திகதியில் சொத்து அல்லது பொறுப்பு நிறுவனத்தில் இருக்கின் றதா?
2. குறிப்பிட்ட திகதியில் சொத்தின் உரி மை நிறுவனத்திற்கு இருக்கின்றதா? பொறுப்புத் தொடர்பாக நிறுவனத் துக்குக் கடமைப்பாடு இருக்கின்றதா?
3. இடம்பெற்ற நடவடிக்கை அல்லது நிகழ்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு டையதா?
4. பதிவு செய்யப்படாத சொத்துக்கள், பொறுப்புக்கள், நடவடிக்கைகள் எது வும் இல்லையா?
5. சொத்துக்கள், பொறுப்புக்கள் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா?
6. நடவடிக்கை சரியான பெறுமதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதா? வருமா னம், செலவினங்கள் உரியகாலப் பகு திக்குக் காட்டப்பட்டுள்ளதா?
7. கணக்குகளில் காண்பிக்கப்பட்ட விட யங்களானவை கணக்கீட்டுக் கொள்கை கள், சட்டத்தேவைகள், கணக்காய்வு, கணக்கீட்டு நியமங்கள், ஆகியவற்றிற்கு அமைவாக உள்ளனவா?

6.0 சட்டத் தீர்மானங்கள்

கணக்காய்வாளர் ஒரு கணக்கு இலக் கம் சரியானதாகவும் நம்பத்தகுந்ததாகவும் உள்ளதாஎன்பதனை நிர்ணயிப்பதற்குதேவை யான சான்றுகளைப் பெறும்பொழுது, தான் பெற்ற சான்றுகள் போதுமானதா என்பத னைத்தனது அனுபவம், திறந்தொழில் அறிவு ஆகியவற்றினைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டும். இதற்குத் தேவையான அறிவினை பாட புத்தகங்கள், கணக்காய்வாளர் அமைப் புக்களின் வெளியீடுகள், தொடர்பான சஞ் சிகைகள் ஆகியவற்றில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

கணக்காய்வாளரது கவனயீனம் தொ டர்பாக ஏற்பட்ட நட்டத்திற்கு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டபொழுது சில வழக்குகளில் அச்சூழ்நிலைக்கேற்ப அவர்கள் பெற்றுக்கொண்ட சான்றுகளின் போதிய தன்மை பற்றி நீதிமன்றங்கள் சில கருத் துக்களை வழங்கி உள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றினை இங்கு அவதானிப்போம்.

(அ) London Oil Storage Co. Ltd. Vs. Seear Hasbuck & Co. பெட்டிக் காசுப் புத்தகம் பெட்டிக்காசுமீதி £796 எனக்காட்டியது. ஆனால் உண்மையில் பெட் டிக்காசு மீதியாக £30 காணப்பட்டது. மீதிப் பணம் £766 கையாடப் பட்டுவிட்டது. கணக்காய்வாளர் பெட்டிக்காசு மீதியினை எண்ணிச் சரிபார்க்காது புத்தகமீதியினைச் சரி என எடுத்திருந்தார். அவர் உண்மையில் கவனயீனமாக செயற்பட்டிருக்கின்றார் என வும் புத்தகமீதி பெரிய தொகையாக உள்ள மையினால் அதனைப்பற்றி விசாரித்திருத்தல் வேண்டும் எனவும் அதன்பின் காசுப்பெட்டி யில் மீதியினை எண்ணிச் சரிபார்த்திருத்தல் வேண்டும் எனவும் தீர்ப்பு கூறப்பட்டது.

(ஆ) Re Thomas Gerrard and Sons Ltd. 1967.

இலாபத்தைக் கூட்டிக்காட்டுவதற்காக விலைப்பட்டியல்களை வேறுவருடங்களுக்குரிய தாகக் காட்டுவதற்கு மாற்றம் செய்திருந் தார்கள். கணக்காய்வாளர் இம்மாற்றங் களை அவதானித்து விசாரணை செய்திருந் தார். ஆனால் மூகாமைக் கணக்காய்வாள ரின் உறுதிப்பாட்டினை ஏற்றிருந்தார். ஆனால் வருடமுடிவில் கம்பனியின் கடன் கொடுத் தோரிடமிருந்து நேரடியாக உறுதிப்பாட் டினைப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டது.

WITH BEST WISHES FROM

Newtone Electricals

ELECTRICAL CONTRACTORS

★ C. E. BULBS
★ EVEREADY BATTERY
★ S. LON PIPES
★ CENTRIC ELECTRIC WATER PUMP
★ "JEM" MOTOR
OTHER ELECTRICAL GOODS

141, 143, STANLEY ROAD
JAFFNA

அன்பளிப்பு

மாக்மிலன் புத்தகசாலை

பாடசாலை உபகரணங்கள்
ஸ்ரேசனறிச் சாமான்கள்
இந்திய சஞ்சிகைகள்
புதினப் பத்திரிகைகள்
வாழ்த்து மடல்கள்

இவை யாவற்றையும்
மலிவாகப் பெறச் சிறந்த ஓர் இடம்

மாக்மிலன் புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

WITH BEST WISHES FROM

New Ananththaa Stores

நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ்

WHOLE SALE &
RETAIL MERCHANTS

60, Hospital Road,
JAFFNA

இலங்கையில் தனியார்மயவாக்கம்

PRIVATIZATION IN SRI LANKA

வ. செந்தில்ராஜா
வணிகமானி 4ஆம் ஆண்டு
வணிகமுகாமைத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் பல்வேறு அரசுகள் காலத்துக்குக் காலம் பதவிவகித்து வந்தன. தம் பதவிக்காலங்களில் தாம் விரும்பிய நோக்கில் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளையும், அரசியல் யாப்புக்களும் ஏற்படுத்தி ஆட்சியினை நிலைநிறுத்திக் கொண்டன. இந்நிலையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டதா? என்ற வினா ஒருபுறமாக இருக்க, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்த ஒன்றாக இருக்கவில்லை. இவ்வாறு வாழ்க்கைத்தர உயர்வினைத் தடைப்படுத்தும் காரணியாக பொருளாதார நெருக்கடி என்பதாகவே அது பெரும்பாலுமிருந்தது எனலாம். பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவித்த காரணிகளில் உலகப் பொருளாதார மந்தம், சர்வதேச பணவீக்கம், சர்வதேச நெருக்கடி நிலைகள் என்பவை மாத்திரமன்றி, அவ்வப்போது பதவியிலிருக்கும் அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகளும் பொருளாதார நெருக்கடிகளைத் துரிதப்படுத்தினவென்றே கூறலாம். இந்த வகையில் இறக்குமதிக் கட்டுப்பாடு, இறக்குமதிப்பிரதியீடு, செலவாணிக்கட்டுப்பாடு, தேசியமயவாக்கம் என்பன போன்ற கட்டுப்பாடான பொருளாதாரக் கொள்கைகள் அமுலிலிருந்தபோது மக்களின் அன்றாட வாழ்க்கை கூட சாதாரணமாக பாதிக்கப்படலாயிற்று. இத்தகைய சந்தர்ப்பத்தில் பொதுத்தேர்தல் ஒன்றின் மூலமாக 1977 ல் புதிய அரசு பதவியேற்றது. இதுவரை காலமும் அமுலிலிருந்த பொருளாதாரக் கொள்கைகள் வாபஸ்பெறப்பட்டு ஏற்றுமதி மேம்பாடு, தாராள பொருளாதாரக் கொள்கை, செலவாணித் தளர்வு, தனியார் மயப்படுத்தல் (Privatization) என்ற புதிய கொள்கைகள் உடனடி அமுலாக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டன. "இறக்குமதி கட்

டுப்பாடுகள் பொருளாதாரத்தின் சாபக் கேடு" எனக் கருதிய புதிய அரசின் தனியார் மயவாக்கம் பற்றிய கொள்கையை விளங்கிக் கொள்வதற்கு 1985 – ல் வெளியிட்ட நிதி அமைச்சின் அறிக்கையை நாம் இங்கு கவனத்தில் கொள்வது முற்றிலும் பொருத்தமானதாகும். "புதிய முதலீடுகளைப் பொறுத்தவரை தனியார்துறை முதலீடு செய்யத்தக்கவகையில் ஊக்குவிக்கப்படவேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. பாரிய முதலீடு, பயனளிக்க நீண்டகாலமெடுத்தல், குறைந்த நிதிவடிவிலான இலாபம் என்பவற்றின் காரணமாக தனியார்துறை முன்வராத சந்தர்ப்பங்களில் அரசும், தனியாரும் சேர்ந்து கூட்டு முயற்சிகளைத் தாபிப்பதும், காலப்போக்கில் தகுந்த கொள்கையினூடாக புதிய முதலீடுகளை வணிக ரீதியில் கவர்ச்சியுடையதாக்குவதுமே, அரசின் நோக்கமாகும். (Public Finance Report - 1985).

இவ்வாறான ஓர் தெளிவான கொள்கையை அரசு முன்வைப்பதற்கான காரணங்கள் என்னவென்பதனையும், தனியார் துறை ஊக்குவிக்கப்படுவதற்கு எத்தகைய காரணிகள் பின்னணியிலிருந்தன என்பதையும் நாம் நோக்குதல் அவசியமானது.

★ இதுவரை காலமும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களில் தனித்து அரசு மட்டுமே முதலீடு செய்து வந்தது. அரசினால் மட்டும் தனித்து முதலீடு செய்து பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதில் கடினத்தன்மையினை புதிய அரசு நன்கு உணர்ந்து கொண்டது. விரைவான ஒரு பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு தனியார் துறையினரின் ஒத்துழைப்பு என்பது அவசியமாயிற்று. தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன்பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், தனியார் மயப்படுத்தல் ஊக்குவிக்கப்பட வேண்டியதாயிற்று,

★ 1977 - க்கு முன்னர் தம் அன்றாட வாழ்க்கைக்கு உறுதுணையாகவுள்ள பொதுப்பொருட்கள், பொதுச் சேவைகள், பொதுவசதிகள் என்பன போதுமானளவிற்கு மக்களுக்குக் கிடைக்கவில்லை. அல்லது எல்லா மக்களுக்கும் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இதனால் அன்றாட வாழ்க்கையைக்கூட பலர் கொண்டு நடாத்த முடியாததுடன், வாழ்க்கைத்தர வீழ்ச்சியையும், பொருளாதார அபிவிருத்தி என்பதற்குப்பதிலாகநெருக்கடிகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இத்தகைய ஒரு பலவீனப்பட்டிருந்த அல்லது தாக்கத்துக்குள்ளாக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை மிகவிரைவாக கட்டியெழுப்பவும், மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவு செய்வதற்கும், தனியார்துறையினரது ஒத்துழைப்பினை அரசு வேண்டிநின்றமை ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமல்ல.

★ அரச அமைப்புக்கள் பல்வேறு நிலைகளிலும் தோல்வியையும் நட்டத்தையும் பெற்றுக் கொள்வது வழமையானதாகிவிட்டது. இவ்வாறு நட்டத்தை அடைதலானது விரைவான தீர்மானம் எடுக்க முடியாமை (Decision Making), மக்களுக்கு வழங்கப்படும் பொருட்களுக்கு அல்லது சேவைகளுக்கு மானியங்களை வழங்கல், அரசியல் தலையீடு, மேலதிக ஊழியர் நியமனம் பெறல், சிவப்பு நாடாத்தன்மை (Red Tapism) விண்ணரயங்கள் நிர்வாகமட்டஊழல் போன்றவற்றினூடாக ஏற்பட்டதுடன் அரசஅமைப்பு முதலீடுகள் மக்களுக்கு முழு நிறைவான சேவைகளையோ அன்றி நாட்டின் பொருளாதாரத்தில் தகுந்த பலாபலன்களையோ வழங்கத்தவறின. தொடர்ந்

தும் இத்தகைய அரச அமைப்புக்கள் நீடித்து நிலைத்து வாழ்ந்து கணிசமான பங்களிப் பினை பொருளாதாரத்துக்கும் அதன் வழி மக்களுக்கும் எதிர்காலத்தில் வழங்குமென்ற எதிர்பார்க்கையுடன் பெருமளவு நிதியுதவி கள் அரசினால் காலத்துக்குக்காலம் வழங் கப்பட்டன. அவ்வாறு பெருமளவிற்கு நிதி யீட்டம் செய்தபோதுங்கூட அவை இலாப மீட்டுவதற்கு அல்லது பொருளாதார அபி விருத்திச் செய்முறையில் வெற்றியீட்டுவ தற்குப் பதிலாகப் பழையபண்புகளையே பெற்றிருந்தன. இத்தகைய நிலையில் அரச அமைப்புக்கள் பெருமளவு நிதியை உறிஞ் சிக் கொள்வதனால் பல புதிய முதலீட்டு திட்டங்களையோ அன்றி மக்களின் வாழ்க் கைத்தர உயர்வையோ மேம்படுத்துவது என்பது அரசிற்கு பெருஞ்சுமையை ஏற்ப டுத்திற்று. எனவே மட்டுப்பாடான வளங் களை உச்ச அளவில் பயன்படுத்தி பொரு ளாதார அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி, என்பவற்றை அடைந்து கொள் வதற்குத் தனியார் துறையினரது பக்களிப்பு அவசியமான ஒன்றாயிற்று.

★ பதவி வகிக்கும் ஒவ்வொரு அரசும் எதிர்காலத்தில் தாங்களே தொடர்ந் தும் பதவி வகிக்க வேண்டும் என்ற பெரு விருப்புடனேயே செயற்பட்டன. அவ்வாறு அரச பதவியை தமதாக்கிக் கொள்ள நாட்டு மக்களுக்கு பெருமளவுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. இத்தகைய மானியக் கவர்ச்சியின் காரணமாக நுகர்வின் மீதான நாட்டம் அதிகரித்தல், எதையும் அரசு செய்துதரும் என்ற மனோநிலை, சோம் பேறித்தனம் என்பன மக்கள் வாழ்வில் ஏற் பட்டிருந்தன. மட்டுமன்றி பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய் யப்படவேண்டிய வளங்கள் நுகர்வுக்காக செலவளிக்கப்பட்டன. இந்நிலையில் அபிவி ருத்திச் செய்முறைக்கும், மக்களின் வாழ்க் கைத்தரத்திற்குமிடையில் பாரிய இடை வெளி ஏற்படுவது இயல்பானதொன்றாக காணப்பட்டது. இந்நிலையில் அரசில் தங்கி வாழும் மக்கள் தமது சொந்தக் கரங்களி லேயே தத்தம் வாழ்க்கைத்தரங்களை மேம் படுத்திக் கொள்வதற்கும், பொருளாதார அபிவிருத்திச் செய்முறையின் இடைவெளி யினைக் குறைப்பதற்கும் தனியார்துறை ஒத்துழைப்பு என்பது அவசியமானதொன் றாயிற்று.

★ பெருமளவு அரச நிறுவனங்கள் தேசிய அபிவிருத்திக்கு தமது பங்களிப்பைச் செலுத்தாதிருப்பதுடன், நட்டத்தன்மையினை அனுபவிப்பதனால் பல்வேறு நிலையிலும் திறை சேரியின் நிதிப்பங்கீட்டில் தங்கியிருந்தன, இதனால் புதிய அபிவிருத்திக்கான நிதிகள் அரசநிறுவனங்களால் விரயத்துக்குட்பட்டி ருந்த இந்நிலையில் தேசிய அபிவிருத்தியை முன்னெடுக்கவும், வணிக ரீதியில் திறமை யாகச் செயற்படவும் கம்பனி அமைப்புக் கள் பொருத்தமானவையாகக் காணப்பட் டன. ஒழுங்கு முறையான நிர்வாகஅமைப்பு, விரைவான தீர்மானம், உடனடி நடவ டிக்கை, இலாபமீட்டுந் தன்மை என்பவற் றைச் சிறப்பாகக் கொண்ட கம்பனி அமைப்பை அரசு பெரிதும் விரும்பியது. திறமையாகச் செயற்படாத அரச அமைப் புக்களை மூடுதல், சிறப்பாக இயங்கும் அரச அமைப்புக்கள் பல புதிய உபகம்பனிகளை அமைத்தல், பாரிய முதலீடுகளில் மக்களும் முதலீடு செய்து தேசிய அபிவிருத்தியில் பங்குபற்றல் என்பதுடன் இவ்வழி குறிப் காலத்தில் சுபீட்சமான ஓர் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் அரசின் குறிக்கோளாயிற்று.

மேற்கூறிய இத்தகைய காரணங்களி னால் தனியார்மயவாக்கம் என்ற கொள்கை வலிமை பெற்று வருகின்றது. இதுவரை காலமும் அனுமதிப்பத்திர அடிப்படையில் இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டு வந்

தன. புதிய அரசு பதவியேற்றதும் உட னடியாகவே இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அரச அமைப்பினுல் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்பொருட்க ளைக் கூடத்தனியார்துறை இறக்குமதி செய் வதற்கு (உ+ம் சீனி) அரசு வாய்ப்பளித் தது- அது மாத்திரமன்றிக் காணிஉச்ச வரம்புச்சட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப் பட்ட பெருந்தோட்டத்துறை நிலங்கள் யாவும் நட்டஈட்டுடன் அரசினுல் மீளளிக் கப்பட்டன. மிக அண்மைக் காலத்தில்கூட றபர்பாலை ஏற்றுமதி செய்வதற்கு இது வரை காலமும் நிலவிவந்த அனுமதிபபத் திரமுறை அகற்றப்பட்டு ஏற்றுமதி துறை கூட முற்றுகத் தனியாருக்குத் திறந்துவிடப் பட்டுள்ளது. எனவே எந்தெந்தத் துறையில் தனியார்துறை முதலீடு செய்திருக்கின்றது என்பதனை நாம் அடுத்து நோக்குவோம்.

1. மிகவும் பாரம்பரியதுமானதும், அத்தி யாவசியமானதுமான ஒரு உற்பத்தியாக புடவைக் கைத்தொழில் விளங்குகிறது. அரச அமைப்புக்களால் நட்டத்தில் செயற் பட்ட இக்கைத் தொழில் தனியார் துறை யினரால் பொறுப்பேற்கப்பட்டது.

உ+ம்: புடவை உற்பத்தி நிலையங்கள் (வெள்ளவத்தை, வியாங்கொடை, துல்கிரிய, பூகொடை)

2. நாட்டு மக்களின் அன்ருட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கு டன் உணவு உற்பத்தியிலும் தனியார்துறை முதலீடு செய்துள்ளது.

உ+ம்: (பிறிமா மா ஆலை (திருமலை)

3. நாட்டு மக்களின் குடியிருப்புத் தேவை யானதும், அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பாரியளவில் தேவைப்படுவதும், புனர் நிர் மானக் கைத்தொழிலுக்கு அவசியமானது மான சீமேந்தினை உற்பத்தி செய்ய முன்வந் துள்ளது. உ+ம் டோக்கியோ சீமேந்து ஆலை

4. அரசினுல் முற்றுமுழுதாகக் கவனம் செலுத்தப்பட்டதும், பாரிய முதலீட்டு முயற்சியாகியதுமான துரிதப்படுத்திய மகா வலி அபிவிருத்தித்திட்டம் போன்ற விவ சாய துறையிலும் தனியார்துறை முதலீடு செய்துள்ளது. உ+ம் துரிதப்படுத்திய மகா வலித்திட்டத்தின் H வலயத்தில் தாவர எண்ணெய் விதைகளை பயிரிடுவதற்கான முயற்சியில் ''ஹத்தி'' நிறுவனம் (Guthrie) முதலீடு செய்துள்ளது. அதேபோல Ceylon Tobacco Company பயிர்ச்செய்கையில் முதலீடுசெய்துள்ளது.இதே போல C வலய த்தில் மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை மேற்கொள்ளத் தனியார்துறை முதலீடு செய்துள்ளது.

5. விவசாயக் கைத்தொழில்கள் பலவற்றை தனியார்துறை தன்வசமாக்கிக் கொண் டது. இதன் மூலம் கிராமிய விவசாயிகளின் விளைபொருட்களை உள்ளீடாகக் கொள்ள வும் ஏற்றுமதி நோக்கிய சந்தைப்படுத்தலுக் கும் வாய்ப்பு ஏற்பட்டது.

உ+ம்: நக்கல, செவனகல, பெல்வத்த, மொனருகலை சீனித்தொழிற்சாலைகளை தனி யார் துறை பொறுப்பேற்றுக் கொண்டது.

நக்கல: H V A ஹோலன் அக்ரோ இன்டஸ் றீஸ் பிறைவேற் லிமிட்டட்

பெல்வத்த: புக்ஹர் இன்டர் நாஷனல்

மொனருகல: மேத்தா இஸ்டர் நாஷனல்.

இது மட்டுமன்றி பழங்களைத் தகரத்தில் அடைத்தல். கெக்கரிக்காயை உள்ளீடாகக் கொண்ட ஊறுகாய் உற்பத்தி ஏற்றுமதி நோக்கி சந்தைப்படுத்துவதற்கு முன்வந்துள் ளது.

உ+ம்: வெலிகனேறிஸ் நிறுவனம்

இதே போன்று பாற்பண்ணைக் கைத் தொழில்கள் பலவற்றிலும் தனியார்துறை முதலீடு செய்துள்ளது. நாட்டுமக்கள் அனை வருக்குமேற்ற வகையில் பால்மா வகைகளை

தனியார் துறை உற்பத்திசெய்து வருகின்றது.
உ+ம்: நெஸ்லே லங்கா லிமிட்டெட்

6. மக்கள் சுயவேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்குப் பல்வேறு வசதிகளையும் அரசு அளித்து வருகின்றது. குறிப்பாகக் கிராமிய மட்டத்தில் கால்நடைவளர்ப்பு முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இத்தகைய கால்நடைவளர்ப்புக்களை ஊக்குவிக்கும் வகையில் அவற்றுக்கு வேண்டிய கால்நடை உணவுவகைகளைத் தனியார்துறை உற்பத்தி செய்கிறது. உ+ம் பிறிமா மா ஆலையின் கால் நடை உணவு உற்பத்தி.

இவை தவிர பொதுச்சேவைகள் அனைத்திலும் தனியார் துறை முதலீடு செய்துள்ளது. பின்வரும் சேவைகளை நாம் குறிப்பிடலாம்.

கல்வி: உ+ம்: கொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம் தனியார் மருத்துவக் கல்லூரி

போக்கு வரத்து:- உ+ம்: வீதிப்போக்கு வரத்து தனியார் போக்கு வரத்து பஸ்க்கள் புகையிரதப்போக்கு வரத்து: Hillton Ltdன் ''ஹித்தாஜி புகையிரத சேவை'' விமானப் போக்கு வரத்து: உபாலி நிறுவனம்.
தொலைத்தொடர்பு அஞ்சல் அலுவலகங்கள்: தனியார் அஞ்சல் முகவர் நிலையங்கள்

மின்சாரம்: உ+ம்: Lanka Electricity Private Ltd.
காப்புறுதி: உ+ம் C.T.C. Eagle Insurance Ltd.
அச்சக சேவை: உ+ம் ச. தோ. ஷ அச்சக நிறுவனம்

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் தனியார் துறை முலீடுகளை மேற்கொண்ட போதிலும் தேசிய அபிவிருத்தியில், தேசியநலனில் எந்தளவிற்கு நன்மை அளித்துள்ளது என்பதை நாம் நோக்குவோம்.

தனியார் துறையின் முக்கிய நோக்கம் இலாபமீட்டுவது ஆகும். வருமானம் கூடியவர்கள் பொதுப்பண்டங்கள், பொதுச் சேவைகள், பொது வசதிகள் என்பவற்றை கூடுதலானளவுக்கு நுகர்ந்து கொள்ள, வருமானம் குறைந்தவர்கள் இவற்றை நுகர முடியாதுள்ளனர். வருமானச் சமமின்மை வாழ்க்கைத்தர மேம்பாடு என்பவற்றை மேலும் விரிசலடையச் செய்யக் கூடிய வகையிலேயே பொருளாதார அபிவிருத்தி செய் முறை செயல்படுத்தப்படுகின்றது. இதன் வழி, முதலீட்டாளர்கள் மேலும் தம் செல்வங்களைப் பெருக்கிக் கொள்ள, வருமானங்குறைந்தோர் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்படும் பொருளாதார அபிவிருத்திச் செய்முறை பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துமென்ப கேள்விக்குரிய தொன்றாகும்.

அது மாத்திரமன்றி தாராள பொருளாதாரக் கொள்கை பொருளாதார அபிவிருத்தியுடன் பின்னிப்பிணைந்து செயற்படுமாஞல் அது தகுந்த பலாபலன்களைப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக்கும். கட்டற்ற இறக்குமதியின் வாயிலாக பெருமளவு நுகர்பொருட்கள் மேன்மேலும் அபிவிருத்தி அடைந்த அல்லது ஏற்றுமதி செய்கின்ற நாடுகளில் தங்கியிருக்கும் தன்மைக்கு இட்டுச் செல்கிறது. கட்டற்ற இறக்குமதி மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்து அதன்வழி பொருளாதார அபிவிருத்தியை அடைவது என்பதற்குப் பதிலாக ஆடம்பர, இடைத்தர, நுகர் பொருட்களின் இறக்குமதி உள்ளூர் பொருளாதாரத்தை பெருமளவுக்குப் பாதிப்புறச் செய்கின்றது. இந்நிலை நீடிக்குமாஞல் தேசியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது என்பது கடினமானதொன்றாகும்.

மேலும் பல்துறைகளில் முதலீடு செய்துவரும் நிறுவனங்கள் யாவும் உள்ளூர் தனியார்துறையினருக்குச் சொந்தமானதாக

இல்லாமல் அது விருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரச் சுரண்டலில் வல்லமை பெற்ற பல தேசிய நிறுவனங்களுக்கு சொந்த மானவை ஆகும். முதலீடுகள் என்ற வடிவில் மூலவளங்களைச் சுரண்டுவதற்கும், வேலைவாய்ப்பு என்ற வடிவில் இலங்கையின் இளமைத் துடிப்பை உறிஞ்சுவதற்கும் இவர்கள் அக்கறை கொண்டுள்ளனர். வேலை வாய்ப்பில் கூட கீழ் மட்ட (Lower level), சமயா சமய அடிப்படையிலேயே வேலைக் கமர்த்தப்பட்டனர். இத்தகைய வேலை வாய்ப்பு வசதிகளை மேலும் அதிகரித்துக் கொள்ளச் சட்டங்களைக்கூட தமக்குச் சாதக மாக்கிக்கொண்டனர். இதனால் இலங்கை யின் சமூக, கலை, கலாச்சாரப் பாரம் பரியங்கள் அழிவடைய வாய்ப்புண்டு. இந்நிலை யில் தேசிய பொளாதாரம் தேசிய நலன்கள் வளர்க்கப்படும் என்பதும் கேள்விக்குரிய ஒரு அம்சமாகும்.

மேலும் பல அரச அமைப்புக்கள் பல புதிய கம்பனிகளை உபநிறுவனங்களாக கொண்டு செயற்படுகின்றன. மொத்த மூலதனத்தில் ஊழியர்கள் பங்கெடுப்பது சிறப்பம்சமாக காணப்பட்டாலுங் கூட, கம்பனிகள் ஈட்டும் இலாபத்தைத் தாய் நிறுவனங்கள் உறிஞ்சுவதற்கு வாய்ப்புக் களும் உள்ளன. அதுமட்டுமன்றி தாய் நிறுவனங்கள் உபகம்பனிகளின் செயற்பாடு களை கட்டுப்படுத்தும் ஆற்றலையும் கொண் டுள்ளன. இதன் வழி தன்னிச்சையாகத் தீர்மானமெடுத்தல் விரைவான செயற் பாடு என்பவை பாதிக்கப்பட்டு அதன்வழி கம்பனிகளும் எதிர்காலத்தில் நட்டங்களைப் பெற வாய்ப்புக்கள் உள்ளன.

பல அரச அமைப்புக்கள் தனியார் துறையினருடன் போட்டி போட வேண் டிய ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. ஆனா லும் அவை போட்டி போட முடியாது நட்டங்களை தம் வசப்படுத்துகின் றன. அவ்வாறு நட்டத்தில் இயங்கும் அமைப்புகளை மூடுவதற்குப் பதிலாக மேலும் செயற்படுவதற்கு பல்வேறு வழிகளிலும் அரசு உதவி அளிக்கின்றது. இதன் மூலம் அரசு அமைப்புக்கள் பெருமளவுக்கு வளங் களை வீண்விரயமாக்குகின்றன. வருமானம் குறைந்தோர் அரச அமைப்பினூடாக பெற்றநன்மைகள் கிடைக்காமல் போகின் றன. இவர்களது தேவைகளைத் தனியார் துறை நிறுவனங்கள் தேசிய நலநோக்குடன் பூர்த்தி செய்ய மாட்டாது. ஏனெனில் தனியார் துறையினரின் ஒரே நோக்கம் உச்சலாபமடைவதாகும்.

இது மட்டுமன்றி 1977 களைத் தொடர்ந்து ஸ்திரமற்ற அரசியல் கொள் கைகள் காரணமாக இலங்கையில் முதலீடு செய்து நட்டமடைந்த தனியார் நிறுவனங் கள் பலவற்றிற்கு அரசு பல்வேறு சலுகை களையும் உதவிகளையும் வழங்கி வருகின்றது. இத்தகைய ஒரு நிலையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமா என்பது ஒருபுற மிருக்க முதலீடு செய்ய முன்வந்த நிறுவனங் கள் தமது முதலீட்டுத் திட்டங்களைக் கைவிட்டன.

உ+ம்: Motorola Ltd.
Haris Electronics Ltd.
Agrico Ltd.

எனவே இறுதியாக நாம் நோக்கு மிடத்து பொருளாதார அபிவிருத்தியை இருதுறைகளும் இணைந்து அடைந்து கொள் வதற்குப் பதிலாக பாரிய இடைவெளியி னைப் பல்வேறு சூழ்நிலைகளும், பொருளா தாரக் கொள்கைகளும் ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்படக் கூடியதாகும்.

தொழிலாளருக்கான ஊதியம்

LABOUR REMUNERATION

க. வரதராஜா

வணிகத்துறை 3ஆம் வருடம்

யாழ் பல்கலைக்கழகம்

பொருளியலைப் பொறுத்தவரையில் கூலி என்பது உழைப்பு என்ற உற்பத்திக் காரணிக்கு வழங்கப்படும் சன்மானம் அல்லது வெகுமதி என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. எனவே இங்கு ஒரு தொழிலாளியினால் ஆற்றப்படுகின்ற எத்தகைய சேவையானாலும் சரி அதற்குப்பிரதிபலனாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் அனைத்தும் கூலி என்ற வரையறையுக்குள் அடக்கப்படும். ஆனால் கிரயக் கணக்கியலைப் பொறுத்தவரையில் ஒரு உற்பத்தி நிறுவனத்தில் ஒரு தொழிலாளியினால் ஆற்றப்படுகின்ற சேவைக்குப் பிரதிபலனாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவை மாத்திரமே கவனத்தில் கொள்கின்றமையினால் இதனை தொழிலாளருக்கான ஊதியம் என வரையறுக்கிறோம். நடைமுறையில் நாம் தொழிலாளருக்கு ஊதியத்தினை வழங்கும் போது ஒரு தன்னிச்சையான செயற்பாட்டின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவை வழங்குகின்றோம். ஆனால் கிரயக் கணக்கியலைப் பின்பற்றும் நிறுவனங்களும், உற்பத்திச் செலவினை இழிவாக்கும் நோக்குடன் முகாமைத்துவ நுட்பங்களைப் புகுத்திக் கொள்ளும் நிறுவனங்களும் சில வரையறைகளுக்குட்பட்டு அவ்வரையறைகளின் நிமித்தம் உருவாக்கப்பட்ட கொடுப்பனவு முறைகளையே பின்பற்றுகின்றன. எனவே இங்கு கிரயக் கணக்கியல் முறையில் எவ்வாறு தொழிலாளருக்கான ஊதியம் கணிப்பிடப்படுகிறது? அத்தகைய முறைகள் யாவை? என்பன பற்றியே ஆராயப்படுகிறது.

தொழிலாளருக்கான ஊதியமானது ஒரு முடிவுப்பொருளினது உற்பத்திச் செலவில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிப்பது யாவரும் அறிந்த விடயமே. அத்துடன் அப்பொருளினது சந்தை வாய்ப்பினை எடுத்து நோக்குமிடத்து, அப்பொருளின்விலை, தரம், தொடர்ந்தேச்சையான நிரம்பல் என்பனவையே அதனைத் தீர்மானிப்பதாக அமை

கிறது. நுகர்வோரைப் பொறுத்து ஒப்பீட்டளவில் விலைகுறைவாக இருக்கும் பொருளின் மீதே கூடியளவு கேள்வியை ஏற்படுத்துவர். பொருளினது விலை குறைவாக இருக்க வேண்டுமாயின் ஊதியத்தின் அளவு குறைவாக இருத்தல் வேண்டும். அதாவது ஏனையவை மாறுதவிடத்து ஊதியத்தில் ஏற்படும் குறைவு பொருளினது விலையைக் குறைவடையைச் செய்யும். ஆனால் ஊதியத்தின் அளவு குறைவடையும் போது தொளிலாளரின் தொடர்ந்தேச்சையான செயற்பாடு, திறன் வாய்ந்த சேவை என்பன சந்தேகத்துக்குரிய அம்சங்களாகி விடுகின்றன. எனவே தான் தொழிலாளருக்கான ஊதியக் கொடுப்பனவானது இவ்விருமுரண்பட்ட நோக்கங்களுக்கிடையேயும் ஒரு சமநிலையை ஏற்படுத்தக் கூடியதாக, அதாவது ஒருபுறத்தில் உற்பத்திச் செலவினை அதிகரிக்காத வகையில் குறைந்த மட்ட ஊதியமாக இருப்பதுடன், மறுபுறத்தில் தொளிலாளர் விரக்தியடையாத வகையில் நியாயமான கொடுப்பனவாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய நோக்கத்தை அடையும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறைகளானது,

1) நேரம்
2) உற்பத்தி அலகுகள்

என்ற இரண்டுடனும் தொடர்புபடுத்தப்பட்டது. நேரத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறை நேரக்கூலி முறை எனவும், உற்பத்தி அலகுகளினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறை துண்டுக் கூலி முறை எனவும் அழைக்கப்படுகிறது.

1. நேரக்கூலி அல்லது நாட்கூலிமுறை: Time work or Day work method

இம்முறையின் கீழ் தொழிலாளிகளினால் ஆற்றப்படும் சேவைக்கான ஊதியக் கொடுப்பனவானது அவர் வேலை செய்யும் நேரத்துடனேயே தொடர்புபடுத்தப்படுகின்றது. இம் முறையில் பொதுவாக

ஊழியருக்கான ஊதியம்=வேலைசெய்த மணித்தியாலம் × மணித்தியாலத்திற்கான ஊதியவீதம்

இம்முறையின் கீழ் மணித்தியாலத்திற்கான ஊதியவீதம் ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்டதாகவும் அடிக்கடி மாற்றமடையாததாகவும் காணப்படும். எனவே கூடியளவு நேரம் வேலை செய்பவர்கள் கூடியளவு ஊதியத்தினையும் குறைந்தளவு நேரம் வேலைசெய்பவர்கள் குறைந்தளவு ஊதியத்தினையும் பெற முடியும். ஆனால் நடைமுறையில் பொதுவாக இம்முறையைப் பின்பற்றும் நிறுவனங்கள் தொழிலாளிகளை குறிப்பிட்ட மணித்தியாலம் (பொதுவாக நாளுக்கு 8 மணித்தியாலம்) வேலை செய்ய வேண்டுமெனப் பணிக்கின்றன. இதன் காரணமாக தொழிலாளரது ஊதியத்தில் வேறுபாடு காணப்படாததுடன் ஊதிய உத்தரவாதமும் காணப்படுகிறது. இம்முறையில் நிறுவனத்தினால் வேலைசெய்யும்படி வேண்டப்பட்ட நேரத்திலும் மேலதிகமாக தொழிலாளி வேலை செய்வாராயின் அதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு (Over time) வழங்கப்படும். மேலதிக நேரம் வேலை செய்வதைத் தூண்டுவதற்காக பொதுவாக மேலதிக நேரத்திற்கான மணித்தியலத்திற்கான ஊதிய வீதமானது சாதாரண ஊதிய வீதத்திலும் பார்க்க கூடுதலாகவே காணப்படும். எனவே இம்முறையின் கீழ் கூடியளவு ஊதியத்தினைப் பெறவிரும்புவோர் கூடியளவு நேரம் வேலை செய்ய வேண்டும்.

இங்கு ஊழியரின் உற்பத்தித்திறனுக்கு எதுவித தூண்டுதல்களும் அளிக்கப்படாததினால் ஊழியர் தமது தன்னிச்சையான உழைப்பினை வழங்குவதற்கு முன் வருவதில்லை. இதன் காரணமாக இம்முறையின் கீழ் மேற்பார்வைச் செலவு என்பது தவிர்க்க முடியாததாகவும், அதே வேளை பெருமளவினதாகவும் காணப்படுகிறது. இம்முறையானது உற்பத்தியினை விரைவாக மேற்கொள்ளும்படி எவ்வகையிலும் தொழிலா

ளரைக் கோராத காரணத்தினால் உயர் தொழில் நுட்பங்களைக் கொண்ட இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் போன்ற உற்பத்திகளுக்கு மிகவும் பொருத்தமுடைய தாகவும் அத்துடன் மேற்பார்வையாளர்கள் காவலாளிகள், துப்புரவு செய்பவர்கள் போன்றோருக்கும் பொருத்தமுடைய முறை யாகவும் அமைகிறது.

இம் முறையானது மணித்தியாலத்திற் கான ஊதிய வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு

I. சமநேர விகிதம்

II. உயர் நேரவிகிதம்

என இரு வகையாக வகைப்படுத்தப் படுகின்றது.

I. சமநேர விகிதம் :
Flat-Time Rate :

இம் முறையின் கீழ் குறிப்பிட்ட தொழிலாளி எவ்வளவு உற்பத்தியை மேற் கொண்டாலும் அதாவது உற்பத்தித்திறன் மிக்க தொழிலாளர், உற்பத்தித்திறன் அற்ற தொழிலாளர் எனத் தொழிலாள ரைப் பாகுபடுத்தாது சகல தொழிலாள ருக்கும் சமமான மணித்தியாலத்திற்கான ஊதியம் வழங்கப்படுகிறது. இங்கு குறிப் பிட்ட தொழிலாளி குறிப்பிட்ட நேரம் (பொதுவாக 8 மணித்தியாலம்) வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படுகின்றாரே தவிர குறிப்பிட்ட உற்பத்தி இலக்கினை அடைய வேண்டுமென்று கட் டாயப்படுத்தப்படுவதில்லை. இதனால் இம் முறையில்

அ) தொழிலாளர் தமது முழுமையான உற்பத்தித்திறனை வெளிக்கொணர்வ தில்லை. ஏனெனில் வெளிக்கொணர்வ தற்கான எதுவித ஊக்குவிப்புகளும் இங்கு வழங்கப்படாமையேயாகும்.

ஆ) தொழிலாளரின் திறமைக்கு மதிப்பளிக் கப்படுவதில்லை.

போன்ற குறைபாடுகள் காணப்படு கின்றன. இக்குறைபாடுகளை நீக்கும் நோக் குடனேயே உயர் நேரவிகித முறை அறி முகப்படுத்தப்பட்டது.

II. உயர்நேர விகிதம்:
High-Day Rate:

இம் முறையின் கீழ் குறிப்பிட்டதொரு தொழிலாளி நிறுவனத்தினால் நிர்ணயிக்கப் பட்ட எல்லைக்கு மேல் வெளியீட்டினை மேற் கொள்வாராயின் அவருக்கு வழங்கப்படும் மணித்தியாலத்திற்கான ஊதிய வீதமானது சாதாரண மணித்தியாலத்திற்கான ஊதிய வீதத்தினைவிடக் கூடுதலானதாக இருக்கும். இம் முறையின் கீழ் தொழிலாளர்களுடைய உற்பத்தித்திறன், திறமை என்பவற்றிற்கு மதிப்பளிக்கப்படுவதுடன், ஊக்குவிக்கவும் படுகிறார்கள். இங்கு தொழிலாளருடைய திறமை அல்லது உற்பத்தித்திறன் உற்பத்தி அலகுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படினும் தொழிலாளருக்கான ஊதியக் கொடுப்பனவானது நேரத்தை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப் படுவது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இவ்விரு முறைகளிலுமே பொதுவாகக் காணப்படுகின்ற குறைபாடுகளாக

அ) தொழிலாளருடைய திறமைக்கேற்ப அவர்களுக்கு ஊதியம் வழங்கப்ப டாமை

ஆ) இதன் காரணமாக வெளியீட்டின் அளவில் அதிகரிப்பு ஏற்படாமை

இ) இதன் காரணமாக உற்பத்திச் செலவு இழிவாக்கப்படாமை

ஈ) பெருமளவு மேற்பார்வைச் செலவு ஏற்படுவதும் இதன் பொருட்டு பொருளின் உற்பத்திச் செலவு அதிக ரிப்பதும்

என்பன அமைகின்றன. இவற்றினை நிவர்த்தி செய்யும் பொருட்டே துண்டுக் கூலி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

2. துண்டுக்கூலி முறை:
Piece-Work Method:

இம் முறையின் கீழ் ஏற்கனவே தீர் மானிக்கப்பட்ட ஒரு உற்பத்தி அலகுக்கான ஊதிய வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு குறித்த தொழிலாளியினால் உற் பத்தி செய்யப்பட்ட உற்பத்தியின் அள விற்கே ஊதியமானது வழங்கப்படும். இம் முறையில்

ஊழியருக்கான ஊதியம் = உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் × ஒரு அலகுக்கான ஊதிய வீதம்.

இங்கு அதிகளவு அலகுகளை உற்பத்தி செய்யும் தொழிலாளர் அதிகளவு ஊதியத் தினையும், குறைந்தளவு அலகுகளை உற்பத்தி செய்யும் தொழிலாளர் கு றை ந் த ள வு ஊதியத்தினையுமே பெறுவர். இம்முறை யில் உற்பத்தித்திறன் கூடிய தொழிலாளர் கள் கூடியளவு ஊதியத்தினைப் பெற முடி வதுடன், அதிகளவு ஊதியம் பெற வேண்டு மாயின் அதிகளவு அலகுகளினை உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதனால் ஒவ்வொரு தொழிலாளியும் தனது உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு முயற்சி செய்வான். நேரக் கூலி முறையுடன் ஒப்பிடும் போது, குறிப் பிட்ட நேரம் வேலை செய்வதனால் கிடைக் கும் நேரக்கூலி முறையின் அடிப்படையி லான ஊதியத்தினை விட குறிப்பிட்ட நேரத் தில் அல்லது அதிலும் குறைவான நேரத் தில் விரைவாக வேலைசெய்வதன் ஊடாக அதிகள ஊதியத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கு தொழிலாளர் சுயமாகவே தொழிலை விரைவாகச் செய்ய முற்படுவத னால் மேற்பார்வைச் செலவு ஏற்படுவதில்லை அல்லது மிகவும் சொற்பமானதாகவே காணப்படும். எனினும் தொழிலாளி பொரு ளினை உற்பத்தி செய்யும் போது விரைவாகச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே செயற்படுவதனால் பொருளின் தரம் பேணப் படமாட்டாது. இதன் காரணமாக நிறுவ னத்திற்கு பரிசோதனைச் செலவு (Inspection cost) பெருமளவில் ஏற்படும்.

இங்கும் அலகுகளுக்கு வழங்கப்படும் ஊதியவீதத்தின் அடிப்படையில்

I. நேர்த்துண்டுக்கூலி

II. வேறுபட்டதுண்டுக்கூலி

என இருவகையாக வகைப்படுத்தப் படுகிறது.

I. நேரத்துண்டுக்கூலி:
Straight - Piece work:

இம் முறையின் கீழ் உற்பத்தி செய்யப் படும் அலகுகளின் எண்ணிக்கை எவ்வள வாக இருந்தாலும் ஒரு அலகுக்கான ஊதிய வீதம் மாற்றமடையாது ஒரேயளவாக இருக்கும். உதாரணமாக ஒரு அலகுக்கான ஊதியம் ரூபா 5 எனின் 100 அலகுகள் உற் பத்தி செய்யப்பட்டால் ரூபா 500உம், 1000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டால் ரூபா 5,000 உம் ஊதியமாக வழங்கப்படும். அதாவது உற்பத்தி மட்டத்திற்கேற்ப அல குக்கான ஊதியவீதத்தில் எவ்வித மாற்ற மும் காணப்படமாட்டாது.

II. வேறுபடுத்தப்பட்ட துண்டுக்கூலி:
Differencial - Piece work:

இம்முறையின் கீழ் உற்பத்தி மட்டத் தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப அலகுக் கான ஊதிய வீதமும் மாற்றமடையும். உதாரணமாக,

ஒரு நாளில் 0க் கும் 100க்கும் இடையே அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டால் அல குக்கு ரூபா 10உம் ஒரு நாளில் 101க்கும் 150க்கும் இடையே அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டால் அலகுக்கு ரூபா 11உம் ஒரு நாளில் 151க்கும் 200க்கும் இடையே அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டால் அல குக்கு ரூபா 12உம் ஊதியமாக வழங்கப் படுவதைக் குறிக்கும்.

இங்கு A என்ற தொழிலாளி 90 அலகுகளை உற்பத்தி செய்வாராயின் அவருக்கு (90×10) ரூபா 900உம், B என்ற தொழிலாளி 110 அலகுகளை உற்பத்தி செய்வாராயின் அவருக்கு (110×11) 1210 உம் ஊதியமாக வழங்கப்படும்.

இங்கு திறன் வாய்ந்த தொழிலாளி மேலும் மேலும் அதிக ஊதியத்தினைப் பெறக் கூடியதாக இருக்கும்.

இத்தகைய துண்டுக்கூலி முறையானது நேரக்கூலி முறையில் காணப்பட்ட பிரதிகூலங்களை நிவர்த்தி செய்வதாக அமைந்த போதிலும் குறைபாடற்ற தொன்றல்ல.

இங்கு

அ) தொழிலாளருக்கு ஊதிய உத்தரவாதம் அளிக்கப்படுவதில்லை.

ஆ) திறன் குறைந்த தொழிலாளர் குறைந்தளவு ஊதியத்தினையே பெறமுடியும்.

இ) பொருட்களானது தரம் குறைந்தனவாகவே உற்பத்தி செய்யப்படுதல்

ஈ) பரிசோதனைச் செலவு அதிகளவில் ஏற்படுதல்

போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

தொழிலாளரது ஊதியத்தினைக் கணிப்பிடும் முறைகளான நேரக்கூலி, துண்டுக் கூலி ஆகிய இருமுறைகளும் குறைபாடுகள் அற்ற ஒன்றாக எவ்வகையிலும் அமைய முடியவில்லை. அதாவது நேரக் கூலி முறையில் தொழிலாளரின் திறமைக்கு மதிப்பளிக்கப்படாததுடன், உற்பத்தி அதிகரிப்பிற்கு எவ்வித ஊக்குவிப்பும் அளிக்கப்படுவதில்லை. துண்டுக் கூலிமுறையில் தொழிலாளரது ஊதியத்திற்கு எதுவித அடிப்படை ஊதிய உத்தரவாதமும் அளிக்கப்படாததுடன், நேரக்கூலிமுறையில் ஓய்வு நேரங்களுக்காக வழங்கப்படும் ஊதியமானது துண்டுக்கூலி முறையில் மறுக்கப்படுகிறது இவ்வாறான குறைபாடுகளை நீக்கும் நோக்குடனும், தொழிலாளருக்கு ஊக்குவிப்பினை அளிக்கும் நோக்குடனும் திறமைக்கேற்ப ஊதியத்தினை வழங்கும் அதே வேளை அடிப்படை ஊதிய உத்தரவாதத்தை அளிக்கும் பொருட்டும் ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது எனலாம்.

ஊக்குவிப்புத்திட்டம் :
Incentive Scheme:

இத்திட்டமானது தொழிலாளரை ஊக்குவிக்கும் நோக்குடனேயே அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த தொழிலாளிக்கு நேரக்கூலி முறையில் ஊதிய உத்தரவாதம் அளிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட நேரம் வேலை செய்யும்படி வேண்டப்படுகின்ற தொழிலாளி அக்குறித்த நேரத்தில் அவரது திறமையின் காரணமாக அதிகளவு உற்பத்தியினை மேற்கொள்வாராயின் அதற்கு ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படும். இங்கு திறமையானது உற்பத்தி அலகுகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படுகிறது. இவ் ஊக்குவிப்புத் திட்டமானது,

I. தனிநபர் ஊக்குவிப்புத்திட்டம்
II. குழு ஊக்குவிப்புத்திட்டம்

என இருவகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

I. தனிநபர் ஊக்குவிப்புத்திட்டம்:
Individual Scheme:

இங்கு தொழிலாளரது தனிப்பட்ட திறமை அல்லது உற்பத்தித்திறன் மதிப்பிடப்பட்டு அதற்கு ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. இம் முறையே தற்போது பெரும்பாலான நிறுவனங்களினால் பின்பற்றப்படுகின்ற முறையாகும். இம்முறையானது.

1. நேர்விகிதாசாரத் திட்டம்
2. வெளியீட்டிலும் குறைந்த விகிதாசாரத் திட்டம்

என்கின்ற இருவகையாக வகைப்படுத்தப்படுகிறது.

1. நேர்விகிதாசாரத்திட்டம்:
Straight Proportional Scheme:

இத்திட்டத்தின் கீழ் உற்பத்திக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கும் உற்பத்திக்கு எடுத்த நேரத்திற்கும் இடையே காணப்படும் விகிதத் தொடர்பின் அடிப்படையிலேயே ஊக்குவிப்பு ஊதியம் நிர்ணயிக்கப்படும். இத்திட்டமானது மேலும் இரு பிரிவுகளாக வகுக்கப்படுகிறது.

அ) 75க்கும் 100க்கும் இடையிலான நேர்விகிதாசாரத் திட்டம்

The 75–100 Straight Proportional Scheme

இத்திட்டத்தின் கீழ்

a) நியம உற்பத்தியானது அதாவது நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியானது 100 வீதமாகக் கொள்ளப்படும்

b) ஊக்குவிப்பு ஊதியமானது வெளியீடானது நியம உற்பத்தியில் 75 வீதத்திலும் கூடுதலாக இருப்பின் மட்டுமே வழங்கப்படும்

c) மிகை ஊதியமானது உற்பத்தித்திறனின் 33 1/3வீதத்திற்கே வழங்கப்படும்

d) உழைக்கப்படும் மிகை ஊதியத்திற்கு எத்தகைய கோட்பாட்டு ரீதியான வரையறைகளும் இல்லை

இம்முறையினை ஓர் உதாரணத்தின் மூலம் நோக்குவோமாயின்

(உ×ம் I)

வேலை செய்த மணித்தியாலங்கள் (Clock Hours worked)	8 மணித்தி
(கழி)இளைப்பாறும் நேரம் (Breaks)	1.5 மணித்தி
உண்மையாக வேலைசெய்த நேரம்	6.5 மணித்தி

இங்கு ஒரு அலகினை உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட நேரம் 5.75 நிமிடங்கள் எனவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 60 எனவும் ஒரு மணித்தியாலத்திற்கான கூலிவீதம் ரூபா 7 எனவும் கொள்வோம்.

இங்கு செயற்திறன் வீதமானது பின் வரும் வாய்ப்பாட்டின்மூலம் கணிப்பிடப்படுகிறது.

$$\text{செயற்திறன் வீதம்} = \frac{\text{உ. ப. செ. பொருட்கள்} \times \text{ஒரு அலகுக்கான நியம நேரம்}}{\text{செயற்பாட்டு நேரம் (உண்மையாக வேலைசெய்த நேரம்)}} \times 100$$

இங்கு செயற்பாட்டு நேரம் $= 60 \times 6.5 = 390$ நிமிடங்கள்

$$\text{செயற்திறன் வீதம்} = \frac{60 \times 5\,75}{390} \times 100 = 88{\cdot}5 \text{ வீதம்}$$

இங்கு 88·5 வீதம் ஆனது 75 வீதத்தில் இருந்து 13·5 வீதம் அதிகமாக இருப்பதனால்

$$\text{ஊக்குவிப்பு ஊதிய வீதம்} = \frac{13{\cdot}5}{25} \times 33\tfrac{1}{3} = \frac{54}{100} \times \frac{100}{3} = 18 \text{ வீதமாகும்}$$

இம்முறையின் கீழ் ஊக்குவிப்பு ஊதியம் மணித்தியாலத்திற்கான கூலியின் வீதாசாரமாகவே வழங்கப்படுவதனால் மிகை ஊதியம் $= 7$ ரூபா $\times 18$ வீதம் $= 7 \times \frac{18}{100}$

$= 1$ ரூபா 26 சதம் ஆகும்.


உண்மையாகவேலை செய்த மணித்தியாலத்திலேயே அவருடைய (தொழிலாளி) உற்பத்தித்திறன் வெளிக்கொணரப்படும் என்ற காரணத்தினால் மிகை ஊதியமானது வேலை செய்த மணித்தியாலங்களுக்கே வழங்கப்படும். ஆனால் நேரக் கூலியானது அவருடைய

இளைப்பாறும் நேரங்களுக்கும் சேர்த்து வழங்கப்படும். எனவே இம் முறையின் கீழ் மொத்த ஊதியம் →

நேரக் கூலியின் அடிப்படையில் (இளைப்பாறும் நேரம் உட்பட) 8×7 =ரூபா 56
மிகை ஊதியம் (உண்மையாக வேலைசெய்த நேரத்திற்கு மட்டும்) 6·5×1·26=ரூ. 8.20ச.
ரூபா 64·20ச.

இதனை வரை படரீதியில் நோக்குவோமாயின்:-

வரைபடம் I



வரைபடமானது கிடையச்சில் உற்பத்தி மட்ட வீதத்தினையும், குத்தச்சில் மணித்தியாலத்திற்கான ஊதிய வீதத்தினையும் காட்டுகிறது. இங்கு செயற்பாட்டுமட்டம் 75 வீதமாக இருக்கும்வரை மணித்தியாலத்திற்கான ஊதிய வீதம் ரூபா 7 ஆக அமைவதனையும் 75 வீதத்திற்கு அப்பால் அது உயர்வடைந்து சென்று 100 வீத மட்டத்தில் 8 ரூபா 26 சதமாக அமைவதனையும் காணலாம்.

ஆ) 50க்கும் 100க்கும் இடையிலான செயற்பாட்டுத்திட்டம்:
The 50–100 Operator Scheme:

இங்கும் மேற் கூறப்பட்ட கொடுப்பனவு முறையைப் போன்றே செயற்திறன் அளவிடப்படுகிறது. ஆனால் இங்கு ஆகக்குறைந்த கூலிமட்டமானது 50 வீத உற்பத்தி மட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டு 50 வீதத்திற்கும் மேற்பட்ட உற்பத்திக்கு மிகையூதியம் வழங்கப்படுகிறது.

இதனையும் முன்னைய உதாரணத்தின் (உ+ம் I) மூலம் நோக்குவோமாயின்:-

செயற்திறன் வீதம் $= \frac{60 \times 5 \cdot 75}{6 \cdot 5 \times 60} \times 100 = \frac{345}{390} \times 100 = 88 \cdot 5$ வீதம்

88·5 வீதமானது 50 வீதத்தில் இருந்து 38·5 வீதம் அதிகமாகக் காணப்படுகிறது.

ஊக்குவிப்பு ஊதியவீதம் $= \frac{38 \cdot 5}{50} \times 33\frac{1}{3}\% = 26$ வீதம்

எனவே மிகையூதியம் $= 7.00 \times \frac{26}{100} = 1$ ரூபா 80 சதம் ஆகும்

இங்கும் மொத்த ஊதியம் →

நேரக் கூலியின் அடிப்படையில் (இளைப்பாறும் நேரம் உட்பட) $8 \times 7 =$ ரூபா 56


மிகை ஊதியம் (உண்மையாக வேலை செய்த நேரத்திற்கு மட்டும்

$= 6 \cdot 5 \times 1 \cdot 80 =$ ரூபா 11. 70 சத

ரூபா 67.70 சதம்

இதனையும் வரைபட ரீதியில் நோக்குவோமாயின்:-

வரைபடம் II



இங்கு 50 வீத உற்பத்திமட்டத்திற்கு மேல் செயற் திறனுக்கு மிகைஊதியம் வழங்கப் படுவதால் 50 வீத உற்பத்தி மட்டும் மணித்தியாலத்திற்கான ஊதிய வீதக் கோடு கிடையச்சிக்கு சமாந்திரமாக அமைந்து பின் மேல் நோக்கிச் செல்வதைக் காணலா

2. வெளியீட்டிலும் குறைந்த விகிதாசாரத் திட்டம்:
Proportionately less than Output Scheme:

இத் திட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நேரம் கணிப்பிடப்பட்டு, அந்நேரத்தின் வீத, விகிதத் தொடர்புகளின் அடிப்படையில் ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படுகிறது, இம் முறையானது

அ) மிகை ஊதியத்திட்டம்: / **Premium Bonu Scheme:**

இத்திட்டமானது தொழிலாளரின் வினைத்திறனுல் கிடைக்கும் நன்மையானது இரு சாராராலும் அதாவது வேலையாள், வேலைகொள்வோன் ஆகியோரால் பகிரப்படும் என்ற வேறுபட்ட கொள்கையின் அடிப்படையிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறது. இங்கு சேமிக் கப்பட்ட நேரம் கணிப்பிடப்பட்டு சேமிக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையிலேயே மிகை ஊதியம் வழங்கப்படும்.

சேமித்த நேரம் = அனுமதித்த நேரம் — எடுத்த நேரம்
Time saved = Time Allowed — Time Taken

இம்முறையில் அனுமதித்த நேரம் அல்லது நியமநேரமானது வேலைப்படிப்பு போன்ற முகா மைத்துவ நுட்பங்களைப் புகுத்துவதன் மூலமே கணிப்பிடப்படுகிறது.

சேமிக்கப்பட்ட நேரத்தில் தொழிலாளருக்கு மிகை—ஊதியம் வழங்கப்படும் நேரத் தினைப்பொறுத்து இம் முறை மேலும் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது. அவை யாவன:-

1. ஹல்சி திட்டம்: / **The Halsey Scheme:**

இத் திட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நேரத்தில் 50 வீதம் மிகை ஊதியமாக வழங் கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ்

மிகை ஊதியம் = $\frac{1}{2}$ (சேமிக்கப்பட்ட நேரம்) × மணித்தியாலத்திற்கான ஊதிய வீதம்
மொத்தஊதியம் = நேரக் கூலி + மிகை ஊதியம் ((வேலைசெய்த மணித்தியாலங் கள் + $\frac{1}{2}$ (சேமிக்கப்பட்ட நேரம்) × ஊதியவீதம்)

$$E = [TT + \tfrac{1}{2}(TS)] \times RH$$

இங்கு E = Earnings
TT = Timetaken
TS = Time Saved
RH = Rate Per Hour

2. ஹல்சி - வெயர் திட்டம்: / **The Halsey - Weir Scheme:**

இத்திட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நேரத்தில் $\frac{1}{3}$ பங்கு மிகை ஊதியமாக வழங் கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ்

மிகை ஊதியம் = $\frac{1}{3}$ (சேமிக்கப்பட்ட நேரம்) + ஊதிய வீதம்
மொத்த ஊதியம் = [$\frac{1}{3}$ (சேமிக்கப்பட்ட நேரம்) + வேலைசெய்த மணித்தியாலங் கள்] × ஊதிய வீதம்

$$E = [\tfrac{1}{3}(TS) + TT] \times RH$$

குறிப்பு:— சில கணக்கியலாளரினுல் இத்திட்டத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நேரத்தில் 30 வீதமே மிகை ஊதியமாக வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.
இவ்விரு முறைகளிலும் ஒரு தொழிலாளி தான் சேமித்த நேரத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட வீதத்தினையே மிகை ஊதியமாகப் பெறுகின்றன.

3. ரோவன் திட்டம்: / The Rowan Scheme:

இத்திட்டமானது 1901ம் ஆண்டு David Rowan என்பவரால் அறிமுகம் செய்யப் பட்டதாகும். இங்கு தொழிலாளிக்கான மிகை ஊதியமானது அனுமதித்த, சேமிக்கப் பட்ட நேரங்களுக்கிடையேயான விகிதாசாரத்தின் அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகி றது. இத்திட்டத்தின் கீழ் மிகை ஊதியம் $= \frac{\text{சேமித்த நேரம்}}{\text{அனுமதித்த நேரம்}} \times$ எடுத்தநேரம் $\times$ மணித் தியாலத்திற்கான ஊழிய வீதம்

மொத்த ஊதியம் $= \left\{ \text{எடுத்த நேரம்} + \left(\frac{\text{சேமித்த நேரம்}}{\text{அனுமதித்தநேரம்}} \times \text{எடுத்தநேரம்} \right) \right\} \times$ ஊதிய வீதம்

$$E = \left\{ TT + \left(\frac{TS}{TA} \times TT \right) \right\} \times RH$$

இம் மூன்று முறைகளையும் ஒரு உதாரணத்தின் மூலம் நோக்குவோமாயின்:

(உ+ ம் 2) குறித்த ஒரு வேலைக்காக அனுமதித்த நேரம் (Time Allowed) 5 மணித்தியாலங் கள் அவ்வேலைக்கு எடுத்த நேரம் (Time Taken) 4 மணித்தியாலங்கள்.
ஒரு மணித்தியாலத்திற்கான ஊதியம் ரூபா 8 எனின்,

ஹல்சி திட்டத்தின் கீழ்:

மொத்த ஊதியம் $= [TT + \frac{1}{2}(TS)] \times RH$
$= [4 + \frac{1}{2}(1)] \times 8$
$= 4{\cdot}5 \times 8$
= ரூபா 36 ஆகும்.

ஹல்சி - வெயர் திட்டத்தின் கீழ்:-

மொத்த ஊதியம் $= [TT + \frac{1}{3}(TS)] \times RH$
$= [4 + \frac{1}{3}(1)] \times 8$
= ரூபா 34·64 சதம்

ரோவன் திட்டத்தின் கீழ்:-


மொத்த ஊதியம் $= \left\{ TT + \left(\frac{TS}{TA} \times TT \right) \right\} \times RH$
$= [4 + (\frac{1}{5} \times 4)] \times 8$
$= 4{\cdot}8 \times 8$
= ரூபா 38·40 சதம்

ஹல்சி திட்டமானது, ஹல்சி—வெயர் திட்டத்திலும் பார்க்க தொழிலாளரைப் பொறுத்து எச்சந்தர்ப்பத்திலும் நன்மை பயப்பதாகவே இருக்கிறது. ஆனால் ரோவன் திட் டத்தையும், ஹல்சி திட்டத்தையும், ஒப்பு நோக்கும் போது சேமிப்பு நேரம் குறைவாகக் காணப்படும் போது அதாவது தொழிலாளரின் உற்பத்தித்திறன் குறைவாக இருக்கும் போது ரோவன் திட்டம் தொழிலாளரைப் பொறுத்து நன்மை பயப்பதாகவும், சேமிப்பு நேரம் கூடுதலாக அமையும் போது ஹல்சி திட்டம் தொழிலாளரைப்பொறுத்து நன்மை பயப்பதாகவும் காணப்படுகிறது. இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் சுலபமாக விளங் கிக்கொள்ளலாம்.

அனுமதித்த நேரம்	எடுத்த நேரம்	சேமித்த நேரம்	மணி வீதம்	அடிப்படைக் கூலி	ஹல்சித்திட்டத்தின்கீழ் மிகைஊதியம்	ரோவன்திட்டத்தின் கீழ் மிகைஊதியம்	ரோவன் திட்டத்தில் சேமிப்பு நேரத்தில் மிகை ஊதியவீதம்
5	5	0	ரூபா 8	ரூபா 40	0	0	0
5	4	1	,, 8	,, 32	ரூபா 4	6 ரூ. 40 ச.	$\frac{6\cdot4}{1\times8}\times100=80$வீ.
5	3	2	,, 8	,, 24	,, 8	9 ரூ. 60 ச.	$\frac{9\cdot6}{2\times8}\times100=60$ வீ.
5	2	3	,, 8	,, 16	,, 12	9 ரூ. 60 ச.	$\frac{9.6}{3\times8}\times100=40$ வீ.
5	1	4	,, 8	,, 8	,, 16	6 ரூ. 40 ச.	$\frac{6\cdot4}{4\times8}\times100=20$ வீ.

அட்டவணையை நோக்குமிடத்து 1 மணித்தியாலத்தினை சேமிக்கும் தொழிலாளி ஹல்சி திட்டத்தின் கீழ் ரூபா 4 இனை மிகை ஊதியமாகப் பெறுகிறார். ஆனல் ரோவன் திட்டத்தின் கீழ் 6 ரூபா 40 சதத்தினை மிகை ஊதியமாகப் பெறுகிறார். இங்கு தொழிலாளரைப் பொறுத்து ரோவன் திட்டமே நன்மை பயப்பதாக இருக்கிறது. இதே போன்றே 2மணித்தியாலங்களைச் சேமிக்கும் போதும் ரோவன் திட்டத்தின் கீழேயே தொழிலாளி கூடிய மிகை ஊதியத்தைப் பெறுவதை அட்டவணை காட்டுகிறது. ஆனல் சேமிப்பு நேரம் 3 மணித்தியாலங்களாக அமையும் போது ஹல்சி திட்டத்தின் கீழேயே தொழிலாளி கூடிய மிகை ஊதியத்தைப் பெறுகின்றார். இதனை வரைபட ரீதியில் நோக்குவோமாயின்

வரைபடம் III



இவ்வரை படத்தில் கிடையச்சில் சேமிக்கப்பட்ட நேரமும், நிலைக்குத்தச்சில் வழங்கப்படும் மிகை ஊதியமும் காட்டப்பட்டுள்ளது. இங்கு ஹல்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிகை ஊதியத்தினைப் பிரதிபலிக்கும் கோடு தொடர்ந்தேட்சையாக அதிகரித்துச் செல்வதனையும் ஆனல் ரோவன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிகை ஊதியத்தினைப் பிரதி பலிக்கும் கோடு ஆரம்பத்தில் ஹல்சி கோட்டிலும் பார்க்க மேலாகக் காணப்படுவதையும் அனுமதித்த நேரத்தில் 50 வீதமாக சேமித்த நேரம் அமையும் போது இரு கோடுகளும் ஒரே புள்ளியில் சந்திப்பதனையும், பின்பு ஹல்சி கோட்டிலும் பார்க்க கீழாகக் காணப் படுவதையும் அவதானிக்கலாம். இவ்வரை படத்தில் இருந்து நாம் அனுமதித்த நேரத் தில் 50 வீதத்திலும் குறைவாக சேமிக்கப்படும் போது வழங்கப்படும் மிகைஊதியமானது ரோவன் திட்டத்தில் அதிகமாகவும் 50 வீதம் சேமிக்கப்படும் போது இரு திட்டங்களிலும் சமமான மிகைஊதியமும், 50 வீதத்திலும் பார்க்கக் கூடுதலாகச் சேமிக்கப்படும் போது ஹல்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிகைஊதியமே அதிகமானதாகவும் காணப்படும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

ஆ) விகிதாசார மாற்றத்திற்கேற்ற கொடுப்பனவு: Payment in varying proportions:

இம் முறையின் கீழ் வழங்கப்படும் அலகுக்கான ஊதியம் உற்பத்திமட்டங்களுக் கேற்ப மாறுபட்டுக் காணப்படும். இம்முறையின் கீழ்:-

(I) ரெயிலர் முறை: The taylor system

விஞ்ஞான முகாமைத்துவத்தின் தந்தையென அழைக்கப்படும் Dr. F. w. Taylor என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட முறையே இதுவாகும். இத்திட்டத்தின் கீழ் வேறு பட்ட உற்பத்தி மட்டங்களுக்கேற்ப வேறுபட்ட ஊதிய வீதங்கள் வழங்கப்படும். அதாவது எதிர்பார்க்கப்படும் உற்பத்தி அல்லது நியம உற்பத்தி 100 வீதமாகக் கொள்ளப்பட்டு அடிப்படைக் கூலியும் 100 வீதமாகக் கொள்ளப்படும். செயற்திறன் வீதமானது (மட்ட மானது) 100 இலும் குறைவடையின் குறைவடைந்த வீதத்திலும் ஊதிய வீதமும் குறை வடையும். 100 இலும் அதிகரிப்பின் அதே வீதத்தில் ஊதிய வீதமும் அதிகரிக்கும். இத னைப் பின்வரும் உதாரணத்துடன் நோக்குவோம்:

(உ+ம் 3) ஒரு நிறுவனத்தில் நியமநேரம் — 1 மணித்தியாலத்தில் 4 அலகுகள்
ஊதியவீதம் — 1 மணித்தியாலத்திற்கு ரூபா 10

இந் நிறுவனத்தில் 8 மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு நாளில்
A என்ற தொழிலாளி 28 அலகுகளையும்
B என்ற தொழிலாளி 36 அலகுகளையும் உற்பத்தி செய்வார்களயின்
இங்கு ஒரு நாளில் உற்பத்தி செய்யவேண்டிய அலகுகள் = $8 \times 4 = 32$ அலகுகள்

எனவே ஒரு அலகுக்கான ஊதிய வீதம் = $\frac{8 \times 10}{32} = 2$ ரூபா 50 சதம்

இந்நிறுவனத்தின் ஆகக் குறைந்த ஊதியமட்டம் 80 வீதம் எனவும்
ஆகக் கூடிய ஊதிய மட்டம் 120 வீதம் எனவும் எடுத்துக்கொள்வோமாயின்

A க்கான ஊதியவீதம் = $\frac{2 \cdot 5}{100} \times 80 =$ ரூபா 2

எனவே A க்கான ஊதியம் = $28 \times 2 =$ ரூபா 56 ஆகும்

B க்கான ஊதிய வீதம் = $\frac{2 \cdot 5}{100} \times 120 =$ ரூபா 3

எனவே B க்கான ஊதியம் = $36 \times 3 =$ ரூபா 108 ஆகும்

(II) ''கன்ற்'' இன் வேலைக்கும் மிகை ஊதியத்திற்குமான திட்டம்:
Gantt Task and Bonus Scheme

இது நேரக் கூலி உத்தரவாதத்துடன் திறமையான தொழிலாளிக்கு கூடிய ஊதியத்தினைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு ஒரு வேலைக்கான நேரக்கூலியும், அங்கு வழங்கப்படும் மிகை ஊதிய வீதமும் எப்போதும் நிலையானதாகவே காணப்படும் இம் முறையின் கீழ் வழங்கப்படும் மிகை ஊதிய வீதமானது சாதாரண ஊதிய வீதத்தினை விட கூடுதலாகவே காணப்படும். இத்திட்டத்தின் கீழ் எடுக்கும் நேரத்தில் (வேலை செய்த நேரத்தில்) $\frac{1}{3}$ பங்கு மிகை ஊதியமாக வழங்கப்படும். இத்திட்டமானது. திறன்வாய்ந்த அல்லது போட்டிமனப்பான்மை உடையவர்களுக்கு நன்மை பயக்கும் முறை ஆகும்.

(III) எமேர்சனுடைய வினைத்திறன் திட்டம்:
Emerson's Efficiency System:

இத்திட்டத்தின் கீழ் நேரக்கூலி உத்தரவாதம் அளிக்கப்படுவதுடன் ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படுறகிது எனினும் இங்கு ஊக்குவிப்பு ஊதியம் கணிப்பிடப்படும் விதம் சற்று வித்தியாசமானது. அதாவது திறன் அற்ற அல்லது மெதுவாக வேலைசெய்வோரையும் ஊக்குவிக்கும் நோக்குடனேயே இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையின் கீழ் முன்னைய காலத்தில் செய்யப்பட்ட உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்டு நியம உற்பத்தி அலகுகள் கணிப்பிடப்பட்டு அது 100 வீதமாகக் கொள்ளப்படும். நடைமுறை உற்பத்தி $\frac{2}{3}$ பங்கிலும் பார்க்க அதிகமாக இருப்பின் அவ் அதிகரிப்பு மட்டத்திற்கு மிகைஊதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் திறன் அற்ற தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இ) பாத் திட்டம் : / Barth Scheme:

இத் திட்டத்தின் கீழ் சேமிப்பு நேரம் எதிர்க்கணியமாகவே அமையும். அதாவது திறன் குறைந்த அல்லது பயிற்சியைப் பெறுகின்ற தொழிலாளர்களுடைய ஊதியத்தினை நிர்ணயிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட முறையாகும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியத்தின் அளவு நேரக் கூலியின் அளவினை விடக் குறைவாகவே காணப்படும். ஆனல் நியம நேரத்திற்கான ஊதியத்தை விடக் கூடுதலாக இருக்கும். இத்திட்டதின் கீழ்

மொத்த ஊதியம்
=மணிவீதம் × √நியமநேரம் × எடுத்தநேரம்

ஈ) பீடக்ஸ் திட்டம் :- Bedaux Scheme:-

இங்கு மிகவும் நுட்பமான முறையில் நேரப்படிப்பு நுட்பமானது பிரயோகிக்கப்பட்டு ஒவ்வொரு செயற்பாட்டுக்குமான நியமநேரங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன். பின்பு தொழிலாளரினல் சேமிக்கப்படும் நேரம் முழுவதற்குமே (100 வீதத்திற்குமே) மிகை ஊதியம் வழங்கப்படுகிறது. எனினும் இந்த 100 வீதமும் உற்பத்தியை மேற்கொண்ட தொழிலாளிக்குரியதல்ல. இதில் 75 வீதம் உற்பத்தியை மேற்கொண்ட தொழிலாளிக்கும், மிகுதி 25 வீதம் மேற்பார்வையாளருக்கும் உரியதாகும். இங்கு ஊக்குவிப்பு ஊதியமாக திறன் முழுவதும் (100வீதமும்) தொழிலாளரைச் சென்றடைவதால் இதனை நிறுவனங்களோ அல்லது முகாமையாளரோ விரும்புவதில்லை. இதன் காரணமாக பிரபல்யம் பெறுத ஒரு முறையாகக் காணப்படுகின்றது.

உ) குழு ஊக்குவிப்புத் திட்டம் ;-
Group Bonus Scheme

தற்போது உற்பத்தி நிறுவனங்களில் தொழிற்பிரிப்பு நுட்பம் அறிமுகப்படுத்தப்

படுகின்றமையினால் அங்கு ஒரு தொழிலை ஒரு குழுவே செய்கின்றது, இவ்வகையான சந்தர்ப்பத்தில் மிகை ஊதியமானது தனிப் பட்டவர்களுக்கென கணிப்பிடப்படாது அக் குறிப்பிட்ட குழுவுக்கே கணிப்பிடப்படு வதனையே இது குறிக்கும். இதனை ஒரு உதாரணத்தின் மூலம் நோக்குவோமாயின்;

(உ+ம் IV)

ஒரு குழுவுக்கான நியம உற்பத்தி அல குகள் 20 ஆகும். இந்நிறுவனம் 20 வீத அதிகரிப்பிற்கு ரூபா 50 இனை மிகை ஊதி யமாகத் தருவதாக ஒப்புக் கொள்கிறது. ஒரு நாளில் 25 அலகுகள் உற்பத்தி செய் யப்படின்

குழுவுக்கான ஊக்குவிப்பு ஊதியம்

$= \frac{50}{20} \times 25 = 62$ ரூபா 50 சதம் ஆகும்.

இக்குழுவில் 10 பேர் இடம்பெறின்

ஒரு நபருக்கான ஊக்குவிப்பு ஊதியம்

$= \frac{62.50}{10} = 6$ ரூபா 25 சதம் ஆகும்.

இத்திட்டமானது தனிநபர் ஊக்குவிப்புத் திட்டத்துடன் ஒப்பு நோக்கும் போது

(i) தொழிலாளரிடையே கூட்டுறவு மனப் பான்மையை வளர்க்கின்றது.

(ii) நிர்வகிப்பதும் மேற்பார்வை செய் வதும் சுலபம்.

(iii) உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படல் போன்ற அனுகூலங்களைக் கொண் டுள்ள போதும்

(i) திறன் குறைந்த தொழிலாளரும் சம மான மிகை ஊதியத்தைப் பெற வழி செய்கின்றது.

(ii) இதன் மூலம் தொழிலாளரிடையே மனக்கசப்புகள் உருவாக வழி செய் கின்றது.

(iii) தனிநபர் ஊக்குவிப்புத் திட்டத்தில் தனிப்பட்ட தொழிலாளர் ஊக்குவிக் கப்படுவது போன்று நேரடியாக ஊக் குவிக்கப்படுவதில்லை.

போன்ற பிரதி கூலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வகையான பல முறைகள் தொழி லாளரது ஊதியத்தினைக் கணிப்பிடுவதற்கு பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்ற போதி லும் பலராலும் அதிகமாகப் பயன்படுத்து கின்ற முறையாக நேரக்கூலி முறையே காணப்படுகிறது எனலாம். இவ்வாறு கூறு வது துண்டுக்கூலி முறையானது பெருமள விற்குப் பயன்படுத்தப்படுவதில்லை என்ற அர்த்தம் அல்ல. அலகுகளை அடிப்படையா கக் கொண்ட உற்பத்தி நிறுவனங்கள் பெரு மளவில் துண்டுக்கூலி முறையினையே பயன் படுத்துகின்றன. எவ்வகை முறை பின்பற் றப்பட்டாலும் தொழிலாளரை ஊக்குவிக் கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஊக்குவிப்புத் திட்டங்களில் இன்று பிர பல்யம் வாய்ந்த திட்டமாக மிகை ஊதி யத்திட்டமே காணப்படுகிறது எனலாம். இத்திட்டத்தின் கீழேயே ஹல்சி, ஹல்சி - வெயர், ரோவன் என்போரது முறைகள் பின்பற்றப் படுகின்றன. இதன் காரணமா கவே இக்கட்டுரையில் இம்முறைகள் பற்றி ஆழமாக ஆராயப்பட்டுள்ளது.

எது எவ்விதம் இருப்பினும் நடைமுறை யில் பின்பற்றக் கூடியதாக இருக்கும் இக் கொடுப்பனவு முறைகளில் எம்முறை சிறந் தது ? எம் முறை கூடாதது ? என எவரா லும் திட்டவட்டமாக வரையறுக்க முடி யாது என்றே கூறவேண்டும். உற்பத்தியின் தன்மை, நிறுவனத்தின் நோக்கம் என்பவற் றிற்கேற்ப தொழிலுக்குத் தொழில் வேறு பட்ட ஊதியக் கொடுப்பனவு முறைகள் சிறந்ததாகக் காணப்படும் என்றே கூறலாம்

Formal Communications in organisations

Some Aspects

R. N. VARENDREN A. C. A.
Joint Managing Director,
Business Promoters (PVT) Ltd.,
Management Consultants.

A. INTRODUCTION

Communications as a single word has a very wide meaning. **Communications in Organisations** is a much narrower topic and is further restricted when we refer to **Formal or Official Communications**, which excludes informal aspects of Communication such as the so-called 'grapevine' (rumour, gossip etc).

Communication is the process of creating, transmitting and interpreting ideas, facts, opinions and feelings. It is a process that is essentially a sharing one - a mutual interchange between two or more persons. In Organisations, communications is generally thought of in terms of :

a. the **media** of communication e.g. memos, reports, etc.

b. the **skills** of communication e.g. giving instructions, interviewing, chairing meetings etc.

c. the **Organisation** of communications e.g. the chain of Command, briefing groups, Committees, etc.

These 3 aspects sum up the **formal** communication present with the Organisation. **(G.A. Cole). Chester Barnard** stressed the need for communication to occupy a central place in organisation theory because the structure, extensiveness, and scope of organisation are almost entirely determined by communication techniques. According to

him the first executive function is to develop and maintain a communication system. Hence communication can be regarded as the foundation upon which organisation and administration must be built up. It is the most vital 'too of management', to express its importance another way. We hear too often of 'failures in communication', 'faults in communication', and the 'communication gap' as the cause for various business problems.

B. VERTICAL COMMUNICATION

Downward communication comprises of policies, plans, information, procedures and instructions.

Upward communication comprises of ideas, suggestions, comments, complaints, statistics, information and reports.

The Classical theories of management place primary emphasis on control, chain of command, and the downward flow of orders and influence. There is **no corresponding emphasis on adequate and accurate upward communication**. This was the conclusion reached by **Rensis Likert** after his research and practical studies. "The policy that the boss always has his door open sounds fine, but unless a subordinate is about to resign, he is not likely to go through that open door to suggest that his superior is handling the work in ways that are inefficient, is creating unnecessary difficulties for his subordinate, or is unfair or unreasonable. Moreover, the worse the situation the more difficult it is for a subordinate to communicate these facts to his chief. Most subordinates have learned to study their superior and tell him only what will please him. **This 'yessing' the boss may misinform him**, but it keeps the subordinate out of hot water and may result in his being rewarded."

Superior–Subordinate Communication

Further conclusions reached by Likert indicated that communication between Managers and Supervisors was seriously deficient on such matters as what a subordinate understands his job to be. Subordinates do not tell the superior about his obstacles and problems they encounter in doing the job. Contributing further to these breakdowns in communication was the unwillingness of subordinates to bring their problems to the man who has the major control over their destiny in the organisation. His influence on their promotions and their future in the company was so great that they cannot afford to let him see their weakness. **They will share their success with the boss, but not their failure.**

Peter Drucker emphasises that **communication is perception**. There is no sound unless someone can hear it. It is the **recipient who communicates**. The so-called communicator, i.e. the person who emits the communication, does not communicate. He utters. Unless there is someone who hears, there is no communication there is only notice. Further, one can only perceive what one is capable of perceiving. One may hear physically or see visually,

but may not accept. All one can communicate downwards are commands i.e. prearranged signals. One cannot communicate downwards anything connected with understanding, let done with motivation. This requires communication upwards, from those who perceive to those who want to reach their perception.

C. COMMUNICATION & INFORMATION

More and more information does not solve the communication problem, does not bridge the communication gap. On the controry, **the more the information the greater is the need for functioning and effective communication.** The more information, in other words, the greater is the communication gap likely to be. In the absence of effective communication the information revolution cannot really produce information. All it can produce is data. In other words, even if Data is processed into information what use is it to the user if it cannot be effectively communicated.

With the increased use of computers we have what is called an 'information explosion'. Without a commensurate increase in communication we could end up with the frightening communication gap–between management and workers, between business and government, between producers and consumers and so on. It is fashionable today to measure the utilisation of a computer by the number of hours it runs during one day, which is only a measure input and not efficiciency.

D. LATERAL COMMUNICATION

This is closely tied up with one of the important elements of management – **Co-ordination**. In fact communication here is vital. The often quoted examples are the communication gaps between the Marketing, & Production functions, between Purchasing and Production. between Finance and Marketing etc. Particular methods adopted widely to over come this are Inter-departmental committees, Special Project groups, Co-ordinating committees etc. The preparation of the Annual Budget with current emphasis on Participating Budgeting is a good example of an exercise requiring co-ordination through effective communication. The determination of the Sales Budget itself is a culmination of a communication process involving a multi-disciplinary item.

E. CONCLUSION

We can only emphasis the dire need for the following:-

1. More of upward communication rather than downward-reverse the pattern established traditionally.
2. Information proceeses from Data is only one phase-it should be effectively communicated to the user, decision maker etc.
3. Co-ordination among functions is a meaningless term without communication.

With the Best Wishes from

VALAMBIGA TRADERS

வலாம்பிகா ரேடர்ஸ்

21/5 STANLEY ROAD,
JAFFNA

DEALERS IN :
T. V. DECK, RADIO, CASSETTE RECORDER,
TOYS, FANCY GOODS, ELECTRICAL GOODS ETC.

*T. Phone :*22708

Compliments from

NIM BUILDERS

Plans, Designs, Quantity Surveying Consultants, and Building Contractors, Specialists in Terrazzo Flooring.

30, B, HOSPITAL ROAD
JAFFNA.

கிராமியப் பொருளாதாரம்

S. விக்னபாலன்
வணிகமாணி, இறுதி வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

நெற்றுடமை விவசாய அடிப்படையில் தன் னிறைவு அடையும் நோக்குடன் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொருளா தாரமே கிராமியப்பொருளாதாரம் ஆகும். குறிப்பிட்ட துறையில் சார்ந்து வாழ்பவர் களில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி நடவடிக்கை யில் ஈடுபடுகின்ற பொருளாதாரமாகக் காணப்படுவதனால் இக்கிராமியப் பொரு ளாதாரத்தை பிழைப்பூதியப் பொருளா தாரம் எனவும் அழைத்துக் கொள்வர். கிராமிய விவசாயத்துறையின் வளர்ச்சி பிற் போக்கான நிலையில் இருப்பதற்கு ஐரோப் பியரின் வருகை, பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை என்பன அடிப்படையாக அமை கின்றன. கிராமியப் பொருளாதாரம் ஆனது சிறிய காணித்துண்டுகளுக்குச் சொந்தக் காரராக உள்ள விவசாயிகளைப் பாரிய அள வில் கொண்ட உற்பத்தி முறையுடைய ஓர் அமைப்பு ஆகும்.

இலங்கையில் கிராமியப் பொருளா தாரம் ஆனது பின்வரும் பண்புகளை ஏனைய கிராமியப் பொருளாதாரங்களில் காணப்படு வது போல் தன்னகத்தே கொண்டுள்ளது.

(1) மொத்தச் சனத்தொகையில் பெரும் பாலானோர் இப்பொருளாதாரத்தைச் சார்ந்து வாழுதல்- இலங்கையில் 72% இனர் நேரடியாகவோ மறைமுகமாகவோ இப்பொ ருளாதாரத்தைச் சார்ந்து இருக்கின்றனர்.

(2) நிலப்பற்றுக் குறையும் நிலத்துண்டா டல் தன்மையும் காணப்படுகின்றது. ஏறக்குறைய இலங்கையில் 32% இனர் சிறிய நிலத்துண்டுகளுக்கு உடமையாளராக இருக்கின்றனர். 10 ஏக்கருக்கு கூடுதலான நிலத்தை 1 சத வீதத்தினருக்கும் குறை வானவரே கொண்டிருக்கின்றனர்.

(3) உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்குரிய சந்தை வாய்ப்புகள், சந்தைப்படுத்தல்வசதிகள், அவற்றை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் போதியளவில் காணப்படவில்லை.

(4) மரபுவழித் தொழில்நுட்பம் அதாவது உழைப்பைச் சக்தியாகக் கொண்ட தொழில்நுட்பம் கையாளப்படுதல். உதாரணமாக மண்வெட்டி, கலப்பை போன்றன பயன்படுத்தப்படல்.

(5) போதியளவு பண்ணைமுகாமைத்துவ அறிவும் திட்டமின்மையும் உற்பத்திக்கு உதவும் நிதி நிறுவனங்கள் போதியளவு காணப்படாத தன்மையும்.

(6) வருமானம் குறைவானதாகவும் நிட்சயமற்றும் இருப்பதால் பாரியளவில் மூலதனப்பற்றாக்குறை காணப்படுவதுடன் கடன் தொடர்பான பிரச்சினைகளும் அதிக அளவில் காணப்படுதல்.

(7) பிற்போக்கு மனோபாவம், மூடநம்பிக்கைகள் என்பவற்றைக் கொண்டவர்கள் காணப்படுதல்.

(8) பெருமளவு கிராமங்கள் குறைவான சன அடர்த்தியை கொண்டுள்ளமை: 79% மான கிராமங்கள் 600 பேர்வரையான சன அடர்த்தியைக் கொண்டுள்ளமை.

(9) வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுதல்.

கிராமியத்துறையும் பெருந்தோட்டத்துறையும்.

வரலாற்றுரீதியாக நோக்கும் பொழுது இலங்கையின்கிராமியப் பொருளாதாரத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில்களின் வளர்ச்சி பல்வேறுவகையான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளமையைக் காணலாம். அவற்றில் பிரதானமாக பின்வரும் தாக்கங்கள் அமைகின்றன.

(1) கிராமியத்துறையை பாதிக்கத்தக்க விதத்திலான பெருமளவு அரசியலை இறக்குமதி செய்து கொண்டமையும் ஏனைய பொருட்களின் இறக்குமதியும்.

(2) பெருந்தோட்டத் துறைக்கும் கிராமியத்துறைக்கும் இடையிலான இடைவெளி இரட்டைப்பொருளாதார அம்சங்களின் காரணமாக மென்மேலும் அதிகரிக்கப்பட்டது.

(3) கிராமியத்துறைக்கும் பணப்பயிர்ச் செய்கை (காசுபயிர்) விரிவாக்கப்பட்டமை தேயிலை, றபர் போன்ற உற்பத்திகளில் சிறு உடமை ஏற்பட்டது.

(4) சேனை நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு (காசுபயிர்) பயன்படுத்தப்பட்டமையால் உணவு உற்பத்தி அதிகளவில் பாதிக்கப்பட்டது.

(5) பயன்படுத்தப்படாத நிலச்சீர்திருத்தச்சட்டத்தின் கீழ் பலர் நிலங்களைப் பெற்றனர்.

(6) கிராமியத்துறையான வர்த்தகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின்ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டது.

பெருந்தோட்டத்துறைக்கும் கிராமியத்துறைக்கும் (உள்நாட்டுவிவசாயத் துறைக்கும்) இடையிலான வேறுபாட்டினை பின்வரும் அடிப்படைகளில் பாகுபடுத்தலாம்

(1) உற்பத்திக் காரணிகள் பயன்பாடு என்ற அடிப்பயில் இவற்றுக்கிடையே பாரியவேறுபாடு காணப்படுகின்றது.

(2) ஊழியத்தின் பயன்பாடு என நோக்கும் பொழுது ஒழுங்கமைந்த இறக்குமதி செய்யப்பட்ட ஊழியப்படை பெருந்தோட்டத்துறையில் காணப்பட கிராமியத்துறையில் இவ்வாறான ஊழியப்படை காணப்படவில்லை.

(3) மூலதனத்தின் பயன்பாடுஎன நோக்கும் பொழுது அதிகளவு மூலதனம் பெருந் தோட்டத்துறையில் பயன்படுத்தப்படுவது டன் நிதிவசதிகளும் அதிகளவில் காணப் படுகிறது. கிராமியத்துறையை பொறுத்த மட்டில் மூலதனப்பயன்பாடு மிகவும் குறை வாக இருப்பதுடன் நிதிவசதிகளும் பெரிய அளவில் காணப்படவில்லை.

(4) பெருந்தோட்டத்துறையில் போக்கு வரத்து வசதிகள், சந்தைவாய்ப்புக் கள், தொடர்பு கொள்ளும் வசதிகள் அதி களவில் காணப்பட, கிராமியத்துறையில் குறைவாகக் காணப்படுகின்றது

(5) பெருந்தோட்டத்துறையில் நவீன தொழில்நுட்பம் கையாளப்பட கிரா மியத்துறை மரபுவழி தொழில்நுட்பச் செல் வாக்கிற்கு உட்பட்டுக் காணப்படுகின்றது.

(6) நிலப்பயன்பாடு தொடர்பாக நோக் கினால் பெருந்தோட்டதுறையில் அதி களவு நிலப்பரப்பும் பெரியளவு நிலப்பரப் பும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றது. ஆனால் கிராமியத்துறையில் சிற்றுடமை விவசாயமே காணப்படுகின்றது.

பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை றபர் போன்ற பயிர்களை கிராமிய பகு களில் கிராமியமட்டத்தில் பயிர் செய்பவர்கள் பல் வேறு முக்கியபிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியவராக இருக்கின்றனர். அவ்வாறு எதிர்கொள்ளும் பிரச்சினைகளாவன

(1) தொழில் நுட்ப மின்மை - நவீன தொழில்நுட்ப முறைகளை கையாள முற்படாமல் பின் தங்கிய மரபுவழித் தொழில்நுட்ப முறைகளை இன்றும் கையா ளுதல்.

(2) உற்பத்திகளை நியாயமான விலைகளில் சந்தைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது:- சந்தைப்படுத்தல் வசதி கள், போக்குவரத்து வசதிகள் போதியளவு காணப்படாமையால் இந்நிலைமை காணப் படுகின்றது.

(3) கிராமப்புறங்களில் இப்பயிர்கள் திற மையான முறையில் பராமரிக்கப்படா மையும் மீள்நடுகை தொடர்பான நடவடிக் கைகள் மிகக்குறைந்த அளவில் காணப்படு வதும்.

(4) குறைந்தளவான உரப்பயன்பாடும் குறைந்தளவான உற்பத்தி காணப்படு வதும்.

(5) பெருந்தோட்ட உற்பத்தியில் கிடைக் கப்பெறும் தேயிலை றபருடன் ஒப்பிடும் பொழுது தரக்குறைவான உற்பத்தி (உ+ம்) குறைந்த தரத்திலான றபர்.

(6) நிதிப் பிரச்சினைகளைத்தீர்க்கக்கூடியதான போதியளவு நிதிவசதியளிக்க கூடிய நிறுவனங்கள் பெருமளவில் கிராமியப்பகுதி களில் காணப்படாமை.

(7) பயிர்ச்செய்கை, உரப்பயன்பாடு, மீள் நடுகை போன்றன தொடர்பான அறி வுரைகள் போதியளவு வழங்கப்படாமை.

கிராமியத்துறையின் பின்தங்கிய நிலையும் அரசின் நடவடிக்கைகளும்

பொருளாதார ரீதியாகக் கிராமிய பொருளாதாரத்தை நோக்கும் பொழுது அது பின்தங்கிய பொருளாதாரமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு கிராமியப் பொருளாதாரம் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கு பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். எனினும் விசேடமாக கிரா மிய பொருளாதாரத்தின் அபிவிருத்தியின் மைக்கு பின்வருவன முக்கிய காரணங்களா கும்.

(1) மொத்தச் சனத்தொகையில் பெரும்பங் கினர் சார்ந்து வாழ்வதுடன் அவர்களின் வாழ்க்கைத்தரமானது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை.

(2) சிற்றளவான நிலவுடமையும், நிலத் துண்டிடலும்

(3) மூலதனப் பற்றாக்குறை, கடன்பிரச்சினைகள் மரபுவழித் தொழில் நுட்பம் என்பவற்றால் கிராமிய மக்களின் உற்பத்தித் திறன் மிகவும் பாதிக்கப்பட்டு இருத்தல்.

(4) வேலையின்மையும் கீழ் உழைப்பும்

(5) வாழ்க்கை வசதிகள் மிகவும் பின்தங்கி இருத்தல், குடியிருப்பு, போக்கு வரத்து கல்வி, சுகாதார வசதிகள் சமூக, கலாசார உணர்வுகள் பின்தங்கிக்காணப்படுகின்றமை

(6) குறைந்தளவு வருமானம் உழைக்கப்பட்டாலும் அதன் உறுதியற்றதன்மையும்.

(7) உள்நாட்டு கலவரங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக உற்பத்தி, மாமுல் வாழ்க்கை பாதிப்படைந்திருத்தல்.

கிராமியப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதாக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தளவுக்கு கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றியுள்ளது எனக் குறிப்பிட்டுக் கூற முடியாது விடினும் அரசு கிராமியப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் வெற்றிகரமாகச் செயற்பட்டுவருகிறது என்பதனையும் கிராமியப் பொருளாதாரத்தில் முக்கிய கவனம் செலுத்துகின்றதுஎன்பதனையும் அதன் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகிறது.

(1) கிராமியக் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

(2) கிராமியத் துறைக்கு கிராமியக்கொடுகடன் திணைக்களத்தினையும், கிராமிய கொடுகடன் மதியுரைச் சபையினையும், கொடுகடன் இயக்கத்தை நடைமுறைப்படுத்த ஏற்படுத்தி உள்ளமை.

(3) விவசாயிகளின் பிரச்சினைகளைத்தீர்க்கவும் வேண்டிய அறிவுரைகளை வழங்கவும் கிராமிய ரீதியில் விவசாய உத்தியோகத்தரை நியமித்துள்ளமை.

(4) குடியேற்றத்திட்டங்களை அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை

(5) அரசகாணிகளை இலவசமாக வழங்கும் சுவர்ண பூமி திட்டத்தினை இயக்கமாக அறிமுகப்படுத்தியுள்ளமை

(6) கிராமியப் பகுதிகளின் நிதிப்பிரச்சினைகளைத்தீர்க்க வங்கிக்கிளைகளை விரிவாக்கமும், கிராமிய வங்கிகளை ஏற்படுத்தி உள்ளமையும்.

(7) கிராமங்களை மின்மயமாக்கும் திட்டம்

(8) ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சுயவேலைவாய்ப்புத்திட்டங்கள் ஏற்றுமதிக் கிராமங்களின் அமைப்பு கிராமிய வீடமைப்புத்திட்டம்.

(9) உத்தரவாத விலைத்திட்டம், பயிர்காப்புறுதித்திட்டம் உரமானியத் திட்டம்

(10) கிராமியப்பிரதேசத்தின் தொழில்முயற்சியாளருக்கு ஊக்கிகள் வழங்கப்படல்

மேற்குறித்த அரசாங்க நடவடிக்கைகள் கிராமப்புறங்களில் தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு போட்டி விலைகளிலும் தரத்திலும் பொருட்களை உற்பத்தி செய்து உற்பத்தியாளர்மிகை அனுகூலமுறை ஒன்றை ஏற்படுவதில் அரசு கவனம் செலுத்துகின்றது என்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

கிராமிய வங்கிகள்

1964 இல் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் வங்கியின் மேற்பார்வையின் கீழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக செயற்பட்டு வருகின்றனர். இதன் நோக்கங்களாவன.

(1) கிராமிய- மக்களுக்கு குறைந்த வீதவட்டியில் கூடுதலான கடன் வசதியளித்தல்

2) கிராமிய மக்கள் மத்தியில் வங்கிப்பண் பையும் சேமிப்புப்பழக்கத்தினையும் ஏற் படுத்தல்

3) குறைந்த வீத வட்டிக்கு கடன்களை வழங்கிக் கிராமிய மக்களை தனியாரின் சுரண்டலில் இருந்து பாதுகாத்தல்

4) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக செயற்பட்டு அவற்றை செயல் திறன் வாய்ந்த அமைப்புகளாக மாற்றுதல்

இவ்வங்கியின் தொழிற்பாடுகளாவன

1) கிராமிய மக்களிடம் இருந்து வைப்பு ஏற்றல்

2) வீடமைப்பு, நுகர்வு, விவசாயம், கடன் மீட்சி, மருத்துவ வசதி போன்றவற் றிற்குக் கிராமிய மக்களுக்கு கடன்வசதிய ளித்தல்

3) மக்கள் வங்கியின் சார்பில் கிராமப்புறங் களில் நகை அடைவு பிடிக்கும் திட்டத் தினை செயற்படுத்தல்

4) எந்நோக்கத்துக்குக் கடன் வழங்கப்பட் டதோ அந்நோக்கத்துக்கு கடன்கள் செல வழிக்கப்படுவதை மேற்பார்வை செய்தல்

5) கடனைப் பெற்றவர்களின் நிதிவசதிக்கு ஏற்ப கடனைத்திருப்பிக்கட்டும் நிபந்தனை களை ஏற்படுத்திக் கடனை மீளப்பெறல்

கிராமிய வங்கிகளின் அனுகூலங்கள்

1) கிராமிய மக்கள் மத்தியில் வங்கிப்பழக் கம் சேமிப்புப்பண்பு வளர்க்கப்படுகிறது.

2) பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதியளிக்கப்படுகிறது.

3) கிராமிய மக்களுக்குக் கூடுதலான கடன் வசதிகள் அளிக்கப்பட்டு விவசாய உற் பத்தி உற்சாகப்படுத்தப்படுகிறது.

4) கிராமிய மக்களுக்குக் கூடுதலான கடன் வசதிகள் கிடைப்பதுடன் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுக்கிறது.

5) கிராமிய மக்களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.

ஏற்றுமதிக் கிராமங்கள்

கிராமிய விவசாய உற்பத்திப் பொருட் களை ஏற்றுமதி செய்வதனை பிரதான நோக் கமாகக்கொண்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் 81ஆம் ஆண்டிலிருந்து இத்திட் டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

தம்பதெனியா தொகுதியில் இது ஆரம்பிக்கப்பட்டு ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. ஏற்றுமதிக் கிராமங் களை செயற்படுத்துவதற்குக் கிராமப் புறங் களில் மக்கள் கம்பனிகள் உருவாக்கப்படு கின்றன. இவற்றுக்கான ஆரம்ப மூலதனம் அரசினால் வழங்கப்படுகிறது. கிராமிய விவ சாயிகளும் இவற்றில் பங்குகளைக் கொள் வனவு செய்து மூலதனத்துக்கு பங்களிப்புச் செய்வர். கிடைக்கும் இலாபம் விவசாயப் பங்குதாரருக்குப் பகிர்ந்தளிக்கப்படும். இக் கிராமங்களின் உற்பத்திகள் ஏற்றுமதி நிறு வனங்களுக்கு விற்கப்படும் பொழுது விற் பனை, மொத்த வரியில் இருந்து விலக்களிக் கப்படுகிறது. இக்கிராமங்களின் உருவாக் கத்தால் ஏற்படும் நன்மைகள்

1) கிராமிய விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி உற்சாகப் படுத்தப்பட்டு சந்தை வாய்ப்புகளும் உறுதிப்படுத்தப்படு கிறது.

2) கிராமப்புறங்களில் சர்வதேச தரத்துக்கு ஏற்ப பொருட்களின் உற்பத்தி இடம் பெறும்.

3) கிராமிய மக்களின் வருமானம் அதிக ரிப்பதுடன் வேலைவாய்ப்புகளும் அதி கரிக்கும்.

4) கிராமப்புறங்களில் விவசாயம் வளர்ச்சி அடைவதுடன் மக்கள் கம்பனிகளின் வளர்ச்சியும் அதிகரிக்கும்.

5) விவசாயப் பொருட்கள்ஏற்றுமதி மூலம் நாட்டுக்கு அந்நிய செலவாணி உழைப்பு கிடைப்பதுடன் மரபுரீதியற்ற பொருட் களின் பங்கு ஏற்றுமதியில் அதிகரிக்கும்.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி

மத்திய வங்கியால் முலதனமிடப்பட்டு இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வங் கியின் மூலதனத்தில் 49% வருமானத்தில் 4 தனிப்பட்ட வணிக வங்கிகளுக்கும் கூட்டு றவு சங்கங்களுக்கும் வழங்கப்படும். மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட 5 பேர்கொண்ட நிர்வாக சபையால் நிர்வகிக்கப்படும். 1987 இறுதியில் 9 வங்கிகள் செயல்பாட் டில் இருந்தன. பிரதேச கிராமிய அபி விருத்தி வங்கிகள் வருவாய் உருவாக்கம், கயதொழில் வாய்ப்புகள் போன்றவற்றினை உயர்த்துவதனுல் தொடர்ந்து கிராமிய அபி விருத்தி பெருமளவிற்கு மேம்பாடடைய உதவுகின்றது.

இவ்வங்கியின் பிரதான தொழிற்பாடு களாவன.

1) பயிர்ச்செய்கை, பண்ணைக்கருவிகள், ஏனையவகைகள் என்பவற்றை உள்ள டக்கிய வேளாண்மைக் கடன்களை வழங்கு தல்.

2) நடைமுறைக் கணக்கு தொழிற்பாடும் நகை அடவு பிடித்தலும்.

3) சிறு கைத்தொழில்களுக்கும் வர்த்தகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக் கும் கடன் வசதியளித்தல்.

4) சார்புரீதியில் குறைந்தமட்ட மூலவளங் களே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கு கிடைப்பதால் ஏனைய வர்த்தக வங்கிகளின் இலக்கினை கவராத குழுவான சிறியகடன் பெறுபவர்களானசிறியவேளாண் மையாளர், சிறிய தொழில் முயற்சியாளர், சிறிய கடன்களை பெறுபவர் என்போருக்கு கடன் வசதியளித்தல்,

5) தகவல்களைப் பரப்புவதற்கும் கடன் பெறுபவருக்கு அறிவுரை புகட்டவும் கொடுகடனுக்கான வழிவகைகளை முன் னேற்றவும் ''ஜனகமுவ'' அல்லது உள்ளூர் மட்டக் கூட்டங்களை நடாத்தல், களங்க ளுக்கு செலுத்தல்.

கிராமிய கொடுகடன்

கிராமியத்துறைக்கு வழங்கப்படும் கடன்கள் நீண்டகாலக்கடன், குறுங்காலக் கடன், கடன் மீட்சிக்கடன், நுகர்வுக் கடன், எதிர்பாராதேவைகளுக்கான கடன், உபதொழில்களுக்கான கடன் என வகைப் படுத்திக் கொள்ளலாம்.

கிராமியத்துறைக்கு பின்வரும் நோக் கங்களுக்காக கடன்கள் வழங்கப்படுகின்றன.

1) உற்பத்தி நோக்கம்
   A பயிர்ச்செய்கை – நெல் சிறு உண வுப்பயிர்கள், கரும்பும், பருத்தியும்.
   B விலங்குவளர்ப்பு
   C குடிசைக் கைத்தொழில்
2) வீடமைப்பு, மின்னூட்டல், நீர்வழங்கல்
3) கடன் மீட்புக்கு
4) நுகர்வுக்கு
5) பொறிக்கருவிகளின் கொள்வனவுக்கு
6) வர்த்தகமும் ஏனையவையும்,

கிராமியத்துறைக்கு கடன்களை வழங் கும் மூலகங்களை இருவகைப்படுத்தலாம்.

1. ஒழுங்கமைந்ததுறை அல்லது நிறுவன ரீதியானதுறை.
2. ஒழுங்கமையாத்துறை அல்லது நிறுவன ரீதியற்றதுறை.

ஒழுங்கமைந்த துறையிடம் பெறும் கடன்கள் என்றுல் பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களும் வெளிநாட்டு நிறுவனங்க ளும் வழங்கும் கடன்களைக் குறிக்கும். இக் கடன்கள் குறுங்கால பயிர்ச்செய்கைக் கடன்

களையும், பரந்தளவான பொருளாதார நடவடிக்கைகளுக்கான நடுத்தர நீண்டகாலக் கடன்களையும் முக்கியமாக உள்ளடக்குகிறது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கூட்டுறவுக் கிராமிய வங்கி, வரையறுத்த ஹட்டன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிரதேச கிராமிய வங்கி, விவசாய சேவை நிலையங்கள், கமத்தொழில் கடன் கூட்டுத்தாபனம் என்பவற்றிடம் பெறும் கடன்களை குறிக்கும்.

ஒழுங்கமையாத துறையிடம் இருந்து பெறும் கடன்கள் என்ரூல் வட்டிக்குப் பணம் கொடுப்போர், நண்பர்கள், உறவினர், பணம்படைத்தோர், உபதொழிலக கடன் கொடுப்போர், வர்த்தகர்கள், தரகு முகவர்கள், அடகுபிடிப்போர், போன்றவரிடம் இருந்து கடன் பெறுவதனைக் குறிக்கும்

கிராமியத்துறையைப் பொறுத்து கடன் பிரச்சனையை இருவகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. கொடுகடன் பிரச்சனை
2. படுகடன் பிரச்சனை

கொடுகடன் பிரச்சனை என்ரூல் கிராமியத்துறைக்கு வழங்கப்படும் கடன்கள் போதுமானவையாக இருப்பதில்லை என்பதனைக் குறிக்கும். பொதுவாக ஒருங்கமைந்த துறையில் இருந்து கிடைக்கும் கடன்கள் குறைவாக இருப்பதனைக் குறிக்கிறது.

படுகடன் பிரச்சனை என்ரூல் கிராமியத் துறையைப் பொறுத்தமட்டில் பெற்றுக் கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான பிரச்சனையைக் குறிக்கிறது. அதாவது கிராமியமக்களின் கடன் சுமையை எடுத்துக்காட்டுவதாக அமையும்.

ஒழுங்கமைந்த துறைகளில் இருந்து பெறும் கடன்கள் கிராமியத்துறையைப் பொறுத்தவரையில் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறு காணப்படுவதற்கு பின்வருவன காரணங்களாகும்.

1) கிராமியத்துறை சார்ந்து போதியளவு வங்கிக்கிளைகளின்மை

2) வங்கிக்கடன் தொடர்பான நடைமுறைகளை விளங்க முடியாதவர்களாகவுள்ளனர். கடன்கள் காலதாமதத்தினை ஏற்படுத்துவதுடன், போதியளவு கல்வியறிவு இன்மையும் காணப்படுவது

3. முதல் பெற்ற கடனைத்திருப்பிக் கொடுக்காததால் திரும்பக்கடன் பெறமுடியாமை

4. கிராமிய மக்கள் போதியளவு சொத்துக்களைக் கொண்டிருப்பதில்லை. எனவே பொறுப்புகளைக் கொடுத்து கடன் பெறமுடியாமை.

5) உள்நாட்டு கலவரங்களால் கிராமியப் பகுதிகளில் வங்கிகளின் செயற்பாடு பாதிப்படைந்திருத்தல்

ஒழுங்கமைந்த துறைகளில் இருந்து பெற்றுக் கொள்கின்ற கடன்களை திருப்பிச் செலுத்தாமல் விடுகின்ற பிரச்சனை கிராமியத்துறையில் அதிகளவில் காணப்படுகின்றது. இவ்வாறு கடனை செலுத்தாமல் விடுவதற்குப் பின்வருவனவற்றை காரணங்களாக குறிப்பிடலாம்.

1) பெற்றுக் கொண்ட கடன்களைச் சரியான முறையில் பயன்படுத்தாமல் நுகர்வு நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது

2) பயிரழிவு ஏற்படுவதால் பெற்றுக் கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கின்றனர்:- மனித சக்திக்கு அப்பாற்பட்ட இயற்கைக் காரணிகளால் இதன் உற்பத்தி நிர்ணயிக்கப்படுவதால் ஒரு தடவை ஏற்படுகின்ற பயிர் நாசம் விவசாயியை முற்றுகவே கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு மாற்றி விடுகின்றது.

3) கடனை வழங்கிய அரச நிறுவனங்கள் அதனை மீள அறவிடுவதில் போதிய கவனம் செலுத்தாமை

4) கடனை செலுத்துவதற்கு மனமின்மை

5) அரசு கடந்த காலங்களில் கடனை திருப்பிச் செலுத்தாதவர்களின் கடன்களை பதிலழித்துவிட்டு மீண்டும் கடனை வழங்கியமையால் கடனைக்கட்டுவதற்கு விருப்பம் ஏற்படாமை

6) கடனைத் திருப்பிக் கொடுப்பதால் அந்த நிதிவேறுநோக்கம் கருதிப்பயன்படுத்தப் படலாம் என்ற எதிர்ப்பு

7) வேறு கடன்களை முதலில் செலுத்தியமையும் வேறுதுறைகளில் முதலீடுகளை செய்தமையும்

8) சுகவீனம், இறப்பு, விஸ்தரிப்பு சேவைக் குறைபாடு முதலியன

ஒழுங்கமையாத் துறையிடம் இருந்து இலகுவாகக் கடனைப் பெற்றுக் கொள்ள முடிவதால் கிராமிய மக்களை நிறுவன ரீதியற்ற மூலகங்கள் தமது ஆதிக்கத்துள் வைத்திருக்கின்றன. நிறுவன ரீதியற்ற மூலகங்கள் கிராமிய விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கும் பொழுது பின்வரும் சலுகைகளை காண்பிப்பர்.

1) பிணைகளின்றி நம்பிக்கையின் அடிப்படையில் கடன்களை வழங்குதல்

2) பகுதி பகுதியாகவே கடன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்

3) உற்பத்திப் பொருட்களின் வடிவத்தில் கடன்களை மீளச்செலுத்துதல் அவை ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை

4) விதைப்புக் காலத்துக்கும் அறுவடைக் காலத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வருவாய்கள் எதுவுமின்றி இருக்கச் செலவுகள் ஏற்படுவதால் அவற்றை நிவர்த்தி செய்ய நுகர்வு நோக்கத்திற்கும் கடன்களை வழங்குதல்

5) தேவைப்படும் நேரத்தில் காலதாமதம் இன்றிக் கடன்களை உடனுக்குடன் வழங்குதல்

6) பல்வேறு படிவங்களை நிரப்பவேண்டிய அவசியம் கடன் பெறும் பொழுது தேவைப்படுவதில்லை.

மேற்குறிப்பிட்டவாறு நிறுவன ரீதியற்ற மூலகங்கள் பல்வேறு சலுகைகளை வழங்குவதால் கிராமிய மக்கள் இவ்வகை மூலகங்களை நாடுகின்றனர். எனினும் கிராமியப் பகுதிகளில் உள்ள உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பெறுமதியில் குறிப்பிட்டளவு ஒரு பகுதியினை உள்வீடுகளாக உற்பத்தி விலைகள் வட்டிவீதங்கள் ஆகியவற்றின் செயற்கை ஒன்றின் மூலம் வியாபாரிகள், பணம் கொடுப்போர் போன்ற நிறுவன ரீதியற்ற மூலகங்களுக்கு இழுத்து விடுகின்றனர். இதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

1) நிதி நிறுவனங்களில் கடன்களைப்பெற அவை போதியளவு காணப்படாமையும் அவற்றிற்குப் பொறுப்புகளைக் கொடுத்துப் பணம் பெற வசதிகள் இன்மையும்

2) படுகடன் நிலமையால் தமது உற்பத்திகளைச் சந்தை விலைகளிலும் குறைந்த விலையில் வியாபாரிகளுக்கு விற்கும் நிலை.

3) கடன் கொடுப்போரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் கடன்களை மிக உயர்ந்த வட்டி விதத்தில் பெறவேண்டிய நிலை.

4) நடுவர்களின் சுரண்டல்களுக்கு இலக்காகுதல் உதாரணமாக உழவியந்திரம், கிருமிநாசினி தெளிக்கும் கருவிகள் போன்ற சில உள்வீடுகளுக்கு உயர்ந்த விலைகள் கொடுக்கவேண்டியுள்ளது

5) உள்நாட்டுப்பிரச்சனை காரணமாகவும் நிதிநிறுவனங்களில் கடன் பெறும்

நடமுறைச் சிக்கல்கள் காரணமாகவும் நிறுவன ரீதியற்ற மூலகங்களின் செல்வாக்கு அதிக அளவு காணப்பட்டமை

6) மேற்குறித்த காரணங்களால் உற்பத்தியாளரின் வருமானத்தில் பெரும்பகுதி இழக்கப்படுதல்

நாட்டின் கிராமியக் கொடுகடனை ஊக்குவிப்பதில் மத்தியவங்கி தீவிர பங்கினை ஆற்றிவருகிறது. தேசியக்கொள்கை நெறிமுறைகளை தயாரித்தல், கொடுகடன் திட்டங்களைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பிடல், தாக்கமான கிராமிய கொடுகடன் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய நிருவாக ரீதியான உள்ளமைவினை அபிவிருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அத்துடன் இலங்கை வங்கியினூல் வழங்கப்பட்ட துணைக்கடனில் 100 சதவீதம் மத்தியவங்கி மீள் அளிப்புச் செய்தமை, கிராமியத் துறைக்கு நடுத்தர நீண்டகாலக் கொடுகடனை வழங்குவதற்குப் புதிய கொடுகடன் திட்டங்களை அறிமுகம் செய்தமை, கிராமியத் துறைக்கான முதலீட்டுக் கொடுகடன்களில் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு எதிராக ஓரளவு பாதுகாப்பை வழங்கிக் கடன்களை வழங்கும் வங்கிகளுக்கு உதவும் நோக்குடன் பலகுறிப்பிட்ட நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களையும் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கொண்டுவரத் தீர்மானித்தமை ஆகிய அதன் செயற்பாடுகள் கிராமியக் கொடுகடன் தொடர்பாக மத்தியவங்கியின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

கிராமியத்துறையின் தொழில் நிலை

இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 72% கிராமியப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் கிராமியத் துறையில் தொழிலின்மை என்பது முக்கிய பிரச்சனையாகவே காணப்படுகின்றது. தொழிற்படையில் ஊதியம் பெறும் தொழில்களைப் பொறுத்தமட்டில் கிராமியத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை புலப்படுத்தும்.

தொழிற்படையில் ஊதியம் பெறும் தொழில்களின் வீதம்

துறை	1973	1978 / 79	1981 / 82
நகரம்	67.0	74.2	81.7
கிராமம்	68.2	69.9	78.5
பெருந்தோட்டம்	87.9	94.0	94.5
நாடுமுழுவதும்	70.9	73.8	80.8

மூலம்:- இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர்நிதி சமூக, பொருளாதார அளவீடு

கிராமியத்துறையில் வேலையின்மையானது காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் சமூக பொருளாதார ரீதியாகக் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவையாக பின்வருவன காணப்படுகின்றன.

1) கிராமியத்துறையை நவீனமயப்படுத்தல் என்ற அடிப்படையில் பெரும்பாலான விவசாய நடவடிக்கைகளை இயந்திரமயமாக்கும் நடவடிக்கை.

2) சனத்தொகை தொடர்ச்சியாக அதிக

ரித்து வருவதன் விளைவாக நிலப்பற்றாக்குறை, நிலத்துண்டிடல் இதனால் பயிர் செய்கை பண்ணும் நிலப்பரப்பு குறைவதுடன் உழைப்புச் சக்தியும் வீணாகிறது.

3) கிராமிய இளைஞர்களின் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதன் விளைவாக அவர்கள் வெள்ளைக்காற் சட்டை உத்தியோக மோகத்தை நாடியமை.

4) நீர்ப்பாசன வசதிகள் போதியளவு காணப்படாததன் விளைவாக ஒரு போகச் செய்கையை செய்துவிட்டு ஏனைய காலத்தில் வேலையற்ற நிலையில் இருத்தல்.

5) அரசியல் கலவரங்கள், வன்முறைகள் காரணமாக பயிர்ச்செய்கை தடைபண்ணப்பட்டதும், கடல்வலயப் பாதுகாப்பு வலயங்களால் மீன்பிடிக்கைத்தொழில் பாதிக்கப்பட்டமையும்.

கிராமியத்துறையில் காணப்படும் தொழிற்படையில் வேலையில்லாதோர் தொகையினை நோக்கும் பொழுது கிராமியத்துறையில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன என்பதனைப் பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டும்.

தொழிற்படையில்
வேலையில்லாதோரின் சதவீதம்

துறை	1978/79	1981/82
நகரம்	20.7	14.2
கிராமம்	14.6	12.0
பெருந்தோட்டம்	5.6	5.0
நாடுமுழுவதும்	14.8	11.7

மூலம்:- மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி சமூகப் பொருளாதார அளவீடுகள்.

கிராமியத்துறையில் வேலைவாய்ப்புகளை வழங்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளாவன

1) துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித்திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயங்கள்.

2) மரவேலை, கொத்தனர்வேலை, நெசவு வேலை, தையல்வேலை தொடர்பாக நடமாடும் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளித்தல்.

3) சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள்.

4) ஏற்றுமதி கிராமங்களின் அமைப்பும் கிராமிய வீடமைப்புத் திட்டமும்.

5) ஜனசவிய திட்டம்.

ஜனசவிய திட்டம் (ஜனசக்தி)

வறுமையை ஒழிப்போம் வளமாக வாழ்வோம் என்ற கொள்கையின் அடிப்படையில் ஜனாதிபதி பிரேமதாசாவினால் அறிமுகப்படுத்தப்பட்டதே இத்திட்டமாகும் நாட்டின் 70 தொடக்கம் 80 லட்சம் வரையிலான மக்கள் வறுமையின் பிடியில் கிராமிய மட்டத்தில் வாழ்வதால் அவர்களின் போஷாக்கின்மை, சமூக ஏற்றத்தாழ்வு, குடும்ப சுமை, நிலமின்மை, நோய், வீட்டுத் தளபாடங்கள் இன்மை ஆகியவற்றை கருத்திற் கொண்டு அவற்றினை நிவர்த்தி செய்து கிராமியமட்டத்தில் மக்கள் இணைந்து தன் நம்பிக்கையுடன் தமது சமூக பொருளாதார அந்தஸ்தினை உயர்த்த உதவும் திட்டமாகும். ஆரம்பத்தில் இதற்கென 25000 கிராமங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. சிறு கிராம மட்டத்தில் மக்கள் குழுவாக இணைதலில் இருந்து குழுமாற்ற முகவர்கள் பெற்ற பயிற்சிகளையும் உதவிகளையும் (கைத்தொழில் விவசாயம், பரிபாலனம் தொடர்பாக) மக்களுக்கு அளித்தல் வரையிலானதாகும். இத்திட்டம் குடும்பங்களை அடிப்படையில் மிகவறிய குடும்பங்கள், வறிய குடும்பங்கள், ஓரளவு வறிய குடும்பங்கள், எனச்சொல்ல விரும்பும் ஏனைய குடும்பங்

கள் என வரிசையாக பாகுபடுத்தியுள்ளது. வறிய குடும்பம் ஒன்றுக்கு மாதமாதம் நுகர்வு செலவுக்காக 1458/= வும் மாதம் வழங்கப்படும் 2500/=வில் மிகுதி 1042/= அக் குடும்பத்தின் சேமிப்புக்காக வங்கியில் இடப்படும் இரண்டு வருடமுடிவில் அக் குடும்பத்தின் சேமிப்பு 25000/=வாகும் இவ்வாறு பெறும் பணத்தினைக் கொண்டு சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க இத்திட்டம் வகை செய்யும் இத்திட்டத்துக்கு ஆரம்பத்தில் உதவ உலக வங்கி முன்வந்திருப்பினும் இத்திட்டத்தின் ஆரம்ப வெற்றியிலேயே உலக வங்கியினதும் ஏனைய IMF போன்ற அமைப்புகளின் உதவியும் கிடைக்கப் பெறும் என்பதால் இத்திட்டத்தின் நடமுறைசாத்தியம் பற்றிக் கூற முடியாது உள்ளது. இத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நன்மைகளாவன:

1. விஞ்ஞான, தொழில் நுட்பம்பரிபாலனம் என்பன அபிவிருத்தியடைதல்
2) கிராமத்தின அபிவிருத்தியடையச் செய்தலும் வறுமையை ஒழித்தலும்
3) தொழில் வளத்தினை பெருக்குதலும் உற்பத்தி பெருக்கம் அடைதலும்
4) சுய உழைப்பினை ஊக்குவித்தலும் வாழ்க்கைத்தரத்தினை அதிகரித்தலும்
5) ஏற்றத்தாழ்வை இல்லாதொழித்து வகுப்பு முரண்பாட்டை அகற்றல்
6) போஷாக்கு அளித்து மக்களுக்கு சக்தியை ஊட்டல் அல்லது மனித ஆற்றலை மேம்படுத்தல்
7) நாட்டின் அபிவிருத்தியில் மக்கள் அனைவரும் இணைந்து செயற்படல்

காப்பொதுக்கமும் பொறுப்பொதுக்கமும்
RESERVE AND PROVISION

காப்பொதுக்கம் என்பது இலாபத்திலிருந்து குறிப்பிட்ட தேவைகளுக்கும் பொதுவான தேவைகளுக்கும் ஒதுக்கி வைப்பதாகும். இது வியாபாரத்தின் தற்பாதுகாப்பிற்கும் நிதி நிலமையை ஸ்திரப்படுத்துவதற்காகவுமே ஏற்படுத்தப் படுகிறது. இது இலாபத்திலிருந்தே ஏற்படுத்தப்படும் உ+ம்: பொதுஒதுக்கம், பங்குலாபம் சமப்படுத்தும் நிதி, ஆள்நிதி, பிரதியிடுகை ஒதுக்கம் முதலியனவாகும்.

பொறுப்பொதுக்கம் என்பது ஏற்படக்கூடிய நட்டத்திற்கு அல்லது செலவிற்கு ஒதுக்கி வைப்பதாகும். ஏற்பட்டு கொடுக்க வேண்டிய செலவுகளுக்கு ஒதுக்குவதும் இதனைக் குறிக்கும். பொறுப்பொதுக்கம் கண்டிப்பாக செய்ய வேண்டியதாகும். இவ்வொதுக்கம் இலாபநட்டக் கணக்கில் வரவு வைப்பதன் மூலம் ஏற்படுத்தப்படும்.

உ+ம் : பெறுமான தேய்வொதுக்கம், அறவிடமுடியாக் கடன்

வரலாற்றுக் கிரயக கணக்கியல்
HISTORIC COST ACCOUNTING

சொத்துக்கள் அல்லது பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு உண்மையாக ஏற்படும் செலவே வரலாற்றுக்கிரயம் (Historic Cost) எனப்படுகிறது.

இவ்வாறு உண்மையாக ஏற்படும் செலவில் கணக்கு வைக்கப்படும் ஒரு முறையே வரலாற்றுக் கிரயக் கணக்கியல் எனப்படுகின்றது.

இம் முறையின் பிரதான குறைபாடுகளாவன:

1. மாற்றமடையும் விலைமட்டங்களை இக் கணக்கு முறை கவனத்தில் எடுக்கவில்லை.

2. ஐந்தொகையில் காட்டப்படும் சொத்துக்கள் வரலாற்றுக்கிரயத்தில் காட்டப்டுவதனால் உண்மைக்குப் புறம்பான பெறுமதியில் காணப்படுகின்றன.

3. வியாபார இலாபநட்டக் கணக்கு, முக்கியமாக பெறுமானத்தேய்வு தொடர்பாகவும் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் தொடர்பாகவும் பொருத்தமான தகவல்களைக் கொண்டிருப்பதில்லை.

4. பொதுவாக ஐந்தொகையில் காணப்படும் சொத்துக்கள் வரலாற்றுக் கிரயத்தில் அதாவது கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியில் காணப்படுகின்றன. அதே வேளை இலாபம் கடந்த கால செலவுக்கும், நடைமுறை கால வருமானத்துக்கு மிடையிலான வித்தியாசம் எனக் கொள்ளப்படுகின்றது.


கடந்த கால செலவுக்கு உதாரணமாக சொத்தின் வரலாற்றுக்கிரயத்தில் செய்யப்படும் பெறுமானத் தேய்வை குறிப்பிடலாம். நடைமுறை கால வருமானமென்பது நடை முறைச் சந்தைவிலையில் செய்யப்படும் விற்பனையைக் குறிக்கும்.

FUNDS FLOW STATEMENT

S. M. ALALASUNDERAM
F. C. M. A., A. I. W .M
Bursar, University of Jaffna.

The term 'Funds' is used in the sense of 'spending power', it refers to the value embedded in assets. Funds are usually received into a business initially in the form of cash. Part of this cash may be used to purchase fixed assets part will be used to pay wages expenses and buy materials and or to buy trading stock direct depending on the nature of the business. The funds does not ceased to exist when cash has been transformed into assets either by trading stock or manufacturing stock. They are now embodied in these assets. If the goods are sold on credit then part of the funds appear in the form of debtors and when the debtors settle their debts the funds are reverted to cash.

The circular flow of funds



The objective of funds statement is to provide information as to how the activities of the enterprise have been financed and how its financial resources have been used during the period covered by the statement. The fund statement should embraee all changes in financial position and not just those affecting working capital or cash. It should show

1. Changes in each of the elements of working capital
2. Purchase and sale of long term assets
3. Issue, redemption and repayments of long term debt.
4. Dividends or other distributions to share holders.

Funds can be defined in various ways.

1. Working Capital.
2. Quick assets less current liabilities.
3. Cash & Marketable securities less short term bank credit
4. Cash
5. Total funds employed in the business.
6. Total shareholders fund.
7. Equity Interests.

Operations are usually a net source of funds to a business. Since this is a recurring source, it is generally agreed that a distinction should be made in the funds statement between funds derived from operations (internal financing) and funds derived from other sources such as borrowings or contribution of capital (external financing)

The funds flow statement starts with the opening working capital and adds all sources of long term funds deduct all uses of funds for long term purposes such as investments, purchase of assets) and payment of long term liabilities) The resulting figure is the closing working capital. The funds flow sttement does not normally concerned with whether stocks rose or fell during a period, whether the level of debtors charged or what happened to the cash balance. It merely records the changing the aggregate level of working capital.

Cash flow statements on the other hand are concerned with all the changes within the working capital with any increase in creditors, debtors and stock that affect cash. Most of the Companies submit a "sources and applications of funds statements "which are shown as the third financial statement in the annual report in addition to the Profit and Loss Account and Balanee Sheet. The object is to show the shareholders the performance for the period and how the funds are employed and controlled. Objectives of sources and applicaton of funds.

1. **It would show how the funds are generated and absorbed by the operat**ions of the business and the manner in which resultant surplus of liquid assets has been applied or any deficiency of such assets has been financed by external funds.
2. It would show whether working capital has been squeezed to finance long term investments or vice versa and whether the purchase of fixed assets is being finaced by short term borrowings.
3. The statement distinguishes the use of funds for the purchase of new fixed assets from funds used in increasing the working capital of the Company.

Fund flow statements are useful for interfirm comparison and purchase of companies.

பாதீட்டுக் கட்டுப்பாடு

பா. பாலச்சந்திரன்
B. Com (Hons); C.I.M.A. Passed Finalist
விரிவுரையாளர்
வணிக முகாமையியல்துறை
யாழ் பல்கலைக்கழகம்

1.0 அறிமுகம்

ஒரு நிறுவனத்தின் வெற்றியானது அதன் செயல்பாடுகளை முறையாக திட்டமிட்டு அதற்கேற்ப அதனை செயல்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அநேகமாக நிறுவனங்களின் தோல்விக்கு எதிர்காலம் பற்றிய முன்னுணர்வுகளை மேற்கொண்டு தேவையான திட்டங்களை முறையாக வகுக்காமையும் வகுக்கப்படும் திட்டங்கள் முறையாக அமுல் படுத்தப்படாமையும் காரணங்களாக அமைகின்றன.

இக்கட்டுரையில் ஒரு நிறுவனம் தனது குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக தேவையான கொள்கைகளை எதிர்காலம் பற்றி முன்னுணர்ந்து வகுத்து அதனை கணிய வடிவில் வெளிப்படுத்தும் பாதீட்டு திட்டமிடலைப் பற்றி ஆராயப் படுகின்றது.

2.0 பாதீடு

பாதீடு என்பது எதிர்காலம் பற்றி முன்னேக்கியே மதிப்பீடு செய்யப்பட்டு கணியவடிவில் வெளிப்படுத்தப்பட்ட விபரமான திட்டமாகும். இது ஒரு நிறுவனம் முழுவதற்கும் அல்லது நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு அல்லது நிறுவனத்தின் ஒரு தொழிற்பாட்டுக்குத் தயாரிக்கப்படலாம். பட்டய முகாமைக் கணக்கறிஞர் நிறுவனம் (லண்டன்) பாதீடு என்பதற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது.

"குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் பின்பற்றப்படவேண்டிய கொள்கைகளினை அக்காலப்பகுதிக்கு முன்னரே நிதி, கணியவடிவில் தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்ட கூற்று பாதீடு எனப்படும்". இது வருமான பாதீடாகவோ, செலவு பாதீடாகவோ

அல்லது மூலதன பாதீடாகவோ இருக்க முடியும்.

பாதிட்டினை தயாரித்தலை நிறுவனத்தின் குறிக்கோள், கொள்கைகளை விபரமான திட்டங்களாக மாற்றும் செய்முறை எனவும் அழைக்கலாம். பாதீட்டினை தயாரிக்கும் பொழுது வியாபாரச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கத்தக்கதாக பாதீடுகள் காலாகாலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.0 பாதீட்டின் நன்மைகள்

(அ) திட்டமிடல்

நிறுவனத்தின் திட்டமிடல் கருமம் முறையாக மேற்கொள்ளப்பட வழிவகுக்கின்றது. எதிர்காலம் பல்வேறு முறைகளைப் பின்பற்றி முன்னுணரப்பட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவை பாதீடுகளாக கணியவடிவில் தயாரிக்கப்படுகின்றன. இங்கு பல்வேறு திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு உத்தம பலனைத்தரும் திட்டங்களே இறுதியில் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) ஒருங்கிணைத்தல்.

நிறுவனத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களின் செயல்பாடுகள் பிரதான பாதீட்டினூடாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. இதன் மூலம் திணைக்களங்களுக்கிடையில் முரண்பாடுகள் நீக்கப்பட்டு நிறுவனத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு முற்றிசைவான நோக்குடன் திணைக்களங்கள் செயல்படும்.

(இ) கட்டுப்படுத்துதல்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டியவை முன்னரேயே கணியவடிவில் விபரமான திட்டங்களாக (பாதீடுகள்) தயாரிக்கப்பட்டிருப்பதனால், அக்காலப் பகுதியில் உண்மையாக இடம் பெறும் விளைவுகள் பாதீட்டுடன் ஒப்பிடப் பட்டு ஏற்படும் வேறுபாடுகளைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற் கொள்ள முடியும்.

(ஈ) தொடர்பு கொள்ளல்

பாதீட்டினை தயாரிக்கும் செய்முறையில் எல்லாமட்ட முகாமையாளரும் பங்கு கொள்கின்றனர். நிறுவனத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு தேவையான கொள்கைகள் உயர் மட்ட முகாமையாளர்களினால் பாதீட்டுவடிவில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றினை செயல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி கீழ் மட்ட ஊழியர்களிடம் விபரங்கள் பெறப் பட்டு, சிக்கல்கள் ஏற்படாதவிடத்திலேயே பாதீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பாதீடுகள் தயாரிக்கப்பட்டபின்னர் ஒவ்வொரு வகைப்பாதீடுகளோடும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் அதுபற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படுகின்றன. உண்மையில் நிறுவனத்தின் குறிக்கோள், கொள்கையினை அதனை செயல்படுத்த வேண்டியவர்களுக்கு தெரிவிக்கும் ஊடகமாக பாதீடு காணப்படுகின்றது.

(உ) அதிகாரம் வழங்குதல்

பாதீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டபின்னரே அவை அமுல் படுத்தப்படுகின்றன. எனவே பாதீடுகளில் உள்ளடக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள திணைக்களங்கள் மேலதிக அங்கீகாரம் எதனையும் பெறத்தேவையில்லை. ஆனால் பாதீட்டில் தெரிவிக்கப்படாத செலவினங்களை மேற் கொள்ள வேண்டுமாயின் முற்கூட்டியே அங்கீகாரத்தினைப் பெறல் வேண்டும்.

(ஊ) மதிப்பாய்வு செய்தல்

குறிப்பிட்ட காலப்பகுதியில் அடைந்து கொள்ளப்பட்ட விளைவினை மதிப்பீடு செய்வதற்கு பாதீடுகள் உதவுகின்றன.

(எ) ஊக்கப்படுத்துதல்

பாதீடு தயாரிக்கும் செய்முறையில் எல்லா ஊழியர்களினையும் ஈடுபடுத்துவதன் மூலம் தாம் தயாரித்த பாதீடுகளை அடைந்து கொள்ள வேண்டும் என்ற ஊக்கத்தினை ஊழியர்களிடையே ஏற்படுத்தலாம்.

4.0 பாதீட்டினைத் தயாரித்தல்

ஒரு நிறுவனத்தில் பாதீடு தயாரிக்கும் பொறுப்பு முகாமையாளர்களையும் கணக்காளரையும் சார்ந்ததாகும். பாதீட்டினைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக ஒரு குழு அமைக்கப்படும். இதனை பாதீட்டுக் குழு என்பர்.

4.1 பாதீட்டுக்குழு

இக்குழுவில் உயர்மட்ட முகாமையாளர்கள், கணக்காளர் அங்கத்தவர்களாக இருப்பார்கள். பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்து மீளாய்வு செய்து, பாதீடு தயாரிப்பது தொடர்பான நடைமுறைகள் கால அட்டவணைகள் ஆகியவற்றினை நிர்ணயிப்பதும் பாதீடு தயாரிப்பதற்கு வழிகாட்டியாக பாதீட்டு கைநூலினைத்தயாரிப்பதும் இவர்களது பொறுப்பாகும். ஒவ்வொரு திணைக்களத்துக்கும் அல்லது தொழிற்பாட்டுக்கும் பாதீடு தயாரிப்பது இவர்களது கடமை அல்ல. பாதீட்டு நடைமுறைகள் கால அட்டவணைகள், பாதீட்டு கைநூல் ஆகியன தயாரிக்கப்பட்ட பின்னர் அவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு திணைக்களத்துக்கும் பொறுப்பான முகாமையாளர், ஒவ்வொரு தொழில்பாட்டுக்கும் பொறுப்பானவர்கள் தங்களுக்குரிய பாதீட்டினைத் தயாரிப்பர்.

4.2 பாதீட்டு இயக்குனர்

பாதீட்டு இயக்குனராக கணக்காளர் இருப்பர். இவர் பாதீட்டுக்குழுவின் தலைவராகவும் இருப்பர். இவரே பாதீடு தயாரித்தல் செய்முறைக்கு பொறுப்பானவராக இருப்பார்.

4.3 பாதீட்டுக் கைநூல்

பாதீடு தயாரிப்பதற்கு வழிகாட்டியாக பாதீட்டுக்கைநூல் காணப்படும். பாதீடு தயாரிப்பது தொடர்பான பல்வேறு தகவல்களை இது கொண்டிருக்கும் அவையாவன :

- பாதீட்டு திட்டமிடல், கட்டுப்பாட்டின் நோக்கம்
- நிறுவன அமைப்பு (பதவிகளும் பொறுப்புகளும்)
- தற்போது நடைமுறையில் உள்ள ஒவ்வொரு பாதீடும் யார் பொறுப்பில் உள்ளது ? அவை யாரால் எப்பொழுது தயாரிக்கப்பட வேண்டும் ?
- பாதீடு தயாரிக்கும் படிமுறை, நியம வடிவம்
- பாதீட்டுக்குழு அங்கத்தவர்கள் விபரம்
- தயாரிக்கப்பட வேண்டிய பிரதான பாதீடுகள், தொழில் பாதீடுகள், அவற்றுக் கிடையிலான தொடர்புகள்.

4.4 பாதீட்டு நிலையம்

வெவ்வேறுபாதீடுகளை தயாரிப்பதற்கு தனிநபர்களை பொறுப்பாக நியமித்து அமைக்கப்பட்ட பிரிவாகும்.

5.0 பிரதான பாதீட்டு காரணி

நிறுவனங்களின் எதிர்கால செயல்பாடுகள் பற்றி திட்டமிடும் பொழுது சில வரையறைகள் காணப்படலாம். இதனை பிரதான பாதீட்டுக்காரணி என்பர். இது ஒரு காரணியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதாகவோ இருக்கலாம். ஒரு உற்பத்தி நிறுவனத்தில் உற்பத்தி இயலளவு, பற்றாக்குறையான உழைப்பு, மூலப்பொருள், நிதி, நுகர்வோர் கேள்வி ஆகியனவற்றில் ஒன்றோ அல்லது

பலவோ பாதிட்டுக்காரணியாக இருக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட பாதிட்டுக்கட்டுப்பாட்டுக் காரணிகள் காணப்படுமிடத்து ஏகபரிமாணத்திட்டமிடல்நுட்பத்தினை பயன்படுத்தி வரையறையான வளங்களின் உத்தம பயன்பாடு நிர்ணயிக்கப்பட்டு பாதீடுகள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு வரையறை காரணி காணப்படுமிடத்து இலகுவாக அதன் உத்தம பயன்பாடு நிர்ணயிக்கப்பட்டு பாதீடு தயாரிக்கப்படும்.

6.0 பிரதான பாதீடும் தொழில் பாதீடுகளும்

பாதீடுகளை பிரதான பாதீடு, தொழில் பாதீடு என வகைப்படுத்த முடியும். பிரதான பாதீடு என்பது தொழில் பாதீடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் தயாரிக்கம்படும் இலாபநட்டக் கணக்கு, பாதீட்டு ஐந் தொகை ஆகியனவாகும். தொழில் பாதீடுகள் என்பது நிறுவனத்தின் ஒவ்வொரு தொழிற்பாடுகளுக்காகவும் தயாரிக்கப்படும் பாதீட்டினைக் குறிக்கும். (உ+ம்) விற்பனை பாதீடு, கொள்வனவு பாதீடு, காசுப்பாதீடு மூலப்பொருள் பயன்படுத்துதல் பாதீடு

7.0 நிலையான, நெகிழும் பாதீடுகள்

நிலையான பாதீடு வெளியீட்டு மட்டத்தில் அல்லது விற்பனையில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப மாற்றமடையாத பாதீடாகும்.

செயல்பாட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கத்தக்கதாக தயாரிக்கப்படும் பாதீடுகள் நெகிழும் பாதீடுகள் எனப்படும்.

நிலையான பாதிடானது நிறுவனத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தும் பாதீடாக அமைந்திருக்கும். அதனை அடிப்படையாகக் கொண்டு உண்மை விளைவுகளை ஒப்பிட்டு கட்டுப்படுத்தல் கருமத்தினை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் நிலையான பாதீடு தயாரிக்கப்பட்ட செயல்பாட்டு மட்டத்திற்கும் உண்மையான செயல்பாட்டு மட்டத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுமிடத்து கட்டுப்படுத்தல் கருமத்தினை மேற்கொள்வது பலனளிக்கமாட்டாது.

நெகிழும் பாதிடானது செலவுகளை நிலையான, மாறும் செலவுகளாக பகுத்து ஆராய்கின்றது. தயாரிக்கப்படும் பாதிடுகள் நெகிழ்ச்சித்தன்மை கொண்டவையாக இருப்பதனால் உண்மையான செயல்பாட்டு மட்டத்திற்கேற்ற நெகிழும் பாதீடு தயாரிக்கப்படுவதன் மூலம் கட்டுப்படுத்தல் கருமம் இலகுவாக மேற் கொள்ளப்பட முடியும்.

8.0 பாதீட்டுக் கட்டுப்பாடு


பாதீட்டு செய்முறையின் முக்கிய இயல்பு செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு ஒரு அளவீடாக பயன்படுவதாகும். பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப இடம் பெறும் உண்மை விளைவுகள் அளவிடப்பட்டு, பாதீட்டுடன் ஒப்பிடப்பட்டு ஏற்படும் முரண்கள் கணிப்பிடப்பட்டு, அதனைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை பாதீட்டுக் கட்டுப்பாடு எனலாம். பாதீட்டுக்கட்டுப்பாட்டு முறைமை சிறப்பாக இருக்க வேண்டுமாயின் அது பின்வரும் அம்சங்களை கொண்டிருத்தல் வேண்டும்

(அ) விபரமான திட்டம் (பாதிடு)

(ஆ) நோக்கத்தினை அல்லது குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தின் பல்வேறு தொழிற்பாடுகளுக்கிடையே இணைப்பு இருத்தல் வேண்டும்.

(இ) ஏற்படும் முரண்களுக்குப் பொறுப்பாளியாக தனிநபர்கள் இருக்கத்தக்க வகையில் கட்டுப்பாட்டு முறைமை அமைக்கப்படல் வேண்டும்

பாதிட்டுக் கட்டுப்பாட்டுச் செய்முறை



பட்டய முகாமைக் கணக்கறிஞர் நிறுவனம் (லண்டன்) பாதீட்டுக் கட்டுப்பாடு என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது. "கம்பனியின் குறிக்கோளினை தெரிவித்தல், கொள்கைகளை விபரமான திட்டவடிவில் வெளிப்படுத்துதல், சரியான நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் முகமாக உண்மைவிளைவுடன் திட்டமிட்டவற்றினை ஒப்பீடுசெய்தல் ஆகியவற்றினை உள்ளடக்கிய முறையான அணுகுமுறையே" பாதிட்டுக்கட்டுப்பாடாகும்.

9.0 பாதிட்டுக் கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கங்கள்

(அ) பாதிடுகள் தயாரிக்கப்படும் பொழுது எல்லா மட்ட ஊழியர்களதும் கருத்துக்களை ஒருங்கிணைத்தல்.

(ஆ) நிறுவனத்தின் எல்லா நடவடிக்கைகளினையும் ஒருங்கிணைத்தல்.

(இ) கட்டுப்பாட்டினை மதியப்படுத்துதல்.

(ஈ) முகாமை மட்டங்களுக்கு பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல்.

(உ) எதிர்பாராத நிலைமைகள் பாதிப்பினை ஏற்படுத்தும் பொழுது முடிவுகளை மேற்கொள்வதற்கு முகாமைக்கு ஒரு வழி காட்டியாக உதவுதல்.

(ஊ) ஆகக் கூடுதலான இலாபகரமான தன்மையை பெறுவதற்கு வருமானங்களையும் செலவுகளையும் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துதல்.

(எ) ஆக கூடிய இலாபகரமான வழிகளில் மூலதன செலவுகளை ஈடுபடுத்துதல்.

(ஏ) நிறுவனத்தின் சிறப்பான இயக்கத்திற்கு தேவையான போதுமான தொழில்பாடு மூலதனத்தை உறுதிப்படுத்துதல்.

(ஐ) உண்மை விளைவுகளை ஒப்பிடுவதற்கு ஒரு அளவு கோலாக அமைதல்.

(ஒ) ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை மாற்றியமைப்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனை முகாமையாளருக்கு வெளிக்காட்டுதல்.

10.0 மனித நடத்தையும் பாதிட்டுக் கட்டுப்பாடும்

பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறையினை நடைமுறைப் படுத்தும் பொழுது ஊழியர்கள் ஒத்துழையாது முரண்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட இடமுண்டு. அச்சந்தர்ப்பங்களாவன :

(அ) கீழ்மட்ட ஊழியர்களது பங்கு பற்றுதல் இல்லாது பாதீடுகள் தயாரிக்கப்பட்டு, அவற்றினை உயர்மட்ட முகாமையினால் கீழ்மட்ட ஊழியர்களை நிறை வேற்றும்படி பணிக்கப்படின்.

ஆ) நிறுவனகுறிக்கோளும் தனியாரின் குறிக்கோளும் முரண்படும் சந்தர்ப்பங்கள். (உ+ம்) திணைக்கள் முகாமையாளர் கிரமமாகச் செய்யப்படும் பராமரிப்பினை தாமதப்படுத்துவதன் மூலம் பராமரிப்புச் செலவினை குறைக்க முற்படலாம். ஆனால் கிரமமாக பராமரிப்பு மேற்கொள்ளப் பட்டாலேயே உற்பத்தி தடங்கலின்றி நடைபெறும்.

(இ) திணைக்களங்களுக்கிடையே ஏற்படும் போட்டி காரணமாக இலக்கினை அடைந்து கொள்ளாமைக்கு காரணமாக ஒரு முகாமையாளர் மற்றையவரினை குற்றம் சாட்டுதல்.

(ஈ) உண்மைவிளைவுகளை பாதீட்டுடன் ஒப்பிட்டு முரண்களை கணிக்கும் நபர்கள் அவ்வப்பகுதிகளுக்குப் பொறுப்பான முகாமையாளர்களின் செல்வாக்குக் குட்படுத்தப்படுதல். (தாம் விரும்பியவாறு அறிக்கை தயாரிக்கப்படுவதற்காக)

(உ) தயாரிக்கப்பட்ட பாதீடு செயல்திறனினை அளவீடு செய்யும் அலகாக பயன்படுத்தப்படுமாயின், பாதீட்டுக்குப் பொறுப்பான முகாமையாளர் பாதீட்டில் தேவையான திருத்தங்களை செய்தல்.

11.0 உருட்டுச் சேர்தற் பாதீடு (Rolling Budget)

உருட்டுச்சேர்தற்பாதீடு எதிர்காலங்களை பற்றிய எதிர்வுகூறலில் நிச்சயமான தன்மையை ஏற்படுத்துவதற்கும் பாதீட்டினை உண்மையான நடைபெறக்கூடிய சம்பவங்களோடு தொடர்புடையதாக்கவும் உதவுகின்றது.

உதாரணமாக மூன்று மாதகாலப் பாதீடு தயாரிக்கப்படுமாயின் தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களுக்கு பாதீடு தயாரிக்கப்படின் தைமாதமுடிவில் தை மாத பாதீட்டு விபரம் நீக்கப்பட்டு சித்திரை மாத பாதீட்டு விபரம் பாதீட்டில் சேர்க்கப்படும். எனவே தைமாத முடிவில் மாசி, பங்குனி, சித்திரை மாதவிபரங்கள் கொண்டதாக மூன்று மாத பாதீடு அமைந்திருக்கும். இப்பாதீடுகள் மாத அடிப்படையிலோ அல்லது வாராந்த அடிப்படையிலோ தயாரிக்கப்படலாம். இவ்வாறு தயாரிக்கப்படும் பாதீடுகளை உருட்டுச்சேர்தற் பாதீடு அல்லது தொடர்ச்சியான பாதீடு (Continuous Budget) என்பர்.

11.1 உருட்டுச் சேர்தற் பாதிட்டின் நன்மைகள்.

(அ) சூழ்நிலை மாறுபடும் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டு பாதீட்டில் முடிந்த காலப்பகுதிக்கான விபரங்கள் நீக்கப்பட்டு சேர்க்கப்பட்ட காலப்பகுதிக்கான விபரங்கள் சேர்க்கப்படுகின்றன. எனவே பாதீடு உண்மையில் நடைபெறும் சூழ்நிலையை பிரதிபலிக்கத்தக்கதாக அமைந்திருக்கும். எனவே சரியான ஒப்பீடுகளை மேற்கொள்ள முடியும்.

(ஆ) ஒருவருடத்திற்கு முந்திய தகவல்களைக் கொண்டல்லாது நடைமுறை சூழ்நிலையைப் பிரதிபலிப்பதாக பாதீடு அமைவதனால் தீர்மானம் செய்தல், திட்டமிடல் ருமம் சரியான வழியில் மேற்கொள்ளப்பட வழிவகுக்கும்.

11.2 உருட்டுச் சேர்தற் பாதிட்டின் தீமைகள்.

(அ) பாதீட்டினை தயாரிப்பதில் கூடுதலான நேரம் செலவழிக்கப்படும்.

(ஆ) பாதீட்டினை தயாரித்தல், கட்டுப்படுத்துதல் தொடர்பான ஊழியர் செலவு அதிகரிக்கும்.

(இ) தற்போதைய சூழ்நிலையை பிரதிபலிக்கத்தக்கதாக பாதீட்டினை தயாரித்தல் சிக்கலானதாக இருக்கும்.

(ஈ) முற்றிலைவான நோக்குடன் ஊழியர் வேலை செய்வதனை அடிக்கடி பாதீட்டினை தயாரித்தல் பாதிக்கும்.

12.0 பூச்சிய அடிப்படைப் பாதீடு (Zero Base Budgeting)

பூச்சிய அடிப்படை பாதீடு என்ற நுட்பம் 1970 ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் பீற்றர் ஏ பீர் என்பவரால் முன்வைக்கப்பட்டது. ஒவ்வொருவரிடமும் நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்பாடுகளுக்கான செலவினங்கள் ஆகியன பூச்சிய மட்டத்தில் இருந்து மீளமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதே இதன் அடிப்படை எண்ணக்கருவாகும். இந்நுட்பம் தனியார் துறையிலும் அரசதுறையிலும் பின்பற்றப் படலாம்.

வழமையான பாதீடுகள் தயாரிக்கப்படும் பொழுது நடப்பு கால பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு அத்துடன் செயல்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் பணவீக்கம், நிச்சயமற்றதன்மை ஆகியனவற்றையும் கருத்தில் கொண்டு அடுத்தகாலப்பகுதிக்கான பாதீடுகள் தயாரிக்கப்படும். பூச்சிய அடிப்படையிலான பாதீடு இதற்கு எதிரிடையானதாகும். இது பூச்சிய மட்டத்தில் இருந்து மீள மதிப்பீடு செய்யப்படும். இப் பாதீடு தயாரிக்கப்படும்பொழுது அதில் உள்ளடங்க வேண்டிய எல்லா அம்சங்களும்

(அ) அவை இடம்பெறுவதுஅவசியமானதா

(ஆ) அவற்றினை தவிர்க்க முடியுமா

(இ) வேறு மாற்றுவழிகள் உண்டா

(ஈ) அவை ஏற்படுவதனை நியாயப்படுத்த முடியுமா

என ஆராயப்பட்டு அவை தொடர்ந்ான செலவீட்டு விபரங்கள் பாதீட்டில் உள்ளடக்கப்படும். இதன் முக்கிய தன்மையாதெனில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை பயன்படுத்துவது தொடர்பாக திட்டமிடலுக்கு இது உதவியாக உள்ளது.

12.1 பூச்சிய அடிப்படைப் பாதிட்டின் நன்மைகள்.

(அ) வினைத்திறன் குறைந்த தொழில்பாடுகளை இனம் கண்டு கொள்ள முடியும்.

(ஆ) நிறுவன் பிரச்சனைகள் சாமர்த்தியமாகத் தீர்க்கப்படுவதுடன் சிறந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட முடியும்.

(இ) நிதி, ஏனைய வளங்களின் ஒதுக்கீடு செய்வது இலகுவானதாக இருக்கும்.

(ஈ) முகாமை தகவல் முறைமையின் தரம் முன்னேற்றமடையும்.

(உ) பாதீடுகள் தயாரிக்கப்படுவதற்கு முன் நிதித்திட்டமிடல் மேற்கொள்ளப்பட வழிவகுக்கும்.

(ஊ) கீழ்மட்ட முகாமையினர் பாதீடு தயாரிப்பதில் ஈடுபட வழிவகுக்கும்

12.2 பூச்சிய அடிப்படைப் பாதிட்டின் தீமைகள்.

(அ) பாதீடு தயாரிப்பதற்கான நேரம், செலவு கூடுதலாக இருக்கும்.

(ஆ) நேரில் செலவுகளுக்கே இது பொருத்தமானதாக இருக்கும். நேர் செலவுடன் தொடர்புடைய பாதிட்டிற்கு இது பொருத்தமாக இருக்கமாட்டாது.

(இ) எத் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற பிரச்சனை எழலாம். இந்நுட்பத்தின் நன்மைகளை விளங்கிக் கொள்வது முகாமையினருக்கு கடினமாக இருக்கலாம்.

Unearned Revenue - Payment received in advance for goods or services to be delivered at a later date

Time Peried Concept - The idea that the life of a business is divisible into time periods of equal length.

Intangible Asset - An asset having no physical existence but having value because of the rights conferred as a result of its ownership and possession.

Natural busienss year - Any 12 consecutive months used by a business as an accounting period, at the end of which the activities of the business are at their lowest point.

Matching Principle - The accounting rule that all expenses incurred in earning a revenue be deducted from the revenue in determining net income.

உலகங்கள் மூன்று

சி. மௌனகுரு

பின்னேரம் இரண்டு மணி.

நான் என் அறைக்குள் படுத்தபடியே வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

வழக்கம் போலக் கேட்கும் சப்தங்கள் எதுவும் இல்லை.

வீதியால் வண்டிகள் தினமும் உறுமிக் கொண்டு ஓடும். பக்கத்து வீட்டு மனுஷி யாருடனாவது உரத்த தொனியிற் பேசுவாள். வீட்டு மதில்மேல் இருந்து காகம் ஒன்று பெரும்பாலும் கரைந்து கொண்டிருக்கும்.

இச்சப்தங்கள் எதுவும் இப்போது இல்லை.

காற்றில் அமைதி கரைந்து கிடக்கிறது; சூழ நிசப்தம்.

அமைதியின் அணைப்பில் சுகிப்பு, அல்லது வாசிப்பின் இலயிப்பில் அமைதியின் உக்கிரம். அது ஓர் அருமையான புத்தகம். ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றி நான் தொடர்ச்சியாக வாசித்துக்கொண்டிருக்கும் மூன்றாவது நூல் இது. அந்தக் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக நேற்றுக் காலை தொடங்கிய வாசிப்பு இது. நேற்றுக் காலை இருந்து இப்போதுவரை இடையிடையே அன்றாடக் கடமைகள் இடையிட்டாலும் அந்த, குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான இந்த வாசிப்பே நேற்றிலிருந்து இப்போது வரை பிரதான அம்சமாக எல்லாவற்றையும் முந்திக் கொண்டு நிற்கிறது.

வாசிப்பின் மையம் நவீன ஓவியத்தைப் புரிந்துகொள்ளுதல் பற்றியது.

வெளியேயிருந்து கர் ... கர் ... என்று வந்த அபஸ்வர ஒலி குழலின் அமைதியைக் கெடுத்து என் வாசிப்பின் இலயிப்பையும் அது தரும் சுகத்தையும் குழப்புகிறது. வெளியே—

என் மகன் ஹோலில் உட்கார்ந்து மொசாய்க் தரையில் ஏதோ ஒரு பொருளை

அழுத்தி அழுத்தித் தேய்க்க அபஸ்வரமாக எழும் அந்தச் சப்தம்,

கர் ... கர் ... கர் ... கிறீச் .....

என் வாசிப்புக் குலைகிறது. என் உலகம் உடைகிறதா? என்ன பொருளாக அது இருக்கும்? அவனிடமுள்ள—அவன் விசேடமாக விரும்பும் விளையாட்டுக் காராக அது இருக்க வேண்டும்—அழுத்தி அழுத்தி அவன் தேய்க்கிறான். தொடர்ந்தும் தொடர்ந்தும் தேய்க்கும் சப்தம். எனக்கு அச்சப்தம் அபஸ்வரமாக ஒலிக்கிறது. என் அமைதியைக் கெடுக்கிறது. என் வாசிப்பைக் குலைக்கிறது.

மீண்டும் மீண்டும் அவன் அக் காரைத் தேய்க்கிறான். மீண்டும் மீண்டும் அதே அபஸ்வர ஒலி. கர் ... கர் ... கர் ... கிறீச்...

என்னால் அவ்வொலியைச் சகிக்க முடியவில்லை. அது என்னை மிகவும் குழப்புகிறது.

அவனுக்கு வயது ஒன்பது. அவன் புத்திசாலிப் பையன் என்பதில் ஒரு தகப்பனுக்குரிய பெருமை எனக்கு.

இந்த வயதில் அவன் நிறைய வாசிப்பான். ஆனால் அவன் வாசிப்பது இந்திர ஜாலக் கொமிக்ஸ் புத்தகங்கள்தான். 007 ஜேம்ஸ்பொண்ட், மாயாஜால மண்ட்ரக், ஸ்பைடர் மான், வேதாளன் இவர்கள்தான் அவனின் கதாநாயகர்கள்.

''இந்த வீழல் கதைப்புத்தகங்களுக்கு வீண் காசு கொட்டுகிறீர்கள்'' என்று என் மனைவி அடிக்கடி என்னைக் குறை கூறுவாள்.

தரமான நூல்களை வாசிக்கக்கொடுக்க வேண்டும் என்பது அவளின் வாதம். அதில் மிகவும் உண்மையுண்டு. எனினும் அவளின் தரக்கோட்பாடு மகனுக்குப் பிடிப்பதில்லை.

எப்படியாவது என்னை வளைத்து ஒரு கொமிக்ஸ் நூல் வாங்கி விடுவான். அந்தப் புத்தகங்களைக் காணுகையில் அவனின் கண்கள் விரிவது, அவற்றை வாசிக்கையில் அவனின் முகத்தில் ஏற்படும் உணர்வு மாற்றங்கள், அதை வாசித்த பின்னர் அக்கதை சம்பந்தமாக கையை ஆட்டி ஆட்டி இயல்பான உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் அவன் அக்கதை நிகழ்ச்சிகளை எனக்கு விளக்கும் முறை, இவையெல்லாம் எனக்குப் பிடித்தமான் நான் ரசிக்கின்ற விஷயங்கள்.

தனியான ஒரே பிள்ளை என்பதனால் அவனுக்கு வீட்டில் சலுகைகள் கூட.

விளையாடுவதற்கு அவனோடொத்த யாரும் வீட்டில் இல்லை என்பது ஒரு குறை; அவனுக்கும் எங்களுக்கும்.

கண்ணுடிக்கு முன்னால் நின்று தன்னோடு தானே அவன் பகியும் கொள்வான். அது வலு சுவாரஸ்யமாயிருக்கும்.

என் மனைவி கொஞ்சம் கண்டிப்புப் பேர்வழி. அவனின் இயல்பான உற்சாகங்கள் சில வேளை அவளால் தடைப்பட்டு விடும்.

கர் ... கர் ... கர் ... கிறீச் ... கர்.... மீண்டும் மீண்டும் தரையில் விளையாட்டுக் காரைத் தேய்ப்பதால் எழும் ஒலி அபஸ்வரமாக என்னைச் சூழ்கிறது.

அடுத்த அறைக்குள்ளிருந்து மனைவியின் குரல் கேட்கிறது.

''வசந்த் சத்தம் போடாத. அரியண்டமா இருக்கு''

வசந்தனின் அம்மா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாற்றுகிறாள்.

ஒரு மணியிலிருந்து ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருக்கிறாள். மறுநாள் ஒரு பத்திரிகைக்குக் கொடுக்கவேண்டிய கட்டுரை அது. சங்கீதானம் சாப்பிடும்போது அவள் சொன்னாள்.

''நான் பின்னேரம் எப்படியும் கட்டுரை எழுதி முடிக்கவேண்டும்.''

புத்தகங்களை மேசையில் பரப்பியபடி இப்போது அவள் அவற்றிலிருந்து தன் கட்

டுரைக்குரிய ஆதாரங்களை ஒரு தீவிர லயத்துடன்தேடிக் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறாள்.

கட்டுரை எழுதுமுன்னர் தில்லறை வேலைகள் அனைத்தையும் முடித்து விடுவாள். மேசை முழுக்க நூல்கள் பரவிக் கிடக்கும். அவளது கண்கள் கூர்மையாக நூல்களின் வரிகளைத் துழாவி நிற்கும். சூழலை மறந்து போயிருப்பாள்.

இப்போதும் அப்படித்தான் அவள் இருந்து கொண்டிருக்க வேண்டும்.

'' வசந்த் சத்தம் போடாத. அரியண்டமா இருக்கு ''

மகன் அவள் குரலை அவ்வளவு பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மீண்டும் மீண்டும் காரைத் தரையில் இழுக்கிறான்.

கர் ... கர் ... கிறீச் .....

அதே அபஸ்வர ஒலி.

அந்த இழுப்பு விளையாட்டில் அவன் தன்னை மறந்து இலயித்திருக்கவேண்டும். அது அவன் இயல்பு. எதை எடுத்தாலும் அதில் ஒன்றி விடுவான். சூழலை மறந்து விடுவான்.

அவனுக்குள் ஓர் உலகம்.

மீண்டும் மனைவியின் குரல் கேட்கிறது. இப்போது அதில் கண்டிப்புத்தொனி கலந்திருக்கிறது.

'' வசந்த் நான் சொன்னது கேக்கேல்லையா ? ''

தனக்குச் சொன்னது கேட்கவில்லை, அல்லது அக்கட்டளை தனக்கு உடன் பாடில்லை என்பதை வாயாற் கூறாமல் தாய்க்குப் புலப்படுத்த மீண்டும் மீண்டும் காரைத் தரையோடு தேய்க்கிறான்.

அவ்வொலி மீண்டும் மீண்டும் காதில் மோதி என் அமைதியைக் குழப்புகிறது.

அவ் அபஸ்வர ஒலி என்னைத் தடை செய்கிறது என்ற எண்ணம் எனக்குள் விதையாகி, முளையாகி, மரமாகி, கிளைவிரித்து பூத்துக் கனிந்து விஸ்வரூபமெடுத்து வியாபித்து வளருகையில் அவ்வொலி வீடுமுழுவதையும் நிறைத்திருப்பதை உணருகிறேன்.

மீண்டும் மீண்டும் அவன் காரைத் தேய்த்தபடி,

கர்...கர்...கிறீச்...

''வசந்த்''

நான் உரத்துக் கூப்பிடுகிறேன்.

அவன் ஒரு கணம் உராய்வதை நிறுத்துகிறான்.

''என்னப்பா''

அவன் தன்னுடைய உலகினின்று வெளிவந்து என் குரலைச் செவி மடுக்கிறான். என் உணர்வை அவன் மதிக்கிறான். அவன் கை இன்னும் அந்தக் காரின் மேல்தான் இருந்திருக்க வேண்டும். அவன் உலகை நான் ஏன் குழப்பவேண்டும்? அவன் உணர்வை நான் மதிக்க வேண்டாமோ?

''என்னப்பா?''

மீண்டும் அவன் விளவுகின்றான்.

''ஒண்டுமில்ல. இந்தப் பென்ன எங்க வைச்சனீங்கள்?''

அவன் உலகை நான் குழப்பிவிடக்கூடாது என்பதிற் கவனத்துடன் நான் கதையை மாற்றுகிறேன்.

''மேசைக்கு மேலதான்''

என்னையும் அவனையும் பிணைத்த வார்த்தைச் சங்கிலிகள் முறிந்து விடுகின்றன. ஓர் எல்லைக்கோட்டில் என்னைச் சந்தித்த அவன் மீண்டும் விலகிவிடுகிறான்.

மீண்டும் கர்...கர்...கர்...கிறீச்...

அதே அபஸ்வர ஒலி, அவன் தன் உலகுக்குள்.

''அப்பா இந்த வசந்தப் பாருங்கோ''

மனைவியின் குரல் என்னை நோக்கி வருகிறது.

மகனே அடக்க சில வேளை நானும் ஒரு கருவியாக வீட்டில் பயன்படுத்தப்படுவ துண்டு.

வசந்தனின் உத்தியையே நானும் பயன் படுத்துகின்றேன். பதில் சொல்லவில்லை, வாசிக்கிறேன்.

மீண்டும் கர்...கர்...கர்...கிறீச்...

மனைவிக்குத் தன் எழுத்து, சிந்தனை தடைப்பட்டுவிட்டதே என்ற சரியான கோபம்.

"அப்பா நான் சொன்னது உங்களுக் குக் கேக்கேல்லையா?"

மீண்டும் மனைவியின் குரல் மோதுகிறது.

நிலைமை நெருக்கடிக்கு வருகிறது.

என் மகனின் உலகத்துக்குள் நான் புகுந்து, என் உலகத்துக்குள், அவனைக் கொண்டுவரவேண்டிய, எனக்குப் பிடிக்காத ஒரு நிலை.

நெருக்கடி நிலையை எவ்வாறு தீர்க்க லாம்?

என் வாசிப்பை விட்டுவிட்டு நான் வசந்தனின் உலகத்திற்குள் போய் வெளியே சென்று குழந்தையாகி அவனுடன் ஏதாவது விளையாடலாம். என்வாசிப்பிலும் அது தரும் சுகத்திலுமிருந்து போக எனக்கு விருப்பமில் லாமல் இருக்கிறது. இது என் உலகம், என் உலகை இழக்க எனக்கு விருப்பமில்லை.

தொடர்ந்தும் அபஸ்வர ஒலி கர்...கர்... கர்...கிறீச்.

இன்னும் அவன் தேய்த்தபடி இருக் கின்றான்.

மனைவியின் வாயிலிருந்து வரும் அடுத்த ஒலிக்கு நான் response பண்ணத்தான் வேண்டும்.

எனக்குள் அந்தரம்.

திடீரென கர்...கர்... அபஸ்வர ஒலி நின்றுவிடுகிறது.

சபேசனின் குரல் கேட்கிறது.

சபேசன் வசந்தனின் வகுப்புமாணவன். வசந்தனுக்கு மிக நெருக்கமான நண்பன்.

இருவரும் ஏதோ கதைக்கிறார்கள்.

அபஸ்வர ஒலி நிறுத்தம் வீட்டில் அற் புதமான அமைதியைத் தருகிறது. இரு சிறு வர்களினதும் முணுமுணுத்த கதைகள் அமை தியைக் குலைத்தாலும் முத்திய கர்...கர்... அபஸ்வர ஒலியுடன் ஒப்பீடுகையில் சூரிய னுக்குமுன்னர் விளக்குப்போலாகி விடுகிறது.

"அம்மா நானும் சபேசனும் வெளியில விளையாடப் போறம்"

குழந்தைகள் இருவரும் தம் உலகங்க ளுக்குள் சென்றுவிடுகிறார்கள்.

நான் வாசிக்க ஆரம்பிக்கின்றேன்.

மனைவி எழுதிக் கொண்டிருக்கின்றாள்.

வலிமைமிக்க உணர்ச்சிகள் பொங்கி வழிந்தோடும் ஒட்டத்துக்குப் பெயர் கவிதை

— வோர்ட்ஸ் வேத்

எந்தக் கவிஞனும் தன் இஷ்டத்துக்கோ அல்லது பிறரின் வற்புறுத்தலுக்கோ கவிதை எழுத முடியாது. மன எழுச்சியோடுதான் கவிதை உதயமாகும்.

— ஷெல்லி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஏற்படுத்திய தாக்கம்

மா. குன்றக்குமரன்
வணிகமாணி
இறுதிவருடம்
யாழ். பல்கலைக்கழகம்

வெளிநாட்டு உதவிபற்றிய அறிமுகம்.

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொருளாதாரக் கொள்கையினை மட்டுமன்றி வெளிநாட்டுக் கொள்கையினையும்கூட நிர்ணயிக்கும் சக்திவாய்ந்த காரணிகளில் ஒன்றாக வெளிநாட்டுதவி என்பது அமைந்துள்ளது. வெளிநாட்டுதவியின் வளர்ச்சியானது இன்றைய சர்வதேச பொருளாதாரத்தின் நவீன அம்சங்கள் மட்டுமல்லாது உலக நாடுகளில் ஏற்றத்தாழ்வான பொருளாதார விருத்தியினை பிரதிபலிக்கும் நல்ல தோர் குறியீடாகவும் அமைந்து காணப்படுகிறது. எனவேதான் பொருளாதார வளர்ச்சியில் காணப்படுகிற ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கே உதவியானது வழங்கப்படுவதாக வெளிப்படையாகக் கூறப்படுகிறது. ஆனாலும் வளர்ச்சியடைந்த நாடுகள் இந்த உதவிமூலம் தமது வெளிநாட்டு வர்த்தக வளர்ச்சிக்கும் உலகநாடுகள் மத்தியில் அரசியல் ஆதிக்கத்தைப் பரப்புவதற்குமே முன்வருகின்றன என்ற கருத்தானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொதுவாகப் பரவிவருகிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பொருளாதார விருத்திக்கு அவசியமாகக் கருதப்பட்ட வெளிநாட்டுதவியானது இந்த நாடுகளில் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் ஏன் பாதகமானது? உதவி மட்டும் பொருளாதார விருத்திக்கு அவசியமா? என்ற ஆய்வு பொருளியலாளரின் அக்கறைக்குரியதாகும்.

வெளிநாட்டுதவி என்ற பதத்தினை நாம் வரையறை செய்யும்போது உத்தியோகபூர்வமாக பண வடிவிலோ அல்லது பொருள் வடிவிலோ அல்லது சேவை வடிவிலோ, அல்லது தொழில்நுட்ப வடிவிலோ செல்வம் மிகு நாட்டிலிருந்து அல்லது உலக நிதி நிறுவனங்களிலிருந்து வறிய நாட்டினை

நோக்கிப் பாய்ந்து செல்வதனைக் குறித்து நிற்கிறது. இத்தகைய வெளிநாட்டுதவிகள் அதிகளவில் வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்குக்கொடுப்பவையாக இருப்பதனால் அந்த வகையில் வெளிநாட்டுதவி என்பது வளர் முக நாடுகளைப் பொறுத்தவரையில் முக்கிய விடயம் எனக்கொள்ள முடியும். இருந்த போதிலும் மாஷல் திட்டத்துடன் வெளி நாட்டுதவி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை செய்தல் என்ற நோக்குடன் ஆரம்பிக்கப் பட்டாலும் குறைவிருத்தி நாடுகள் இவ் வெளிநாட்டுதவித் திட்டம் மூலம் பாரியளவு கடன் சுமைக்கு உள்ளாக்கப்படுவதுடன் இந் நாடுகளின் அரசியல் இறைமைக்கும் சவால் விடுவதாக அமைந்துள்ளது.

வெளிநாட்டுதவியின் அவசியமும் அது பெறப்படும் முறைகளும்:

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினை கள் அந்நாடுகள் குறைவான பொருளா தார விருத்தியின் விளைவாக ஏற்பட்டதென கூறமுடியும். இக்குறைவான பொருளா தார விருத்தியானது இந்நாடுகளின் இயற் கை வளங்கள் அதிகளவிலும் சிறந்த முறை யிலும் பயன்படுத்தப்படாமையினையே குறி த்து நிற்கின்றது. இதற்கு முக்கிய தடை களாகக் குறைந்த மூலதனஆக்கம், தொழில் நுட்ப வளர்ச்சியின்மை, செலாவணிப் பற் றுக்குறை ஆகியன அமைந்துள்ளன. ஒரு குறைவிருத்தி நாட்டின் அபிவிருத்திக்கு அவ சியமான மூலதனம் முழுவதையும் பெரும் பாலான சந்தர்ப்பங்களில் அந்நாட்டின் உள்நாட்டு முதலீடுகளின் மூலம் பெறமுடி யாமலிருக்கும் நிலையில் அந்நாட்டின் அபி விருத்திக்கு வெளிநாட்டுதவி அவசியமா கின்றது. ஏனெனில் இந்நாட்டு மக்களின் வருமானம் மிகக் குறைவாக இருப்பதுடன் அநேகமான மக்கள் சேமிப்பற்றவர்களா கவோஅன்றி குறைவான சேமிப்பினை உடை யவர்களாகவோ காணப்படுகின்றார்கள். இவ்வாறான நிலையில் உள்நாட்டு முதலீடு கள் பற்றாக்குறையாக இருப்பதனால், மூல தனத் தேவைக்கிடையே ஓர் இடைவீடு தோன்றுவதனால் இவ்விடைவீட்டை நிரப்பு வதற்கு வெளிநாட்டு தனியார் முதலீடுகள் முன்வரவேண்டும் என எதிர்பார்த்தாலும் தகுந்த தாராளக் கொள்கையின் மத்தியிலும் பல நாடுகளில் எதிர்பார்த்தளவுக்கு வெளி நாட்டு முதலீடுகள் கிடைப்பதில்லை, இந் நிலையில் இலங்கையின் நிலை மோசமானதா கும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கை பெற்றுக்கொள்ளும் அந்நிய தனி யார் மூலதனத்தின் உட்பாய்ச்சல் மிகக் குறைவானதாகும். இதனுடன் ஏற்றுமதி வருமானங்களின் வளர்ச்சியடையாத் தன் மையும் சேர்ந்து இவ்வாறான வெளிநாட் டுத் தனியார் மூலதன உட்பாய்ச்சல்களின் குறைந்த மட்டம் இலங்கையின் பொருளா தார வளர்ச்சியின்மைக்கு ஒரு முக்கிய கார ணியாகக் கூறப்படுகின்றது. மேலும் உதவி யின் தேவை என்பது வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரை வளர்ச்சியடை யாத நாடுகளை தமது குடியேற்ற நாடுகளா கக்கொண்டிருந்தமையினால் பொருளாதார ரீதியில் குடியேற்ற நாடுகளை முன்னேற விடாது அவற்றின் வளங்களைச் சுரண்டி தாமே எடுத்துச் சென்றதனால் வளர்ச்சிய டைந்து வரும் நாடுகள் உதவிகளைப் பெற வேண்டிய தேவை ஏற்பட்டது.

உதவியானது அது கொடுக்கப்படுகின்ற முறையினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையாக வகைப்படுத்தப்படுகின் றது. உதவியினைப் பெறும்முறை அதிலுள்ள சலுகைகள், நிபந்தனைகள் போன்ற பல் வேறு அம்சங்களைக் கொண்டு உதவியினை வகைப்படுத்த முடியும். அந்த வகையில் வெளிநாட்டுதவி மூலகங்களை செயற்திட்டக் கடன், பண்டக் கடன், நன்கொடை, வெளி நாட்டுதவி, இணைக்கின்ற நிதியம், ஏனைய கடன்கள் (காசு, கருவி) எனவாறு பாகு படுத்த முடியும், இந்த வகையில் இலங்கை யானது பெற்றுள்ள உதவிகளை பின்வருமாறு பாகுபடுத்த முடியும்.

பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுதவி (ரூபா பத்துலட்சம்)

1981	கடன்கள்	கொடைகள்	மொத்தம்
திட்ட உதவி	2261.0	2481.2	4747.2
பண்ட உதவி	1045.7	633.2	1678.9
உணவு உதவி	403.9	362.4	766.3
ஏனையன	174.4	—	174.7
மொத்தம்	3890.3	3476.8	7369.1
1982			
திட்ட உதவி	4110.9	2351.6	6462.5
பண்ட உதவி	732.8	602.4	1335.2
உணவு உதவி	348.4	340.5	683.9
ஏனையன	363.4	—	363.4
மொத்தம்	5555.5	3294.5	8850.0

ஒரு நாடு எவ்வளவு வெளிநாட்டுக் கடனைப் பெறவேண்டும். என்ன வகைக் கடனைப் பெறவேண்டும் என்பவற்றினை அந்நாட்டின் பொருளாதார அமைப்பின் தன்மை, தேவை ஆகியவற்றின் அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்க வேண்டும். இல்லையேல் இவ் உதவியானது அப் பொருளாதாரத்தின் தேவைக்கு அதிகளவினதாகவோ அன்றிப் பற்றுக்குறையானதாகவோ காணப்படலாம். அல்லது முழு வெளிநாட்டுக் கடனையும் பொருளாதாரமானது ஏற்றுக்கொள்ளும் சக்தியற்றதாக இருப்பின் உற்பத்திப் பெருக்கத்திற்கோ பொருளாதார விருத்திக்கோ கடனானது தூண்டுதலாக அமையமாட்டாது.

மேலும் ஒரு நாட்டிற்குக் கிடைக்கின்ற கடனானது அதிகளவில் அந்நாட்டினது வெளிநாட்டுக் கொள்கையினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. உதவியானது பெறப்படுவதற்கு பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு உதவியானது கிடைப்பதற்கு அரசியல் ரீதியான நல்லுறவு மட்டுமன்றி வரலாற்று ரீதியான அல்லது பொதுவான கொள்கையின் ஒருமைப்பாடே அவசியமானதாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாட்டிற்குக் கிடைக்கின்ற வெளிநாட்டுதவியினை பொதுவான நிறுவனங்களின்மூலம் கிடைக்கின்ற உதவிகள் தனிப்பட்ட நாடுகளிலிருந்து கிடைக்கின்ற உதவிகள் என இரு பிரிவாகப் பாகுபடுத்த முடியும்.

இந்தவகையில் இலங்கையினை எடுத்து நோக்கும்போது அது பொருளாதாரத்தின் நிதிப்பற்றுக்குறையினை ஈடுசெய்யும் வகையில் பல்வேறுவகைப்பட்ட செல்வந்த நாடுகளிடமிருந்தும் உலக உதவி நிறுவனங்களிடம் இருந்தும் பல்வேறுவகைப்பட்ட உதவிகளைப் பெற்றுவருகின்றன. இருந்தபோதிலும் உலகில் உள்ள வளர்முக நாடுகளுக்கு அதிகளவில் உதவிபுரியும் நிறுவனங்கள்என்ற வகையில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கையின் பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியது? அதன் மூலமாக ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பன இங்கு நோக்கப்படுகின்றன.

கடந்தகாலங்களில் இந்நிறுவனங்களின் தலையீடு: [1951—1977]

இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையில் சர்வதேச நாணய

நிதியினதும், உலக வங்கியினதும் தலையீடு மூன்று தசாப்த வரலாற்றைக்கொண்டிருக் கிறது. 1951ஆம் ஆண்டில் உலக வங்கியின் முதலாவது பொருளாதார தூதுக் குழுவின் வருகையுடன் இவ்விரு நிறுவனங்களின் தலை யீடும் ஆரம்பமாகியது. எவ்வாருயினும் இந்தத் தலையீடு தொடர்ச்சியானதொன்றாக் காணப்படாததோடு தலையீட்டின்அளவு; தீவிரம், என்பவற்றிலும் வேறுபாடு காணப் படுகின்றது. ஏனெனில் மாறி மாறி பதவி க்கு வந்த UNP அரசினதும் SLFP அரசின தும் பொருயாதாரக் கொள்கைகளில் ஏற் பட்ட வேறுபாடு காரணமாக இந்நிறுவனங் களின் தலையீட்டின் வேறுபாடு ஏற்பட்டுள்ள தாகக் கூறமுடியும்.

1951ஆம் ஆண்டின் அரசாங்கத்தின் சார்பில் அப்போதைய நிதியமைச்சர்விடுத்த வேண்டுகோளுக்கமைய உலக வங்கியின் பொருளாதார தூதுக்குழு அதேயாண்டின் இறுதிப்பகுதியில் இலங்கைக்கு வந்தது. இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை களைக் கவனத்தில்கொண்டு பொருத்தமான கொள்கைகளைச் சிபாரிசு செய்வதே இக்குழு வின் நோக்கமாக இருந்தது. இதன்படி இக் குழுவானது 6 வருடகாலத்திற்கான அபிவிருத்தித் திட்டம் ஒன்றைச் சிபாரிசு செய்தது. இக்குழு இலங்கையில் தங்கி யிருந்தகாலத்தில் இலங்கை ஒரு அசாதாரண நிலை ய அனுபவித்துக்கொண்டிருந்தது. அதாவது கொறிய யுத்தத்தின் விளைவாக கொறியச் செழிப்பினையும், அது தொடர் பான பாரியளவான வர்த்தக மிகையினை யும் இலங்கை அனுபவித்தது. இதனால் அரச வரவு செலவுத் திட்டத்தின் நடை முறைக் கணக்கில் மிகைநிலை ஏற்பட்டது. இவ்வேளை ஏற்றுமதிச் சந்தையில் செழிப்பு நிலை காரணமாக இறக்குமதிக் கட்டுப்பாடு களையோ செலாவணிக் கட்டுப்பாடுகளையோ மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்க வில்லை. இதன் காரணமாக உலக வங்கித் தூதுக்குழுவின் சிபாரிசுகளில் தாராள வர்த் தகக் கொள்கையினை வலியுறுத்தவேண்டிய தேவை ஏற்படவில்லை. எனினும் இவ்விரு நிறுவனங்களினதும் பொருளாதாரக் கொள் கைகளின் தாக்கத்தினை பொதுவாக அறி வதற்குதவும் ஏனைய சில அளவீடுகளையும் தூதுக்குழுவின் சிபாரிசுகளில் நாம் இனம் காண முடிகிறது. அவ்வாறான கொள்கை யளவீடுகள் வருமாறு :

1) அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள் கைகள், இலங்கையரும் இலங்கையரல் லாதோரும் தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும்.

2) அடுத்த சில வருடங்களில் உணவுமானி யம் படிப்படியாக நீக்கப்படவேண்டும்.

3) உள்நாட்டு நாணய உறுதியினை நிர்வ கிப்பதற்கான கொள்கைகளும், கொள் கைக் கருவிகளும் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட வேண்டும்.

4) அரசாங்கத்தினது ஆதரவும் ஊக்குவிப் பும் கைத்தொழில் அபிவிருத்திக்கு முதன்மையாயினும் நேரடியாகத் தொ ழிற்சாலைகளை நிர்வகிக்க முற்படுவது அரசாங்கத்தினால் தவிர்க்கப்பட வேண் டும். தனியார் துறையுடன் நியாய மான பங்கு முறையில் பங்கு கொள்ளு தலே அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

5) முதலீட்டுக் கிடைப்பனவுக்கான நடை முறைச் செலவினங்களைச் சாத்தியமான ளவிற்குப் பெருமளவில் விஞ்சும்படியாக வருமான மிகையை உறுதிசெய்யும் வண் ணம் வரவுசெலவுத் திட்டக் கட்டுப் பாட்டுக் கருவியைப் பயன்படுத்த வேண்டும்,

நாணய இறையியல் உறுதிப்பாடு களை அடைவதற்கான வரையறைக்குள் தூதுக்குழுவானது பணவீக்கத்தை ஏற் படுத்தாத மூலங்களிலிருந்துபொதுவாக நிதிப்படுத்தக்கூடிய வளர்ச்சிக்கான திட் டமொன்றை சிபார்சுசெய்தது. துறை ரீதியான முன்னுரிமையில் தனியார் முயற்சிகளைத் தூண்டுவதற்காகப் பாரி யளவிலான அடிப்படை வசதிகளின் (போக்குவரத்து தொடர்புச் சாதனங்

கள், சக்தி முதலியன) அபிவிருத்தியையும் விவசாயக் குழுவின் வளர்ச்சியையும் தூதுக்குழு வலியுறுத்தியது.

6) இன்னும் வரையறுக்கப்பட்டுள்ள மூலதன தொழில்நுட்ப முதலாளித்துவ சாதனங்களின் கிடைப்பனவில் பெருங் கேள்வியை ஏற்படுத்தக்கூடிய தனித்த, பாரிய செயற்திட்டங்களை மேற்கொள்வதைவிட எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையக்கூடிய கைத்தொழில்நுட்ப அறிவையும் பரவச்செய்வதற்கு உதவுகின்ற ஆரம்ப சிறு கைத்தொழில்களைத் தூண்டுவதையே கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை இலக்காகக் கொண்டிருக்கவேண்டும்.

1951ஆம் ஆண்டு தூதுக்குழுவின் சிபாரிசுகளை நாம் மொத்தமாகத் தொகுத்து நோக்கின் அவை ஏற்கனவே இருந்த தனியார் முதலாளித்தத்துவத்தினை பாரியளவில் விருத்திசெய்வதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. பிரித்தானிய காலணித்துவத்தினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இத்தகைய முதலாளித்துவ பொருளாதார அமைப்பு உலக வங்கித் தூதுக்குழுவின் உதவியைப் பெற்றுக்கொண்டது, இதன் மூலம் மேலும் எற்றுமதி சார் விவசாயத்தின் கிராமியத் தன்மை தொடர்ந்தும் நீடித்தது. இந்நிலையில் கைத்தொழில் முதலாளித்துவம் இந்நாட்டில் வளர்ச்சியடையாமையினால் நாம் கைத்தொழில் முடிவுப் பொருட்களுக்கும் தொழில் நுட்பத்திற்கும் வெளிநாடுகளில் தங்கியிருக்கவேண்டிய தேவை ஏற்பட்டது. தூதுக்குழுவின் இந்தச் சிபார்சுகளினால் வெளிநாட்டு ஆதிக்கம் வளர்ந்தது, அல்லது நீடித்தது எனலாம். சுருங்கக்கூறின் இந்நாட்டினுள்ளே வளர்ந்த சர்வதேச வர்த்தக முதலாளித்துவத்தின் ஆதிக்கமானது தேசிய குழுவின் சிபாரிசுகளின் மூலம் தடுக்கப்படவில்லை. இங்கு தூதுக் குழுவானது ஏகாதிபத்திய வாதிகளின் வர்த்தக நலன் கருதி தமது சிபாரிசுகளைச் செய்துள்ளனர் என்பது மறுக்க முடியாததாகும்.

1951ஆம் ஆண்டு அமெரிக்க பொருளியல் நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் உலக வங்கியின் தூதுக்குழுவினை அழைப்பித்த அப்போதைய நிதியமைச்சர் திரு. J. R. ஜெயவர்த்தனை அவர்கள்தான் இன்று 1977க்குப் பின் பதவிக்கு வந்து பாரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான ''வெளிநோக்கிய கைத்தொழில் உபாயங்களை'' முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் உலக வங்கியின் தலையீடானது இரண்டு திட்ட அமுலாக்கலில் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டமையை அவதானிக்கலாம் அதாவது அவர்கள் விவசாயம் சார் துறைகட்கும், போக்குவரத்துத் துறைக்குமே முக்கிய ஆர்வம் காட்டினரேயன்றி கைத்தொழில் துறைகட்கு எதுவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. இதன் மூலம் 1953ஆம் ஆண்டின் ''ஹர்த்தால்'' என்று வர்ணிக்கப்பட்ட ஒரு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையில் 2ஆம் உலகப் போர்க்காலத்தில் தொடங்கப்பட்ட பல கைத்தொழில்கள் படிப்படியாக மூடப்பட்டன. அத்தோடு 1953இல் உணவு மானியமும் நிறுத்தப்பட்டது. இதனை அமுல்நடத்துவதற்கு அப்போதைய அரசும் மிகத் தீவிரமாக நடவடிக்கையில் இறங்கியது. இருந்த போதும் மக்கள் எழுச்சியின் விளைவாக உணவு மானியத்திட்டம் மீண்டும் ஒரு குறித்த வீதத்தில் அமுல்படுத்தப்பட்டது. இந்நிலையில் 1956இல் பதவியில் இருந்த அரசும் தூக்கி எறியப்பட்டது.

1956இல் ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்துவந்த 10 ஆண்டு காலத்தில் இலங்கையின் கொள்கைக் காலத்தில் சர்வதேச நாணய நிறுவனத்தினதும் உலக வங்கியினதும் தலையீடு மிகக் குறைவாகவே காணப்பட்டது எனலாம். ஏனெனில் இக்காலப் பகுதியில் சென்மதி நிலுவைப் பிரச்சனை என்பது குறைவாக இருந்ததனால் ஆட்சிக்கு வந்த புதிய அரசு நன்கொடை வழங்கும் நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் செல்வாக்கினைக் குறைத்துத் தன்

முனைப்பானதொரு பொருளாதார உபாயத்தைக் கைக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. 1950 களின் பின்னரான வெளிவாரி நிலைமைகள் இலங்கைக்கு மோசமானதாகவே காணப்பட்டது. இதனால் மரபுரீதியான ஏற்றுமதிப் பொருட்களின் அமைப்பில் பலவீனம் உணரப்பட்டது. அதன்மூலம் சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு குறைபாடு அதிகமாகக் காணப்பட்டது. அத்தோடு வெளிநாட்டுச் சொத்திலும் அதிக வீழ்ச்சி ஏற்பட்டதனால் அரசினால் கடைப்பிடிக்கப்பட்ட தாராள இறக்குமதிக் கொள்கையினை ஒதுக்கிவைத்து விட்டு இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கவும் செலாவணிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் அரசினை நிர்ப்பந்தித்தது. இது இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையினை அறிமுகப்படுத்த ஏதுவாயிற்று. இத்தகைய தன்மைகள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு முரண்பட்ட தன்மையினைக் கொண்டுள்ளதை அவதானிக்க முடியும். ஆயினும் செலாவணி நெருக்கடி அமுக்கம் ஒரு சுயேச்சையான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலிருந்தும் அரசாங்கத்தைத் தவிர்க்கச் செய்தது. ஏனெனில் கட்டுப்பாட்டு நிலைமையைப் பயன்படுத்தி தேசிய முதலாளித்துவ வர்க்கம் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதில் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியது. இதன்மூலம் இங்கு பொதுத் துறை ஆதிக்கம் என்பது விரிவடைந்தது. இதனை மேற்கூறிய நிறுவனங்கள் விரும்பவில்லை என்றே கருதலாம். இதேபோலவே உலக நாடுகளின் பொருளாதார வரலாற்றில் இந்நிறுவனங்களின் தலையீட்டை நோக்கும் போது அவை பொதுத்துறையின் பொருளாதாரப் பங்களிப்பினைக் கடுமையாக எதிர்த்துள்ளன அல்லது எதிர்த்தும் வருகின்றன என்பது தெளிவாகிறது.

இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் தோல்வியினைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டு மீண்டும் UNP அரசு ஆட்சிக்கு வந்தது. புதிய அரசாங்கம் பொருளாதார விருத்திக்கு ஒரு உபாயமாக பெருமளவு வெளிநாடுகளில் தங்கியிருப்பதனை முன்வைத்தது. உலக வங்கியின் உதவியுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு பெருமளவு வெளிநாட்டுதவிகள் நாட்டினுள்ளே பெருக்கெடுத்தன. பிரதானமாக மேற்குலகில் இருந்தே இவ்வுதவிகள் வந்தன. இங்கு குறிப்பிடத்தக்கதொரு அம்சம் யாதெனில் உள்நாட்டு அரசியல் கொள்கையில் ஏற்படும் தளம்பல்களுக் கேற்ப சர்வதேச நிதியியல் சமூகத்தின் இலங்கை மீதான நல்லுறவுக் கண்ணோட்டம் மாறுபாடடைந்துள்ளது என்பதாகும். பொதுவாக SLFP அரசின் ஆதிக்கத்தினை விட UNP அரசின் ஆதிக்கமே பெரிதும் விரும்பப்பட்டது. எனினும் அவை இரண்டுமே முதலாளித்துவ பொருளாதார அமைப்பை பாதுகாப்பதில் முன்னின்றன என்பதை நாம் மறந்து விடலாகாது. எவ்வாறுயினும் இலங்கையின் ஆட்சியிலிருந்த அரசின் மீது சர்வதேச நிதியியல் சமூகம் கைக்கொண்ட மனப்பாங்கு குறிப்பாக 1965இல் இருந்த நிகழ்வுகளில் "நச்சுவட்ட சுழற்சியை" ஏற்படுத்தியது. 1965 ன் காலத்தில் மிகக் குறைந்த மட்டத்தில் அதிகரிக்கத் தொடங்கிய இந்நிறுவனங்களின் தலையீடு அந்த தசாப்தத்தின் இறுதியரைப் பகுதியில் படிப்படியாக உறுதியடையத் தொடங்கியது. 1965 — 70 காலப்பகுதியில் ஏற்கனவே இருந்த பெருங்கட்டுப்பாடுகளோடு சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் செல்வாக்கு செலுத்த முயற்சித்தது. இக்காலப் பகுதியில் பதவிக்கு வந்த UNP அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் நிலையியல் உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டது. இதன் மூலம் கணிசமான எடுப்பனவுகள் நிகழ்ந்த போதிலும் ஏற்கனவே நிலவிய இறக்குமதிச் செலாவணிக் கட்டுப்பாடுகளுக்கு மேலாக சர்வதேச நாணய நிதி நிபந்தனைகளை விதிக்க முற்பட்டது.

1) அரசினுல் வழங்கப்படும் முழு மானியத் திட்டமும் மறு பரிசிலனைக்குட்படுத்தப் படல் வேண்டும்.

2) சமூக நலன் நோக்கிய மீண்டெழும் செலவுகள் அல்லது நடைமுறைச் செல வுகள் அதிகரித்து செல்வதனுல் அதனைத் தடுத்தல் வேண்டும்.

3) பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங் களின் இடைவெளிகளை நிதியீட்டம் செய்கின்ற பணவீக்கத்தை ஏற்படுத்தும் வழி முறைகளை வரையறுத்தல் வேண் டும்.

4) அரசாங்க தொழில் முயற்சிகளில் எதிர் நோக்கும் மூலதன நட்டங்கள் தவிர்க் கப்படல் வேண்டும்.

5) அரசாங்கத்தின் வருமானத்தைப் பல வழிகளிலும் அதிகரிக்கச் செய்ய நடவ டிக்கை எடுத்தல் வேண்டும்.

6) பொதுத் துறைக்கும் தனியார் துறைக் குமான வங்கிக் கடனின் வளர்ச்சியைத் தவிர்த்தல் வேண்டும்.

7) தனியார் துறை முதலீடுகளை பல ஊக்கு விப்புகளுடாக தூண்டுதல் வேண்டும். பொதுவாக வெளிநாட்டு தொடர்பு, தனியார் அலுவல்கள் முதலீடுகளின் உட்பாய்ச்சலினை தூண்டுவதற்கான சூழ் நிலையை விருத்தி செய்ய வேண்டும்.

1965 - 70 காலத்தில் நிதியமைச்சராக இருந்தவரின் கூற்றுப்படி மேலுள்ள கொள் கைச் சிபார்சுகளில் அதிகமானவை இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் 1965ன் நிலையியல் உடன்படிக்கையைச் செய்து கொண்டு எழுத்து மூலம் உறுதிப் படுத்தப்பட்டது. இவற்றினை அமுல்படுத்தும் வகையில் 1967 - 1968 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபாய் மதிப்பிறக்கம் அன்னியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் (FEECS) என வர்ணிக்கப்பட்ட இரட்டை நாணயமாற்றுத் திட்டம் இறக்கு மதி தாராளமயவாக்கம் போன்றன அமுல் நடத்தப்பட்டன. இக்கால கட்டத்திலேயே இவ்விரு நிறுவனங்களின் தாக்கமானது அதி கமாக இருந்தது. இக் கொள்கை மாற்றங் களின் பின்னுல் மறைந்திருந்த சர்வதேச நாணய நிதியினைப்பற்றி வெளிப்படையான விபரங்களை கூறுவிடினும் அதனை உயர்த்தும் வகையில் மத்திய வங்கியானது தனது அறிக் கையில் ''அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியுடனுன ஆலோசனைகளின் பேரி லேயே பீக்ஸ் திட்டத்தினை அறிமுகப்படுத் தியது.'' எனக் கூறுகின்றது. மேலும் இக் காலப் பகுதியில் சர்வதேச நாணய நிதியின் கொள்கைத் திட்டங்களான வங்கி வீத அதி கரிப்பு, வங்கி வீத வட்டி வீத அதிகரிப்பு, வணிக வங்கி கடன் உச்சவரம்புகள் என்ப வற்றை உள்ளடக்கிய நாணயக்கட்டுப் பாட்டு நடவடிக்கைகளையும் கொண்டிருந் தது. மேலும் வரவு செலவு திட்டம் பற்றுக் குறையின் பணவீக்க விளைவுகளைக் கட்டுப் படுத்த அரசின் வருமான அதிகரிப்பு, செல வின குறைப்பு முதலிய முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன.

எனினும் 1965 - 69 காலகட்டங்களில் சர்வதேச நாணய நிதியினதும் உலக வங்கி யினதும் தலையீட்டினுல் எழுந்த நாணய சுதந்திரமான சந்தைக் கொள்கைகள் இலங் கையைத் தீவிரமான கடன் பொறியில் சிக்க வைத்ததோடு சமூகத்தின் வருமான ஏற்றத் தாழ்வுகளை மேலும் விரிவடையச் செய்தது. வருமான சமமின்மை இடைவெளி அதிகரிப் பினை விளக்க பகிரங்கமான புள்ளி விபரங் கள் கிடைக்கவில்லையாயினும் 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் அரசினை பதவியிலிருந்து தூக்கியதிலிருந்து இதனை உய்த்துணர முடியும்.

1970ல் பதவிக்கு வந்த ஐக்கிய முன் னணி அரசாங்கம் சோஷலிசசமுதாயத்துக்கு அடித்தளம் இடுவதும் சமூக நலச் செலவு களைப் பாதுகாப்பதுமே தமது குறிக்கோ ளென தமது அறிக்கைகள் மூலம் எடுத்துக் கூறினர். தனியார்துறை முயற்சிகளை அனு மதிப்பதோடு பொதுத்துறை கலந்த பொரு ளாதார அமைப்பை வரவேற்பதாகவும்

அதேவேளை முன்னணிப் பொருளாதாரப் பாத்திரம் பொதுத்துறைக்கு விடப்படுமெனவும் இவ் அரசாங்கம் செய்த பிரச்சாரங்கள் 1970 ஆண்டுக்கு முன்பிருந்த நிலைமையை மாற்றியமைத்தன. புரட்சிகரமான மாற்றங்கள் உற்பத்தி சக்திகளிலோ, உற்பத்தி உறவுகளிலோ ஏற்படுத்தாவிடினும் சித்தார்ந்த ரீதியில் சுதந்திர சந்தைப்பொருளாதாரம் தனியார் முயற்சி என்பவற்றோடு முரண்படும் பொதுத்துறையின் ஆதிக்கம் வலியுறுத்தப்பட்டமை மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறத் தவறியது. இதே போல இதுவரை காலமும் இடையறாது சர்வதேச நாணய நிதியும், உலக வங்கியும் போதித்து வந்த கொள்கைகளுக்கு எதிராக சமூகச் செலவுகளை அதிகரிப்பதும் பராமரிப்பதும் சம்பந்தமான கருத்துக்கள் வெளிப்பட்டிருந்தன.

1970ம் ஆண்டின் அப்போதைய நிதியமைச்சர் சர்வதேச நாணய நிதியின் செயற்பாடுகளையும் நிபந்தனைகளையும் விமர்சித்ததோடு எதிர்கால விளைவுகளைப்பற்றி சிந்திக்காமல் சர்வதேச நாணய நிதியின் நிபந்தனைகளையும் ஆலோசனைகளையும் நடவடிக்கைகளையும் ஏற்பதோ மறுப்பதோ சாத்தியமான தல்ல என்று கூறினர். நிதியின் ஆலோசனைகளை புறக்கணிப்பதானது வெளிநாட்டுதவிகளை முழுமையாக நிராகரிப்பதாக கருதப்படலாகாது எனவும் எமது நாட்டிற்கு நிறைய வெளிநாட்டுதவிகள் தேவைப்படுகின்றதெனவும் ஆனால் எமது சுய கௌரவத்தையோ, தன்மானத்தையோ, இறைமையையோ அடகு வைத்து அவற்றைப்பெற வேண்டும் என்பதற்கில்லை எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதி, உலக வங்கி போன்றவற்றின் அடிப்படைக் கொள்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் அக்கால அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற் கொண்டது. சந்தைக் கட்டுப்பாடுகளோடு, அரச துறை தொடர்ந்தும் நீடித்தது. சமூக நலன் மேன்பாட்டு நடவடிக்கைகள் பெருமளவில் நடைமுறையில் இருந்தன. இதனால் வெளிநாட்டு உதவிகளின் உள் வருகை மிகத் தாழ்ந்த மட்டத்தினை அடைந்தன. வெளிநாட்டு மூலதன உட் பாய்ச்சல் தடைப்பட்டது. இந்நிலையில் அரசாங்கமானது சர்வதேச நாணய நிதி, உலக வங்கி என்பவற்றிற்கு எதிரான கொள்கையோடு தமது சுயமான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வெளிவாரியான ஆதரவுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் இறக்குமதி வேகமாக அதிகரித்ததோடு ஏற்றுமதி மந்த கதியில் சென்றதனால் ஏற்பட்ட வீழ்ச்சியடைந்த வர்த்தக மாற்று வீதம் காரணமாக சென்மதி நிலுவையில் கடுமையான பாதிப்பினை அரசு எதிர் நோக்கியது. இந்நிலையில் இலங்கை தொடர்பாக உலக வங்கிக் குழுவின் வளர்ச்சி பற்றிய விமர்சனத்தின்படி இலங்கையில் தீர்க்கமுடியாத பொருளியல் நடவடிக்கைகளுக்கு, ஏற்றுமதி உழைப்புகளுக்காக ஒரு சில மூதன்மைப் பொருட்களில் அதிகமாக தங்கியிருத்தல் பல்வேறு கட்டுப்பாடுகளினால் சீர்குலைக்கப்பட்ட விலைக் கொள்கைகள், மிகை நுகர்வினால் பற்றாக் குறையாகப் போன சேமிப்பும், முதலீடும், பொதுத்துறையில் பரவலாகக் காணப்பட்ட வினைத்திறனின்மை, தனியார் துறைக்கான ஊக்குவிப்பு குறைப்பு என்பனவே காரணமாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் இவ்வரசின் உபாயத்தின் வெற்றி என்பது வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய உதவிஎன்பதிலேயே தங்கியுள்ளது. சோசலிச அணியிலிருந்து கிடைத்தஉதவிகள் போக பெருமளவு உதவிகள் மேற்குப்புறத்திலிருந்தே கிடைத்தன. ஆனாலும் மேற்குலக நாடுகளின் இந்த உதவிகள் வழங்குவதானது அவர்களின் ஏஜண்டுகளான (Agent) சர்வதேச நாணயநிதி, உலகவங்கி என்பன வழங்கும் அத்தாட்சிப் பத்திரத்திலேயே தங்கியிருப்பதனால் இத்தகைய நற்சாட்சிப் பத்திரம் இலங்கைக்கு சாதகமாக வழங்கப் படவில்லை. இதே போல் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளினதும் குழுவினதும் உதவிகள் பொதுவில் SLFP அரசுக்கு குறைவாகவே கிடைத்தது.

1977 க்கு பின்பு மீண்டும் UNP அரசு ஆட்சியைப் பிடித்த போது மீண்டும் இந் நிறுவனங்களின் தாக்கம் என்பது அதிகரித் ததோடு அது மிகவும் உயர்ந்து செல்லும் வேகத்திலும் காணப்பட்டது. இந்நிலையில் UNP அரசானது வெஸ்ற் மினிஸ்ரர் (West Minister) மாதிரியிலிருந்து விலகி அமெரிக்க மாதிரியிலான ஆட்சி முறை கொண்டு வரப்பட்ட போது பிரித்தானி யரிடமிருந்து அரசியல் விடுதலை பெற்ற இலங்கையை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் அமெரிக்க ஏகாதிபத் தியத்திற்கும் அதன் ஏஜண்டுகளான சர்வ தேச நாணய நிதி, உலக வங்கி, என்பவற் றிற்கும் கிடைத்த வெற்றி என்றே கருத வேண்டும். இந்நிலையில் இலங்கையின் பொரு ளாதாரம் '' திறந்த பொருளாதாரம் '' என்ற நிலைக்கு மாற்றப்பட்டது.

1977 இன் இறுதியில் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைச் சீர்திருத்தங் களின் பிரதான அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாக அவதானிக்கலாம். இறக்குமதி வர்த்தகம் தாராளமயப்படுத்தப்பட்ட தோடு செலாவணிக் கொடுப்பனவுகளும் தாராளமயப்படுத்தப்பட்டன. இரட்டை நாணய மாற்றுத் திட்டம் நீக்கப்பட்டு மிதக்கவிடப்படும் நாணயமாற்றுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்தோடு பல்வேறு விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதோடு நிர்வகிக்கப்பட்ட விலைத்திட்டமொன்றும் காணப்பட்டது. இந்நிர்வகிக்கப்பட்ட விலைத் திட்டமே சமூகத்தின் நுகர்வு அமைப்பில் முக்கியத்துவம் பெற்ற சில வகைப்பட்ட பொருட்களுக்கும் பொதுக் கூட்டுத்தாபனத் தின் விலைக் கொள்கையை வர்த்தக ரீதியில் சீர்திருத்துவதற்கும் முன்வைக்கப்பட்டதாக இருந்தது.

பெருமளவான பங்கீட்டு மானியத் திட்டம் கைவிடப்பட்டு அதற்கு மாறாக உணவு முத்திரைத் திட்டம் கொண்டுவரப் பட்டது. உணவு முத்திரைத் திட்டம் குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் தமது உணவு முத்திரைகளைக் கொண்டு வாங்கக் கூடிய பொருட்களின் விலைகள் சந்தை சக்திகளால் நிர்ணயிக்கப்பட்டன. இதனால் பங்கீட்டிற்குரிய உணவுப் பொருட் களின் விலையேற்றம் துரிதப்படுத்தப்பட்டது. தனியார் முயற்சி பெருமளவில் ஊக்கப் படுத்தப்பட்டது. நேரடியான வெளிநாட்டு முதலீடுகளை பரந்தளவில் அனுபவித்ததன் மூலம் இது மேலும் ஊக்குவிக்கப்பட்டது. பாரிய நிதியியல் வசதிகள் பாரியளவிலான அடிப்படை வசதிகள் வர்த்தகம் சம்பந்த மான தூண்டுதல்கள் என்பன இதில் முத லிடம் வகித்தன. இதற்கு தாரணமாக கட்டு நாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத் தைக் குறிப்பிடலாம்.

கூலி உயர்வு முயற்சிகள் தடுக்கப்பட் டன. பொதுவாக பொதுத் துறையிலும் விசேடமாக தொழிற்சங்க நடவடிக்கையி லும் கடுமையான அடக்குமுறை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. உயர்ந்த வட்டி வீதங்களைக் கொண்ட நாணயக் கட்டுப்பாட்டு முறை அமுல்நடத்தப்பட் டன. வங்கிக் கடனின் கட்டுப்பாடுகள் புகுத் தப்பட்டன.

அரசின் முதலீட்டுச் செலவிற்கும் அபி விருத்தி திட்டங்களுக்கும் இறக்குமதிக் கொள்கைக்கும் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவழியாக பெரு மளவு வெளிநாட்டுதவிகள் பெற்றுக் கொள் ளப்பட்டன. வெளிநாட்டு சம்பாத்தியத்தை ஊக்குவிப்பதற்கான பொருளாதார நட வடிக்கைகள் பெருமளவில் எடுக்கப்பட்டன.

இந்த வகையில் அரசினால் ஆரம்பிக்கப் பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை என்பது மக்களின் அங்கீகாரத்தைப் பெற்று

ஆரம்பிக்கப்பட்டது என்கிற விடயம் கேள்விக்குரியதாக இருப்பினும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைப்பதில் சர்வதேச நாணய நிதியினதும் உலக வங்கியினதும் செல்வாக்கு காணப்படுவது வெளிப்படையான விடயமாகும். ஒரு நாட்டின் சர்வதேச நாணய நிதியினதும் உலகவங்கியினதும் தலையீட்டினை அறிவதற்கு உதவுகின்ற குறிகாட்டிகள் எனக் கண்ட அம்சங்களில் ஏறக்குறைய எல்லா அம்சங்களையுமே இன்று இலங்கையின் பொருளாதாரத்தில் காணக் கூடியதாக இருக்கின்றது. எனினும் இலங்கை இந்நிறுவனங்களில் கொள்கைத்திட்ட உபாயங்களுக்கு சொந்த விருப்பின் பேரில் விழுந்துவிடவில்லை. மாறுக இந்நிறுவனங்கள் வலிந்து தமது கொள்கை வலைக்குள் இழுப்பது தான் உண்மை.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்றுவரையுள்ள காலப்பகுதிகளை நோக்கும் போது வேறு எந்த காலப்பகுதிகளையும் விட 1977 க்கு பின்னரான காலப் பகுதியிலேயே தான் மிக அதிகமாக இந்நிறுவனங்களின் தாக்கம் என்பது காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் இலங்கையானது திறந்த பொருளாதாரக் கொள்கை நடவடிக்கையுடன் தொடர்புடைய ஓர் தளமாக மாற்றப்பட்டுள்ளமையை காண முடியும்.

மேலும் முக்கியமானதொரு விடயம் 1983 ல் டில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி J. R. ஜயவர்த்தன அவர்கள் திறந்த பொருளாதார அரசுக்களின் மீது இவ்விரு நிறுவனங்களின் தாக்கம் பற்றி குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் புதுடில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இலங்கையில் தாராளப் பொருளாதாரக் கொள்கையை அனுமதிப்பது இந்நிறுவனங்களின் உதவியின்றி சாத்தியமாகாது என்று தெரிவித்துள்ளார். இவ்வகையில் அங்கு 3ஆம் உலக நாடுகளின் மீது இந்நிறுவனங்கள் விதித்துள்ள பொருளாதார வர்த்தக நிபந்தனைகளைத் தளர்த்துமாறு மிகவும் உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். இத்தகைய கூற்று இலங்கையில் இன்று நிலவுகின்ற திறந்த பொருளாதாரத்தைப் பற்றித்தெளிவுபடுத்துகின்றது.

அண்மைக் காலத்தில் கூட இந்நிறுவனங்களின் தாக்கம் என்பது புதிதாகப் பதவியேற்ற R. பிரேமதாசாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமையொழிப்புத் திட்டமான ''ஜனசக்தி'' திட்டம் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கெனக் கூறி 600 கோடி ரூபாய் உதவியை பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற அமைப்புகளுக்கு கோரிக்கை விட்டிருந்தார். இது தொடர்பாக ஆராய்வதற்கு வந்த இந்நிறுவனங்களின் தூதுக்குழுவினர் இத்திட்டத்தை முற்றுக எதிர்த்ததுடன் இதனை அமுல்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய எதிர்காலப் பாதிப்புக்களையும் எடுத்து கூறியிருந்தனர். இந்நிலைமையானது இந்நிறுவனங்கள் கொண்டுள்ள கொள்கையில் இருந்தும் எந்தவித மாற்றத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதையும் புலப்படுத்துகின்றது.

எனவே இவ்விரு நிறுவனங்களினதும் கடந்த 40 ஆண்டுகால சாதனையினை சீர்தூக்கிப் பார்க்கையில் அவை பிரகடனப்படுத்தியுள்ள நோக்கங்கள் இலக்குகள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் அவை 3ம் உலக நாடுகளுக்கு பெரிதாக எதனையும் மேற்கொள்ளவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. உலக நாணய நிலைமை இன்னும் ஸ்திரமற்ற நிலையிலேயே காணப்படுகிறது.

சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களில் நிரந் தரமான சமமின்மை தொடர்ந்தும் காணப் படுகிறது. 3ஆம் உலக நாடுகள் பெற்று வரும் கடன்கள் பயங்கரமான வேகத்தில் அதிகரித்து வருகின்றன. ஆனால் அவற்றின் பொருளாதார அபிவிருத்தியில் மிகச்சிறிய ளவான முன்னேற்றமே காணப்படுகிறது.

இவ்வாறுக மேற்கூறிய பல்வேறு அம் சங்களையும் தொகுத்து நோக்கும் போது உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதி யினதும் பரிசோதனைகள் நடாத்துகின்ற ஆய்வு கூடமாக இலங்கை 1977 க்கு பின் மாற்றப்பட்டிருக்கிறது. ஏனெனில் 1977 க் குப் பின்னரான திறந்த பொருளாதாரக் கொள்கையானது இவ்விரு நிறுவனங்களி னதும் தலையீட்டுக்கான ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த நிலையில் சுதந்திரத்திற்குப் பின்ன ரான ஆட்சி முறையிலும் ஆட்சியாளர்களி லும் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற் படுத்தினலன்றி இவ்விரு நிறுவனங்களினதும் தலையீட்டினை இலங்கையின் பொருளா தாரத்திலிருந்து அகற்றுவது என்பது இய லாததொன்றாகும்.

WITH THE BEST COMPLIMENTS FROM

G. S. Linganathan & Co.

TEXTILES MERCHANTS

13, 14, Grand Bazaar
JAFFNA


WITH BEST COMPLIMENTS FROM

Eastern Traders

Dealers in

LIVE STOCK FEEDS
FERTILIZERS
AGRO CHEMICALS &
FARM SUPPLIERS

95/2, Stanly Road,
JAFFNA



1987/88 இல்

எமது மன்றம்

வணிக மாணவர் மன்றச்

செயற் குழு

காப்பாளர்: பேராசிரியர் எஸ். இராஜரட்ணம்
(தலைவர் வணிக முகாமைத்துறை)

பெரும் பொருளாளர்: திரு. கே. சிவராஜா
(விரிவுரையாளர்)

தலைவர்: திரு. கே. கங்காதரன்

உப தலைவர்: திரு. கே. லோறன்ஸ்

செயலாளர்: செல்வி மேதினி சந்திரசேகரம்

உப செயலாளர்: திரு. ஏ. கருணாகரன்

இளம் பொருளாளர்: திரு. எஸ். நந்தகுமார்

இதழாசிரியர்: திரு. கே. மனோகரன்

குழு உறுப்பினர்கள்:

1. திரு. கே. சிவகணேசன்
2. திரு. ஆர். முகிலன்
3. திரு. ஜே. டிலாசல்
4. திரு. என். ரீரஞ்சன்
5. திரு. கே. யோகராஜா

எமது மன்றச் செயற்குழு — 1987/88



இருப்பவர்கள்

இடமிருந்து வலம்: எஸ். நந்தகுமார் (இளம் பொருளாளர்) திரு கே. சிவராஜா (பெரும் பொருளாளர்) பேராசிரியர் என். பாலகிருஸ்ணன் (கலைப்பீடாதிபதி) கே. கங்காதரன் (தலைவர்) பேராசிரியர் ஏ. துரைராஜா (துணை வேந்தர்) பேராசிரியர் எஸ். இராஜரட்ணம் (காப்பாளர்) செல்வி மேதினி சந்திரசேகரம் (செயலாளர்)

நிற்பவர்கள்

இடமிருந்து வலம்: ஜே. டிலாசல், கே. யோகராஜா, கே. சிவகணேசன், என். ஸ்ரீரஞ்சன், கே. லோறன்ஸ் (உபதலைவர்) கே. மனோகரன் (இதழாசிரியர்) ஆர். முகிலன், ஏ. கருணாகரன் (உபசெயலாள)

எங்கள் நன்றிகள்...



★ இதழுக்கு வாழ்த்துச் செய்திகள் தந்துதவிய துணைவேந்தர், பதில் பதிவாளர், கலைப்பீடாதிபதி, மன்றக் காப்பாளர், பெரும் பொருளாளர் ஆகியோருக்கும்,

★ ஆக்கங்கள் தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஏனை யோர்க்கும்,

★ இதழுக்கான நிதிவசதியினைப் பெற்றுத்தர உதவியமையோடு, பல்வேறு வகை யில் ஆலோசனைகளும் வழங்கி உதவிய வணிக முகாமைத்துவத்துறை விரி வுரையாளர்களுக்கும்,

★ இதழின் அச்சாக்கத்தின் போது பல உதவிகள் புரிந்த மாணவன் ஜெக தீசனுக்கும், அட்டை ஓவியம் வரைந்து உதவிய செல்வி அருந்ததி அவர்கட்கும்,

★ இதழின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பெருமனதுடன் விளம்பரங்கள் தந் துதவிய வியாபார ஸ்தாபனத்தினருக்கும்,

★ பல சிரமங்களுக்கு மத்தியில் இம் முயற்சி வெற்றி பெற உழைத்த மன்ற உறுப்பினர்களுக்கும்,

★ சிறந்த முறையில் சஞ்சிகையை பதிப்பித்து உதவிய புனித வளன் கத்தோலிக்க அச்சக ஊழியர்கட்கும்,

★ மற்றும் இம்முயற்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வகைகளில் உதவிகளும், ஒத்தாசைகளும் புரிந்த சகலருக்கும் எமது இதய பூர்வமான நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- இதழாசிரியர் -

CONGRATULATIONS TO THE "**VIRUTCHAM — 1988**"

FROM

NEW MALLIKA STORES

DEALERS IN FERTILIZERS
AND AGRO CHEMICALS

AUTHORIZED DEALERS FOR

C. C. C. [FERTILIZER] LTD.

C. F. C.

BAURS

No. 37, WOLFENDHAL STREET,

COLOMBO — 13

Phone : **28844**

St. Joseph's Catholic Press, Jaffna.

With Best Compliments from

MANDELA TRADER

BOOKS & MAGAZINES
STOCKISTS OF EXERCISE BOOKS
STATIONERY AND PHOTOSTAT COPIES

LEADING WHOLESALERS OF

WEDDING INVITATION
WISHING ANNIVERSARY CARDS
BIRTHDAY, MUSICAL, BIRTHDAY FOREIGN CARDS

AND ALL OTHER FESTIVAL CARDS

MANDELA TRADER

No. 2, BUS STAND,
HOSPITAL ROAD,
JAFFNA.